www.padippakam.com

# பெண்ணியம்



Hema Sahasrabudhe

காவ்யா

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# பெண்ணியம்

[ஆய்வுக் கட்டுரைகள்]

தொகுத்தவர் :

பேரா. டாக்டர் சு. சண்முகசுந்தரம்

காவ்யா

படிப்பகம்

www.padippakam.com

Penniyam

A Collection of articles on feminism

(C) Authors

First Edition February 1994

Published by Lakshmi sundaram

KAAVYA
Publishers & Book Sellers
16, 17th E Cross, Indira nagar
Bangalore - 560 038

Printed by : Rasakili printers, Madras-20

Price Rs: 30

படிப்பகம்

www.padippakam.com

# பதிப்புரை

'பெண்ணியம்' என்பது என்ன?

''குடும்பத்திலும் வேலை செய்யுமிடத்திலும் பெண்கள், தாழ்த்தப்படுவதும் சுரண்டப்படுவதுமாக உள்ளனர். இவற்றைப்பற்றிய உணர்வும் இச்சூழலை மாற்றவேண்டி பெண்களும் ஆண்களும் எடுக்கும் உணர்வு நிலை உடைய செயல்பாடுகளும் பெண்ணியம்'' என்று கமலா பாசினும் **(Kamala Bhasin)** நிகாத் செய்து கானும் **(Nighat Said Khan)** கூறுகின்றனர்.

இதன்படி பால் பாகுபாடு, ஆணாதிக்கம், தந்தை வழிக் குடும்பம் போன்றவை நடைமுறையில் இருப்பதைப் புரிந்துகொள்வதும் இவற்றுக்கு எதிராகச் செயல்படுவதும் எனப் பொருள் கொள்ளலாம்.

இதனால் பெண்ணியம் என்பது பால் பாகுபாட்டையும் பால் அடிப்படையில் பேதப்படுத்துவதையும் புரிந்து கொண்டால் மட்டும் போதாது; இது செயல்பாட்டுடன் இணைந்து ஆணாதிக்கத்திற்குச் சவாலாய் அமைவது. இச்செயல்பாடுகள் எவ்வடிவிலும் அமையலாம்.

எடுத்துக்காட்டாக, ஒரு பெண்ணின் முடிவானது மதிப்பிழக்கக்கூடாது; அல்லது அவள் தனக்குத்தானே அறிவு பெற்று தன் வாழ்க்கை போக்கை மேற்கொள்வது;

படிப்பகம்

www.padippakam.com



அல்லது பர்தா முறை வற்புறுத்தப்படுவதை மறுப்பது; அல்லது குழந்தைகள் தேவையில்லை என்று முடிவெடுப் பது; இவற்றைப் பெண்ணிய செயல்பாடுகள் எனலாம்.

பெண்ணியவாதிகளின் செயற்பாடுகள் காலந் தோறும் மாறி வருகின்றன. முன்பு பெண்கள் தமது ஜனநாயக உரிமைகளுக்காகப் போராடினர். கல்வி உரிமை, வேலை உரிமை, சொத்து உரிமை, வாக்குரிமை, பாராளுமன்ற நுழைவுரிமை, விவாகரத்து உரிமை போன்றவை அவர்களது போராட்ட இலக்குகளாக இருந்தன. வீட்டிற்கும் குடும்பத்திற்கும் வெளியே தங் களுக்குரிய சம உரிமைகளையும் சட்ட உரிமைகளையும் பெறுவது அவர்களின் நோக்கமாக இருந்தன.

ஆனால் இன்றைய பெண்ணியவாதிகளோ, பெண் களின் அடிமைத் தளையகற்றி விடுதலை அளிக்கும் செயற் பாடுகளில் இறங்கியுள்ளனர். இதன்படி பெண்கள், ஆண்களுக்கு அடுத்த நிலையில் வீட்டிற்குள் நடத்தப்படு வதையும் குடும்பத்தால் சுரண்டப்படுவதையும் வேலை செய்யும் இடங்களிலும் சமூகத்திலும் பண்பாடு மற்றும் சமய நிறுவனங்களிலும் கீழ்ப்படுத்தப்படுவதையும் உற் பத்தி, மறு உற்பத்தி என இரட்டைச் சுமைகளோடு தவிப் பதையும் எதிர்த்துப் போராடுகின்றனர்.

இதனோடு பெண்ணியம், பெண்ணின் இயல்பு என்ப தான எண்ணப் போக்கினையும், ஆண் தனத்தை விலக் கும் போக்கினையும், உடலியல் ரீதியாக நிர்ணயிக்கப் பட்ட வகைபாடுகளையும் எதிர்த்துப் போராடுகின்றனர்.

இதுவரை பெண்கள், சம்பள வேறுபாடு, குறைந்த சம்பள விகிதம், ஆணாதிக்கம், பெண்களுக்கு எதிரான அடக்குமுறை மற்றும் வன்முறை போன்றவற்றில் சுரண்டப்பட்டனர். இப்போது பெண்கள் எதிர்நோக்காக

படிப்பகம்

www.padippakam.com



வேண்டிய பிரச்சனைகளைப் புரிந்துகொண்டு இவற்றை மாற்றுவதற்கான போராட்டங்களில் ஈடுபடுகின்றனர். எனவே, இன்றைய நிலையில் பெண்ணியத்தின் சாரம் என்பது பெண்களுக்கான சம உரிமை, மரியாதை, குடும்பத்துக்குள்ளேயும் வெளியேயும் தம் உடலையும் வாழ்வையும் கட்டுப்படுத்தும் விடுதலை போன்றவற்றை பெறுவதற்கான போராட்டம் ஆகிவிட்டது.

இதில் இன்னொன்றும் கவனிக்கத்தக்கது உள்ளது. இக்காலத்தில் ஆண்களே விவசாய வேலைகளில் அடிமைகளாகவும் சுரண்டப்படுகிறவர்களாகவும் தாழ்த்தப்படுகிறவர்களாகவும் இருக்கும்போது ஆண்களுக்குச் சமமாவது என்ற போராட்டத்தில் பொருளில்லாமல் போகலாம். எனவே, பெண்ணியவாதிகளின் போராட்டம் ஆண்களுக்கானதுமாக சம உரிமை சமூகத்துக்கான போராட்டமாக விரிவடைந்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

ரோஸ்மேரி டாங் (Rosemarie Tong) பலவகை பெண்ணியம் பற்றி பல்வேறு புனை கருத்துகள் இருப்பதாகத் தனது (Feminist Thought) என்ற நூலில் குறிப்பிடுவார். அவற்றுள் முக்கியமானதாக மிதவாதம் (Liberal), மார்க்சியம், தீவிரவாதம் (Radical), உளநிலை பகுப்பாய்வு (Psychoanalytic) சமூகவியல் (Socialist), இருத்தலியல் (existentialist), பின் நவீனத்துவம் (Post modernism) போன்ற வகை பெண்ணியமாகக் கருதுகிறார்.

ஒதுக்கப்பட்ட. ஒடுக்கப்பட்ட, ஒறுக்கப்பட்ட பெண்கள் எவ்வாறு ஒன்று சேர்ந்து அவர்களுக்கு எதிரான இன்றைய அமைப்பினை அடித்து நொறுக்குவது, தங்கள் தலைவிதியைத் தாங்களே நிர்ணயிப்பது, ஒருவருக்கொருவர் வாழ, அன்பு செய்ய, நகைக்க, பெண்ணாகவே

படிப்பகம்

www.padippakam.com



மகிழ்ச்சியுடன் இருப்பது எனும் நிலைகளில் பெண்ணியம் வளர்கின்றது.

இதுபற்றிய அறிவும் ஆய்வும் செயல்பாடுகளும் தமிழகத்தில் வளர்ந்து வருவதைக் காண முடிகிறது, ஆனால் இது பற்றிய விரிவான நூல் தமிழில் இல்லை என்பது எனக்குக் குறையாக இருந்தது. எனவே, இன்று வெளிவந்த விளக்கக் கட்டுரைகளில் சிறந்தவற்றைத் தொகுத்து நூலாக்கும் முயற்சியில் இறங்கினேன்.

இதற்கு Dr. தேவதத்தா, விநோத், Dr. பஞ்சு, ஜெயராஜ், சிவக்குமார், அருணா, Dr. ராஜ்கௌதமன், ரவிக்குமார் போன்றவர்கள் ஒப்புதலும் ஒத்துழைப்பும் நல்கினர். இவர்களுக்கும் இவர்களது கட்டுரைகளை வெளியிட்ட மேலும், ஆய்வு, நிகழ், இலக்கிய வட்டம், நிறப்பிரிகை போன்ற சிற்றிதழ்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதனைத் தொடர்ந்து "பெண்ணியமும் கலை இலக்கியமும்" என்ற நூலும் வெளிவர இருக்கிறது.

எப்பொழுதும் "புது சிந்தனைக்கு"க் கட்டியம் கூறும் காவ்யா இதிலும் முந்திக்கொண்டதில் பெருமை கொள்கிறது. வாசகர் வரவேற்பார்களாக.

அன்புடன்

**காவ்யா சண்முகசுந்தரம்**

www.padippakam.com

# பொருளடக்கம்

டாக்டர் தேவதத்தா
பெண்ணியம் ஒரு வரலாற்றுப் பார்வை ☐ 9

☐

விநோத்
பெண்ணியம் — சில விளக்கங்கள் ☐ 47

☐

பஞ்சு
பெண்ணியல் திறனாய்வு ☐ 95

☐

ராஜ் கௌதமன்
பெண்ணியமும் மார்க்சியமும் ☐ 137

☐

எதிர்வு சிவக்குமார்
பெண்மை(ய) எழுத்துக்களும்
பெண்ணுடலை எழுதுதலும் ☐ 160

☐

அருணா
பாலியல் அரசியல் பற்றிய கோட்பாடு ☐ 177

☐

சி. ஜெயராஜ்
பெண்மை கதையாடல் உளப் பகுப்பாய்வு ☐ 196

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# பெண்ணியம் : ஒரு வரலாற்றுப் பார்வை

Dr. தேவதத்தா

பெண்ணியம் (Feminism) என்பது பல்வேறு கோட்பாடுகளைப் போல பெண்ணியவாதத்தின் தத்துவார்த்த அல்லது கருத்தியல் ரீதியான தளத்தை ஒரு தனிக்கோட்பாட்டின் தொகுப்பிலிருந்து பெற்றுக்கொள்ளவில்லை. எனவே அனைத்துப்பெண்களுக்கும் எல்லாக் காலங்களிலும் பொருந்தக்கூடிய ஒரு பொதுவான வரையறையை இதற்குச் சொல்ல இயலாது. எனவே பெண்ணியம் ஸ்தூலமான வரலாற்றுக் கலாச்சார நடைமுறைகளிலும், பார்வைகள் உணர்வுகள், செயல்பாடுகளின் நிலைகளிலும் தளம் கொண்டிருப்பதால் இதன் வரையறையானது மாற்றமடையக்கூடும்; மாற்றமடையவும் செய்யும்.

17–ஆம் நூற்றாண்டில் பெண்ணியம் என்ற சொல் முதன் முதல் உபயோகப்படுத்தப்பட்டபோது அது என்ன அர்த்தத்தைத் தந்ததோ அதனின்றும் இப்போது அது முற்றும் மாறுபட்டதாகவே இருக்கின்றது. இது பல்வேறு

படிப்பகம்

www.padippakam.com



நிலையிலுள்ள பெண்களால், அவர்களின் வர்க்கப் பின்னணி, கல்வித் தகைமை, உணர்வு நிலை இவை போன்றவற்றைப் பொறுத்து உலகின் பல்வேறு பகுதிகளிலும், ஒரு தேசத்துக்குள்ளேயும் பல்வேறு வகையாகப் பேசப்படலாம்.

''சமூகத்திலும், வேலைத்தளத்திலும், குடும்பத்திலும் நிலவும் பெண் ஒடுக்குமுறை மற்றும் சுரண்டல் பற்றிய பெண்களின் உணர்வு நிலைகளும், இந்நிலையை மாற்றுவதற்குப் பெண்களும் ஆண்களும் எடுக்கும் உணர்வுபூர்வமான நடவடிக்கைகளும்'' பெண்ணியத்தின் பரந்துபட்ட வரையறையாக இப்போதைய நிலையில் கொள்ளலாம்.

பாலினரீதியிலான ஒடுக்குமுறை வடிவங்களையும் ஆண்மேலாதிக்கத்தையும் தந்தைவழிச் சமூக அமைப்பையும் இனங்காணும் ஒருவரைப் பெண்ணியவாதி என்றழைக்கலாம். ஆனால் இனம் காண்பதோடு மட்டும் அமையாமல் ஆண் மேலாதிக்கத்துக்கு எதிரான நடவடிக்கைகளிலும் இறங்க வேண்டுமென்று வரையறை தெளிவாகச் சுட்டிக் காட்டுகின்றது.

பெண் விடுதலைக்காகத் தொடர்ந்து போராடிவரும் மேலைநாட்டுப் பெண்ணியவாதிகள் இப்படிப்பட்ட இயக்கங்களைத் தோற்றுவிக்கக் காரணமாய் அமைந்த மேலைநாட்டுச் சூழலை இங்கு புரிந்து கொள்வது முதற்தேவையாகிறது.

பதினெட்டாம் நூற்றாண்டு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஐரோப்பியர், அறிவியல் யுகமென்று அழைத்த காலமது. ஐயங்கள், கேள்விகள், புதியன கண்டறியும் தேடலுணர்வு, புரிந்துகொள்ள வேண்டுமென்ற முனைப்பின் தாகம். எதனையும் ஆழமாக அறிய

www.padippakam.com



வேண்டுமென்ற ஆவல் அனைத்தும் அந்தப் பகுத்தறிவு யுகத்தின் முக்கிய அம்சங்களாயின.

அமெரிக்கச் சுதந்திரப் போராட்டமும் பிரெஞ்சுப் புரட்சியும் சுதந்திரத்தையும் சமத்துவத்தையும் நோக்கி அடியெடுத்து வைக்கத் தூண்டுகோலாயின.

சகல பரிமாணங்களிலும் ஆணைவிடத் தாழ்ந்தவளாகவே பெண் கருதப்பட்டாள். ஆனால் பாதுகாக்கப் பட வேண்டியவளாக, ஆணிற்குத் துணை நிற்பவளாகக் கருதப்பட்டாள். ஆண் செயல்திறம் படைத்தவன்; பெண்ணோ அவனைவிடத் தாழ்ந்தவள் என்று கருதப் பட்டு அதுவே சமூக நீதியாகவும் பழகிப் போனதைக் கேள்விக்குட்படுத்தப்பட்டது.

பகுத்தறிவு மானுடத்தின் பண்பு என்றால், மாந்தர் அனைவரும் சமம் என்றால் ஆணுக்கும் பெண்ணுக்கும் வேறுபாடு ஏதுமில்லை. ஆணைப் போலவே பெண்ணும் பகுத்தறியும் திறன் பெற்றவள் தான். அறியாமை அவள் குற்றமன்று அத்தகையச் சூழலுக்கு அவர்களை ஆளாக்கியது ஆண்களின் குற்றமே. அதற்குக் காரணம் கல்வியின்மையே போன்ற வாதங்களை முன் வைத்து வாதாடினார் மேரி வுல்ஸ்டன் கிராப்ட். அவரைப் பெண்ணிய இயக்கப் பாதையில் சுவடுகளைப் பதித்த முன்னோடி எனலாம்.

'கடவுளுக்கு முன் எல்லா மனிதர்களும் சமம்' என்ற துறவி 'பாலின்' கருத்தை முன்னிறுத்தி சமய இயக்கங்களும் சீர்திருத்த இயக்கங்களும் பெண்ணின் தாழ்ந்த நிலையைக் கேள்விக்குட்படுத்திப் பெண்களும் ஆண்களைப் போலவே சகல உரிமைகளையும் பெறத் தகுதி வாய்ந்தவர்கள் என்று பேச ஆரம்பித்ததும் இந்தக் காலக் கட்டத்தில்தான் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



சமயம் மதிக்கப்பட வேண்டுமானால் சமயத்தால் மறுதளிக்கப்பட்ட விபசாரம், குடிப்பழக்கம் இவை முற்றுமாகப் போக்கப்பட வேண்டுமென்ற சமய சீர்திருத்தக் கருத்துப் பரவலாகிய காலமும் இதுதான். இவற்றைப் பெண்கள் முன்னெடுத்துச் சென்றது இக்காலக் கட்டத்தின் மிக முக்கிய அம்சம். வீட்டிலேயே முடங்கிக் கிடந்த பெண்கள் வெளியுலகில் அடியெடுத்து சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க இச்செயல்பாடு தளம் அமைத்துத் தந்தது. இதற்கு ஆதாரமாய் அமைந்தது, 'குடிக்கு எதிரான இயக்கம்' (Temberance Movement).

ஆப்பிரிக்க மக்களை வெள்ளையருக்குக் குறைந்த விலையில் விற்கும் பழக்கம், அவர்களை அடிமையாக்கிக் கடுமையாக உழைக்க வைத்தது. மனிதர்கள் அனைவரும் சமமென்றால் மனிதனே மனிதனை அடிமையாக்கி வாழும் இக்கொடிய பழக்கம், நியாயமற்ற செயல்; மனிதாபிமானமற்ற செயல் என்று அப்பழக்கத்தைக் கேள்விக்குட்படுத்திய காலமும் இதுதான்.

1840-ல் லண்டனில் நடந்த 'உலக அடிமைத்தனத்திற்கு எதிராக இயக்கக் கூட்டத்தில் (World anti slavery movement) அமெரிக்காவிலிருந்து வந்த பெண்களுக்கு, அவர்கள் பெண்கள் என்பதால் அனுமதிக்கப்பட்டபோது, அவர்கள் தங்களுக்காக ஒரு கூட்டத்தைக் கூட்ட விரும்பியதின் விளைவே 1844-ல் நியூயார்கில் 'செனிகா பால்சில்' நடைபெற்ற கூட்டம். பெண்கள் இயக்கத்திற்கான முக்கிய செயல்பாடாக அது அமைந்தது; பெண் விடுதலைக்கான, அதன் அமைப்பு முறைக்கான விதிமுறைகளை உண்டாக்கி, பெண்ணிய இயக்கத்திற்கான வித்தினை ஆழமாக வேரூன்றியது.

ஐரோப்பிய நாடுகளில் பல்வேறு பகுதிகளில் பெண்களுக்கும் கல்வி, வேலை வாய்ப்பு பற்றிய விவாதங்கள்

படிப்பகம்

www.padippakam.com



பெண்களால் நடத்தப்பெற்றன. 1917-ல் அமெரிக்காவிலும் பிரிட்டனில் 1920-லும் பிரான்ஸில் 1946-லும் வோட்டுரிமைக்கான போராட்டங்கள் வெற்றி பெற்று, பெண்கள் வோட்டுரிமையைப் பெற்றனர்.

பெண்களின் சொத்துரிமையை வேண்டியும் போராட்டம் தன் கவனத்தைத் திருப்பியது. தொடர்ந்து கிளர்ச்சிகளை மேற்கொண்டதின் மூலம் பல வெற்றிகளைப் பெற்றனர் பெண்கள். அவற்றுள் பெண்ணுக்குச் சொத்துரிமை, விவாகரத்து பெறும் உரிமை, கல்வி பெறும் உரிமை ஆகியன குறிப்பிடத் தகுந்தவை.

கல்விபெற உரிமை பெற்றபோதும் எப்படி நல்ல மனைவியாக, நல்ல தாயாக இருப்பது என்பதற்காகவே கல்வி தேவையென்று கூறப்பட்டது. மெதுமெதுவாக வேலைவாய்ப்பு, சமகூலி, பலதுறைகளிலும் நுழையும் உரிமை ஆகியவற்றைப் போராடிப் பெற்றனர் மேலை நாட்டுப் பெண்கள்.

ஜான் ஸ்டூவர்ட் மில் (Jhon stuart Mill) தன் பெண்ணடிமை (Subjection of Women) என்ற நூலின் வழி திருமணம் என்ற நிறுவனம் பெண்ணுக்கு மிகப் பாதகமானது; பெண்ணடிமைத்தனத்திற்கு இத்திருமணமே காரணமாக உள்ளது என்றும் இவற்றைப் போக்கினாலொழிய பெண் விடுதலைக்கு வழியில்லையென்றும் குரல் எழுப்பினார்.

அன்னையாகவும், மனைவியாகவும் பேசப்பட்ட பெண்ணின் பங்கு நிலையில் மாற்றம் ஏற்பட்டது; கருத்துப்படிமமும் மாறியது.

பெண்ணியத்தின் தாய் எனப் பேசப்படும் (Betty Friedon) பெட்டி ஃபிரைடன், பெமினைன் மிஸ்டிக்

படிப்பகம்

www.padippakam.com



(Feminine Mystique) என்ற நூலின் வழி பெண்ணியத்தை மேலும் முன்னெடுத்துச் சென்றார். பெண் அழகாகவும் நல்ல மனைவியாகவும் இருக்க வேண்டுமென்பதும், வீடு தான் அவளுக்கு எல்லாம் என்பதும் அதிருப்தியை அளித்த தால் கேள்விக்குட்படுத்தப்பட்டது. 1960 களில் பெண் விடுதலை இயக்கம் வேறு பல பரிமாணங்களோடு வளர்ந் தது. குடியுரிமை இயக்கம் மேலும் அதற்கு உரமூட்டியது. (Civil Rights Movement) தீவிரமான இடதுசாரி இயக்கங் களிலும் பெண்கள் சமமாக நடத்தப்படவில்லையென்பது வெளிச்சமாகியபோது ஒருசிலரின் கோபம் உள்ளாடையை எரிக்கும் செயலாக உருவெடுத்தது. (Bra Burning) அதன் பின் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் 'இரண்டாவது அலை' என்று அழைக்கப்பட்டது.

இரண்டாவது அலை, அழுத்தமான, ஆழமான, விடுதலை பெற வேண்டுமென்று போராடியது. அரசியல் ஆதிக்கத்தைப் போலவே ஆணின் ஆதிக்கத்தை / அதிகா ரத்தைப் / பெண்ணின்மேல் செலுத்துவதைக் கேள்விக்குட் படுத்தி மாற்ற போராடினர். இந்தப் போராட்டக்குழு 'தீவிரப் பெண்ணிய குழுவாகத்' தோற்றம் கொண்டது.

பெண்விடுதலைக்கான விதிமுறைகளை அணுகும் போக்கில்' பெண்ணிய இயக்கங்கள் தம்முள் வேறுபட்ட கருத்தினை உடையவனாய் அமைந்தன. பல்வேறு பிரிவு கள் இருந்த போதிலும் அவற்றுள் மிகப் பரவலானதும் முக்கியத்துவம் பெற்றதுமான மூன்றைப்பற்றி இங்குக் காண்பது மேலைநாட்டில் பெண்ணியம் பல பரிமாணங் களோடு வளர்ந்ததை நமக்குத் தெளிவாக்கும்.

**மிதவாதப் பெண்ணியம் (Liberal Feminism)**

மிதவாதப் பெண்ணியத்தின் வரலாறு 18ம் நூற் றாண்டிலேயே துவங்கிவிடுகிறது. மேலைநாடுகளில் பகுத்

படிப்பகம்

www.padippakam.com



தறிவுக் காலம் (Age of reason) ஆரம்பித்தபோதே இதுவும்
பிறந்துவிடுகிறது.

பல நூற்றாண்டுகளாக வழக்கத்தில் இருந்தவையாயி
னும் விமர்சனத்துக்குட்படுத்தும்போது எதிர்நிற்க
முடியாதவை மாற்றப்பட வேண்டுமென்ற வேகம் பரவிய
அந்தக் காலக்கட்டத்தின் முக்கியத்துவம் பெற்றவைகளில்
சமூகத்தில் பெண்களின் நிலை பற்றிய மறுபரிசீலனையும்
ஒன்று.

மனித இனம் பகுத்தறிவுடையதென்றால் மானிட
இனத்தின் மறுபாதியாக உள்ள பெண்ணியமும் பகுத்தறி
வுடையதுதான். தனிமனித சுதந்திரம் வலியுறுத்தப்பட்ட
தென்றால் அது ஒரு பெண்ணுக்கும் உரியதுதான். மனித
இனத்துக்கான சகல உரிமைகளையும் அனுபவிக்கும் தகுதி
ஆணுக்கிருப்பது போலவே பெண்ணுக்கும் உண்டு. பெண்
என்று பாலியல்வழி நோக்காமல் மனிதஇனப்பிரிவாகவே
காணவேண்டும். இயல்பான அவள் உரிமைகள் மறுக்கப்
பட வேண்டுமென்றால் அவள் பகுத்தறியும் திறனற்றவள்
என்பது நிரூபிக்கப்பட வேண்டும் என்று மேரி வுல்ஸ்டன்
கிராப்ட் எதிர்ப்புக்குரல் எழுப்பினார்.

பகுத்தறிதல், மேலாண்மை செய்தல் ஆணின் குண
மென்றும், கீழ்ப்படிதல், மென்மை, எதிர்ப்புணர்ச்சி
யின்மை, கற்பு இவை பெண்ணின் குணமென்றும் கற்பிக்
கப்பட்டதால் அவள் பின்தங்கிப் போனாள். மனித அறம்
இருவர்க்கும் பொதுவானது, காலம் காலமாக அவள்
கல்வியைப் பெற முடியாமல் புறக்கணிக்கப்பட்டதால்
அறியாமையினின்றும் விடுதலை பெற முடியாமற்
போனது. தவிர, சமுதாயத்தில் அவள் பாலினரீதியில்
கவனிக்கப்பட்டு மனிதனைச் சார்ந்திருக்கும் படியான
கல்வியைத் தந்ததும் முக்கிய காரணமாயிற்று. ஆணை

படிப்பகம்

www.padippakam.com



எப்படிக் கவர்வது? எப்படி ஆள்வது? எப்படி மகிழ் விப்பது? தன் அழகாலும் கவர்ச்சியாலும் எப்படி ஆள்வது? என்பதையும் மென்மை, அடக்கம், அன்பு, உணர்ச்சிப்பூர்வம் இவையே பெண்கள் குணங்கள் என்று கருதும்படி ஆடவர் செயற்கையாக உருவாக்கி விட்டனர். மேலும் ஆண்களுக்கு வாய்த்ததுபோல் பல்வேறு பணி களை மேற்கொள்ள வாய்ப்பு நேராததாலும் குடும்பக் கூட்டிற்குள்ளே அடைந்து கிடந்ததாலும் மனம் விரி வடைய சந்தர்ப்பமில்லாமற் போனது.

கணவனையே முழுதும் சார்ந்திராமல் அவனுக்குச் சமமான உரிமைகள், பொறுப்புகள் ஆகியவற்றைப் பெறவேண்டுமென வாதாடியவர் மேரிவுல்ஸ்டன்கிராப்ட். சொத்துரிமை அவளுக்கு வேண்டும்; வாழ்வில் திருமணம் மட்டுமே பெண்ணுக்குக் கிடைக்கக்கூடிய ஒன்று என்று நினைத்துக் கொள்ளும் நிலை இருத்தல் கூடாது என்றெல் லாம் மேரிவுல்ஸ்டன் கிராப்ட் சுதந்திரச் சிந்தனையாள ராய் பெண்ணுரிமைக்கான கோரிக்கைகளை 'A Vindication of the rights of women' என்ற நூலின் வழி முன் வைத்தார். 1872-இல் வெளியானபோது அந்நூல் பெண் களின் உரிமைக்கான ஒரு வாதமாகவும் விமர்சனமாகவும் கருதப்பட்டது.

ஜான் ஸ்டூவர்ட் மில் (John Stuart Mill 1806-18˘3) என்பார் தன் வாழ்க்கையைத்தான் தீர்மானம் செய்து கொள்வதும், வாழ்வின் மதிப்பீடுகளைத் தனக்குரியதாக் கிக் கொள்வதும் ஒவ்வொருவருக்கும் மகிழ்ச்சியைத் தரும் விஷயமாகும். அதனால் நீதி, அரசியல், ஆகிய அனைத் திலும் சமத்துவம் நிலவ வேண்டுமென்று பெண்களின் உரிமைக்காகப் போராடினார்.

இவர் எழுதிய (Subjection of Women)-பெண்ணின் அடிமைத்தனம் - பெண்ணடிமை நிலை என்னும் நூல்

படிப்பகம்

www.padippakam.com



பெண் இயக்கத்திற்கு மேலும் வலுவூட்டியது. இருபால்களுக்கிடையேயான சட்டரீதியான அடக்குமுறை தவறானதும், மானுட வளர்ச்சிக்குத் தடையானதுமாகும். பூரண சமத்துவத்தால் அது மாற்றப்பட வேண்டுமென்பதும் ஒருபுறம் அதிகாரமும் தனியுரிமையும் மறுபுறம் இயலாமையும் இருத்தல் கூடாது என்றும் வாதித்தார் மில். நீண்ட நாட்களாகப் பழக்கத்தில் இருந்து வந்தது என்பதால் எதுவும் சரியாகிவிடாது. மனித வரலாற்றில் உருவாவது பொதுவாக நடைமுறையில் நடந்து வருவதுதான். அதனால் பெண்ணடிமைத்தனம் பெண்களின் தாழ்வு நிலை இவை பலசாலிகளின் விதியைப் பொறுத்தமைந்தது. பெண் தாழ்ந்து இருத்தல் என்பது அடிமைத்தனத்தின் கூறுதான். பெண்ணினத்தின் இயற்கைத் தன்மைகளாகக் கூறப்படுவன யாவும் செயற்கையானதே; கட்டாயப்படுத்தப்பட்டவையே, செயற்கையாக ஊக்குவிக்கப்பட்டு, கற்பிக்கப்பட்டு, இந்த நிலையில் பெண்களைப்புரிந்துகொண்டு விட்டோமென்று யாரும் சொல்ல முடியாது. தாழ்ந்த நிலையில் பிறருக்காக வாழ்பவர்கள் தங்களின் உண்மையான தன்மையை, அதுவும் தன்னையாள்பவனிடம், எஜமானனிடம் எப்படி வெளியிட முடியும்? அதனால் பெண்கள் தங்களைப்பற்றித் தாங்களே எழுதிக்கொள்ளத் துணிச்சலூட்டப்பட வேண்டும், தங்களை வெளிப்படுத்திக்கொள்ள துணிச்சலோடு பேச வேண்டும்.

பெண்கள் தம் கௌரவத்தைக் காத்துக்கொள்ள தாம் விரும்பியபடி பற்பல பணிகளைப் ஏற்பதும், சொத்தில் பங்கு பெறுவதும். வோட்டுரிமை பெறும் தகுதியை உடையவராவதும் மிகமுக்கியமென எடுத்துரைத்தார் மில். திருமண ஒப்பந்தம் மாற்றப்பட வேண்டுமென்றும் சட்டத்தின் முன் சமத்துவம் நிலவவேண்டுமென்று மேலும் வாதாடினார்.

www.padippakam.com



சமூகத்தில் பெண்ணின் நிலையைப் பற்றிய அதிருப்தியை ஊட்டி, விழிப்புணர்ச்சியை மீண்டும் ஊட்டுவதில் முக்கியத்துவம் பெற்றவர் பெட்டிஃப்ரைடன் (Betty Friedon) பெண்ணியத்தின் தாய் எனப் பாராட்டப் படுபவர்.

மானுடத்திறமை என்பது தனிச்சிறப்பு வாய்ந்தது. அதனையே மதித்து, ஒரு பெண்ணுக்குத் தன்னைப் புரிந்து கொள்வதிலும் ஒரு பணியை மேற்கொண்டு எதிர் காலத்தை உருவாக்கிக் கொள்வதிலும் சுதந்திரம் இருக்க வேண்டுமென்பார். ஆணுக்குள்ள சுதந்திரமும் உரிமையும் பெண்ணுக்கும் உண்டு என்று கூறியதோடு சுதந்திரமாய்த் தான் விரும்பியதை மேற்கொள்ளும் உரிமை ஆண்மையு மன்று; பெண்மையுமன்று; அது மனிதமாகும் என்ற கருத்தை முன் வைத்தார். பெண்ணைப் பற்றிய கருத்துப் படிமம் மனிதமாக இல்லாமல் பெண்ணாக இருப்பதைச் சாடுகிறார். இது கற்பிக்கப்பட்டதென்றும் வீட்டுக் குள்ளேயே பாலியல் உறவுக்காக வாழ்வதும், குழந்தை களைப் பெறுவதும் அவரின் மானுடத்திறன்களை முழுமையாக வளர்த்துக்கொள்ள இயலாததால் குடும்ப வாழ்வில் பெண்ணினம் திருப்திபெற முடியாதென்றும் விளக்கிச் சென்றார். கல்வியறிவு அவர்களின் பங்கு நிலையை மாற்றும்; இல்லத்தாள் என்ற பெண்களின் படிமத்தைப் புறக்கணிக்கவேண்டும் என்றும், புறக் கணிப்பு என்றால் கணவனையும், வீட்டையும் குழந்தை களையும் புறக்கணிக்க வேண்டுமென்ற பொருளன்று என்றும் மேலும் விளக்குவார். திருமணம் அல்லது வேலை என்றில்லாமல் வேலையைப் பார்த்துக் கொண்டே குடும் பத்திலும் இருக்கலாம் என்று கூறிப் போவார்.

இவர்களும் இவர்கள் கருத்தையொட்டிய உணர் வுடையாரும் மிதவாதப் பெண்ணியவாதிகள் எனலாம்,

படிப்பகம்

www.padippakam.com



1960-ல் மிகவளர்ந்த இந்தப் பெண்ணியம் பெண்ணின் தாழ்ந்த நிலைக்குக் காரணமான வேரினைக் கண்டறிய ஆர்வம் காட்டவில்லை. ஆனால் சமத்துவம் என்ற கோட்பாட்டை, கல்வி, வேலை வாய்ப்பின்மை, சொத்துரிமை, வாக்குரிமை, பாராளுமன்றத்துக்குச் செல்லும் உரிமை போன்ற சட்டரீதியான சமத்துவத்தைத் தாண்டியும் முன்னெடுத்துச் சென்றனர். அதன் விளைவாக குழந்தைக் காப்பகங்கள், கருத்தடை உரிமை போன்றவையும் நடைமுறை சாத்தியமாயின.

மிதவாத பெண்ணியலார் சமூகஅமைப்பு முறையை— குடும்ப அமைப்பை அப்படியே ஏற்றுக்கொண்டு சமூகப் பழக்க வழக்கங்களில் மாறுதல்களைக் கொண்டுவர விரும்பினர். சமூக நிறுவனங்கள், சட்டம், மனப்போக்கு, சமூக அமைப்பு ஆகியவற்றைக் குறிப்பாக குடும்ப அமைப்புப் பற்றி ஏதும் சிந்திக்கவில்லை. சட்டங்களின் தொகுதி சமூகத்தை மாற்றிவிடும் என நம்பினர். அதனால் அடிப்படையான மாற்றம் தேவையென்று உணரவில்லை.

**சோசலிசப் பெண்ணியம்** (Socialist Feminism)

நீண்ட வரலாற்றைத் தன்னகத்தே கொண்டது சோசலிசப் பெண்ணியம். பொதுவாக மார்க்சிஸ்டுகள் இந்த வகைப் பெண்ணியத்தை வரவேற்றனர் எனலாம்.

பெண்கள் எப்போதும் தாழ்ந்த நிலையில் இருந்ததில்லை. ஆரம்ப காலகட்டத்தில் தாய்வழிச் சமுதாயமாக இருந்தபோது, பெண்கள் சமூகப் பண்பாட்டுத் தலைவிகளாக இருந்தபோது அங்கு சமத்துவம் நிலவியது. வேட்டையாடும் தொழில் மட்டுமன்றி, காய்கறிகளைக் கண்டுபிடித்ததும், அவற்றை உணவிற்காகத் தயார் செய்ததும் பெண்களே; உழவினை மேற்கொண்டு, விலங்கினை அடக்கி, காட்டு விலங்கை வீட்டு விலங்காக்கித் தங்களுக்

படிப்பகம்

www.padippakam.com



குப் பயன்படுத்திக் கொண்டதும் அவர்களின் திறனைக் காட்டும் சாட்சியங்களாகும். இவற்றைத் தவிர பானைகள் வனைய, கைவினை ஆராய்வும் இருந்தன என்பது அறிந்த செய்தி உணர்த்துகிறது. முதன்மையிடத்தில் தலைமை தாங்கியவர்கள் தந்தைவழிச் சமூக அமைப்பு தனிச்சொத்துரிமை, சமுதாயம் வந்தபோது, இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டனர். பெண்கள் வரலாற்றில் மிக துரதிருஷ்டமான இந்தக் காலகட்டத்தில் பெண்ணின் நிலை தாழ இது பெருங்காரணமாகியது.

குடும்பம், நட்புறவு துணைக்காகத் தேவைப்படவில்லை. உணர்வுகளுக்கு ஆதரவாகத் தந்தை வழியில் செல்வத்தைப் பாதுகாத்தல் பண்பிற்கே தளமாகியது. பெண் தன்னியல்பை இழந்து கணவனின் சொத்தானதும் இக்கால கட்டத்தில் தான். பெண் எல்லா இடங்களிலும் அனைத்துச் சமூகத்திலும் ஒடுக்கப்பட்டாள். நவீன முதலாளித்துவத்தில் மேலும் ஒடுக்கப்பட்டாள். பெண்கள், குறைந்த கூலிபெறும் தொழிலாளர்களாய் நியமனம் செய்யப்பட்டு, சுரண்டப்பட்டார்கள். பலர் வீட்டு வேலை செய்பவர்களாய் மாறினர். பணம் மதிப்பீடுகளை முடிவு செய்கிறபோது பெண் வெளியே சென்று வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் நேர்ந்தது. நாள்முழுதும் செய்யப்படுகிற வீட்டு வேலைகளுக்குச் சம்பளமில்லாததால் அவள் உழைப்பிற்கு மதிப்பில்லாமல் போனது. முதலாளித்துவச் சமுதாயம் தேவைநேர்ந்தபோதெல்லாம் அவர்களைப் பயன்படுத்திக் கொண்டது. இன வேறுபாடு போன்றே பாலின வேறுபாடும் முதலாளித்துவ சமூகத்திற்கு முக்கியமாய் அமைந்து, பெண்கள் குறைந்த கூலிக்கு வரும் உழைப்பாளிகளாக்கப்பட்டு அவர்களைப் பயன்படுத்தி லாபம் பெறுவது முதலாளித்துவப் போக்காகி விட்டது.

www.padippakam.com



## தீவிரவாதப் பெண்ணியம் (Radical Feminism)

தீவிரப் பெண்ணியம் 69, 70-ல் இரண்டாவது பெண்ணிய அலை அடித்தபோது ஆரம்பமானது எனலாம். இவர்களுக்கு மிதவாதப் பெண்ணியவாதிகளோடு தொடர்பு இருந்தது. ஆனால் பாலியல் ரீதியான அடக்குமுறை புறக்கணிக்கப்பட்டு, பாலியல் ரீதியான உழைப்புப் பங்கீடும் பொருளியல் வர்க்க அமைப்பும் முக்கியப்படுத்தப்பட்டபோது, அது சீர்திருத்தமாக அமைந்து போனதால் தீவிரப் பெண்ணியவாதிகள் தந்தைவழிச் சமுதாயத்தை உடைத்தலே முதன்மை நோக்கமாகக் கொண்டனர். இதன் வேர் உயிரியல் ரீதியான குடும்பமென்பதால் குடும்பத்தையும் முற்றுமாக உடைக்க விரும்பினர்.

உயிரியல்கூறு வேறுபாடுகள் பெண்கள் மீதான ஆண்களின் மேலாண்மையைத் தந்தது. பலதார வழக்கம், பாலியல் உறவுகள் அடிப்படையான அடக்குமுறைகளின் வடிவங்கள் என்று கண்டனர். தீவிரப் பெண்ணியவாதிகள் பெண்ணின் மறு உற்பத்தி மீதான ஆண்களின் மேலாண்மை, ஆண்களுக்கான ஏற்றத் தாழ்வுடைய சமூக அமைப்பு, தந்தை வழிச் சமூக அமைப்புமுறை, திருமணத்தின் மூலம் நிரந்தரமாக்கப்பட்டு காப்பாற்றப்பட்டது. பாலின ரீதியிலான உழைப்புப் பங்கீடும் பிரிவும் குடும்பத்தின்வழி காப்பாற்றப்பட்டது. ஆதிக்கத்திற்கான பற்பல தளங்களும் ஆணின் கையில் இருந்ததால் பாலிய அரசியல் என்பது தந்தைவழிச் சமுதாயத்தின் அரசியல், குடும்ப, சட்ட ரீதிக்கோட்பாடு திருமண அமைப்புக்கு எதிராயின. எனவே தீவிரப் பெண்ணியவாதிகள் குடும்ப அமைப்பு, சமூக அமைப்பு. ஆணின்மேலாண்மை அனைத்தையும் புறக்கணித்தனர்.

தீவிரப் பெண்ணியவாதிகள் தந்தைவழிச் சமூக அமைப்பின் எதிரியாகி தந்தை வழிச் சமூக அமைப்பை

படிப்பகம்

www.padippakam.com



மாற்றவேண்டுமென்று போராடினர். பெண்ணடிமைத் தனமானது பொருளாதார வேறுபாட்டில் வேர்கொண்டது என்பதைவிட, ஆண் பெண்பாலிய உறவில் உண்டானது என்றே அவர்கள் நினைத்தனர். பெண்ணடிமைத் தனத்திற்கு ஆணே காரணமென்பதால், ஆணைப் பகைவனாக எண்ணி, ஆண் மேலாண்மையை வெறுத்து, பாலிய வேறுபாட்டை முற்றுமாகப் போக்கத் தீவிரமாக எண்ணியதால், அவர்கள் வாழ்வில் ஆணுக்கு இடமில்லாமற் போனது. பாலியல் உரிமை, உடம்பின் மீதான கட்டுப்பாடு, விடுதலைக் காதல், தன்னின அனுபவம், குழந்தைகளின் கூட்டுப் பாதுகாப்பு ஆகியன இவர்களின் செயல்பாடுகளாயின. ஆண் மேலாண்மையை முழுவது மாய்ப்போக்க பாலியல் ரீதியான புரட்சி தேவைஎன்றனர். விழிப்புணர்வை ஊட்டுவதின் மூலம் மரபுகள், பாலியல் கோட்பாடுகள் ஆகியவற்றைத் தகர்க்க வேண்டுமென்றனர்.

ஆண்மேலாண்மை என்பது மிகப்பழைய மிகஅடிப்படையான ஆதிக்கத்தின் வடிவம். மற்ற அடக்குமுறைகள், கரண்டலுக்கான வடிவங்கள் யாவும் இன, முதலாளித்துவ எதேச்சதிகார ஆண்மேலாண்மையின் விரிவுகளே என்று கருதினர். ஆண்கள் பெண்களின் மேல் ஆதிக்கம் செலுத்த, சில ஆண்கள் இவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தினர். இதுவே சமூக நிலையாகியிருந்தது பெண்ணின் மறு உற்பத்தி மீதான ஆண்மேலாண்மையை வெறுத்த இவர்கள், ஆணின் வெறுப்பு, பெண்ணின் மீதான பலாத்காரம், பெண்ணின் நிர்வாணப்படங்களைக் கண்டு மகிழ்தல் ஆகியன பாலின ரீதியிலான வன்முறைகளின் வெளிப்பாடுகளாகும் என்றனர். பெண்களின் ஒருங்கிணைப்பும், அவர்களிடையே வரும் தற்சார்பு நிலையுமே இவற்றைத் தூக்கியெறிய முடியும் என்ற எண்

www.padippakam.com



ணத்தை உடையதென்பதால் எதற்கும் ஆணைச் சார்ந்திராத தன்மை உருவாக வேண்டுமென்று செயல் பட்டனர்.

**இந்தியாவில் பெண்ணியக்கங்களும் பெண்ணியமும் :**

மேலைநாட்டில் பெண்ணியம் உருவானதைப்போல் இந்தியாவில் உருவாகவில்லை என்பதை முதலில் நாம் நினைவுபடுத்திக்கொள்வது முக்கியம். 1930 களில் 'பெண்விடுதலை' என்று பொருள்படும் (''Wonen's Emancipation'') என்ற சொற்பிரயோகம் வந்துவிட்டது என்றாலும், பெண்ணியம் என்ற சொல் நமக்கு அந்நியம் தான்; ஆயினும் அதன் கோட்பாடு ஒரு உருமாற்றத்திற் கான நடவடிக்கை யென்பதில் சந்தேகமில்லை. சொல் அந்நியம் என்பதாலேயே அது நமக்குச் சொந்தமில்லை யென்று கூறிவிட முடியாது. ஏனெனில் ஒரு கருத்தமைவை தேசிய பூகோள எல்லைக்குள் அடக்கிவிடவோ பிற மனிதர்களுக்கு அது அவசியமற்றது என்று ஒதுக்கிவைக்கவோ இயலாது. எனவே பெண்ணியம் என்பதும், அதன் கோட்பாடுகளும், ஒரு சமூக மாற்றத்திற்கான நடவடிக்கை யாகும் என்பது தெளிவு.

மேலை நாட்டைப்போல 19-ஆம் நூற்றாண்டில் நமது நாட்டில் பெண்கள் மீது ஏவிவிடப்பட்டிருந்த அடக்கு முறைக்கு எதிரான ஓர் இயக்கம் தீர்க்கமான நிலைப் பாட்டோடு அமைப்பு ரீதியாக அமைக்கப்பட்டது என்று கூற முடியாது. ஆனால் சீர்திருத்தம் என்ற நோக்கில் இயக்கங்கள் வளர்ந்ததை நாம் புறக்கணிக்க இயலாது.

ஜனநாயக உரிமைகள் பற்றியும், சரிபாதி மக்கள் தொகையினர்க்கு அடிப்படை உரிமைகளற்ற நியாயமற்ற நிலைபற்றியும், ஒரு விழிப்புணர்ச்சி தோன்றி வளர்ந்த

www.padippakam.com



போதே பெண்ணியமும் பெண்ணியப் போராட்டங்களும் எழுச்சியடைந்தன எனலாம். ஆனால் இப்போதுள்ள வடிவில் அவை அன்றில்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

தேசிய விடுதலைப் போராட்டம் உச்சக்கட்டத்தை அடைந்த வரலாற்றுக் காலக்கட்டத்தில் அந்நிய ஆதிக்கத் துக்கு எதிராகவும், உள்நாட்டுச் சர்வாதிகார நிலப்பிரபுத் துவ ஆட்சியாளர்களுக்கு எதிராகவும், போராட்டங்கள் வெடித்தபோது பெண்ணிய விழிப்புணர்வும் ஏற்பட்டு விட்டது எனலாம். இக்காலக் கட்டங்களில் பெண் அடக்கு முறைக்கு எதிரான குரல்கள் நாடெங்கும் ஒலிக்கலாயின. விதவைகளின் மறுமணத்திற்கான சாத்தியங்கள், பல தாரமணத்தைத் தடைசெய்தல், சதிமற்றும் முகத்திரை ஒழிப்பு பெண்களுக்குப் கல்வி, மற்றும் சட்டரீதியான சமத்துத்வம் போன்ற விஷயங்களை அவை வலியுறுத்தின. பெண்கள் பௌத்த சங்கத்தில் சேர்ந்து துறவியாக முடி யுமாவென்று புத்தரும் அவருடைய சீடர்களும் விவாதித் திருக்கிறார்கள். ஆசியாவில் பல நிலைகளிலும் பெண் கல்வியுரிமை பற்றிய தொடர்ச்சியான கருத்து மோதல்கள் இடம் பெற்றிருக்கின்றன. இவை பெண்கள் மீதான விவாதம் நமக்குப் பழமையானதுதான் என்பதைக் காட்டு கின்றன.

பெண்ணியக்கங்கள் இப்போது முன் வைக்கும் கோரிக் கைகள் துவக்கக் காலத்தில் வைக்கப்பட்ட கோரிக்கைகளி னின்றும் வேறுபட்டாலும் அன்றும் இன்றும் பெண் அடிமைத்தனம் பெருமளவிற்கு மாற்றத்தைப் பெற வில்லையென்பதுதான் யதார்த்த நிலை. ஏற்பட்டுள்ள மாற்றங்கள் ஒட்டுமொத்தமான மனிதகுல விடுதலைக்கு கான போராட்டத்தின் ஒரு பகுதியேயாகும். இன்றைய நிலையில் பெண்ணியவாதிகள் தனித்துவம் பெற்ற மிகவும்

www.padippakam.com



ஸ்தூலமான அந்தந்தப் பிரதேசத்துக்குரிய பிரச்சனைகளை எழுப்பிப் போராடுகின்றனர் என்பதையும் நாம் மனதில் கொள்ளவேண்டும். இது நீண்ட காலப் பெண்கள் இயக்கப் போராட்டங்களின் பயனாகும்.

இன்றைய பெண்ணிய இயக்கங்களைப் பற்றி அறிவதற்கு முன் வரலாற்று அடிப்படையில் இந்தியாவில் பெண்ணியக்கங்கள் எப்படியிருந்தன என்பதை அறிவது அவசியமாகிறது.

18-ஆம் நூற்றாண்டில் மேலை நாட்டில் ஏற்பட்ட புதிய சிந்தனையும் கோட்பாடும் இந்தியாவிலும் தாக்கத்தை ஏற்படுத்தின. 19, 20-ஆம் நூற்றாண்டுகளில் சிந்தனையிலும் கோட்பாட்டிலும் புதியபோக்கு உண்டாயிற்று. மேலை நாடடு நாகரிகமயமாதல், நவீனமயமாதல் புத்தாக்கம், மீட்டெழுச்சி இயக்கம், சீர்திருத்த தேசியம் ஆகியன பெண்ணின் நிலையைக் கேள்விக்குட்படுத்தின.

இந்தியப் பெண்கள் நிலையையும் சமூகத்தில் அப்போது பரவியிருந்த சில சமூகத்தீமைகளையும் கண்டறிந்த ஐரோப்பிய அறிஞர்களும், கிறித்துவ நிறுவனங்களும் கண்டனம் செய்து கேள்விக்குட்படுத்தினர். அவர்களின் கவனத்தைப் பெருமளவிற்கு ஈர்த்தவை குழந்தை மணம், விதவையர் நிலை விதைவையர் திருமண மறுப்பு, பெண் கல்வி மறுப்பு, பலதார மணம் ஆகியன. இந்தியப் பெண்கள் மனிதப் பண்பற்ற முறையில் நடத்தப்படுவதாகவும் இந்தியர்கள் காட்டுமிராண்டித்தனமாக வாழ்வதாகவும் கேலி செய்தனர்.

இது மிகைப்படுத்திக் கூறப்பட்டக்கூற்று என்றாலும் அதில் உண்மை ஓரளவு இருப்பதை ஆங்கிலக்கல்வி கற்ற அக்கால அறிஞர்கள் உணர்ந்தனர். அதனால் பெண்கள் பிரச்சனைகளை மையப்படுத்திப் பல போராட்டங்களை

பெ—2

படிப்பகம்

www.padippakam.com



மேற்கொண்டனர். இந்தியப் பெண்களின் உண்மை நிலையை உணர்ந்த சீர்த்திருத்தவாதிகள் அதை மாற்றவும் மேம்படுத்தவும் முனைந்து நின்றனர்.

பிரம்ம சமாஜம், ஆரிய சமாஜம், பிரார்த்தனா சமாஜம் ராமகிருஷ்ணமிஷன் ஆகியன சமூக சீர்திருத்தம் வேண்டிப் பெருமளவிற்குப் போராடின.

சீர்திருத்தவாதிகளுள் முன்னோடியான ராஜாராம் மோகன்ராய் (1772—1883) 1828ல் பிரம்ம சமாஜத்தைத் தோற்றுவித்து, சதிக்கு எதிராகப் போராடினார்.

பலதாரமண எதிர்ப்பு, பெண்கல்வி, பெண்ணுக்குச் சொத்துரிமை ஆகியனவும் அவர் போராட்டத்தில் முக்கிய இடம் பெற்றன.

1850ல் மேலும் சீர்திருத்தச் செயல்பாடுகள் பெருகின. விதவை மறுமணத்திற்குப் பரிந்துரை செய்து தீவிரப் பிரசாரம் செய்தவர்களுள் முதன்மையானவர் ஈஸ்வர சந்திரவித்யாசாகர் (1820—1891) தேவேந்திரநாததாகூரும் ஆரிய சமாஜத்தைத் தோற்றுவித்துப் பெண்கல்விக்காகப் பெரிதும் உழைத்த சரசுவதியும் அவரோடு இணைந்து போராடினார்.

குழந்தைத் திருமணத்திற்கு எதிராகப் போராடியவர்களுள் முதன்மையானவர் கேசவசந்திரசென் (1838—84) பிரம்ம சமாஜத் தலைவரும் சீர்திருத்தவாதியுமான இவர் வேதங்களுக்கு முரணானது குழந்தை மணம் என்று கூறி, நமது பண்பாட்டிற்கு அது எதிரானது என்றார். இவர்களின் முயற்சியால் குழந்தை மணத் தடைச்சட்டமும் சதித் தடைச்சட்டமும் இயற்றப்பட்டன. இடையறாத போராட்டத்தின் சாதனைகள் என்று இவற்றைக்கூறலாம்.

படிப்பகம்

www.padippakam.com



இந்திய நாட்டுச் சீர்திருத்தவாதிகள் பெண்களுக்கு எதிரான சமூகத்தீமைகளை எதிர்த்துப் போராடியபோது தேசிய விடுதலை இயக்கம் காந்தியடிகளின் தலைமையில் புதியதொரு திசையில் செல்ல ஆரம்பித்தது. 1920க்குப் பின் பொதுவாழ்வில் பெண்கள் பங்குபெற ஆரம்பித்தனர். அரசியல் நிறுவன அமைப்பும், அதை எதிர்க்கும் நோக்கத்தில் கதர் அணிதல், இந்தியப் பொருட்களையே வாங்குதல், அயல்நாட்டுப் பொருள்களைப் புறக்கணித்தல், கள்ளுக்கடை மறியல், ஒத்துழையாமை இயக்கம் ஆகியவற்றில் தீவிரமாகப் பங்கேற்றனர். இந்தக் காலக் கட்டத்தில்தான் ஆயிரக்கணக்கில் பெண்கள் குடும்பப் பணிகளைத் தவிர வேறு பல பணிகளிலும் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளத் துணிந்து வெளியில் வந்தனர். குடும்ப எல்லையைத் தாண்டி வெளியுலகில் அடியெடுத்து வைத்த இக்காலக்கட்டம் வரலாற்றுச் சிறப்பு மிக்கது எனலாம்.

1928ல் பல்வேறு சத்யாகிரகத்தில் ஆயிரக்கணக்கில் பங்குகொண்டனர். 1930ல் ஒத்துழையாமை இயக்கத்திலும் 1942-இல் வெள்ளையனே வெளியேறு இயக்கத்திலும் பெண்களின் பங்கு குறிப்பிடத் தகுந்ததாய் அமைந்தது. மெத்தப் படித்த மேதைகளும் கல்வியறிவற்ற பேதைகளும் பெருமளவிற்குக் கைது செய்யப்பட்டது முன் எப்போதும் நடக்காதது. பெண்கள் வாழ்வில் புதிய திருப்பமும் புதிய பங்கு நிலையில் வியப்புறும் வகையில் பணியாற்ற ஆரம்பித்த காலமும் இதுவே.

''சுதந்திரப் போராட்டத்தில் பல வியப்பான நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன. தேசியப் போராட்டத்தில் பெண்கள் குறிப்பிடும்படியாகப் பங்கு கொண்டது சந்தேகமில்லாமல் மிக முக்கியமானது'' என்று இந்த மாற்றத்தை ஜவஹர்லால் நேரு குறிப்பிடுவார்.

படிப்பகம்

www.padippakam.com



பெண்களின் முன்னேற்றத்திற்காகப் பல பததாண்டு கள் சீர்திருத்த இயக்கங்கள் முயன்று செய்ததை காந்திஜி சில ஆண்டுகளில் செய்து விட்டார் என்பார் மகரிஷி கார்வே.

சமூக சீர்திருத்த இயக்கங்கள் பெண்கள் முன்னேற்றம் தேவையென்பதை உணர வைத்தன. தேசிய இயக்கம் குடும்பத்திற்கு அப்பாற்பட்டச் செயல்பாடுகளில் ஈடுபாடு கொள்ள புதியதொரு ஆற்றலையும் தங்கள்ளைப் பற்றிய நம்பிக்கையையும் பெண்களுக்குத் தந்தது.

இங்கு இன்னொரு கருத்தையும் கூற வேண்டும். சாதிகள் அமைப்புடைய சமூகத்தில் பெண்ணடிமைத் தனம் மிகத் தீவிரமாக இருந்தது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். உயர் சாதியினராகக் கருதப்பட்ட பிராமணருக்கு எதிரான இயக்கம் ஆங்காங்கே வலிமை பெற்று, வேகமடைந்த போது அதன் விளைவாகப் பெண் களின் பிரச்சனைகளிலும் கவனம் செலுத்தும் சூழ்நிலை உருவாகியது.

சமூகத்தின் ஏற்றத்தாழ்வு அமைப்பு பெண்ணாடிமைத் தனத்திற்குத் துணை போனதால் சாதிரீதியான அடக்கு முறையையும் பெண்ணடிமைத்தனத்தையும் முதன் முதலாக ஒன்றாக இணைத்தவர் தீவிரவாதியான ஜோதி ரோபூலே, (1827—1890) மகாராஷ்டிரத்தில் தோன்றிய இவரால் பிராமண எதிர்ப்பு இயக்கம் தோற்றுவிக்கப் பட்டது. அவ்வியக்கம் குழந்தைமணம், சாதி ஆகியவற்றை எதிர்த்ததோடு பெண்கல்விக்கும் விதவைத் திருமணத்திற் கும், பிரசாரம் செய்தது. மராட்டி, குஜராத்தி சீர்திருத் தக்காரர்கள் மிக முன்னணியில் நின்று மேற்கிந்தியாவின் பெண்ணடிமைத் தனத்திற்கு எதிராகப் போராடினர்.

படிப்பகம்

www.padippakam.com



1920-ல் பூனாவில் பிராமணர் அல்லாதார் பிராமண சீர்திருத்தக்காரரோடு கட்டாயப் பெண்கல்வியைக் கோரி நின்றனர். அதனை எதிர்த்து நின்ற தீவிரத் தேசிய தலைவரான லோகமான்ய பாலகங்காதர திலகரைப் புறக்கணிக்கவும் அவர்கள் தயங்கவில்லை.

பிராமணரின் மேலாண்மை குறித்துத் தென்னிந்தியாவிலும் எதிர்ப்புக் குரல் வேகத்தோடு உரக்க ஒலித்தது. 1920-இல் சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்த பெரியார் ஈ. வெ. ரா. சாதிய முறைகளைக் கண்டனம் செய்தும், சமய சடங்குகளையும், விக்ரக ஆராதனையையும் சாடி தமிழகமெங்கும் பிரசாரம் செய்தார். பெண்களுக்கான சமவுரிமைகளுக்காகப் போராடிய அவர் சுயமரியாதைத் திருமணத்தை அறிமுகப்படுத்தினார். சமய ஆசாரியார்க்கு இடமில்லாமற் போகவும் பெண்ணும் ஆணும் விருப்பப்பட்டுத் திருமணம் செய்துகொள்வதற்கும் இது அடிகோலியது.

1928-ல் செங்கல்பட்டில் நடந்த மாநாட்டில் பெண்களுக்கு 50 விழுக்காடுகள் பங்களிப்பும் பிரதிநிதித்துவமும் வேண்டுமென்ற ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தேசிய போராட்டத்தில் தீவிரப் பங்கேற்ற பாரதியார் பெண் விடுதலைக்குப் போராடியது இந்தியப்பெண் விடுதலை வரலாற்றில் ஒரு சகாப்தம் என்பதில் மறுகருத்து இருக்கவியலாது. எனவே பாரதியை விலக்கி இங்கு பெண் விடுதலை என்ற பேச்சுக்கே இடமில்லையென்பதை நினைவுப்படுத்திக் கொள்வது இங்கு மிக முக்கியமானது.

இந்திய விடுதலைக்குப்பின்

இந்தியா சுதந்திரம் பெற்றதும் புதிய நம்பிக்கையும் மனஎழுச்சியும் பிறந்தன. நாட்டு முன்னேற்றத்திற்குப்

www.padippakam.com



பல திட்டங்களை அரசு வகுத்தது. அரசியல் நிர்ணய சட்டத்தின் மூலம் சமத்துவம் நிலைநாட்டப்பட்டது. மத்திய சமூக நலத்துறை 1953-ல் ஏற்படுத்தப்பட்டு, பல நூறு 'மகிளா மண்டல்கள்' தோன்ற வழி வகுத்தது. ஆயினும் அவை மக்களைச் சென்றடையவில்லை என்பதோடு பல காரணங்களால் ஊக்கமிழந்து மந்த நிலையை அடைந்தன.

1960 வரை இவை வெறும் தாட்களில் மட்டுமே இடம் பெற்றிருப்பதைப் பல ஆய்வுகள் புலப்படுத்துகின்றன. இந்தச் சூழலில் இந்தியாவில் பொருளாதார நெருக்கடியும் ஒருவித தேக்க நிலையும் விலைவாசி ஏற்றமும், பணவீக்கமும் நிலமற்றோர் எண்ணிக்கையும் அதிகமானதால் ஆங்காங்கே கிளர்ச்சிகள் வெடிக்கலாயின. நகரம், கிராமம் ஆகிய எல்லா இடங்களிலும் அதிருப்தி நிலவியது. இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி மூன்றாய் பிரிந்தது. இந்தக் காலக்கட்டத்தில் மிக முக்கிய நிகழ்ச்சி என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்—பெண்களின் பிரச்சனைகளை அவை பெருமளவு எடுத்துக் கொள்ளவில்லையென்றாலும் பொதுக் கிளர்ச்சியில் அவர்கள் ஒருங்கிணைக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது 1960களில் நெருக்கடி சூழல் பாட்டாளி மக்களைத் தீவிரப் போராளிகளாக்கியதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இந்தியா பெரும் அரசியல் குழப்பத்தில் சிக்கியிருந்த இந்தக்காலக் கட்டத்தில் மேற்குவங்க கிராமப்புற மக்களின் 'நிலப்பசியும்', 'வேலைப்பசியும்' 'நக்சல்பாரி இயக்கத்திற்கு வழி வகுத்தது. இது ஆந்திரப்பிரதேசம் பீகார், கேரளா, ஆகிய மாநிலங்களில் வேகமாகப் பரவியது. பர்த்வான் மாவட்டத்தில் இராணுவ அடக்கு முறை நேர்ந்தபோது இரண்டாயிரம் பெண்கள் எதிர்த்துப் போராடியது வரலாற்றில் முக்கியத்துவம் பெற்ற ஒரு நிகழ்ச்சியாகும்,

படிப்பகம்

www.padippakam.com



பீகாரிலும், மத்தியப் பிரதேசத்திலும் நிலச்சுவான் தாரை எதிர்த்துப் போரிட்டனர். ஆதிவாசிகள் மகாராஷ்டிரா துளியா மாவட்டத்தில் 1972ல் நிலச்சுவான் தாரரையும் ஊழல் அதிகாரிகளையும் எதிர்த்துப் போராடியபோது பெண்களின் பிரச்சனைகளும் போராளிகளின் கவனத்தை ஈர்த்தன. நகரவாசிகள் ஆதிவாசிகளைப் பலாத்காரத்திற்குட்படுத்தியதும் குடிபோதையில் மனைவியை அடித்தலுமான பிரச்சினைகள் நூற்றுக்கணக்கான பெண்களை ஈர்த்தது. மாறுதலுக்கான தளத்தை அமைத்துத் தந்தது.

1970ல் அரிசி விலையேற்றத்திற்கு எதிரான ஒரு இயக்கம் தோன்றியபோது ஏறக்குறைய பல்வேறு கட்சிகளும் இணைந்து பெண்களை ஒருங்கிணைத்துப் போராடின. இடதுசாரிக் கட்சிகளும் போராட்டத்தில் பெண்களை ஒருங்கிணைக்க வேண்டியதின் அவசியத்தை அப்போது உணர்ந்தன.

1974-ல் குஜராத்தில் மாணவர்களாலும், இளைஞர்களாலும் தலைமை ஏற்று நடத்தப்பட்ட நடுத்தர வர்க்க மக்களின் கொந்தளிப்பு வெகுஜன ஆதரவைப் பெற்றது. லஞ்சமற்ற அரசாங்கம், புதிய சமுதாயம் போன்ற கோரிக்கைகளுக்காகப் போராடியது. ஜெயப்பிரகாஷ் நாராயணன் தலைமையேற்று நடத்திய 'முழுப் புரட்சித் தேவை' என்ற பீகார் இயக்கப் போராட்டத்திற்கு எல்லா எதிர்க் கட்சிகளும் ஆதரவளித்தன. போனஸ், பஞ்சப்படி மற்றும் பிற பொருளாதார கோரிக்கைகளுக்காகத் தொழிலாளிகள் நடத்தி வந்த போராட்டம் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். 1974-ல் நடைபெற்ற நாடுதழுவிய இரயில்வே போராட்ட வேலை நிறுத்தத்தில் தொழிலாளர் போராட்டம் தன் உச்சக்கட்டத்தை அடைந்தது. இரயில்வே தொழிலாளர்களின் மனைவிமார்கள் சித்திரவதை

படிப்பகம்

www.padippakam.com



செய்யப்பட்டு பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்டனர். மேற்சொன்ன எல்லாப் போராட்டங்களிலும் இந்தியப் பெண்கள் தீவிர ஈடுபாடு கொண்டிருந்தனர் என்பது மிக் முக்கிய அம்சம்.

இவை தவிர கடந்த பத்து அல்லது பதினைந்து ஆண்டுகளில் பல அமைப்புகள் தோன்றி வளர்ந்துள்ளன. அவற்றை நீரா தேசாய், விபூதிபட்டேல் இருவரும் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தினர். (இந்தியப் பெண்களின் சாதனையும், சவாலும். பக் : 84-85)

1. தன்னுரிமை மகளிர் அமைப்புகள்: இவை போராட்டங்களின் வாயிலாகப் பெண்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணுதல், பிரச்சாரங்கள் செய்தல், மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துதல் ஆகிய பணிகளைச் செய்து வருகின்றன.

2. வெகுஜன அமைப்புகள் : அடிமட்ட மக்கள் இயக்கங்கள் தொழிற் சங்கங்கள் விவசாயத் தொழிலாளர் சங்கங்கள், மக்கள் உரிமைக் கழகங்கள், பழங்குடியினரின் அமைப்புகள் போன்றவற்றிலும் ஏராளமான பெண்கள் அங்கத்தினராக இருந்தனர். இவ்வமைப்புகளில் பங்கு பெறுவதோடு மட்டுமின்றிப் பெண்களைப் பாதிக்கும் பல்வேறு பிரச்சனைகளை எதிர்த்துத் தீவிரமாகப் போராடி வருகின்றனர். அவை மனைவியைக் கொடுமைப்படுத்துதல், பலாத்காரம், பண்ணையார் கொடுமை குடிப்பழக்கம், மந்திரவாதிகளின் ஏமாற்றுவித்தை போன்றன.

3. பெண்களுக்குப் பலவித உதவிகள் செய்வதற்கென அமைந்தவை—ஆதரவற்ற மகளிருக்குப் புகலிடம் தருபவை.

படிப்பகம்

www.padippakam.com



4. தொழில்முறைச் சங்கங்கள்; மருத்துவர், வழக்கறிஞர், விஞ்ஞானிகள், ஆராய்ச்சி அறிஞர், பத்திரிக்கையாளர்கள்போன்றவர்களை உறுப்பினர்களாக கொண்டவை.

5. அரசியல் கட்சிகளில் மகளிர் அணிகள்.

6. பெண்களின் பிரச்சனைகள் குறித்து ஆராய்ச்சி செய்வதில் ஈடுபட்டுள்ள குழுக்கள். இக்குழுக்களில் மகளிர் இயக்கங்களைச் சேர்ந்த அறிஞர்களும் செயல்வாதிகளும் அங்கத்தினராக இருப்பர்.

1975-ல் புதிய மாவோவினரால் ஏற்படுத்தப்பட்ட
இரண்டு பெண் குழுக்கள் பெண்ணடிமைத்தனத்திற்கு
எதிரான கோட்பாடுகளை முன் வைத்தன. அவை
வரலாற்று முக்கியத்துவம் பெற்றவை. ஹைதராபாத்தில்
ஏற்படுத்தப்பட்ட 'பெண்களின் முற்போக்கு அமைப்பு'
பெண்ணடிமைத்தனத்திற்குச் சமய சம்மந்தமான விளக்
கத்தைத் தந்தது. ஔரங்காபாத்தில் துவங்கிய 'சமத்து
வத்திற்கான பெண் போராளிக்குழு' சாதிய எதிர்ப்பையும்
பெண்ணியத்தையும் இணைத்தது. சமயச் சார்பான
நூல்கள் பெண்களையும் அடிமட்டத்து மக்களையும்
அடக்கவே எழுதப்பட்டனவென்று வெளிப்படையாகக்
கூறியது.

அறுபதுகளின் பின்பகுதியில் மாவோவின் ஓங்கிய புரட்சியும் எழுபதுகளில் அதன் இறங்குநிலையும் ஒற்றுமைக் குலைவும் புரட்சிகரமான சமூக மாறுதல் ஏற்பட வேண்டுமென்றால், வேறுபட்ட ஒடுக்கப்பட்டக் குழுக்களும் முதலில் அமைப்பு ரீதியாகத்தங்களை ஒருங்கிணைத்துக் கொண்டு தங்கள் பொது விரோதியை எதிர்த்துப் போராட வேண்டுமென்ற முடிவை மேற்கொள்ளச் செய்தன. ஆனால் எப்படி மகளிரை ஒருங்கிணைத்துப்

படிப்பகம்

www.padippakam.com



பிரதிநிதித்துவப்படுத்துவது என்பதே இக்காலக்கட்டத்தில் பெண் அமைப்புகள் எதிர்கொள்ள வேண்டிய சவாலாக இருந்தது. விழிப்புணர்வை ஏற்படுத்துதலே முதற்கடமையாகக் கொள்ள வேண்டுமென்றும், தொழிலாளர், மலைவாழ் மக்கள், ஆகிய அனைவரிடமும் இதுவே முதலிடம் பெற வேண்டுமென்றும் பல்வேறு பெண்ணியக்கங்களும் குழுக்களும் முடிவு செய்தன.

தொழிலாளர்கள், ஆதிவாசிகள் சாதீய எதிர்ப்புக்கான அமைப்புகள் குறிப்பாகச் சில பிரச்சனைகளுக்கு எதிரான அமைப்புகள் ஆகியன கலந்துரையாடி பெண்ணடிமைத்தனத்திற்கான கோட்பாடுகளைக் கண்டறிய முயன்றன. துவக்க ஆண்டுகளில் இந்த மாதிரியான பிரச்சாரங்கள் இங்கொன்றும் அங்கொன்றும்மாகவே அமைந்தன. 1978ல் பம்பாயில் நடந்த சோசலிசப் பெண்ணியவாதிகளின் மாநாட்டில் அவர்கள் பம்பாய்க் குழு, டெல்லிக்குழு என்றே தங்களைப் பிரதேச ரீதியாகவே அடையாளம் காட்டிக் கொண்டனர், 78, 80களில் பெண் அமைப்புகளும் பிரசாரக் குழுக்களும் இந்தியாவெங்கும் ஆரம்பிக்கப்பட்டன. வரதட்சிணைக் கொடுமைக்கு எதிரானவை, காவலர் பலாத்காரம் குறித்தக் கிளர்ச்சி, தொழிலாளர் சங்கத்தினரை ஒருங்கிணைத்தல், குடும்பப் பெண்களின் பிரச்சனை, குடிசைவாழ் மக்களின் ஒருங்கிணைப்பு ஆகிய பல்வேறு செயல்பாடுகளை முன்னிறுத்தி ஏற்படுத்தப்பட்டன. இவற்றின் செயல்பாடுகள் பத்திரிக்கைகளின் கவனத்தை ஈர்த்ததோடு பொதுவான பிரச்சனைகளின் பரிமாணத்தையும் அடைந்தன.

வரதட்சிணைக் கொலை தற்கொலை என்று கூறப்பட்டு வந்த போக்கிற்கு மாறாக முதல் முறையாக டெல்லியில் 1979ல் அது கொலை என்று கண்டுபிடிக்கப்

www.padippakam.com



பட்டது. இளம் பெண்கள் கொலை செய்யப்பட்டதை வரதட்சிணை இறப்புகள் காட்டின. மாமியார் மாமானா ரால் செய்யப்பட்டக் கொடுமைகள் மருமகளை எரித்துக் கொள்ள நிர்பந்தித்தன என்ற செய்தி வெளிச்சத்திற்கு வந்தது. இந்தச் செயல்பாடு முதன் முறையாக குடும்ப அந்தரங்கத்தில் மகளிர் இயக்கங்கள் பிரவேசம் செய் ததைக் காட்டியதோடு பெண்ணடிமைத் தளத்தின் மிகப் பெரிய தளமாகக் குடும்பம் இருப்பதையும் உணர்த்தியது.

வரதட்சிணை கொலைக்கு எதிராகக் குடும்ப உறுப் பினர்களை எதிர்த்து சில மகளிர் குழுக்கள் வீட்டுக்கு வெளியேயும், அலுவலகத்திற்கு முன்னேயும் நின்று சமூகத்திடமும் அரசிடமும் நியாயம் வழங்கக் கோரிக் கைகளை முன் வைத்த போது குடும்பம் பொது என்ற எல்லைச் சுவர்கள் சரிந்து போயின.

தன்னுரிமை மகளிர் அமைப்புகளின் சிறப்புக் கூறுகள்:

செயல்வாதியான விபூதிபட்டேல் தன்னுரிமை மகளிர் அமைப்புகளின் சில தனித் தன்மைகளைக் கீழ்வருமாறு விளக்குகிறார்.

1. இயக்கங்களைப் பெண்களே ஏற்படுத்தித் தலைமை தாங்கி நடத்துவர்.

2. பெண்களுக்கெதிரான அடக்குமுறை, சுரண்டல், அநீதி, ஏற்றத்தாழ்வு பற்றிய போராட்டமே முதன்மையானதாகவும், முக்கியமானதாகவும் கருதப்பட்டது.

3 தங்கள் தேவைகளுக்காகவோ, தீர்மானங்களை முடிவு செய்யவோ இவை எந்த அரசியல் கட்சிக்கும் கட்டுப்பட்டவை அல்ல

www.padippakam.com



பெண்களை உடைமைப்பொருளாகக் கருதுவதையும், போகப்பொருளாகப் பயன்படுத்தப்படுவதையும் எதிர்த்து அவர்களைத் தனிப்பட்ட மானிட இனமாகக் கருத வேண்டும் என்று போராடும் தன்மையன.

சமத்துவமும் விடுதலையும் பெண்ணிய நோக்கில் பார்க்கப்பட்டு கோரிக்கைகளாக வைக்கப்பட்டன.

இவை பெண்களால் பெண்களைக் கொண்டு பெண்களுக்காக நடத்தப்படும் அமைப்புகள்.

மேலைப் பெண்ணிய இயக்கங்களில் வழித்தோன்றி இயக்கங்கள் செயல்பாட்டு முறைகள், பிரச்சனைகளின் தன்மையை முன்னெடுத்துச் செல்லும் பாங்கு ஆகியன இந்திய மகளிர் இயக்கங்களைக் குறிப்பிடுமளவில் பாதித்தன. பல உறுப்பினர்களும் தங்களை 'சோசலிஸ்டு பெண்ணியவாதிகள்' எனக் கூறிக்கொண்டனர். இந்தக் குழுக்கள் பெரும்பான்மையான நகரங்கள் அனைத்திலும் இடம் பெற்றன. தேசிய அளவில் இந்திய மகளிர் விடுதலை இயக்க மாநாடுகள் பம்பாயின் 1985 டிசம்பரில் நடந்தபோது, இந்த மாநாட்டின் 400க்கும் மேலான பங்கேற்பாளர் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் ஏறக்குறைய நூறு குழுக்களிலிருந்து பங்கேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. பழைய மகளிர் இயக்கங்களைக் காட்டிலும் இது வித்தியாசமானது என்பதனை இங்குக் குறிப்பிடவேண்டும். கல்விகற்ற நடுத்தரக் குடும்பத்தைச் சார்ந்தவராக உறுப்பினர்கள் இருந்தமை குறிக்கத்தக்கது. பல்வேறு கட்சிகளினின்றும் வந்தவர்கள் இவர்கள். சர்வோதயாவிலிருந்து சோசலிசப்பெண்ணியம் என்று சொல்லப்படுகிற அனைத்துப் பிரிவுகளிலிருந்தும் வந்தவர்கள். பல்வேறு அரசியல் கோட்பாட்டைச் சார்ந்தவர்கள்; இளையவர்கள்; அமைப்புகளில் இருக்கும்

www.padippakam.com



ஏற்றத்தாழ்வை விரும்பாதவர்கள்; அதற்கு மாற்றான ஒரு முறையைப் பின்பற்றத் தயாரானவர்கள்: உதாரணமாக சகியா, மைத்திரினி, மனுஷி, மகிளா சங்கர்ஷசமிதி ஸ்ரீசக்தி, நாரிசமதாமஞ்ச், விமோசனா, ஸ்ரீலேகா, போன்ற சிலவற்றைக் குறிப்பிடலாம். தங்கள்குழுக்களுக்கு அவர்கள் வைத்த பெயர்களே பெண்ணிய ஒருங்கிணைவின் ஒற்றுமையைக் காட்டி நிற்கின்றன.

டில்லியில் உள்ள பெண்ணுரிமை இயக்கங்கள் சங்கங்கள் ஒருங்கிணைந்து தாஹெஜ் விரோதி சேத்னா மஞ்ச் என்ற பெயரில்வரதட்சிணைக் கொடுமைகளை எதிர்த்துப் போராடியது. இவ்வழியில் டில்லியில் சஹேலி, பம்பாயில் மகளிர் மையம், பூனாவில் ஸ்திரிஆதார்கேந்த்ரா கான்பூரில் சகிகேந்த்ரா, ஆகியன தோன்றிச் செயல்படுகின்றன.

எண்பதுகளில் பெண்ணியவாதிகளால் சிப்கோ இயக்கம் பெண்கள் இயக்ககாக மாறியபோது பெண்களும் சுற்றுப்புறச் சூழலும் என்பதைப்பற்றியதாகக் கோட்பாடுகளும் வளர்ந்தன. குடிப்பழக்கத்திற்கு எதிரான கிளர்ச்சி சிப்கோ இயக்கத்தில் பெண்ணிவாதிகளால் ஆரம்பிக்கப்பட்டது. இது 1970களின் துவக்கத்தில் 'ஷகாதா' இயக்க அமைப்பைப் போல ஆனது. (மேற்கிந்தியாவில் ஷகாதா இயக்கம் என்பது நிலமற்ற ஆதிவாசி தொழிலாளர் இயக்கமாகும். உள்ளூர் நிலச்சுவான்தாரர்களின் மனிதத் தன்மையற்ற முறைக்கு எதிரான இயக்கமது. இதிலும் பெண்களின் விழிப்புணர்ச்சி காரணமாக குடிக்கு எதிரான கிளர்ச்சி தோன்றியது. அது மதுப்பழக்கத்திற்கு எதிரான பிரச்சாரமாக அமைந்தது.)

இந்த நிலையில் இந்தியப் பெண்ணியச் செயல்பாடுகள் பன்முகஅமைப்பாக மாறியபோது எல்லா இயக்கங்களிலும் ஏற்படுவது போன்றே பல பிரிவுகளும் பிளவு

படிப்பகம்

www.padippakam.com



களும் தோன்றின. எல்லா இயக்கங்களுக்கும் இது உரியது தான் என்றாலும் பெண்ணுரிமை இயக்கங்களை இவை மிகவும் பாதித்தன. பெண்களின் ஒருங்கிணைப்பில்தான் பெண்ணியம் வேரூன்றியுள்ளது என்று நினைத்தவர்க்கு 'சகோதரித்துவம்' பொய்த்துப் பொருளற்றுப் போனதாகவே எண்ணத் தூண்டியது. இந்தப் பிரிவுகள் பெண்ணியத்தின் அடிப்படையைக் கேள்விக்குட்படுத்துச் செய்து பல பெண்ணியவாதிகளைச் சிந்திக்கத் தூண்டின. பெண்களின் பொது அனுபவம் வற்புறுத்தப்பட்டு, இத்தகைய வேறுபாடுகளை அந்தப் பொது அனுபவத்தால் போக்க முடியாதென்று உணர்ந்தபோது ஒருங்கிணைப்பின் தேடல் பயனற்றுப் போனதோடு மாறான வகையிலும் விளைவுகளை ஏற்படுத்திப் பல்வேறு தீமைகளை உள்ளே நுழைய வாய்ப்பளித்து விட்டன. அதன் விளைவாக சுயாட்சிக் குழுக்கள் பல உருவாயின எனலாம்.

**அரசியல் கட்சிகளில் பெண்களின் பங்கு:**

கடந்த 10 ஆண்டுகளாகப் பெண்கள் பிரச்சனைகளில் அரசியல் கட்சிகள் அதிகஅளவில் ஆர்வம் காட்டியுள்ளன. பி. ஜே. பி., ஆர். எஸ். எஸ் போன்ற வலதுசாரிகளுக்குப் பரந்த அளவில் பெண்கள் அணிகள் உள்ளன. இந்திய நாட்டின் பண்டைய கலாச்சாரத்திற்குப் புத்துயிர் அளிக்க வேண்டுமென்ற நோக்கில் செயல்படுகின்றனர்.

பிராந்தியக் கட்சிகள் தேர்தல் அறிக்கைகளில் பெண்களின் உரிமைகளை வலியுறுத்தி வருகின்றன.

ராஷ்டிரிய சஞ்சுப் மஞ்ச் வரதட்சிணை முறையை எதிர்ப்பது தங்கள் கட்சியின் ஒரு முக்கியக் குறிக்கோள் என்கிறது. சர்வோதய காந்திய இயக்கங்கள் பெண்களின் உரிமைகள் குறித்த விழிப்புணர்ச்சியை ஏற்படுத்து

படிப்பகம்

www.padippakam.com



வதற்கென பேரணிகள், கருத்தரங்குகள், மாநாடுகள் நடத்தி வருகின்றன.

இது வரை பெண்வாக்காளர்களைப் புறக்கணித்து வந்த கட்சிகள் யாவும் பெண்களின் பிரச்சனைகளைப் பேசத் தொடங்கியுள்ளன.

ராஜீவ்காந்தி தன் ஆட்சியில் பெண்களுக்கென தனி அமைச்சரை நியமித்ததும் நினைவில் கொள்ள வேண்டும்

**இடதுசாரிக் கட்சிகளின் பெண் இயக்கங்கள்:**

இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் பெண்கள் அணியான இந்திய தேசிய பெண்கள்சங்கம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் பெண்கள் அணியான- அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கம், மற்றும் அனைத்திந்திய உழைக்கும் பெண்கள் கூட்டுக்குழுவும், அனைத்திந்திய அளவில் பரந்துபட்ட பெண்கள் அமைப்புகளாகும். சோசலிஸ்டு கட்சியின் பெண்கள் அணி மகாராஷ்டிரத்திலும், டில்லியிலும் சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது. இந்தக் கட்சிகளுக்கெல்லாம் தொழிற் சங்கப் பின்னணி இருப்பதால் ஏராளமான உழைக்கும் மகளிர் உறுப்பினராக உள்ளனர்.

பெண்கள் இயக்கங்கள் வளர்ந்ததின் விளைவாகப் பெண்கள் பிரச்சனைகளைக் குறித்து மேலும் ஆய்வு செய்யப் பல்வேறு குழுக்களும் முன்வந்து செயல்பட்டது முக்கிய அம்சமாகும்.

1984-ல் இந்திய மகளிர் குழு நிறுவப்பட்டது. இக்கழகம் பெண் அறிஞர்களையும் செயல்வாதிகளையும் கொண்ட சிறந்த ஆய்வியல் அமைப்பாகும். இரண்டு

படிப்பகம்

www.padippakam.com



தேசிய மாநாடுகளையும் இம்மையம் நடத்தியது. பெண்களின் பல்வேறு பிரச்சனைகள் ஆராயப்பட்டன.

இப்போது பெண்களைப் பற்றிய ஆய்வும் சான்றாதாரங்கள் தொகுப்பும்முக்கியத்துவம் பெற்று வருகின்றன. பல்கலைக்கழக மானியக்குழு, இந்திய சமூகவியல் ஆய்வுக் குழு, மற்றும் அறிவியல் தொழில்நுட்ப ஆய்வுக் குழு, புற தேசிய சர்வதேசிய நிறுவனங்கள் பெண்களைப் பற்றிய ஆய்வினை ஊக்குவிக்கின்றன.

பம்பாயில் உள்ள SNDT பல்கலைக்கழகத்தில் மகளிரியலுக்கான ஆய்வுப் பிரிவும், டில்லியில் மகளிர் முன்னேற்ற ஆய்வு மையமும் சமூக ஆய்வியல் அறக்கட்டளை நிறுவனமும் மகளிர் பிரச்சனைகளை அலசி ஆராய்வதில் முன்னோடிகளாக விளங்குகின்றன.

1984-ல் தமிழ் நாட்டில் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் மகளிர்க்காகவே நிறுவப்பட்டது வரலாற்று முக்துயத்துவம் வாய்ந்தது. வளர்ந்த நாடுகளில் கூட பெண்களுக்கென இப்படிப்பட்டத் தனிப் பல்கலைக் கழகம் ஏதுமில்லை என்பது எண்ணத்தக்கது. இங்குள்ள இப்பல்கலைக்கழகத்தில் பெண்கள்ளை மையப்படுத்தி பெண்களின் மேம்பாட்டிற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. முதுகலை வகுப்பில் மகளிரியல் சிறப்புப் பாடமாக வைக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

**போராட்ட வழிமுறைகள்:**

சமத்துவம், முன்னேற்றம், சமாதானம் ஆகியவற்றைப் பிரகடனப்படுத்தும் நோக்கத்துடன் இயங்கி வந்த அனைத்திந்திய மகளிர் பத்தாண்டின் இறுதியில் 1985-ல் பம்பாயில் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. பத்தாண்டு

படிப்பகம்

www.padippakam.com



களில் மகளிர் அடைந்துள்ள முன்னேற்றத்தை மதிப்பீடு செய்து மிகப்பெரிய முக்கியத்துவத்தை அடைந்தது.

தன்னுரிமைப் அமைப்புகள் பிற சமூக. அரசியல் அமைப்புகளின் தீர்மானங்களுக்கோ, தேவைகளுக்கோ அடிபணிந்து செயல்படுவதில்லை. தாமே தலைமை யேற்று பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை எதிர்த்துப் போராட்டங்களை நடத்துகின்றன. இதை கட்சி சார்பற்றவை; சுதந்திரப் போக்குடையவை; இவ் வியக்கத்தைச் சார்த்தவர்கள் கட்சியைச் சார்ந்திருப்பர். பிடிப்பு உள்ளவராகவும் இருப்பர். ஆண்களையும் பெண் களையும் பிரித்துக் காணும் பிரிவினைவாதிகள் இல்லை. இவ்வமைப்புகள் நடத்தும் போராட்டத்தில் ஏராளமான ஆண்கள் கலந்து கொள்வதுண்டு. ஆனால் இயக்கத்தின் நடவடிக்கைகளைப் பெண்களே முடிவு செய்கின்றனர்.

பெண்களை ஒன்று திரட்ட இவை பல வழிமுறை களைக் கையாளுகின்றன. பெண்ணுரிமைகளை ஆதரித் துப் பெண்களை ஒடுக்கும் சக்திகளை எதிர்த்தும், பொது மக்களின் ஆதரவினைப் பெற சிற்றறிக்கை, பிரசுங்களை வெளியிடுகின்றன. கோரிக்கைகளை வலியுறுத்திக் கை யெழுத்துப் போராட்டம் நடத்துகின்றன. வார, மாத இதழ்களில் கட்டுரைகளை வெளியிடுகின்றன. பேரணி ஊர்வலங்கள், உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டம், பொதுக் கூட்டம் ஆகியவற்றை மேற்கொள்கின்றன.

முச்சந்தியில் கூட்டங்கள் நடத்தியும், வீதி நாடகம், சுவரொட்டி, கண்காட்சி, பிரச்சினை விளக்க யாத்திரை ஆகியவற்றின் மூலம் மக்களிடமிருந்து தமக்கு ஆதரவைத் தேடுகின்றன. லாப நோக்கமின்றி இதழ்கள், கடிதங்கள் அறிக்கைகள் வெளியிடுவதைத் தம் நோக்கமாகக் கொண் டுள்ளன.



படிப்பகம்

www.padippakam.com



## புதிய மகளிர் இயக்கங்களின் சிறப்புக் கூறுகள் :

பழைய மகளிர் இயக்கங்கள் அந்தஸ்து வித்தியாசம், வேற்றுமை காட்டுபவை, அவர்களைப் பொறுத்தவரை தம் நிலையிலிருந்து இறங்காமல் துன்பப்படும் ஏழைப் பெண்களுக்கு மேலிடத்திலிருந்து செய்யும் சமூக சேவை யாகத் தங்கள் செயல்பாடுகளை அமைத்தனர். சமூக அமைப்பினைக் கடந்து செயல்படுவதில் நம்பிக்கை கொள்ளாதவர்கள், தமது தனி வாழ்வில் சாதிக்கட்டுப்பாடு களுக்கு மதிப்பு கொடுத்து அதற்கு உட்பட்டவராக வாழ் பவர்கள், தமது உயர்நிலையைக் காத்துக்கொள்வதில் கருத்தாய் இருப்பவர்கள். இவை பொதுவான இயல்பு கள். விதிவிலக்காகவும் ஓரிரண்டு பேர் அமைந்திருக்க லாம்.

இடதுசாரிகளைச் சர்ந்த பெண்கள், சமூகப் புரட்சி ஏற்பட்டபின் பெண்ணின் அனைத்துப் பிரச்னைகளும் தானாகவே தீர்ந்துவிடுமென்று நம்பினர்.

புதுமுறையான பெண்கள் இயக்கத்தார், பால் ரீதி யான அனைத்துப் பாகுபாடுகளையும் எதிர்க்கின்றனர். இவர்கள் சாதி, இன பாகுபாடுகளைப் போலவே, பால் ரீதியான பாகுபாட்டையும் பெரும் பிரச்சினையாகக் கருதுகின்றனர். உழைக்கும் மக்களின் ஒற்றுமையைச் சிதறடிக்கும் சக்திவாய்ந்த கருவிகளாகவே பால் பாகு பாட்டைக் கணிக்கின்றனர். சாதி மத, இன பாகுபாடு களை ஒரே அளவில் எதிர்க்க வேண்டுமென்று கருதுகின்ற னர். சொந்த வாழ்க்கையிலும் பொருளாதாரச் சுதந் திரத்தை, பெண் விடுதலைக்கான குறைந்த பட்ச தேவை யாகக் கருதுகின்றனர் இவர்கள் தங்களைப் பெண்ணிய வாதிகளென்றே அழைத்துக் கொண்டனர்.

www.padippakam.com



சட்டச் சீர்திருத்தங்கள் வாயிலாகப் பெண்ணுரிமைகளைப் பெறலாமென்று நம்பியவர்கள் மிதவாதப் பெண்ணியவாதிகள்.

சமூக, பொருளாதார, பண்பாட்டு நிலைகளால் பெண்ணடிமைத்தனம் நிலவுவதாக நினைப்பவர்கள் சமதர்மப் பெண்ணியவாதிகள்.

ஆண்களே பெண்களின் துயரங்களுக்குக் காரணம் என நம்பியவர்கள் தீவிரப் பெண்ணியவாதிகள் என்று அழைக்கப்பட்டனர்.

புதிய பண்பாடு, புதிய கோட்பாடு, புதிய அறநெறி (சமத்துவத்தைப் அடிப்படையாகக் கொண்டது) ஆண், பெண் உறவு முறைகளைப் படைக்க முடியும் என்று நயபினர்.

இந்திய நாட்டில் பெண்ணிய வாதிகள் சந்திக்கவேண்டிய சூழ்நிலைகள் முற்றிலும் மாறுபட்டவை.

இங்கு முதலாளித்துவப் பொருளாதார முன்னேற்றம் முதலாளித்துவத்திற்கு முற்பட்ட காலகட்டத்திலுள்ள பல உறவு முறைகளை ஒன்று சேர்த்துள்ளது. அதனால் இந்நாடுகளில் முற்றிலும் முரண்பாடான சமூகப் பண்பாட்டுக் கலப்படங்கள் தோன்றியுள்ளன.

உழைப்பாளிகள் அணியிலிருந்து பெண்கள் வெளியேற்றப்படுகிறார்கள். இந்தியத் தொழில்துறையில் பெண்களின் பங்கு குறைந்துகொண்டே வருகிறது. பொருளாதாரச் சுதந்திரம் இல்லாததால் குடும்பத்தாரையே முழுதும் சார்ந்து நிற்கின்றனர் பெண்கள். மேலை நாடுகளில் வெளியேறிச் செல்வார்க்கு மாற்று வசதி வாய்ப்புண்டு. கல்வி பெற்று பணி செய்வதால் தன்னம்பிக்கை

படிப்பகம்

www.padippakam.com



யும் அவர்களுக்குண்டாகிறது. ஆனால் இந்தியப் பெண்களில் பெரும்பாலோர் படிப்பறிவு அற்றவர்கள். பிற்போக்குத் தன்மை, பண்பாட்டு முறைகள், அன்றாட வாழ்க்கைக்கான கூறுபாடுகள் ஆகியன அவர்களை ஆணாதிக்க மதிப்புகளையும் பாலியல் கொடுமைகளையும் எதிர்த்துப் போராடும் சக்தியற்றவர்களாக்கி விடுகின்றன. ஆகவே இந்தியப் பெண்ணியவாதிகள், தங்களுடைய போராட்டங்களைப் பலாத்காரம் செய்தல், வரதட்சணைக் கொலை, ஆபாசம் போன்றவற்றை மட்டும் மனதில்கொண்டு போராடுகிறார்கள். சிலர் உழைக்கும் மக்களின் பொருளாதாரச் சிக்கல்களுக்காகப் போராடி வருகின்றனர்.

இந்தியப் பெண்ணியவாதிகளை, பொதுவாக ஆசியப் பெண்ணியவாதிகளை மேற்கத்திய பெண்ணியவாதிகளிடமிருந்து பிரிக்கும் மற்றொரு முக்கிய அம்சம்; ஏகாதிபத்தியமும் இனவெறியுமாகும்.

மேலை நாட்டுப் பெண்ணியத்திற்கும் இந்தியநாட்டு பெண்ணியத்திற்கும் நிறைய வேற்றுமையுண்டு. மேலை நாட்டுப் பெண்ணியத்தில் இடம்பெற்ற மூன்று முக்கிய அம்சங்கள் வேறுபாட்டைக் காணமுடிகிறது.

1. பெண்ணியவாதிகளின் கோபம்.

2. தந்தை வழிச்சமுதாய அமைப்பின் மீதான அழுத்தம்—மனிதர்களை அடக்குபவர்களாக, ஆள்பவர்களாகக் காண்பது.

3. தனி மனித வாதத்தையும். சமத்துவத்தையும் இணைக்க முடியாத நிலை.

படிப்பகம்

www.padippakam.com



அரசியல் தத்துவக் கோட்பாட்டில் சமத்துவமாக நோக்கும் நிலை ஆகியன இந்தியப் பெண்ணியத்தில் இடம் பெற்றுள்ளதாகக் கூற இயலாது. ஏனெனில் இந்தியச் சூழல் இதற்கு முற்றும் மாறானது. ஏற்றத்தாழ்வுடைய குடும்பத்திற்குள் வயது, ஆண், பெண், இனத்திற்குள் சாதி, படிப்பு, செல்வம், வேலை ஆகியவையும் முக்கிய இடம் பெறுகின்றன.

சமத்துவமென்ற கொள்கை-தனி மனித சுதந்திரம் என்பது நமக்கு அன்னியமானது தான். 19ஆம் நூற்றாண்டின் துவக்கத்திலிருந்து இந்தியப் பண்பாட்டில் ஆங்கிலம் பயின்றவர்களால் அது அறிமுகப்படுத்தப்பட்டது. இந்திய வாழ்க்கையின் நடைமுறை கோட்பாடாக சுதந்திரம் கிடைக்கும் வரை நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் ஜனநாயக அமைப்பு முறை வரும்வரை நிலைமை அதுதான்.

ஆமதாபாத்தில் உள்ள 'சேவா' சுயவேலை வாய்ப்புத் தேடும் பெண்கள் அமைப்பு அனுசூயா என்ற கடித அறிக்கையை வெளியிட்டு விழிப்புணர்ச்சியை உண்டாக்குகிறது. 1982ல், சேவா, கூட்டுறவு வங்கிகளை ஆரம்பித்து மேலும் ஒரு படி முன்னேறியது.

மகாராஷ்டிரத்தில் மனஸ்வினி மஹிலாமண்டலம், கான்பூரில் சசிகேந்திரம், பூனாவில் ஸ்திரி ஆதாரகேந்திரம் வளர்ச்சிக்கான பணிகளை மேற்கொண்டுள்ளன. விதாயக் சன்யாத் இயக்கம் கொத்தடிமை முறையை எதிர்த்தும் நிலசீர் திருத்தச் சட்டங்களுக்காகவும் குறைந்தபட்ச கூலிக்காகவும் போராட்டம் தொடங்கியது. குஜராத்தில் ஹமாரிமண்டல் என்ற பெயரில் வளர்ச்சித் திட்டத்தைப் பல பெண்கள் சேர்ந்து ஏற்படுத்தினர். அவை வகுப்புகள் மருத்துவ முகாம்கள், நெசவுக் கூட்டுறவு அமைப்பு, பால் வளக் கூட்டுறவு அமைப்பு ஆகியவற்றைத் தொடங்கின.

www.padippakam.com



அநீதிகளையும், சுரண்டல்களையும் எதிர்த்துப் போராட சில அமைப்புகள் தோன்றின. பாணி பஞ்சாயத் என்ற அமைப்பினை நிறுவி, கிராம மக்களுக்கு முறையாக குடிநீர் வழங்க அதிகாரிகளை வற்புறுத்தினர்.

கர்நாடகத்திலும், தேசிகர்வாலிலும் பெண்கள் உள்ளூர் அமைப்புகள் மரங்கள் வெட்டுவதை எதிர்த்துப் போர் தொடங்கின. காடுகளை அழிப்பதால் கிராம மக்கள் வாழ்க்கைப் போராட்டமாகி விடுமென்று உணர்த்தியது.

மகாராஷ்டிரத்தில் ஷரமிக் சங்கதனா கஷ்டகாரி சங்கதினா போன்ற பல அமைப்புகள் லஞ்சம், பெண் களைப் பாலுறவு வழியில் கொடுமைப்படுத்தல் போன்ற பிரச்சனைகளுக்கு எதிராகப் போராடுகின்றன.

கொத்தடிமைத் தனத்தை எதிர்த்துப் போராடுவதைத் தமது முக்கிய நோக்கமாகக் கொண்ட இர்மஜீவி சங்க தனா (தானா) ஆந்திரப் பிரதேசத்துக் கிராமங்களை எடுத்துக்கொண்டன.

ஆபாச சுவரொட்டிகளை எதிர்த்துத் தோன்றி சென்னையில் 1977-ல் பெண்ணுரிமை இயக்கம் வரதட்சிணை கொலை, குடிசைவாழ் மகளிர் அடிப்படை வசதிக்காகப் போராடும் நிலையிலும் அவர்களுக்குப் பயிற்சி முகாம்கள் நடத்தும் நிலைக்கும் தன்னை விரிவாக்கிக் கொண்டுள்ளது.

பெங்களூரில் ஸ்ரீலேகா, மோசனா ஆகியனவும் பெண் களுக்கான பிரச்சனைகளை முன்னெடுத்துச் சென்று போராடுகின்றன

மகளிர் இயக்கங்கள் ஒன்றுக்கொன்று ஆதரவளிக்கும் வகையில் நாடளாவிய தொடர்புச்சங்கிலிகளை ஏற்படுத்தி வருகின்றன

படிப்பகம்

www.padippakam.com

# பெண்ணியம்: சில விளக்கங்கள்

வினோத்

''படுக்கையறையில் புரட்சி''—

''குழந்தைகள் டெஸ்ட் டியூபுகளில் வளர்க்கப் படட்டும்''—

''கல்வியில் சுதந்திரம்''—

பகிரங்க முழக்கமிட்டு,

குடும்பச்சிறைகளை உடைத்துவருகிறாள்—பெண்

கர்ப்பப்பைகளின் வாயில்களை

அடைத்துவிட்டாள்—பெண்

ஆண் ஆதிக்கக் கோட்டைகளை

உலுக்கி வருகிறாள்—பெண்

அதன் இறுதி அம்சங்களையும்

துடைத்தெறிய துணிந்துவிட்டாள்—பெண்.

பெண்ணின் போராட்டங்கள் காலா காலத்தில்

படிப்பகம்

www.padippakam.com



பின்னடைவுகளையும் தொய்வுகளையும் சந்திக்கின்றன.

ஏனெனில்,

பெண்களின்—

போராட்டங்கள் திசை திருப்பப்படுகின்றன.

தாக்குதலுக்கான இலக்குகள் தவறாக சுட்டிக் காட்டப்படுகின்றன.

வியூகங்கள் போதுமானவை அல்ல.

சரியான போராட்ட திசை,

சரியான இலக்குகள்

போதுமான வியூகங்கள்—

பெண்ணிய சிந்தனைகளாகவும் பெண்களின் நிலைப்பாடுகளாகவும் விளங்க வேண்டியதாகிறது.

□ பெண் / தாய் வழிச்சந்ததியே மனித சமூகத் தோற்றத்தில் இருந்து ஒரு நீண்ட காலத்திற்கு நிலவி நீடித்தது சந்ததிகளின் தோற்றங்கள் பெண்ணை / தாயை முன் வைத்தே அறியப்பட்டது. பாக்கோஃபென் கூறுகிறார், ''தாயுரிமை குறிப்பிட்ட மக்கள் சமூகத்தினருக்கு மட்டும் குறுக்கிவிட முடியாது. அது ஒரு கலாச்சார கட்டத்தைக் குறிக்கிறது''[1] ஏனெனில், ''மனித இனம் வரைமுறையற்ற புணர்ச்சியிலிருந்து தான் தொடங்கியது'' (மோர்கன்) ''மேலும் வரைமுறையற்ற புணர்ச்சி தான் மேலோங்கி அந்தக்கால கட்ட மக்களுக்கு கலவி உறவுக்கும் சந்ததிப் பெருக்கத்திற்கும் ஒரே வழியாய் இருந்தது. அது எந்த விதமான திட்டவட்ட நெறிகளையும் முறைகளையும் கொண்டிருக்கவில்லை[2]'' (ரமேஷ்சந்திரா) இந்த வித

www.padippakam.com



சூழலில் ஆண்/பெண் அனைத்து விஷயங்களிலும் சமத்துவம் சுதந்திரம் இயல்பாகக்கொண்டிருந்தனர். வேட்டையாடுதல்,சேகரித்தல் ஆயுத உபயோகம் ஆகியவற்றில் இருபாலரும் ஈடுபட்டனர். பொதுவாக சந்ததித் தோற்றம் பெண் தாய் முன்வைத்துஅறியப்பட்டதால் பெண்களுக்கு சிறப்பும் நிலவியது. மேலும் பெண்கள் ஆயுத உபயோகத்தின் மூலம் தம் சிறப்பைவெளிப்படுத்தினர். இதனைகுகைகளில் காணப்படும் கற்கால ஓவியங்களும்[3] கல், எலும்பு கருவி/ஆயுதங்களும் அவர்கள் வேட்டை ஆடிய விலங்குகளின் எலும்புகளும்[4] ருசுப்பிக்கும் சான்றுகளாக கிடைக்கின்றன. மேலும் கற்காலத்தின் இறுதிக் கட்டத்தைச் சார்ந்த பெண் உருவப் படிமங்கள் (Mother Goddess Figurines) பெண் / தாய்வழிச்சந்ததிகளின் வாழ்நிலைகளை எடுத்துக்காட்டுகின்றன. இந்த பெண் / தாய் படிமங்கள் கற்கால வாழிடங்கள் அனைத்திலும் காணக் கிடைப்பது பொதுவாக பரந்துபட்ட மானுடத்தோற்ற அம்சங்களையும் பெண்களின் சிறப்பையும் குறிக்கிறது.

மிருகங்கள் எண்ணிக்கையில் குறைந்து போன ஒரு காலகட்டத்தை அடுத்து தாவர உணவு வகைகள் சேர்ந்து கொண்டதும் வேட்டையாடுதலில் ஒரு சிலர் ஈபடலாயினர். மிருகங்களை வேட்டையாடி இருப்பிடங்களில் பழக்கப்படுத்தி தம் தேவைகளை ஈடுகட்டிய காலத்தில் தொடர்ந்து வேட்டையாடுதலில் ஈடுபட்ட ஒருசிலர்[5] தம் ஆயுத வலிமையால் அந்தந்த குழுச்சமூகங்களின் மீது ஆதிக்கம் செலுத்தத் தொடங்கினர். இந்த வகையில் ஆதிக்கம் சமூகத்தில் முதன் முதலில் செலுத்தப்பட்டு நிறுவப்பட்டது. குழு / சமூகத்தில் பெரும்பாதிப்புகளுக்கு காரணமானது.

ஏற்கெனவே பெண்கள் சிறப்புப்பெற்றிருந்த சூழலில் பெண்கள் தொடர்ந்து வேட்டையாடுதலில் ஈடுபட்டு தம்

www.padippakam.com



ஆயுத உபயோகத்தால் தம் சிறப்பை நிலை நாட்டி ஆதிக்கம் செலுத்தத் தொடங்கினர். அந்தக் குழுவின் தலைமையாக பெண் தன்னை முன்னிருத்திக் கொண்டாள். சொத்து / உரிமை / வாரிசுமுறை பெண் / தாய் வழியானது. அந்தக் குழுச் சமூகம் பெண் ஆதிக்கத்தின் பிற்பட்டதானது. இந்த வகையில் பெண் தனது மேலுமையை அந்த சமூகத்தின் அனைத்து முக்கிய விஷயங்களில் நிலை நிறுத்திக்கொண்டது. அந்தப் புராதனச் குழுக்களில் பெண் வல்லமையை குறிப்பிடுகிறது''[6] ஆதிக்கம் செலுத்தத் தொடங்கிய பெண்கள் ஆண்களை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து பெண் ஆதிக்க 'குடும்ப' வடிவத்தை (Matriarchal Family) பால் உறவுகளில் தோற்றுவித்தனர்.[7] இந்த வகையில் ஆதிக்கத்தால் பெண் ஆதிக்கக் குடும்பங்கள் பரந்த அளவில் தோற்றுவிக்கப்பட்டாலும் சில குழுச் சமுதாயங்களில் ஆதிக்கமானது வேட்டையாடுதலில் ஈடுபட்ட ஒரு சில ஆண்களின்[8] ஆயுதவலிமையால் செலுத்தப்பட்டதும் ஆண் ஆதிக்க குடும்பங்கள் (Patriachal Family) தோற்றுவிக்கப்பட்டன என்பதும் சரிவர அறியப்பட வேண்டியது ஆகும். ஏனெனில், இதற்கு முன்னர் ஆயுத உபயோகத்தில், வேட்டையாடுதலில் இருபாலருமே ஈடுபட்டனர் என்பது தெளிபு. ஆயினும் இந்த ஆண் ஆதிக்க குடும்பங்களில் பெண் / தாய் வழிச் சந்ததி முறைகள் (Matrilimeal) உடனடியாக களையப்படமுடியவில்லை. அதன் எச்ச சொச்சங்கள் [மருமக்கள் தாயம் இத்யாதி] தொடர்ந்தன. ஆக, வரைமுறையற்ற புணர்ச்சி, சுதந்திர கலவி, ஆதிக்கத்தால் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு இரு வகைப்பட்ட 'குடும்பங்கள்—பெண் ஆதிக்கக் குடும்பங்கள் ஆண் ஆதிக்கக் குடும்பங்கள்—பால் உறவுகளில் சமகாலத்தில் (Authority Hagemony oversex) ஆதிக்க ஸ்தாபனங்களாய் தோற்றுவிக்கப்பட்டன. அதையொட்டி, விலக்குகள் / தடைகளாக Incest போன்ற வரையறைகள் மற்றும் பல மண முறைகள்—பலபுருஷ மணம், (Matriarchal) பல

படிப்பகம்

www.padippakam.com



தார மணம், (Monopoly oversex), பல புருஷ மணம் (patriarchal) Biandrous, monogamy, mono: ndrous (ஒரு தார / புருஷ மணம்) Group marriages (குழுமணம்) ஆதிக் கச் சக்திகள் பல்வேறு நடைமுறை படிமுறைகளுக்கேற்ப (Heirerchies) கலவி உறவுகளை மேற்கொண்டு சமகாலத் தில் நடைமுறைப் படுத்தின. ஆரம்ப காலத்தில் குழுவுக் குள்ளேயே ஆண் / பெண் கொள்வது (Endogamous) தொடர்வது சாத்தியமில்லாமல் போனது. அதைத் தொடர்ந்து குலத்திற்கு வெளியே ஆண் / பெண் கொள் வது (Exogamous) மேற்கொள்ளப்பட்டது. இதில் பொருள் / பரிமாற்றம் மற்றும் பலாத்காரம் மேற்கொள் ளப்பட்டது. மொத்தத்தில் 'குடும்பம் எனும் பால் உறவு வடிவத்தில் ஆண் / பெண் இரு பாலரையும் கட்டுப்படுத் தும் ஆதிக்க ஸ்தாபனமாக சமூக ஆதிக்க சக்திகள் தோற்றுவித்து நடைமுறைப்படுத்தின. 'குடும்பம்' என் பது ஒரு பாலின் அடக்குமுறை வடிவமாகவும் சமூக ஆதிக் கத்தின் நீட்டித்த ஆதிக்க வடிவமாகவும்—இந்த ஆதிக்க வடிவத்தில் இரு பாலருமே 'குடும்ப' வடிவத்தில் கட்டுப் படுத்தப்படுபவர்களாகவும் உருவாக்கப்பட்டன இதன் அடிப்படையில் 'காதல்' ஒருமுகப்படுத்தப்பட்டது. இந்த ஆதிக்கக் கட்டுப்பாடுகளை மீறும் முகமாக கள்ள உறவு களும் விபச்சார முறைகளும் விலக்கப்பட்ட, Incest உறவு களும் கூட நிலவுவதாயின. ஆதிக்கச் சக்திகளின் போக்கு கள் நீடித்ததாகவும் பரந்து பட்டதாகவும் நிறுவிக்கொண் டன. அதன் அடிப்படையில் 'குடும்ப' வடிவங்களிலும் கலவி உறவுகளிலும் பலவித மாற்றங்களையும் கொண்டு வந்தன.

குடும்பங்களை தோற்றுவித்ததன் அடிப்படையில் குழுச் சமுதாயம் குலச்சமுதாயமாக, கணங்களின் சமு தாயமாக மாற்றம் அடைந்தது. ஆதிக்கம் 'குலச்' சமு தாயத்தின்மீது பரந்துபட்ட அளவில் செலுத்தத் தொடங் கியது. ஆதிக்கம் செலுத்தியோர் குலத்தின் பாதுகாப்பு

படிப்பகம்

www.padippakam.com



கியது. ஆதிக்கம் செலுத்தியோர் குலத்தின் பாதுகாப்பு பொருளாதார உறவுகள் ஆகியவற்றில் குறுக்கிட்டு தமது நேரடி நடவடிக்கையின் கீழ் கொண்டு வந்தனர். கால் நடை வளர்ப்பின் போதும், விவசாயத்தைத் தொடங்கிய காலத்தும் ஆதிக்கம் செலுத்தியோர் அதிகபட்ச கால் நடைகளையும் தானிய இருப்பையும் தமதாக்கிக் கொண்டனர்.

ஒரு சிலரின் தொடர்ந்த ஆயுத உபயோகத்தின் அடிப்படையிலான அதிகாரம்: ஆதிக்கம் பலரின் ஆயுத உபயோகத்தை கட்டுப்படுத்திச் உழைப்புக் கருவிகள், சாதனங்களுடன் மட்டும் பிணைத்து தங்கள் வல்லமையை வளர்த்துக் கொள்ள ஆயுதம் எந்தும் தனிப் பிரிவினரை கட்டியமைத்துக் கொண்டன(ர்) Queendoms, Kingdoms கட்டியமைக்கப்பட்டன. ஆயுதம ஏந்திய த்னிப்பிரிவினரில் பெரும்பான்மையோர் ஆண்களே இருந்தனர். பொதுவாகமனித இனத்தோற்ற காலத்தில் இருந்தே பெண்கள் ஆண்களைவிட எண்ணிக்கையில் குறைவாய் இருந்தனர்—மக்கள் தொகைப் பெருக்கத்தைத் தவிர்ப்பதை முன்னிட்டு பெண் சிசுக்கொலை ஆரம்பத்தில் இருந்தே மேற்கொள்ளப் பட்டது.[9] ஆயினும் "பெண் ஆதிக்க அதிகார சமூகங்களில் பெண்கள் ஆயுதம் ஏந்துவது முழுவதுமாக கைவிடப்படவில்லை. ஏனெனில் தாங்கள் ஆயுதம் ஏந்துவது என்பது ஆயுதம் ஏந்தும் பிரிவினரின் தலைமையாகவும் தங்கள் மேலுமையை தற்காத்துக் கொள்ளவும் வேண்டியிருந்தது. விரைவிலேயே போர் நடவடிக்கைகள் ஆண்களுடையதாயிற்று, சில சமயங்களில் அரசியின் தலைமையில் ஆண் படைப்பிரிவுகள் போரிட்டன. இருந்தும், படிப்படியாக படைப்பிரிவுகளில் ஆண்கள் அதிகமாக இடம் பெற்றது மாற்றம் கொண்டதானதுகூட பெண் அதிகார ஆதிக்க அரசுகளைக் குடும்பங்களை நீண்ட காலத்திற்கும் நீடித்து வந்தது. படிப்படியாக இந்த ஆண்களின் ஆயுத படைப் பிரிவு வளர்ச்சியானது மாறுபட்ட போக்கில் இட்டுச்

படிப்பகம்

www.padippakam.com



சென்றது. சில சமயங்களில் பெண்கள் அரசு ஆதிக்கம் முதலில் இழந்தனர். சில சமயங்களில் குடும்பத்தின் மீதான தமது ஆளுமையையும் இழந்தனர்''[10] அனைத்து Queendoms—Kingdoms ஆக மாற்றம் செய்யப்பட்டன. பெண் கொண்டிருந்த—அதிகாரம் ஆதிக்கம் அவளுக்கெதிராகவே திருப்பப்பட்டது, ஏற்கெனவே நிலவிய Kingdoms உடன் Queendoms—Kingdoms ஆக மாற்றம் செய்யப்பட்டவையும் பலப்படுத்தப்பட்டன. ' ஆண், ஆதிக்க அரசு கட்டுமானத்தின் துவக்கத்தில் இருந்தே பெண்கள் அடிமைப்படுத்தப்பட்டனர். பெண்களும் குழந்தைகளும் ஆண்களின் அடிவருடிகள் ஆக்கப்பட்டனர்.[11]

இந்தக்கால கட்டத்தில்தான் Mother Goddes படிமங்களுடன் ஆண் உருவ படிமங்களும், ஆண் உருவ ஓவியங்களும் உடன் சேர்ந்தன. யோனி வழிபாட்டுடன் லிங்க (Phallic) வழிபாடும் சேர்க்கப் பட்டது. Creation Force ஆக இருந்த பெண்ணுடன் ஆணும் உடன் நிறுத்தப்பட்டான். பெண் சிசுக்கொலையுடன் 'சதி' வழக்கம் துவக்கப்பட்டது—ஆணாதிக்கத்தின் அப்பட்டமான வெளிப்பாடாக...மனைவி, பெண் விற்கப்படுவதற்கும், பணயம் வைப்பதற்கும், ஈடுகட்டுவதற்கும், உரியவளாக்கப்பட்டாள்...'தேவதாசி' முறைகள் புகுத்தப்பட்டன.

இந்த வகையில், ஆயுத வலிமையினால் மேற்கொள்ளப்பட்ட அதிகாரம் ஆதிக்கம் சமூகத்தின் மீதான மேலுமையில் பால் உறவுகளிலும் பலவித 'குடும்ப' அதிகார ஸ்தாபனங்களைத் தோற்றுவித்தது என்பதையும் ஆயுத பலத்தை பிரயோகித்தே பெண், அதிகார ஆதிக்கம், குடும்பம் ஆண், அதிகார ஆதிக்கக் குடும்பமாக மாற்றப்பட்டது என்பதையும் சரிவர அறியாமல் தவறான அடிப்படைகளிலும், கருது கோள்களிலும் முன்னுக்குப் பின்னாகவும் தலைகீழாகவும் கண்டறிவதானது ஆண் ஆதிக்கத்தையும்,

படிப்பகம்

www.padippakam.com



பெண் அடிமைத்தனத்தையும் குடும்பத்திற்கு வக்காலத்தையும், பெண் விடுதலை, சமத்துவம், கல்வி சுதந்திரத்திற்கான தவறான இலக்குகளையும் போக்குகளையும் முன் வைப்பதாகி விடுகிறது. இது குறித்து சற்று காணுவது இங்கு அவசியமும்கூட.

"முதன் முதலில் ஆண், இன சந்ததியுருவாக்கத்தில் தனக்கும் பங்கு இருக்கிறது என்பதை அறிந்து கொண்டதும், குழந்தைகள் பிறப்பில் பெண்ணின் முழுமையான பங்களிப்பு மட்டுமல்ல தன் பங்கும் கூட என்பதையும் அறிந்து கொண்டான். இந்தத் தீர்மானம் அவனுள் மெல்ல மெல்ல வலுப்பெற்றது. இந்தக் கருத்து, அதாவது சந்ததி உருவாக்கம் பெண் மற்றும் ஆணின் கூட்டு பங்கேற்பின் விளைவு என்பது வலுப்பெற்று உறுதிப் பட்டதும் அதன் விளைவுகள் இயற்கையிலேயே தொடர்ந்தன. 'தகப்பன்' என்கிற அறிவு வலுப்பெற்றதுடன் அது, பல வழிகளிலும் விளைவுகளை ஏற்படுத்தியது. தகப்பன்' என்கிற அறிவு குழந்தையின் மீது ஆதிக்கம் செலுத்தியது. அது இப்போது 'தாய்' உடன் 'தகப்பனும் ஆதிக்கம் செலுத்துவதாகிறது. இது கூடிய விரைவில் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான பலப்பிரயோக இணக்கத்திற்கு இட்டுச் சென்றது. பெண், கர்ப்ப மேலுமை (Gynocracy) ஒரு முறை உடைபட்டதும் அதன் படிகளில் ஆண் விந்து (Androcracy) மேலுமை முழுமையாக்கப்பட்டது. இது ஆணால் அறியப்பட்டதின் இயற்கையான பின் விளைவாக, ஆண் ஆதிக்கமும் அதையொட்டி ஆண் முழுவதுமான மேலாண்மை கொண்டதுமாகும்." என Lester Frank Ward போன்றோர். தவறுதலாகக் கருதுகின்றனர்.[12] அதாவது ஆணின், அதிகாரத்திற்கு ஆயுத வல்லமையை அடிப்படையாக அறியாமல் 'தகப்பன் என்கிற பகுத்தறிவுதான் ஆண் ஆதிக்கத்திற்கு இட்டுச் சென்றது எனத் தவறாக அறிந்தனர். இந்த 'பகுத்தறிவு' பெண்

படிப்பகம்

www.padippakam.com



ணின்; சமூக ஆதிக்க வலிமையை ஒழித்து விட்டதா என்ன? ஆண்களின் படைப்பிரிவு அல்லவோ, பலப்பிர யோகம் அல்லவோ. சமூக ஆதிக்க, அதிகார, அரச ஸ்தாப னங்களைப்பெண்ணிடமிருந்து பறித்ததும் சமூக, அதிகார ஆதிக்க அரசு, ஸ்தாபனங்கள் ஆண்கள் மையப்படுத்தப் பட்டதாய் கட்டியமைக்கப்பட்டதும்—Queendoms—Kingdoms ஆக மாற்றப்பட்டதும், இந்த அரசு ஸ்தாபனங்கள் அல்லவோ பெண் ஆதிக்கக் குடும்ப'வடிவங்களை' ஒழித்து ஆண் ஆதிக்கக் குடும்ப வடிவங்களை பொதுவான நெறி முறையாக்கியதும், இந்த அதிகார, அரசுகளுக்கிடையி லான, மோதல்களில், சூழல்களில் அடிமை முறையும் அதன் உட்பிரிவாகப் பெண் அடிமை முறையும் தோற்றங் கொண்டதும், பெண் அடிமைகள் கூட, 'அதிகார, உயர் படி முறைகளில் நிலவியவர்களுக்கே விசேஷ சலுகையாக விளங்கியதும் ஆகும். ''கலவி உறவுகளின் வழக்கங்கள், கலாச்சாரம் என்பது யார் அதிகாரத்தை கொண்டுள்ளார் களோ அதைச் சார்ந்ததே.[13] இந்த அடிப்படையை மூடி மறைத்து 'பகுத்தறிவினை' காரணமாக காட்டுவது, அதிகார, ஆதிக்க ஸ்தாபனங்களுக்கு அடிப்படையாக உள்ள ஆயுத வல்லமையை மூடி மறைப்பதும், அந்த அதிகார, ஆதிக்க அடிப்படையிலேயே 'குடும்ப' வடிவம் தோற்றம் கொள்ளுவிக்கப்பட்டு நீடித்து வரப்படுவதை யும் மறைப்பதாகும்.

இதுதவிர, ஆண் ஆதிக்கத்திற்கும், ஆண் ஆதிக்கு குடும்பங்களுக்கும் ஆண், பெண் இடையிலான இயற்கை யான உடல்,திறன் உளவியல் ரீதியாக காரணங்களை காட்டுவோரும் உள்ளனர். இந்த வகையில் ஒரு நீண்ட பட்டியலே இடலாம்.

''மொத்தத்தில். பெண்கள் ஆண்களைவிட இயற்கை யிலேயே பலஹீனமானவர்கள்'; என்றே சாக்ரடீஸ்,

www.padippakam.com



பிளாட்டோ கருதுகின்றனர். கலவி உறவுகளை Heirarhiesக்கு ஏற்ப நகரக்காவலர்களுக்கும், இதர நகர மக்களுக்கும் முன்வைத்து, 'வரைமுறையற்ற புணர்ச்சி அல்லது அந்த வகையான கலவி உறவுகள் மகிழ்ச்சி நிறைந்த குடிமக்களுக்கு புனிதமற்றது. நகரபாதுகாப்பாளர்கள் அதனை அனுமதிக்கலாகாது'. என அறிவிக்கின்லனர்[14]

வரலாற்றுக்கு முந்திய அரசுகள் முதற்கொண்டே நகரஅரசுகளும் அதையடுத்த பேரரசுகளும் சமூக மேலாதிக்கம்கொண்டதன் காரணமாகக் கலவி உறவுகளிலும் வரையறைகளை வெவ்வேறு வகையில் தத்தமது சமூக சூழ்நிலைகளுக்கேற்ப நடைமுறைப்படுத்தின. அரசு சமூகம் குறித்தான சிந்தனைகளையும், கருத்தாக்கங்களையும் ஒவ்வொரு ஆணுக்குள்ளும் பெண்ணுக்குள்ளும் இருத்தி வருகின்றன அந்த வகையில் அதிகாரச் சிந்தனையாளர்களும், கோட்பாட்டாளர்களும் அதிகார மூளைச் சலவை செய்கின்றனர். மேலும், அரசு, அதிகார ஸ்தாபனங்கள் மதம், கலாச்சாரம், கல்வி சமூக வழக்கங்களை புகுத்தி நடைமுறைப்படுத்துகின்றன. "தேவனாகிய கர்த்தர் மனுஷனை உருவாக்கி மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கினார்[15] என்கிறது வேதாகமம். தம்மபதம் கூட, "பெண்ணுக்கு இழுக்கு திய நடை" என்றும் "எந்த மனிதனும் பிறன் மனைவியை விரும்பலாகாது" என்றும் "தாயைப் போற்றுதல் இனிது." என்றும் 'குடும்ப' வடிவத்தை முன்வைத்து பெண், ஆண் ஒழுக்க வரையறைகளை முன் வைக்கிறது இந்திய இந்துமரபு. முத்தொழிலிலும் (ஆக்கல், காத்தல், அழித்தல்) —பிரம்மா. விஷ்ணு, சிவன்-ஆண்களுக்கே முதன்மை அளித்து பெண்ணை இரண்டாம் நிலைக்கு தள்ளிவிட்டது.[16] இஸ்லாம்," ஆண்கள் தம் பொறுப்பில் பெண்களைக் கொண்டிருக்கிறார்கள். எனவே, நல்ல பெண்கள் பணிவுடனும், பாதுகாப்

படிப்பகம்

www.padippakam.com



புடன் மறைவில் இருப்பவர்கள்'' என ஆணாதிக்கத்தை யும் பெண்களின் இரண்டாம் நிலையையும் நடைமுறைப் படுத்துகிறது.[17] இந்த அடிப்படையிலேயே இதிகாசங் களும் காவியங்களும் புராணங்களும் ஆண் மைய படைப் புக்களாக இயற்றப்பட்டன. அற, நெறி நூல்களும் புனையப்பட்டன. அதிகார ஸ்தாபனத்தின் ஒழுங்கமைக் கப்பட்ட 'அரசு' வடிவ காலத்தின் ஊடே—பெண் ஆதிக்க அதிகாரம், குடும்பம் ஒடுக்கப்பட்டதன் அண்மையில் ஒலி வடிவிலான மொழி—வரிவடிவம் உருவாக்கப்பட்டு, ஆண் மைய சொல்லாடல்களும்—மொழியும் அதிகார, அரசு ஸ்தாபனங்களால் வளர்க்கப்பட்டது. பெண் 'மைய' சொல்லாடல்கள் உறவுமுறை வார்த்தைகள்—ஆண் ஆதிக்க, அதிகார, அரசு ஸ்தாபனங்களில் நடைமுறை களில் அப்புறப்படுத்தப்பட்டன அல்லது ஆண் மைய சொல்லாடல்களில்—மொழியில்—அவறறின் நிழல்களில் தஞ்சம் புகுந்து மறைந்து கொண்டன. பெண் மையைச் சொல்லாடல்கள் ரகசியங்களாகி விட்டன.

அரசுகள், தங்கள் சமூக மறு உருவாக்கலில், விவசா யத்தை முன்னெடுத்துச் சென்ற காலகட்டத்தில், மனித உழைப்புச் சக்தி அதிக அளவில் தேவைப்பட்டதால் அதிக எண்ணிக்கையில் யோனிகளும் தேவைப்பட்டன. பரந்த நிலப்பரப்பு விவசாயத்தின்கீழ் கொண்டுவரும் பொருட்டு கூட்டுக் குடும்பங்கள் தேவைப்பட்டன. இதற்குத் தேவை யான அதிக மக்கள் தொகைக்கு, 'பெண் சிசுக் கொலை' மட்டுப்படுத்தப்பட்டது. பெண் 'புனித'மானவளாகக் கருதப்பட்டாள். பத்தினித் தெய்வமாக போற்றப்பட் டாள். பெண், தாய்மை சிறப்பு அளிக்கப்பட்டது. மேலும், பெண்—பிறப்பு இயந்திரமாக மாற்றப்பட் டாள். கூடவே 'பர்தா' முறைகளும், 'தனிமைப்படுத்தப் பட்ட' வழக்கங்களும் பால்ய விவாகங்களும் மேற்கொள்



படிப்பகம்

www.padippakam.com



ளப்பட்டன. அதிக யோனிகள்—அதிக மக்கள் தொகை— ஆண்களின் எண்ணிக்கைக்கு ஏறக்குறைய பெண்களின் எண்ணிக்கையும் கொண்டுவரப்பட்டது. சில விசேஷ அதிகாரத்துவ, உயர், படி முறையில் நிலவியவர்களுக்குப் பலதார மணம் விசேஷத்துவமாக விளங்கியபோது சாதாரண அனைவர்க்கும் ஒருதார மணமும் அதற்கேற்ற வகையில் பெண்கள் எண்ணிக்கையும் ஆண்களுக்கு ஏறக் குறைய கொண்டுவரப்பட்டது. இப்போது ஆண்களின் எண்ணிக்கைக்கு நிகரான எண்ணிக்கையில் பெண்களை யும் தம்முன் எதிரணியாக தோற்றுவித்துவிட்டது.

இதையடுத்த கட்டத்திற்கு வருவோம். முடியரசுகளை எதிர்த்து ஜனநாயக குடியரசு அதிகாரத்திற்கு அடித்தள மிட்ட அதிகார வெறியர்களின் சிந்தனைகளில் பெரும் பங்கு வகித்த ரூஸோ, ''சேர்ந்து வாழ்தலான வழக்கம் மனித இனத்தின் உன்னத உணர்வுகளாக உடல் உறவு நேசத்தையும் குழந்தைகளின் மீதான பெற்றோர் பாசத் தையும் உருவாக்கியது. ஒவ்வொரு குடும்பமும் சிறு சமூகமாக உருவானது''[18] எனவும் அனைத்துச் சமுதாயத் தின் மிகப் புராதனங்களிலும் அதுவும் இயற்கையான ஒன்று—குடும்பம்''[19] எனவும் இவ்வாறு சமூக இயற்கை யாக தோற்றம் கொண்ட குடும்பத்தில் இயற்கையான பல காரணங்களின் அடிப்படையில் தகப்பன் மேலுமை செலுத்த வேண்டும் என்பது தெளிவாகிறது'' ''குழந்தை களைக் காட்டிலும் தகப்பன் உடல் ரீதியாக வலிமை வாய்ந்தவன். அவனது அதிகாரம் இயற்கையினாலேயே நிறுவப்பட்டது'' ''தகப்பனின் கடமைகள் இயற்கையான உணர்வுகளினால் கட்டமைக்கப்படுகின்றன.'' எனவே இயற்கை, குடும்பங்களின் சிறந்த தகப்பன்மார்களை ஏற்படுத்தியது.'' மேலும் கணவன், தனது மனைவியின் நடத்தையைக் கண்காணிக்க வேண்டும்''[20] ''நம்பிக்கைக்கு உகாத மனைவி மோசமானவள். அவள் குடும்பத்தை

படிப்பகம்

www.padippakam.com



கலைத்து விடுகிறாள்'' மேலும் இயற்கையான பிணைப்புகள் அனைத்தையும் உடைக்கிறாள்.[21] என ஆணாதிக்க 'குடும்ப' அதிகார ஸ்தாபனத்திற்கு வரிந்து கட்டி இயற்கையைக் காரணமாகக் காட்டுகிறார்.

இனங்களின் தோற்றத்தை அறிவித்த டார்வின், 'பெண்' அறிவுத் திறனில் ஆணைவிட வேறுபட்டு காணப் படுகிறாள். மேலும், அதிகபட்சமாக மெல்லியல் தன்மை யும் சுயநலமும் கொண்டிருக்கிறாள். இருபால்களிலும் ஆண், பெண்ணைவிட அதிக புத்திக்கூர்மை பெற்று மேலோங்கி இருப்பது எதை எடுத்துக்கொண்டாலும் தெரிகிறது. ஆண்கள் வலிமையிலும் தொடர்ந்த நிலைப் பாட்டிலும் தீர்மானகரமான சக்தியும் கொண்டிருக் கிறார்கள். ஆனால் வெறும் உடல் வலிமையும், உருவமும் வெற்றியை அளித்துவிட முடியாது. அதிகபட்ச அறிவுத் திறனும் புத்திக் கூர்மையும் இன்றி உயர்ந்த வெற்றி கள் அனைத்து விஷயங்களிலும் கொள்ள முடியாது. இந்த வகையான பின் குறிப்பிட்ட மற்றும் முன் குறிப் பிட்டத் திறன்கள் ஆணிலேயே வளர்ச்சிப் பெற்றுள்ளன. எனவே, ஆண் இறுதியாக பெண்ணைவிட உயர்ந்த வனாகி விட்டான்.''[22] என தன் கண்டுபிடிப்பை முன் வைக்கிறார். இயற்கை அறிவியலில் தன் சுவடுகளைப் பதித்த டார்வின், ஆண் ஆதிக்கச் சுவடுகளை 'புத்திக் கூர்மையுடன்' பெண்களின் மீது பதிக்கிறார். 'இயற்கைத் தேர்வு,' பாலியல் தேர்வு,' சமூகத்தில் அதிகார, ஆதிக்க தோற்றத்தை அடுத்து, 'அதிகாரத் தேர்வாக' மாற்றம் பெறுகிறது. ஏனெனில், அதிகார, ஆதிக்க அரசு ஸ்தாபனங்கள் சமூக இயக்கத்தைப் பெரிதும் தீர்மானிப்ப தால், 'இயற்கைத் தேர்வு' சிறிய பங்கை மட்டும் வகிக்க, அதிகாரத் தேர்வு பெரும் தீர்மானகரமான பங்கைச் செலுத்துகிறது. இந்த வகையான அதிகாரத் தேர் வின் மூலமாகவே மனித (ஆண், பெண்), உடல், அறிவு, திறன், அழகு இத்யாதிகளில் வேற்றுமைகள்

www.padippakam.com



ஏற்படுகின்றன. இத்தகைய அதிகாரத் தேர்வின் விளைவான வேற்றுமைகள் தொடர்ந்து (Aquired Charectors) (transmission) நிலவுகின்றன. இந்த அதிகார, ஆதிக்கத் தேர்வினால், பெண் சிறுமைப்பட்டதை, டார்வின், சௌகர்யமாய் இயற்கைத் தேர்வாகச் சித்தரித்து ஆண் ஆதிக்கத்துக்கு நியாயப்படுத்துகிறார். சிறந்த இயற்கை அறிவியலாளர் மோசமான சமூக இயலாளராகி விடுகிறார்.

உளவியல் ஆய்வில் சாதனைகளைப் படைத்த ஃப்ராய்டு ''உடல் ரீதியான பெண்களின் ஜம்பத்திற்கு Penis, envy பங்கு இருக்கிறது. தங்கள் அதுவான தாழ்வினை பின்னால் ஈடுசெய்யும் வகையில் கவர்ச்சியை அதிக அளவில் அவர்கள் காட்டிக்கொள்ள வேண்டியதாகிறது.'' எனக்கூறி ''உயிரமைவு தன் நோக்கத்தை நிறைவேற்ற ஆணின் வன்மையினிடம் ஒப்புக் கொடுத்து பெண்ணின் ஒப்புதலிடமிருந்து சற்றே ஒதுங்கிவிட்டது. மேலும், தங்கள் உணர்திறன்களை சமூக நலனுக்கு மாற்றும் வகைகளில் ஆண்களைவிட பெண்கள் குறைந்த செயல் திறம் கொண்ட பலவீனமானவர்கள்.''[23] என்றே கருதுகிறார்.

இந்த வகையாக ஆணின் ஆதிக்கத்துக்கும், குடும்பத்திற்கும் வக்காலத்து வாங்கும் சிந்தனைகள், அதிகார, ஆதிக்க, அரசு சமூகச் சிந்தனைகளின் கருத்தாக்கங்கங்களின் அடிப்படையிலேயே அவற்றுக்கு ஆதரவாக முன்வைக்கப் படுகின்றன. இத்தகைய சிந்தனைகளுக்கு வேற்று அணுகு முறைகளை முன் வைக்கின்ற, Paul Braca ('சமூக நிறுவனங்கள்.' 'சமூக சூழ்நிலை' என பொத்தாம் பொதுவாக காரணங்களைச் சுட்டுகிறார்) Kareny Harney (Womb/envy)[24] போன்றோரும், அதிகார, ஆதிக்க, அரசு வல்லமையினால் குடும்ப உறவுகளும், ஆண், பெண் வேற்றுமைகளும் தோற்றுவிக்கப்பட்டு நீட்டித்து வரப்படுகின்றன

www.padippakam.com



என்பதை கவனிக்கத் தவறி விடுகிறார்கள். இந்த அடிப் படை விஷயத்தை, அம்சத்தை கவனத்தில் கொள்ளும் ஒரு சிலரும், அரசு சமூகக் கருத்தாக்கத்தின் அடிப்படையில் 'வேறுவழியில்லை'யென கைவிரித்து விடுகின்றனர் அல்லது சீர் திருத்தங்களை முன்வைக்கின்றனர்.

அதிகாரக் கோட்பாட்டாளர்களில் மற்றொரு பிரிவி னரையும் இங்கு காணலாம். வர்க்கப் போராட்டத்தின் மூலமாக அரசியல் புரட்சிகளுக்கு வழி வகுத்து, ''ஒவ் வொருவரின் சுதந்திர வளர்ச்சியை நிபந்தனையாகக் கொண்ட அனைவரின் சுதந்திர வளர்ச்சியான சமூக சங்கத்திற்காக" பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை முன்வைத்த மார்க்சும் எங்கெல்சும் 'குடும்ப' உறவுகளை பொருள் முதல்வாத அடிப்படையில், 'மதம், குடும்பம், அரசு, சட்டம், நெறி, விஞ்ஞானம், கலை, இத்யாதிகள் ஒரு குறிப்பிட்ட உற்பத்தி முறைகளே. மற்றும் அதன் பொதுவான விதிகளுக்குள் அடங்கியவை''[24] என அறிந்து, ''குடும்பத்தின் உணர்வு பூர்வமான திரைகளை கிழித்தெறிந்து, குடும்ப உறவினை வெறும் பண உறவாக பூர்ஷ்வா குறைத்துவிட்டது''[25] என ஆதங்கப்பட்டு, குடும்பங்களின் தோற்றத்தை, வரைமுறையற்ற புணர்ச்சி' என்ற ஆதிநிலையில் இருந்து ''பெற்றோர்களும் குழந்தை களும் பரஸ்பரம் புணர்ச்சி செய்வதை விலக்கியது குடும்பம் உருப்பெறுவதில் முதல் முன்னேற்றமாய் இருந் தால் சகோதர சகோதரிகள் பரஸ்பரம் புணர்ச்சி செய் வதை விலக்கியது. இரண்டாவது முன்னேற்றமாய்''— குடும்பங்கள் (ரத்த உறவுக் குடும்பம், பூனலூவா குடும்பம்) புணர்ச்சி விலக்கங்கள் (Exclusions) அடிப் படையில் அறியப்படுகிறது. மேலும் இந்த மணத் தடை களின் பெருகி வரும் சிக்கல்களினால் குழுமணங்கள் மேலும் மேலும் சாத்தியமில்லாமற் போயின. அவற் றுக்குப் பதிலாக இணைக் குடும்பம் வந்து சேர்ந்தது.

www.padippakam.com



''அது ஸ்திரமான ஒரு தார மணத்தை நோக்கி மேலும வளர்ச்சியடைவதற்கு மாறுபட்ட காரணங்கள் தேவைப் பட்டன. செல்வங்கள் குடும்பங்களின் தனிச் சொத்தாகப் போய்விட்டு அங்கே விரைவாகப் பெருகத் தொடங்கிய துமே அவை இணை மணமுறையின் மீதும் தாயுரிமை கணத்தின் மீதும் ஆதாரப்பட்டிருந்த சமுதாயத்திற்குப் பலமான அடி கொடுத்தன. செல்வம் பெருகப் பெருக அது ஒரு பக்கத்தில் குடும்பத்தில் பெண்ணைவிட ஆணுக்கு முக்யமான அந்தஸ்து அளித்தது மட்டுமல்லாமல் இன்னொரு பக்கத்தில் தனது குழந்தைகளுக்குக் சாதகமான வழியில் பரம்பரை வாரிசு வரிசை முறையைத் தூக்கியெறிய இந்த வலுப்பெற்ற அந்தஸ்தைப் பயன்படுத்திக் கொள்ள ஆணுக்கு ஒரு தூண்டு கோல் அளித்தது. ஆனால் தாயுரிமைப்படி வம்சாவளி இருந்து வந்த வரை இது நடப்பது சாத்தியமில்லை ஆகவே இது தூக்கியெறிய வேண்டுவதாயிற்று. அது தூக்கி யெறியவும் பட்டது. இப்போது நமக்குத் தோன்றுவது போல் இது அவ்வளவு கஷ்டமுமில்லை. இனிமேல் ஆண்களின் சந்ததிகள் கணத்துக்குள்ளேயே இருக்க வேண்டும். பெண்களின் சந்ததிகள் கணத்தில் இருந்து விலக்கப்பட்டுத் தகப்பனின் கணத்துக்கு மாற்றப்பட வேண்டும் என்று சர்வ சாதாரணமான தீர்மானம் செய்தால் போதும், பெண் வழியாக வம்சாவளியைக் கணக்கிடுவது, தாய் வழியாக வாரிசுரிமையை கணக்கிடுவது இரண்டும் அத்தோடு தூக்கியெறியப் பட்டன; ஆண் வழி வம்சாவளி முறையும் வாரிசுரிமை முறையும் அமைக்கப்பட்டன'' என்று சர்வ சாதாரண தீர்மான விஷயமாக்கி விட்டார் எங்கெல்ஸ். பாவம்! பெண்ணினம், ஆண்களின் சர்வ சாதாரண தீர்மானத்தின் பேரிலேயே வரலாற்று ரீதியில் தோல்வி அடைந்தது! எங்கெல்ஸ் எந்த அளவிற்கு ஆயுத வல்லமையை, பலப் பிரயோகத்தை, அதன் அடிப்படையிலான அதிகாரத்தை மறைத்துவிட்டு சர்வ சாதாரண தீர்மான விஷயமாக்கி

www.padippakam.com



விட்டு இத்தகைய சர்வ சாதாரண தீர்மானத்தை ''மனித குலம் அனுபவித்த மிக நிர்ணயகரமான புரட்சிகளில் இதுவும் ஒன்றாகும்'' என்கிறார். என்னே! புரட்சிகர சர்வ சாதாரண தீர்மானம்!

சர்வ சாதாரண தீர்மானத்தின் பேரிலேவா—Queendoms-Kingdoms ஆக மாற்றப்பட்டன? Matriarchal குலங்கள் Patriarchal குலங்களாக மாற்றப்பட்டன? தாய் வழிச் சந்ததி, தந்தை வழிச் சந்ததியாக மாற்றப் பட்டது? பெண், தாய் வழி வாரிசுரிமை—ஆண், தந்தை வழி வாரிசுரிமையாக மாற்றப்பட்டது? ஆயுத பலம் இன்றி ஆயுதம் ஏந்தியிருந்த பெண்ணை, பெண்ணி னத்தைக் கஷ்டமின்றி சர்வ சாதாரண தீர்மானத்திலேயே தோல்வியடையச் செய்ய முடிந்தது. உண்மையில் இந்தப் புரட்சி எவ்வளவு இரத்தக் களறியாய் இருந்திருக்க வேண்டும். இந்த மாபெரும் அதிகார மாற்றம் எவ்வளவு பாரதூரமான, மூர்க்கத்தனமான ஆயுத கைகலப்பில் நிகழ்ந்தேறியிருக்க வேண்டும். சமூக, குடும்ப அதிகாரத்தை ஆயுத வலிமையினாலே கொண்டிருந்த பெண்கள் அதனை வெறும் சர்வ சாதாரண தீர்மானத்தினால் விட்டுக் கொடுத்திருக்கமாட்டார்கள். எந்த சமூக அதிகார மாற்றமும் ஆயுத பலத்தின் மூலமாகத் தீர்மானிக்கப்படு கிறது. இறுதியாக அதையொட்டியே குடும்ப அதிகாரமும் வம்சாவளி முறை, வாரிசுரிமை முறைகள் மாற்றப்படு கின்றன. இது வெறும் சர்வ சாதாரண தீர்மான விஷய மல்ல, பொருளாதார அம்சம் சார்ந்ததும் அல்ல, வெறும் புணர்ச்சி விலக்கல்கள், மணத்தடைகள் அல்ல. இவற்றுக் குப்பின்னால், இவற்றைச் சாத்தியப்படுத்தும் சக்தியாய் இருப்பது ஆயுத உபயோக பலப் பிரயோகமும் அதன் அடிப்படையிலான அதிகாரம், ஆதிக்கம் ஆகும். இதனை சர்வ சாதாரணமாக—மறைத்து விட்டு—''பெண்ணினம் உலக வரலாற்று ரீதியில் பெற்றத் தோல்விக்கு'' பெண்கள்

படிப்பகம்

www.padippakam.com



மீதே சௌகர்யமாய் பழியைப் போட்டு விடுகின்றார் எங்கெல்ஸ் இவ்வாறாக''. ஒரு தாரமணத்திற்கு மாற்றம் பெற்ற காலம் நெடுகிலும் அந்த மாற்றத்தைக் கொண்டு வந்தவர்கள் முக்யமாக பெண்களே என்று பாக்கோபென் கூறுவது மீண்டும் முற்றிலும் சரி. பொருளாதார வளர்ச்சி நிலைமைகளின் காரணமாக அதாவது, பழைய பொது வுடைமை முறை பலவீனப்படுத்தப்பட்டு ஜன நெருக்கம் பெருகியதன் விளைவாகப் பழைய சம்பிரதாய வாழ்வின் பால் உறவுகள் தமது வெள்ளையான புராதன காட்டுத் தன்மையை இழந்து வர வர அந்த உறவுகள் மேலும் மேலும் ஈனமானவையென்றும் ஒடுக்குவனவாயும் பெண் களுக்குத் தோன்றி இருக்கவேண்டும். மேலும் மேலும் ஆர்வத்தோடு அவர்கள் கற்புரிமைக்காக வேட்கை கொண் டிருந்திருக்கவேண்டும். விமோசனம் பெறும் வகையில் குறிப்பிட்ட ஒரு ஆடவனைத் தற்காலிகமாகவோ நிரந்தர மாகவோ மணம் செய்து கொள்வதில் வேட்கை கொண் டிருக்கவேண்டும். இந்த முன்னேற்றம் ஆண்களிடமிருந்து தோன்றியிருக்க முடியாது; ஆண்கள் என்றைக்குமே— இன்றைய நாள் வரைக்கும் கூட நடைமுறை குழுமணத் தின் இன்பங்களைக் கைவிட கனாக்கூட கண்டது கிடை யாது என்ற காரணமே இதற்குப் போதும், பெண்கள் முயன்று இணைமண முறை நோக்கி மாற்றம் கண்ட பிறகு தான் கண்டிப்பான ஒரு தார மணத்தை— பெண் களுக்கு மட்டுந்தான், சொல்ல வேண்டியதில்லை— ஆண் கள் புகுத்த முடிந்தது.'' இனி பெண்ணினம் தங்கள் நெற்றியில் தாங்களே அடித்துக் கொள்ளட்டும், ரூஸோ வுக்கும், டார்வினுக்கும் சற்றும் சளைக்காத எங்கெல்ஸ், அதே சமயத்தில் ''பெண் இழிநிலைக்குத் தள்ளப்பட் டாள். பணிமகளாக்கப்பட்டாள்; ஆணின் காமஇச்சைக்கு அடிமையானாள்; கேவலம் குழந்தை பெறும் சாதனமாக ஆகிவிட்டாள்'' என பெண்ணுக்கு ஆதரவாக குரல் கொடுத்து, இறுதியில், பெண்களின் கண்ணீரைத் துடைத்து

www.padippakam.com



விடுகிறார், ''ஒரு சமுதாயப் புரட்சியை நெருங்கிக்
கொண்டிருக்கிறோம். அதில் ஒருதார மணம் நலிந்து
போவதற்குப் பதிலாக. இறுதியிலே ஒரு யதார்த்த
மாகிறது— ஆணுக்கும் சேர்த்து, அது நிறைவான முறை
யில் வெளிப்படுத்திக்கொள்ளத் தொடங்கும், அதிநிச்சய
மாய் மறையப் போகிறவை, முதலாவதாக, ஆணின்
ஆதிக்கம்; இரண்டாவதாக மணத்தை ரத்து செய்ய முடி
யாமை,'' என்னும் ஆறுதல் வார்த்தைகளுடன் மேலும்
''ஒரு புதிய தலைமுறை வந்த பிறகு— பெண்கள், உண்
மைக் காதலுக்காக மட்டுமின்றி வேறெந்த நோக்கத்துக்
காகவும் எந்த ஆணுக்கும் என்றைக்குமே இணங்க
கடமைப்பட்டிருக்க மாட்டார்கள்''[26] என நம்பிக்கை
அளித்துத் தேற்றுகிறார் இவரது ஆறுதல் வார்த்தைகளை
யும் புதிய தலைமுறைக்கான நம்பிக்கையையும் எந்த
அளவிற்கு கற்பனாவாதமாக்கியது பாட்டாளிவர்க்க
சர்வாதிகாரமும், சோசலிச அரசும் என்பதை பின்னால்
அறியலாம்.

வர்க்கப் போராட்டத்தை முன் வைத்து பாட்டாளி
வர்க்கச் சர்வாதிகாரத்தைக் கோரிய கம்யூனிஸ்டுகளின்
அறைகூவல்களுக்கிடையே மிகவும் வித்யாசமாய் வேறு
பட்டு ''எந்த விதமான அதிகாரத்துவத்தையும் அதன்
சார்பானதையும் முழுவதுமாக நிராகரித்து''[27] குரல்
கொடுத்த அராஜகவாதிகளுள் ஒருவரான புருதோன்,
''ஆண்மை வளர்ச்சி பெறும் தருவாயில் இருந்து, ஆண்
பல விஷயங்களிலும் மேலுமை பெறுகிறான். இந்த விதத்
தில், எனவே, பெண்ணின் உடல்திறன் தாழ்வு என்பது,
அவளின் ஆண்மை இன்மையே, பெண்என்பவள் குறுக்கப்
பட்ட ஆண், மேலும் சக்தி மிக்க வளர்ச்சி கொள்வதற்கு
தேவையான ஒரு உறுப்பை அற்றவள். தனது இலட்சியத்
திற்குப் பொருத்தமான மானிடன் என்பது, ஆணே.அவன்
தனது ஆண்மையினால் உடல் வாகுவிலும் நரம்பு திரட்சி

படிப்பகம்

www.padippakam.com



யிலும் இயற்கைக்கும் அவனது லட்சியத்திற்கும் தேவை யானதில் உயர்ந்த வளர்ச்சி பெறுகிறாள். அந்த வகை யில், வேலையிலும், மோதலிலும் அதிகபட்ச அதிகாரம் கொண்டவனாகிறான். பெண் தன் உடல் உறுப்பு இன்மை பலவீனத்தால், தாழ்வால் தவிர்க்க முடியாமல் வீழ்ச்சியுறுகிறாள். எனவே, அவளுக்கு இருக்கிற ஒரே நம் பிக்கை, ஆதரவு, நியதியை மறுதலிக்காமல் அவளை மீட்க கூடிய ஏற்பாடு திருமணம்தான்''[28] என முன்வைக்கிறார் ஆணின் சார்பாக. பக்கூனின் கூட ''சமூகச் சட்டம், உடைமைத்தனம்,மதம் அடிப்படையில் அமைந்த சட்டரீதி யான குடும்பத்தை அழிப்பதுதான், இயற்கையான குடும் பத்தை அல்ல சட்டரீதியான திருமணம் சுதந்திரமான திருமணங்களாக மாற்றப்பட வேண்டும்''[29] என்கிறார். அராஜகவாதத்தின் மூலவர் என கருதப்படும் காட்வின்,'' எல்லா விவாதங்களும், மரியாதையும் மதிப்பும் மிக்க திரு மணத்திற்கு ஆதரவாகவே தீர்மானிக்க முடிகிறது. ஆனால், விடுதலையும் நம்பிக்கையும் சரி நிகரான புதிய அம்சங்களாக விளங்குகின்றதாய், வருந்தி நொந்து கொள்ள இடமற்றதாய் இருக்காது''[30] என்கிறார்.

சமூகத்தில் நிலவும் அரசியல் அதிகாரத்தை, மற்றும் இதர மத, பொருளாதார அனைத்து ஆதிக்கத்தையும் ஒழிக்கக் குரல் கொடுத்த அராஜகவாதிகள் கூட மரியாதை யும் மதிப்பும் மிக்க, இயற்கையான சுதந்திர, ஆண் ஆதிக்க திருமணத்தை முன் வைக்கின்றன. இது அராஜக வாதிகளின் குழறுபடியான சிந்தனைகளை எடுத்துக் காட்டுகிறது. இதுபோலவே அவர்கள் அரசியல், அதிகார ஒழிப்பு, பொருளாதார இதர சமூக உறவுகளைக் குறித் தான சிந்தனைகளிலும் நடைமுறைகளிலும் தவறான போக்குகள் கொண்டிருந்தனர்.

இத்தகைய அதிகாரத்துவ சமூக சிந்தனைகளுக்கு,கருத் தாக்கங்களுக்குப் பின்புலமாய் விளங்கும் அதிகார, அரசு

படிப்பகம்

www.padippakam.com



கள் தங்கள் சமூக மறு உற்பத்தி நடவடிக்கைகளின் போக்கில் விவசாயத்தை உச்சகட்ட வளர்ச்சிக்குக் கொண்டு வந்ததையடுத்து இயந்திர உற்பத்தி முறைகளைச் சமூகத்தில் புதிய பொருளாதார உறவுகளை சக்திகளை முன்னெடுத்துச் சென்றதன் ஊடே, புதியபூர்ஷ்வா வர்க்கத்தை தோற்றுவித்ததன் பக்கத்தில் புதிய உடைமையற்ற ஆலைத் தொழிலாளர் கூலிஉழைப்புப் பட்டாளத்தையும் உருவாக்கி விட்டு பழைய கூட்டுக் குடும்ப வடிவங்களைச் சிதைக்கத் தொடங்கின. உருவாக்கப்பட்ட ஆலை நகரங்களில் கூட்டுக்குடும்பங்கள் உடைந்தன. புதிய ஆலைக்கூலி உழைப்புப் பட்டாளத்தில் பெண்களும் சேரவேண்டிய நிர்ப்பந்தங்கள் உருவாக்கப்பட்டன. பெண்களை இன்னும் குழந்தை பெறும் இயந்திரமாக இருத்திவைக்க முடியாது. அத்தகைய பணி நிறைவேற்றப்பட்டு விட்டது. பெருகிவரும் ஆலை இயந்திரங்களின் இடையில் இயந்திரங்களாய் மாற்றப்பட வேண்டியதாயிற்று. பெண்கள் நெருக்களுக்கு வந்தாக வேண்டும். ஆலை இயந்திர உற்பத்தியில் ஈடுபடவேண்டும். அதற்குத் தேவையான கல்வி, பயிற்சி அளிக்கப்படவேண்டும். பெண்களும் இந்த தேவைகளை உணர்ந்தனர். இத்தகையச் சூழலில்தான் மேரிவுல்டன்ஸ் கிராப்ட் (1759—1797) (Avindication of the Rights of Women 1792) முதலான பெண் நிலை வாதிகளின் சிந்தனைகள் மற்றும் பெண்களின் போராட்டங்கள், பெண்களுக்கும் கல்வி, வேலை வாய்ப்புக்களில் சம உரிமை, போன்ற சீர்திருத்தங்களை நோக்கமாகக் கொண்டன. மேலும் அரசுகள் 'ஜனநாயக' நடைமுறையைக் கொண்டதும் பெண்களுக்கும் ஜனநாயகம் வழங்க வேண்டி வந்தது. குடும்பத்திலும் ஜனநாயகம் புகுத்த வேண்டி வந்தது. இந்தச் சூழலில் ஜே.எஸ்.மில், ஹாரியட் டைலர் மில் (1806-73) போன்றோர், ''பெண்களுக்குச் சமத்துவ உரிமைகள், அனைத்துச் சமூக சலுகைகளிலும் சமத்துவ அனுமதிகள்''[31] மற்றும், ஒருபுறம் ஆளுமையும்

www.padippakam.com



மறுபுறம் கீழ்படிதலும் அற்ற அன்பின் அடிப்படையில் இருவரின் சமத்துவ இணை வாழ்வு'' 82 தேவை என குரல் கொடுத்தனர்.

இந்த அறைகூவல்களின் முன்னே, மார்க்சிய வர்க்கப் போராட்டத்தின் அடிப்படையில் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தின் வடிவமாக ருஷ்யாவில் 1917ல் சோவியத் ஆட்சியதிகாரம் நிறுவிய லெனின், ''எல்லா ஜனநாயகக் குடியரசுகளிலும் சமத்துவம் பிரகடனம் செய்யப்படுவதைக் காண்கிறோம். ஆனால் உரிமைச் சட்டங்களிலும் பெண்களது உரிமைகள் பற்றிய சட்டங்களிலும் குடும்பத்தில் அவர்களுடைய நிலையையும் திருமண ரத்தையும் பற்றிய சட்டங்களில்—ஒவ்வோர் அடியிலும் அசமத்துவத்தையும் பெண்கள் இழிவுபடுத்தப்படுவதையும் காண்கிறோம். பிரத்யேகமாய் இது ஒடுக்கப்பட்டோர் சம்பந்தமாய் ஜனநாயகம் மீறப்படுவதைக் குறிப்பதாகும் என்கிறோம். வேறு எந்த அரசையும் விட மிகவும் முன்னேறிய நாடுகளுடைய அரசுகளையும்விட சோவியத் அரசு மிக அதிக அளவுக்கு ஜனநாயகத்தைச் செயல்படுத்தியிருக்கிறது; எப்படியெனில் பெண்களின் சமத்துவத்துக்கான எந்தச் சாயலையும் அது தனது சட்டங்களில் விட்டுவைக்கவில்லை. சோவியத் ஆட்சியதிகாரம் தோன்றியபின் ஆரம்பமாதங்களிலேயே அதுபெண்களுக்காகச் செய்ததில் பாதியளவுகூட வேறு எந்த அரசும், வேறு எந்த ஜனநாயகச் சட்டமுறையும் என்றுமே செய்ததில்லை என்றுதிரும்பவும் கூறுகிறேன். சட்டங்கள் மட்டும்போதாதுதான். வெறும் அரசாணைகளுடன் நாம் திருப்தியடைந்துவிடவில்லை. ஆனால் சட்டத்துறையில் பெண்களை ஆடவருடன் சமத்துவ நிலையில் அமர்த்த நாம் செய்யவேண்டியது அனைத்தையும் செய்துவிட்டோம். இது குறித்து பெருமை கொள்ள நமக்கு முழு உரிமை உண்டு'' என்று படோடோபமாகத் தமக்குத் தாமே பெருமைப்பட்டு மேலும்

படிப்பகம்

www.padippakam.com



''பெண் முழு விடுதலை பெற்று ஆடவனுக்குச் சரிசமமான நிலையை அடைவற்குத் தேசப் பொருளாதாரம் சோசலிச மயமக்கப்பட வேண்டும். ஆக்கவளமுள்ள பொது உழைப்பில் பெண்கள் பங்கு கொள்ள வேண்டும்' என்றும், அப்போதும்கூட, ''வீட்டு வேலைகள் யாவும் அவர்களிடமே விட்டுவிடப்படும் காரணத்தால் நடைமுறையில் தாழ்த்தப்பட்டோராகவே இன்னமும் இருந்து'' வருவதால் ''வீட்டு வேலைகளில் இருந்து பெண்களை விடுவிக்கவல்ல உண்டி விடுதிகளும் பிள்ளை பராமரிப்பகங்களுமான முன் மாதிரி நிலையங்களை நாம் நிறுவி வருகிறோம். இந்நிலையங்களையெல்லாம் அமைத்திடும் பணி பிரதானமாய் பெண்களுக்குரியதாகவே இருக்கும். உழைக்கும் பெண்கள் தாமே நேரில் இத்தகைய நிலையங்கள் தோன்றி வளரும் படிச் செய்தாக வேண்டும்''. எனவும் ''உழைக்கும் ஒவ்வொரு பெண்ணும் அரசியலில் ஈடுபடச் செய்வதே நம்முன்னுள்ள பணி. அரசியலின் பணிகள் உழைக்கும் பெண்களும் அடங்கலாய் உழைப்பாளி மக்கள் அனைவருக்கும் எளியவையும் தெளிவானவையும் அவர்கள் தாமே செய்யக் கூடியவையும் ஆகிவிட்டன''[38] என விரிவானதோர் ஜனநாயக சமத்துவத்தைப் பெண்பாலருக்குச் சாத்தியமாகி விட்டதாய் பறையறிவித்ததை அடுத்து, ''சோவியத் பெண்கள் இன்னும் விடுதலையடையவில்லை'' என டிராட்ஸ்கி 1936ல் முடிவாய்க் கூறியது சோவியத் பெண்களுக்குமட்டுமல்ல அனைத்துஅரசு சமூகப் பெண்களுக்கும் பொருந்தும். ஏனெனில் அரசு, ஆதிக்க அதிகாரங்கள், குடும்பம் குறித்து தொடர்ந்து குவிக்கப்பட்ட செல்வம் எதுவும், பொருளாதார வளர்ச்சியின் மேன்மை எதுவும், கலாரீதியான வளர்ச்சியின் பிரகாசம் எதுவும் இல்வாழ்வு ஆரோக்கியமானதல்லாமல், சராசரிப் பெண் நல்ல மனைவியாகவும், தனது முதன்மையான மற்றும் சிறந்த கடமையாக அவர்கள் வளர்க்கப்பட்டது போல் ஆரோக்கியமான உடல், சிந்தனை குணங்கள் கொண்ட குழந்தை

www.padippakam.com



களை கர்ப்பந்தரிப்பதையும் வளர்ப்பதையும் ஏற்றுக் கொள்ளாமல் கிட்டாது'[34] எனவும் ''ஆண்களின் உலகம் என்பது அரசு என நாம் கூறுகையில் பெண்களின் உலகம் மிகச் சிறியது எனக்கூற முடியும், ஏனெனில் அவளது உலகமானது கணவன், அவளுடைய குடும்பம் அவளது குழந்தைகள், அவளது வீடு பெண்கள் ஆண்களின் உலகில் அவனது பிரதான களத்தில் படையெடுத்தல் சரியல்ல என நாம் நினைக்கிறோம். இதற்கு மாறாக இந்த இரண்டு உலகங்கள் ஒன்றில் இருந்து ஒன்று பிரிக்கப்பட்ட வகையி லேயே நீடிப்பது இயற்கையானது என நாம்நம்புகிறோம். ஆண்களிடமிருந்தே நான் எடுத்துக் கொள்ளவிருப்பதை பெண்ணுக்கு அளிக்கமாட்டேன்'' [35] எனவும் பழைய பல்லவியையே மீண்டும் எதிரொலித்தன.

பண்டைய ''ஹமுராபி, ஹிட்டைட் கால சட்டங்கள் (2100Bc) கற்பழிப்பு, முறையற்ற புணர்ச்சி, கருக்கலைப்பு இத்யாதி குறித்து தண்டனைகள் வழங்கியது. இத்தகைய சட்டங்கள் அரசின் ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதிலும் சமூக நிறுவனங்களைப் பாதுகாப்பதிலும் இதன் இறுதி நோக்கமாக 'குடும்பத்தை' சமூகத்தின் அடிப்படை அல காக கொண்டதிலும் நோக்கமாய் கொண்டிருந்தன''[36] என அறிய முடிகிறது என்பதுடன் நவீன அரசுகள் கூட 'குடும்ப' மறுஉருவாக்கம் குறித்து அதன்பாற்பட்ட சட் டங்கள் தண்டனைகள் வரையறுத்து நடைமுறைப்படுத் தப்படுவதை சில எடுத்துக்காட்டுகளுடன் அறிவது தெளி வாகும்.

சோவியத் யூனியனில்,

எல்லாத் திருமணங்களையும் பதிவு செய்து கொள்ள வேண்டும் என கட்டாயமாக்கி குடும்பங்களை' தன் நேரடி ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவந்தது அரசு.

www.padippakam.com



1920இல் கருக்கலைப்புச் சட்டப்பூர்வமாக்கப்பட்டது.

ஏற்கெனவே, பிறப்பிக்கப்பட்ட விவாகரத்துச்சட்டம் 1926இல் சிக்கலானதாக்கப்பட்டது.

1936ல் கருக்கலைப்புத் தடை செய்யப்பட்டு சட்டம் கொண்டு வரப்பட்டது.

1944ல்—'குடும்பச் சட்டம்'—பிரிவு—4 து.பி. 16, 20—50 வயதுக்குட்பட்ட குழந்தை பெறாத ஆணுக்கும் 20—45 வயதுக்குட்பட்ட குழந்தை பெறாத மற்றும் 1,2 குழந்தைகளை மட்டும் பெற்ற பெண்ணுக்கும் வரி விதித்தது.

மற்றும் பிரிவு III து.பி. 12,

Motherhood Medal, lst and 2nd class

5 குழந்தைகள் — 2nd class
6 குழந்தைகள் — 1st class

Motherhood Gloary Medal,

7 குழந்தைகள் — 3rd class
8 குழந்தைகள் — 2nd class
9 குழந்தைகள் — 1st class

து பி. 14,

10 குழந்தைகளைப் பெற்றுப் பேணும் தாய்க்கு "Herorine Mother" விருது வழங்கியது.[37]

இந்தியாவில்,

படிப்பகம்

www.padippakam.com



*1891*—**Concent Act,** பெண்களுக்கான திருமண வயது 12 என வரையறுத்தது.

*1925ல் இது 13 என உயர்த்தப்பட்டது.*

1929 சாரதா சட்டம்,

பெண்ணுக்கு 14 வயது—ஆணுக்கு 18 வயது என நிர்ணயித்தது.

**1955** இந்துமதச் சட்டம்.

பெண்ணுக்கு 15 வயது ஆணுக்கு 18 வயது எனவும்,

1978ல்—பெண்ணுக்கு 18-ஆணுக்கு 21 வயது எனவும் வரையறுக்கப்பட்டது.

சமீபத்தில் பெண்ணுக்கும்கூட 21 வயது திருமண வயது என உயர்த்தப்பட்டுள்ளது.

இது தவிர, விவாகரத்து **Adultery**, சுயமரியாதைத் திருமணம், வரதட்சிணை ஒழிப்புச் சட்டம், **Rape** குறித்த இத்யாதி சட்டங்கள்.

சீனாவில்,

1950ல் சட்டப்பூர்வமான திருமணவயது பெண்ணுக்கு 18, ஆணுக்கு 21.

1980ம் ஆண்டு திருமணம் குறித்த சீனமக்கள் குடியரசு சட்டம்

**Chap II Arti 5.**

பெண்ணுக்கு 20ம் ஆணுக்கு 22ம் என வரையறுத்தது.

**Chap III Arti 12**

படிப்பகம்

www.padippakam.com



'கணவன் மனைவி குடும்பக்கட்டுப்பாடு நடைமுறைப் படுத்துவது கட்டாயக் கடமை' ஆக்கியது. இது தவிர, விவாகரத்து,வாரிசுரிமை போன்ற இதரச் சட்ட விதிகளை இயற்றி இந்தச் சட்டம் திருமணம் மற்றும் குடும்பம் குறித் தான அரசியல் அடிப்படைச் சட்டம் (Chap 1 Arti 3) என பிரகடனப் படுத்தி 1981 ஜனவரி 1 முதல் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டு,

Chap V Bylaw Arti 34

இந்தச் சட்டத்தை மீறும் நபர்கள் நிர்வாக ஒழுங்கு முறை நடவடிக்கைகளுக்கும் சட்டத்திற்குட்பட்டும் சந்தர்ப்பத்திற்குட்பட்டும் சட்ட ஒழுங்கு முறைகளுக்கு உரியவர்'' என எச்சரிக்கிறது.[38]

பிரான்சில், குடும்பங்களுக்கு 'பதக்கங்கள்' வழங்கப் படுவதற்கான ஆணை பிறப்பக்கப்பட்ட இரண்டு மாதம் கழித்து 1920ல், கருக்கலைப்பு, கருக்கலைப்பு சாதனங் களுக்கு எதிராக சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டம் கடுமையானதாக, கருக்கலைப்புச் செய்து கொள்ளும் பெண்களுக்கு சிறைத்தண்டணையும் வழங்க வகை செய் தது.[39]

ருமேனியாவில் 1966ல்—கருக்கலைப்பு சட்ட விரோத மானதாக்கப்பட்டது. கருக்கலைப்புச் சாதனங்கள் இறக்கு மதி நிறுத்தப்பட்டது. 1985 முதல் பெண்கள் வேலை செய்யும் இடங்களில் கர்ப்பங் குறித்த பரிசோதனைகள் செய்யப்பட்டன. கர்ப்பம் தரிக்க தவறியதோ அல்லது கர்ப்பங்கொள்ளாதிருப்பதோ வேலை இடங்களில் அலுவலகத் தொந்திரவுகளுக்கு காரணங்களாகி விட்டன.[40]

பெ—5

www.padippakam.com



இத்தகைய சட்டங்கள் நடைமுறைகள் மூலமும், மற்றும் அரசுகள் தம் சமூகத்தில் ஏற்றத் தாழ்வுகளை வேலைவாய்ப்பு, கல்வி, ஊதியம், சொத்துடைமை, உடல், திறன், தகுதி, அந்தஸ்துகளில் ஆண் / பெண் இடையில் நிலவச் செய்வதாலும் மற்றும், குடும்பம் குறித்தான கருத் தாக்கச் சிந்தனைகள், Taboos, Myths அடிப்படையிலும் ஒவ்வொரு ஆணையும் பெண்ணையும் 'குடும்பம்' எனும் புதைகுழிக்குள் தள்ளிவிடுகின்றன. 'குடும்பங்கள்' எனும் புதைகுழிகள் மறுஉருவாக்கம் செய்யப்படுகின்றன. இத்தகைய சூழல்களில் பெண்கள் ஆண்கள் தனித்து வாழ் தலும்—திருமணத்தை நிராகரிப்பதும், குழந்தைப் பெறா மல் இருப்பதையும் கொண்ட சாத்தியங்கள் குறுக்கப்பட்டு விடுகின்றன. எனவேதான் இரண்டாம் உலகப்போர் அடுத்து, மேலை அரசு சமூகங்களில் மீண்டும் பெண்கள் குடும்பச் சிறைகளுக்குள் புகுந்து, Baby Boom" கட்டத்தை ஏற்படுத்தினர் சமீபத்தில்கூட—விவாகரத்து கொண்டவர் கள் திருமணம் செய்து கொள்ளாதவர்கள், தனித்து வாழ் பவர்கள் எண்ணிக்கை அதிகரித்து வந்தபோதும், அவர் களின் வேலை. பொருளாதார, வீடு இதர;சூழல்கள் அவர் களின் வாழ்நிலையை நெருக்கடிக்குள்ளாக்குகின்றன. இதன் அடிப்படையில் இத்தகைய நிலைமைகளை க்குறுக்கி விடுகின்றன. (women as Single Parents—EDIT. By ELIZABETH A. Mulroy)

இந்தச் சூழலில், 'குடும்பச் சிதைவு' என்கிற புரட்சிகர ஆயுதம், அரசுகளின் 'குடும்ப மறு உருவாக்கம்' எனும் அரசு சமூக வன்முறையின்முன் முனைமழுங்கிவிடுவ தாகி விடுகிறது. 'குடும்பம்' எனும் சிறைகள் கட்டியமைக் கப்பட்டு அதன தனிக் கொட்டடிகளில் படுக்கையறைகள் ஆணுக்கும் பெண்ணுக்குமாய் வடிவமைக்கப்படுகின்றன; தவிர்க்க முடியாமல கர்ப்பங்கள் ஆணாதிக்கப் பிரசவங் கள் பிறப்பெடுக்க வகை செய்யப்படுறது.

படிப்பகம்

www.padippakam.com



ஆக, பெண்ணியச் சிந்தனைகள், ஆண் பெண் கலவி சுதந்திரம், கர்ப்பந்தரிக்கும் சுதந்திரம், என்பன அரசு அதிகாரங்களுக்கு எதிரானதாகும். 'அரசு' என்பது சமூகத்தின் சர்வ அம்சங்களிலும் 'பொது நலன்' எனும் போர்வையில் தீர்மானகரமான முடிவுகளை திணித்து 'பொது பாதிப்பை' ஏற்படுத்தி வருகிறது. காலா காலங்களில் வெவ்வேறு வகையான ஏற்றத்தாழ்வுகளைப் பாதிப்புக்களை மக்களிடையே ஏற்படுத்தி தனது படைப் பிரிவின் வலிமையால், மற்றும் போலீஸ், நீதிமன்ற, நிர்வாக முறைகளினால் தனது எஜமானத் தன்மையை நீடித்து வருகிறது. இதனை 'இலகு' வானதாக்க 'சமூகத் திடையே 'அரசு தேவை' குறித்தும் அதன் செயற்பாட்டு தேவை குறித்தும் 'சமூக நலன்' எனும் கருத்துருவத்தை— 'சமூகம்' என்பதே அதிகார அரசுவின் கருத்தாக்கமே— சிந்தனைகளை சகல மக்கள் மத்தியிலும் கல்வி ஸ்தாபனங்கள், மத ஸ்தாபனங்கள், கலாச்சார ஸ்தாபனங்கள், தொடர்பு ஸ்தாபனங்கள், இத்யாதி மூலமாக மூளைச் சலவை செய்து வருகின்றன. இதன் அடிப்படையில் அரசுகள் பல்வேறு வடிவங்களைத் தகவமைப்பு வடிவங்களாகக் கொண்டு அதிகார வெறியர்கள், ஆதரவாளர்களின் நடவடிக்கைகளினால் நீடித்து வருகின்றன. அரசு, அதிகார ஸ்தாபனங்கள் மக்களுக்கு நீடித்த பகையாய் இருந்து வருகின்றன. இந்த எதிர்த்தன்மை, மக்களுக்கும் அரசும் அதிகார, ஸ்தாபனங்களுக்கும் தவிர்க்க முடியாத வகையில், இணக்கம் காணப்பட முடியாத வகையில், நிலவுவதால், சகல அரசு, அதிகார, ஸ்தாபனங்கள் நிலவுகிறவரையில் மக்கள் மத்தியில் ஏற்றத்தாழ்வுகளும் பாதிப்புகளும் தொடர்ந்து கொண்டே இருக்கும்; ஆண், பெண் இடையிலும்கூட, அரசு, அதிகார ஸ்தாபனங்களின் மேலாதிக்கம் மனிதக்கலவி உறவுகளில் நீடித்து காலாகாலங்களில் கட்டுப்பாடுகளை மறு உருவாக்கிக் கொண்டிருக்கும். ஆண், பெண் சமத்துவம், சுதந்திரம் கலவி உறவுகளில் சுதந்திரம்

www.padippakam.com



குடும்ப ஒழிப்பு என்பது சகல அரசு, அதிகார, ஸ்தாபனங்களையும் ஒழித்து, மக்கள் சகல ஆண், பெண் பாலரும் சகல அம்சங்களிலும் சமத்துவச் சுதந்திரத்துடன் இயங்க வேண்டியது ஆகிறது. இதுவும் உடனடியான மக்களின் நடவடிக்கைகள் சம்பந்தப்பட்டதே. ஏனெனில், அரசு, அதிகார. ஸ்தாபனங்கள் எந்தக் காலத்தும் கரைந்து மறைந்துவிடா; மாறாக தம் மேலாதிக்கத்தை வெவ்வேறு வடிவங்களில் தொடர்ந்து கொண்டிருக்கும். எனவே, எப்போதைக்குமே, அரசு, அதிகார, ஸ்தாபனங்களை ஒழிப்பது உடனடியான பிரதான பிரச்சினையே. சகல மக்களும் ஆண், பெண் பாலரும் சகல அரசு, அதிகார, ஸ்தாபனங்களை, நடைமுறைகளை உடனடியாக ஒழித்து அதனூடே, இதர அதிகார ஸ்தாபனங்களை—குடும்பம்—மணமுறைகள்—உட்பட யாவற்றையும் முடிவுக்கு கொண்டுவந்து, ஒவ்வொரு தனிநபரும் சமத்துவ அளவில் ஆயுத உடைமை, உபயோகம்; பொருள் உடைமை, உழைப்பு, உற்பத்தி, இதரத் திறன்கள் அடிப்படையாய் கொண்டு, வாரிசு முறைகளை சகல உடமைகளிலும் ஒழித்து, பரஸ்பர உறவுகளின் மூலம் தத்தமக்குத் தேவையான பரிவர்த்தனை நுகர்வு கொண்டு தத்தமது சுதந்திரச் சூழ்நிலைகளுடன் அதன்பாற்பட்ட வளர்ச்சியைக் கொள்ள வேண்டியதாகிறது. அப்போது மட்டுமே, ஆண், பெண் சமத்துவம், சுதந்திரம், கலவி உறவுகளில் சுதந்திரம் சாத்தியமாகும். 'கர்ப்பந்தரிப்பது' பெண்ணின் சுதந்திர விருப்பத் தேர்வு சம்பந்தப்பட்டதாகும். குழந்தை பெறும் 'பளுவை' 'தாய்' எனும் பட்டத்தை 'தாய்மை' எனும் புனிதத்தை எந்த அளவிற்கு ஏற்றுக்கொள்வது என்பது அவளைப் பொறுத்ததே ஆகும். அந்த வகையிலேயே, சுதந்திரக்கலவி எனும் வரைமுறையற்ற புணர்ச்சி உறவுகளில் 'தகப்பன்' பட்டத்திற்கும் முடிவு கட்டுவதாகும். எந்த ஒரு பெண், தாய் தன் விருப்பத்தின்பேரில் பெற்ற குழந்தையுடன் குறிப்பிட்ட ஆணை சம்பந்தப்படுத்த, அடையாளப்படுத்த வேண்டிய அவசியமும் இல்லை;

படிப்பகம்

www.padippakam.com



ஏனெனில், சகல தனிச் சொத்துரிமைகளில் உற்பத்தி சாதனங்கள் நுகர்வுப் பொருட்கள், அனைத்திலும் வாரிசுரிமைகள் ஒழித்துவிடுவதால்—ஒரு தனி நபரின் அனைத்துடமைகளும் அந்த நபர் காலாவதியாகிப் போவதுடன் அந்த உடைமைகள் அந்தப் பிரதேச மக்களிடையே மறு பகிர்வுக்கு உரியதாகி விடுவதால்; மற்ற விஷயங்களில் கூட, கர்ப்பந்தரிப்பதும், குழந்தை பெறுவதும் பெண்ணே தீர்மானிப்பதால் அதன்பாற்பட்ட குழந்தை வளர்ப்பு— குறைந்தபட்சக் காலத்திற்கு— குழந்தை தானே இயங்கும்வரை—அவளுடையதாகும். அதற்கப்புறமான—குழந்தையின் கல்வி, பயிற்சி, மருத்துவம் அந்தக் குழந்தையின்—மற்றவர்களுடையதைப் போன்ற சமத்துவ உடைமை சம்பந்தப்பட்டதால் கல்வி, பயிற்சி சாலைகள் சம்பந்தப்பட்டதாகும். பெண்ணே குழந்தை பெறும் விருப்பத்தையும், அதன்பாற்பட்டு குழந்தை வளர்ப்பு பொறுப்பையும் கொள்வதால், இந்தப் பளுவை சுமையை ஏற்றுக் கொள்வதா வேண்டாமா என்கிற கேள்வி எழும்பிவிடும். ஏனெனில், இந்தப் பளுவை 'சுமை'யை ஒரு பெண் விருப்பப்பட்டு ஏற்றுக்கொள்வதில்கூட எந்தப் பயனும் இல்லை 'தாய்' எனும் பட்டத்தை அணிந்து கொள்வதில்கூட ஒரு பயனும் இல்லை—இது. பெண்ணுக்கு, கூடுதலான ஒரு வேதனையான பளுவே, சுமையே. இறுதியில் ஆண், பெண் உறவு என்பது பிரதானமாய் சுதந்திர கலவி சம்பந்தப்பட்டதாகும். மற்றபடி பரஸ்பர பரிவர்த்தனை உறவுகளாக விளங்கும். கலவி இன்பத்தின் அடிப்படையில்கூட குறிப்பிட்ட ஆண், பெண் (Mono) உறவு, சுதந்திரமான பல தரப்பட்ட புணர்ச்சி இன்ப உறவுகளின் முன் ஈடுகொடுக்க முடியாமல் தோல்வி அடைந்து ஒதுங்கி மறைந்துவிடும். அத்தகைய, தோல்வி அடைந்து ஒதுங்கி மறையும் உறவுகளின் ஊடே ஒரு குழந்தையின் 'தகப்பனை' அடையாளப்படுத்தி, 'பிறப்பு'. 'பெற்றோர்' சான்றிதழ்

www.padippakam.com



வழங்குபவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். மேலும் யாரும் கோரமாட்டார்கள். ஏனெனில் அத்தகைய 'சான்று'வினால் யாதொரு பயனும் இல்லை என்பதுடன் வரைமுறையற்ற சுதந்திரக் கலவி உறவுகளின் வளர்ச்சியில் இன்னாரின் சந்ததி என்பது அறியப்பட முடியாமல் மறைந்து போகும். இதனடிப்படையில் இயற்கைத் தேர்வானது கலவி உறவுகளில் விளங்குவதாகும். இந்த விடத்து 'தாய்மை' ஒழிந்துவிடும் என யாரும் அலற வேண்டியதில்லை. 'பெண், குழந்தை பெறும் இயந்திரமாக மாற்றப்பட்டதன் அடிப்படையில் தாய்மைச் சிறப்பு அளிக்கப்பட்டு, தற்போது, தகப்பன், தாய் (கணவன், மனைவி) உறவு ரத்துச் செய்யப்பட்டு தாய், குழந்தை உறவும் ரத்துச் செய்யப்படுவதாகிவிட்டது (அமெரிக்கா). மேலும் குழந்தை பிறப்பும், வளர்ப்பும் வேறு, வேறு நபர்களை, இடங்களை சார்ந்ததாகி விட்டது. தாயின் பணியை டெஸ்ட்டியூபுகளும் தகப்பன் பணியை Semon Bankகுகளும் செய்து முடிப்பனவாகி விட்டன. மேலும் மக்கள் தொகை குறைந்துவிடும் என யாரும் முதலைக் கண்ணீர் விட வேண்டியதில்லை. மக்கள் தொகை, எண்ணிக்கை குறித்த கவலை அரசு, அதிகாரச் சமூகங்களுக்குரியது. சமத்துவச் சுதந்திர மக்களுக்கு அந்தச் கவலை இருக்காது. அப்படியும் மனித இனம் தொடர்வது குறித்தான தேவை எழுமானால் அந்தந்த பிரதேச மக்கள் செயற்கைமுறை கருத்தரிப்பு, வளர்ப்பு முறைகளைப் பயன்படுத்தி வீரியமான இனத்தோன்றல்களை உற்பத்தி செய்து கொள்வர். இந்த வகையில் குழந்தை பிறப்பும் வளர்ப்பும் பெண்ணிடமிருந்தும் ஆணிடமிருந்தும் கலவி உறவுக்கு அப்பாற்பட்டதாக்கப் படுவதால் பெண்ணின் Procreation சக்தி குறித்தும் அதன் பாற்பட்டு பெண்களின் எண்ணிக்கை குறித்தும் அச்சப் படுவது ஒழிந்து போகும். இதைத் தொடர்ந்து பெண், ஆண் பாலரின் எண்ணிக்கை சமத்துவ அளவில் நீடிப்பது

படிப்பகம்

www.padippakam.com



சமத்துவ சுதந்திர மனித இன வாழ்நிலை அம்சமாகி விடும். இத்தகைய சமத்துவ சுதந்திர போக்குகளுக்கு, இயற்கைத் தேர்வினுக்கு மனித இனத்தில் சாத்தியமற்று செய்துவிட்ட அதிகாரத் தேர்வு, அதன் ஸ்தாபனங்களை உடனடியாக ஒழித்து விடுவதன் அவசியத்தையும் அதன் பாலான போராட்டங்களையும் மக்கள் முன்னெடுத்துச் செல்ல வொட்டாமல், திசை திருப்பி, பலர் பலவித சிந்தனைகளையும், கோட்பாடுகளையும் நடைமுறை களையும் போராட்டங்களையும் புரட்சிகளையும் மீண்டும் அரசு, அதிகார ஸ்தாபன சமூக மறு உருவாக்கத் திற்கே பதிலீடு செய்வதால், அந்த வகையிலேயே ஆண், பெண் சமத்துவம், கலவிச் சுதந்திரம் ஆண் ஆதிக்க, குடும்ப ஒழிப்பு என்பன சாத்தியமில்லாமல் செய்து விடுகின்றனர்.

ஏடறியா வரலாற்றுக் காலத்திலேயே பெண் வடிவங்களுடன் ஆண், லிங்க வடிவங்கள் இணைக்கப்பட்டு திரித்து, திசை மாற்றிவிட்டது போலவே, 'பெண்ணியம்' 'பெண்ணிலைவாதம்' முன்வைக்கப்பட்ட சமீப காலத்திலும் சிந்தனைகள் அணுகுமுறைகள் போராட்டங்கள் திசை திருப்பப்பட்டிருக்கின்றன. தவறான இலக்குகளை நோக்கி நிலவும் 'குடும்ப' அமைப்பில் ஆணாதிக்கம் என்பது ஆணுக்கு அதிக சலுகைகள், பெண்ணுக்கு அதிக கட்டுப்பாடுகள் என விளங்கியது பெண்ணின் கவனத்தை ஈர்த்தது.

இத்தகைய கவனம், ஆணாதிக்க, 'குடும்ப' நீடிப்பை அரசு தன் சமூக மறுஉற்பத்திக்காக மறுஉருவாக்கம் செய்வதன் பொருட்டு— அதாவது, நிலவும் உடமை உறவுகளை பேணுவதன் பாற்பட்டு. உடமைப் பிரிவினர், வர்க்கங்கள் அதிக சலுகை பெறுவதும் உடமையற்ற பிரிவினர் வர்க்கங்கள் குறைந்த சலுகைகள் அல்லது கூலி உழைப்பிலேயே நிலைமையில் இருத்தப்படுத்துதல் போல

படிப்பகம்

www.padippakam.com



ஏற்கெனவே நிலவும் ஆணாதிக்கச் சலுகைகளை, அதையொட்டி குடும்ப மறு உருவாக்கங்களின் நீட்டித்தன என்றறியாமல், உடனடியான பார்வைக்குப்படும் ஆண்சலுகைகள் ஆதிக்கமே உடனடியான எதிர்ப்புக்கு உள்ளாக்கப்பட்டது. இதையொட்டி, தனக்கு இழைக்கப்படும் அநீதிகள், கொடுமைகள் துடைத்தெறிய தனக்கும் அதே சலுகைகள் வேண்டும் என்கிற வகையில் குடும்பச் சீர்திருத்தங்கள் முன்வைக்கப்பட்டன. பெண்களின் போராட்ட இயல்பினைக் குடும்ப சீர்திருத்தத்தை நோக்கி முன்னெடுத்துச் சென்றனர் சீர்திருத்தவாதிகள். இதையடுத்து, மேலுமான ஜனநாயக குடும்பத்துக்கு இட்டுச்சென்றனர், ஜனநாயக அரசியல் வாதிகள். தேச விடுதலை சமூகப்புரட்சி என்பதன் அடிப்படையில் அதிகார வெறியர்கள் பெண்களின் போராட்டங்களை அரசியல் போராட்டக் களத்தில் பயன்படுத்திக் கொண்டனர். தமது அரசியல் அதிகார ஆதாயத்திற்காக இந்த வரலாறு '**Quaker**' இயக்க காலத்தில் இருந்து...' ரஷ்யப்புரட்சி, **Quit India movement**'... என நீள்கிறது. சிவில் உரிமைகளுக்காகத் திசை திருப்பப்பட்ட பெண்களின் போராட்டங்கள் அரசியல் அதிகார ஆதாயங்களுக்காகப் பலி கொள்ளப்பட்டது.

இந்தச் சூழலின் விளைவாக, பெண்ணிய சிந்தனைகள், ஆணாதிக்கச் சமூகத்திற்கு எதிராகவும், ஆணுக்கும் எதிரானதாகவும் திசை திருப்பப்பட்டது. ஆண் × பெண் வர்க்கப்போராட்டமாக, **Now (National organisation of woman)** *1966* மறுபுறத்தில் **Redstockings** அறிக்கை *1969*ல், "தனிப்பட்ட மற்றும் முதல் வகைப்பட்ட அரசியல் போராட்டங்களின் நூற்றாண்டுகள் கழித்து' பெண்கள் ஆணின் மேலாதிக்கத்தில் இருந்து இறுதியான விடுதலை பெற ஒன்றுபடுகிறார்கள்."

படிப்பகம்

www.padippakam.com



''பெண்கள் ஒடுக்கப்பட்ட வர்க்கமாய் உள்ளனர்'', ''உண்மையில் தன் ஆணுடனான பெண்ணின் ஒவ்வொரு உறவும் ஒவ்வொரு வர்க்க உறவே மற்றும் தனிப்பட்ட ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான மோதல்கள் என்பது அரசியல் மோதல்களே, அவை மொத்தமான பெண் வர்க்கத்தின் ஒற்றுமையாலே தீர்வளிக்கப்படும்.''

''நாங்கள் எங்களது அடக்கு முறையின் ஏஜெண்டு களாக ஆண்களையே அடையாளங் காண்கிறோம். ஆண் மேல் ஆதிக்கம் மிகவும் பழமையானது, மேலாதிக்கத்தின் மிகவும் அடிப்படையான வடிவம், சுரண்டலின் இதர வடிவங்களான (இனவெறி, முதலாளித்துவம், ஏகாதிபத் தியம் இத்யாதி) ஆண்மேலாதிக்கத்தின் விரவல்களே.''

''ஆண்கள் அனைத்து அரசியல் பொருளாதாரக் கலாச் சார நிறுவனங்களைத் தம் கட்டுக்குள் கொண்டிருக்கிறார் கள். இந்தக் கட்டுப்பாட்டை தங்கள் வல்லமையின் அடிப் படையில்.''

''எங்களின் இப்போதைய பிரதான பணி, பெண் வர்க்க உணர்வை மேமெலடுத்து வளர்ப்பது தான்''[41]

என முழக்கமிட்டதுடன் குடும்பம் போர்க்களமாக்கப் பட்டது. பெண்ணியச் சிந்தனைகள் மீண்டும் 'ஆண்' குறித்தான எதிர் வர்க்கபோராட்டத்தையே முன் வைத்து திசை திருப்பம் கொண்டது. ஆண் மேலாதிக்கத்தின் விரவலாகவே ''இதர மேலாதிக்கங்கள் கருதப்பட்டு வர்க்கப் போராட்டம் முன்னெடுத்துச் செல்லப்பட்டது இத்தகைய பார்வையை, அணுகுமுறையை நாம் மார்க்சி யத்தில் காணமுடிகிறது,'' வரலாற்றில் தோன்றுகிற முதல் வர்க்க விரோதம் ஒருதார மணத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே விரோதம் வளர்வதோடு ஒன்று படுகிறது. முதல்வர்க்க ஒடுக்குமுறையோ பெண்பாலை

www.padippakam.com



ஆண்பால் ஒடுக்கும் ஒடுக்குமுறையோடு ஒன்றுபடுகிறது.'' ''நவீன தனிக்குடும்பம் என்பது வெளிப்படையான அல்லது மறைமுகமான பெண் அடிமைத்தனத்தை அடிப் படையாய் கொண்டிருக்கிறது. குடும்பத்தில் அவன் பூர்ஷ்வா: மனைவி பாட்டாளியை பிரதிநிதித்துவப் படுத்துகிறாள்''[42] என. இத்தகைய தவறான அணுகுமுறை ஆண்Xபெண் வர்க்கப் போராட்டமாகத் திசைமாறுவது வியப்பேதும் இல்லை.

இந்தவிடத்து 'ஆண் ஆதிக்கம்' குறித்து இன்னும் சற்று காணுவது சரியானது. மனித இனத்தின் ஆரம்ப கால—பாலியோலதிக் காலத்தில் இருந்தே பெண்சிசுக் கொலை—இன தகவமைப்புக்கேற்ப—சமூகத்தில் இருந்து வந்ததால், பெண்களின் எண்ணிக்கைவிட ஆண்கள் எண் ணிக்கையில் அதிகம் நிலவினர். இது அக்கால வரை முறை யற்ற புணர்ச்சிக்கு இசைவானதாய் இருந்தது. அதிகாரத் தோற்றம், நிறுவனங்கள் விளைவாக குடும்பங்கள் தோற்றுவிக்கப்பட்டதை அடுத்து—Queendom சமூகத்தில் கூட ஆயுதம் ஏந்தும் தனிப்பிரிவினரில் பெண்களைவிட ஆண்களே அதிகம் இருந்தனர் என்பதும் அதன் அடிப் படையிலேயே, குறைந்த அளவில் இருந்த பெண்கள் ஆயுதம் ஏந்துவது படிப்படியாக மேலும் குறைந்து இறுதியில் ஒரு ஆயுத மோதலில்—முழுவதுமாக கைவிடச் செய்ததில் Kingdoms கட்டியமைக்கப்பட்டதும், அந்த அதிகார ஸ்தாபனங்களில் ஆண்களே அதிக அளவில் தம்மை இருத்திக் கொண்டு தங்கள் வசம் ஆக்கிக்கொண் டனர். இத்தகைய சூழலில் கூட 'பெண் சிசுக் கொலை' சதியுடன் 'அதிகாரத்தின் தேர்வாகத் தொடர்ந்தது; விவசாய காலம் வரை[43] அதன் பின்பு கூட விவசாய பெருக்க காலம் சமூக நடைமுறைகளின் மூலம் அரசுகள் தம் சமூகத்தில் 'பெண் சிசுக் கொலை மட்டுப்படுத்தப் பட்டு 'சதி' தொடர்வதைக் கொண்டிருந்தன. இத்தகைய

www.padippakam.com



நிலைமை, இந்தியா, சீனா, ரஷ்யா. மேற்காசியா என பரவி இருந்தது[44] 'பெண் சிசுக் கொலை' சமூக வழக்கில் அங்கும் இங்குமாக இருந்ததை அரசு, அதிகாரங்கள் கண்டு கொள்ளாமலே இருந்தன, ஏனெனில் ஆண்களை விட அதிகமான எண்ணிக்கையில் பெண்கள், யோனிகள் நிலவுவது அரசு, அதிகார சமூக மறு உருவாக்கத்திற்கு—மக்கள் தொகைப் பெருக்கம்—பெரும் பிரச்சினைகளை உருவாக்கிவிடும் என்பதல்லாமல், Patrilineal—monogamous உறவுகளுக்குப் பலத்த அடி கொடுத்துவிடும். இத்துடன் இதர பிரச்சினைகளும் சேர்ந்துவிடும். எனவே, அரசு, அதிகார ஸ்தாபனங்கள் பெண்கள் ஆண்களை விட அதிக எண்ணிக்கையில் பிறவிகள் எடுப்பது விரும்பவில்லை. அதாவது—ஒரு குடும்பத்தில், குலத்தில் அதிக பெண் சிசுக்கள் பிறப்பது வேண்டாத விருந்தாளியாக கருதப்பட்டது. தடுக்கப்பட்டது — ஒழிக்கப்பட்டது—கொல்லப்பட்டது—போல—இந்தக்கருத்தாக்கமும் மக்களிடை, குடும்பங்களிடை — குலங்களிடை அரசு—அதிகார ஸ்தாபனங்களால் தம் சமூக நடைமுறைகள் சூழல்களின் மூலமாக இருத்தி வந்தன. பெண்ணுக்கான சமூகத்தில் தாழ்வு, கட்டுப்பாடுகள், தீட்டு, போன்ற நடைமுறைகளால் இதையடுத்து, 'சதி' ஒழிப்பு, பர்தா முறை ஒழிப்புடன் பொதுவில் 'Infanticide' தண்டனைக்குட்பட்டதாகவும் நடைமுறைப்படுத்தப்பட்டாலும், குழந்தை பிறப்பில் 'ஆண் என்ன, பெண் என்ன' இரண்டும் ஒன்றுதான் என்று பிரச்சாரம் செய்வதும் ஆண், பெண் சமத்துவத்தைக்குழந்தைப் பிறப்பளவில் முன்வைப்பதும்உண்மையில் மக்கள் தொகைப் பிரச்சினையை முன்வைத்தே, அதாவது, 'ஆண்' வாரிசுகள் எதிர்பார்த்து தொடர்ந்து பெண் குழந்தைகள் பெறுவதையும், ஒரு பெண் குழந்தை எதிர்பார்த்து, (ஆஸ்திக்கு ஒரு ஆண், ஆசைக்கு ஒரு பெண்) தொடர்ந்து ஆண் குழந்தைகள் பெறுவதையும் தடுக்கும் முகமாகத்தான் எதுவாகிலும் ஒன்று, இரண்டு

படிப்பகம்

www.padippakam.com



ட்ன் குழந்தை பிறப்பைத் தடுக்கும் முகமாகத்தான். மற்றபடி இதில்கூட, பெண் சமத்துவமோ, பெண் குழந்தை பிறப்புக்கு முக்கியத்துவமோ வரவேற்போ இல்லை.

தமிழ்நாட்டில் இரண்டு பெண் குழந்தைகள் பெற்றவர்கள் கூட, குடும்ப நலத் திட்டத்தை மேற்கொண்டவர்களுக்கே ரூ. 2000 என அரசு உதவித்தொகை குறித்த உத்தரவுகள் பெண் சிசுக் கொலைக்கு எதிரானதாகவும் பெண் குழந்தைகள் பிறப்புக்கு ஆதரவானதாகவும் விளம்பரப்படுத்தப்படுகிறது. இது தவிர, பொதுவான Infanticide குறித்த தண்டனைச் சட்டங்களுக்குட்படாத வகையில் Infanticide அங்கும் இங்குமாக தொடர்ந்து வருகிறது. சதி வழக்கங்களும் இவ்வாறே. இதற்கு ஆதரவான கருத்துக்கள் இன்னும் ஆணாதிக்கச் சிந்தனைகளின் அடிமட்டத்தில் இருந்து அவ்வப்போது தலையைக் காட்டுகின்றன. ஒருவேளை, மொத்த மக்கள் தொகை குறைவு நோக்கிய பிறப்புவிகிதம் குறைவாகவேயுள்ள மேலை அரசு, சமூகங்கள் பெண் குழந்தைகளை, அதிக யோனிகள் பிரசவிப்பதை வரவேற்கலாம், பதக்கங்கள் அளித்து, இது, பெண்ணுக்கானச் சிறப்பை அளிப்பதாக விளம்பரப்படுத்தலாம். பிரச்சாரம் செய்யப்படலாம். ஆனால் இதில்கூட மக்கள் தொகை குறைவும் பிரச்சினையை மேம்படுத்தும் முகமாகத்தான் எந்த ஒரு அரசும் தன் சமூக மறு உருவாக்கத்திற்கு ஏற்பவே மக்கள் தொகைப் பிரச்சினையைப் பொறுத்து Procreative சக்தியை—பெண்கள் எண்ணிக்கையை நிர்ணயிக்கின்றன. ஏறக்குறைய ஆண்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பெண்களின் எண்ணிக்கையும் கொண்டு வந்த பிறகும் பெண்களின் உழைப்புச்சக்தியுடன் Procreative Force அரசு சமூகங்களுக்குப் பெரும் பிரச்சினையாகி விடுகின்றன. ஆக, பெண்களின் எண்ணிக்கை குறித்த பிரச்சினை அதிகாரத் தேர்வு

www.padippakam.com



களினால் பல வகைகளில் அதிகாரத் தோற்றத்தில்
இருந்தே மேற்கொள்ளப்பட்டு வந்தது என்பதும், இந்த
நடைமுறைகளில் சற்றே ஏறக்குறைய வகையில்—பெண்
சிசுக் கொலை மட்டுப்படுத்துதல் மறுபுறத்தில்—பெண்
அரசு சமூகத் தாழ்வு காரண அம்சங்களினால்-தற்போது
பொதுவாக பெண் சிசுக்கொலை, பொருளாதார தாழ்ச்சி
கொண்ட குடும்பங்கள், குலங்களில் நடைமுறையில் இருப்
பதாகவும் மத்தியதர குடும்பங்கள், குலங்களில் 'பெண்'
குழந்தை பாசம் இன்னும் வேண்டப்படாததாகவும் நிலவு
கிறது. விவசாயப் பெருக்கத்தின் ஊடே, அதிகப் பெண்
கள், யோனிகள் ஆண்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஏறக்
குறைய நிகரான அளவில் கொண்டுவரப்பட்டபோதிலும்
அதிகார ஸ்தாபனங்களில் ஆண்கள் ஏற்கெனவே நிலவி
யது அவ்வாறே நீட்டிக்கப்பட்டது. பெண்களுக்கு ஒப்
பீட்டு அளவில்கூட அரசு, அதிகார. சமூக வாய்ப்புகளில்
இடம் அளிக்கப்படவில்லை. ஏனெனில் இவ்வாறு பெரு
மாற்றம் அரசு, அதிகார சமூக உறவுகளில் மேற்கொள்வ
தென்பது அரசு, அதிகார, சமூக, ஸ்தாபனங்களுக்கும்—
அதன் மறு உருவாக்கலுக்கும் பெரிய பிரச்சினையாகி
விடும். அதாவது, உடைமை உறவுகளில் பெரும் புரட்சியை
மாற்றங்களை உருவாக்கிய சோவியத் ஆட்சியதிகாரம்
சோசலிச உடைமையின் காரணமாகப் பெரும் பிரச்சினை
களை எதிர் கொண்டதைப் போல, எனவே இதனைத்
தவிர்க்க, பெண்கள் ஒப்பீட்டு அளவில் வாய்ப்புகளை
அரசு, அதிகார, ஸ்தாபனங்களில் பெறமுடியாத வகையில்
கல்வி, பொதுவாழ்வில் கலந்து கொள்ளுதல், வேலை
வாய்ப்புகள் ஆகியவற்றில் தடுக்கப்பட்டே வந்தனர்.
இந்த விஷயங்கள் அதிகார மேல்மட்ட, பிரிவினரிடை
மட்டுமே பெண்களுக்கு விசேஷ சலுகைகளாக வழங்கப்
பட்டபோதிலும், கற்பு விவாகரத்து போன்ற அம்சங்களில்
கீழ்மட்ட பிரிவின் குடும்பங்களைவிட தீவிரமானதாகவே
இருந்தது.[45]

படிப்பகம்

www.padippakam.com



இதையடுத்த ஜனநாயக அரசுகள்கூட, தம் சமூகத்தில் சம கல்வி வேலைவாய்ப்பு, ஊதியம், வாக்குரிமை என்பன போன்ற அம்சங்கள் ஆண், பெண் ஒப்பீட்டளவிலான எண்ணிக்கைக்கேற்ப விகிதாச்சார அளவில் (SC;ST;BC, OC) ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டு அனைத்து அரசு அதிகார ஸ்தாபனங்களில் ஆயுதம் ஏந்தும் படைப்பிரிவுகள் உட்பட எந்த மேலான ஜனநாயக அரசும் நடைமுறைப்படுத்தவில்லை, அரசு, அதிகார ஸ்தாபனங்களில் ஏற்கெனவே நிலவும் ஆண் பெரும்பான்மையையே, ஆதிக்கத்தையே நீடித்து வருகின்றன. சில விசேஷப் பிரிவுகளில், துறைகளில் (விண்வெளி ஆய்வுப்பயணம்) மட்டுமே பெண்கள் பயிற்சியளிக்கப்பட்டு—அதிகாரத் தேர்வு-சில குறிப்பிட்டப்பணிகளில இருத்தப்படுகின்றனர். இந்த வகையாக அரசு, அதிகார ஸ்தாபனங்களில் ஆண், பெரும்பான்மை, ஆதிக்கம் நீட்டிக்கப்படுவதைக் கண்டு ''இன முதலாளித்துவம், ஏகாதிபத்தியம் ஆகிய இதரச் சுரண்டல் அடக்குமுறைகள் ஆண் ஆதிக்கத்தின் விரவல்களே; என்பது, அரசுவை 'பூர்ஷ்வா அரசு என கண்டறிந்தது போல, அரசுவை மீசையும் தாடியும் கொண்ட 'ஆண் அரசு' என கண்டறிவது போலவும், அரசு, அதிகார ஸ்தாபனங்களை ஒழிப்பதற்குப்பதிலாக அரசு இயந்திரத்தைப் பூர்ஷுவாக்களின் வர்க்கத்திடமிருந்து பறிக்கப்பட வேண்டும் பூர்ஷ்வாக்கள் ஒழிக்கப்படவேண்டும், என்பது போல' அரசுவின் மீசையையும் தாடியையும் ஒழிப்பது என்பதாகிவிடும். மக்களிடையே ஏற்றத்தாழ்வுகள் வேற்றுமைகள் பாதிப்புகள் நிலவி நீடிப்பதற்குக் பெரும் காரணமான அரசு, அதிகார ஸ்தாபனங்கள் ஒழிக்கப்படாமலே நீடிக்க வகை செய்வதாகிவிடும், அந்த வகையில் தீவிரப் பெண்ணியம் திசை திரும்பி. இடையில். ஓரினப்புணர்ச்சி. Incest relations குறித்து வக்காலத்து வாங்கி விடுவதாகிறது.

படிப்பகம்

www.padippakam.com



இதையடுத்து, சற்று பாரதூரமான அனுமானங்களைக் காணலாம். எந்த ஒரு ஜனநாயக அரசும் நிலவும் ஆண், பெண் எண்ணிக்கைக்கேற்ப வீதாச்சார அளவில் தேர்தல் நியமன இதர முறைகள் ஊடே அனைத்து அரசு அதிகார, ஸ்தாபனங்களில் படைப்பிரிவுகள் உட்பட பெண்களுக்கு சமத்துவம் அளிக்கப்பட்டால்[45] —எந்த ஒரு அரசும் இதைச் செய்யுமா என்பது கேள்விக்குறிதான். —அதிகாரப் போட்டி ஆண் பெண் இடையிலான மூர்க்கத்தனமான பலாத்கார ஆயுத மோதலுக்கு வழிவகுத்து விடும்; பெண்களின் எண்ணிக்கை ஆயுதம் ஏந்தும் அம்சத்துடன் சேர்ந்து விடுவதால் மேலும் பாரதூரமான அரசு, சமூக மறுஉருவாக்கில் பெரும் பிரச்சினைகளை உருவாக்கி விடும். இத்தகைய பாரதூரமான பிரச்சினைகளுக்கு நிலவும் எந்த அரசும் வழிகோலா என்றே நிச்சயமாக நம்பலாம். எனினும் இந்த அனுமான அரசு, சமூகத்தில் கூட உண்மையான ஆண், பெண் சமத்துவம் வந்துவிடும் என்று கூறமுடியாது. எப்படியெனில் இந்த அதிகாரப் போட்டி மோதலில் கூட அதிகார, அரசு ஸ்தாபனங்கள் அர்த்தநாரீசுவர வடிவத்தில் தொடர்ந்து நிலவும் என்பதால், அந்த அரசு சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகள் மக்கள் மத்தியில் நீடிக்கவே செய்யும்—ஆண், பெண் இடையிலும் அதாவது, சில ஆண், பெண்கள்=சமஅளவில்-பெருவாரியான ஆண், பெண் உள்ளிட்ட மக்களைத் தன் ஆளுகையின் கீழ் இருத்தி அதிகாரத் தேர்வினைத் தொடர்வர், ஸ்தாபனங்களின் மூலமாக-

பெண்ணின் எண்ணிக்கை குறித்த விஷயத்தில் மற்றொரு பரிமாணத்தைக் கவனிப்போம். இந்த ஜனநாயக அரசு, சமூகத்தில் பெண்களின் எண்ணிக்கை ஆண்களின் எண்ணிக்கையைவிட அதிகமாக மிகவும் உருவாகிவிடும் பட்சத்தில்=பெண் சிசுக்கொலையை அதனுடன் கூட-அறவே ஒழித்து விடுவதன் மூலமாக உண்மையிலேயே

www.padippakam.com



பெண்ணின் சிறப்பை, சமூகக் கருத்தாக்கங்களில் உருவாக்கி இதன் அடிப்படையில். அரசு, சமூக நடைமுறையில் சூழ்நிலைகள் நிலவுமாயின்—இந்தப் போக்கில் நிலவும் எந்த அரசும் நடைமுறைகளை மேற்கொள்ளுமா என்பதும் கேள்விக்குறிதான்-எண்ணிக்கை விதாச்சார அடிப்படையில் அனைத்து அரசு, அதிகார ஸ்தாபனங்களில் படைப்பிரிவுகள் உட்பட ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப் பட்டு பெண்கள் இருத்தப்படுவர் எனின்-சமூக அதிகாரத்தை ஆயுத முனைகளில் பெண்கள் வெற்றிகரமாய் தீர்மானித்து விடுவர். சமூகத்தில் பெண்கள் ஆதிக்கம் அதிகார, அரசு (நிறைவான Queendom) ஸ்தாபனங்கள் நிலவுவதாகிவிடும். குடும்ப உறவு வடிவங்களில் பெண் ஆதிக்கம், பல புருஷ, மணம் (பெண் ஆதிக்கம்) பெண் வழிச் சந்ததி தாயுரிமைகள்போன்ற அம்சங்கள் விளங்கும். ஆண்கள் சகல விஷயங்களிலும் பின்னுக்குத் தள்ளப் படுவர், மொத்தத்தில் அந்த அரசு, அதிகார ஸ்தாபனங்களிலும் அதன்பாற்பட்டச் சமூகத்திலும் ஏற்றத்தாழ்வுகள் வேற்றுமைகள் பாதிப்புகள்-வாழ்நிலை நடைமுறைகள் இத்யாதியுடன் myth வரையில்-நிலவும்; பெண், ஆண்கள் இடையில்கூட இத்தகைய அனுமானங்களுக்குக் கூட, நிலவும் அரசுகள் 'புரட்சிக் கருக்களை' உருவாக்கி விடாது என்றே நம்பலாம்.

ப்ரதயட்ச நிலைக்கு வருவோம். முதல், இரண்டாம் உலகப் போர்களின் அன்னியிலும் பாட்டாளி வர்க்கப் புரட்சிகளிலும், சோசலிசக் கட்டுமானங்கள் ஊடும் அரசு, அதிகாரம் குறித்தச் சிந்தனைகள் பலதரப்பட்ட துறைகளில் களங்களில் ஆய்வுகளாக வெளிப்பட்டன. இந்தக் காலகட்டத்தில் அதிகாரச் செயல்பாடுகள் குறித்தானதில் சற்று புத்தி ஜீவிகளிடையே தாக்கத்தை ஏற்படுத்திய ஃபூக்கோ. "*உடல், கல்வி அமைப்பு, குடும்பம், உறவு முறை அறிவு, தொழில் நுட்பம் இத்யாதியுடன் இயைந்துள்ள ஒட்டு மொத்த அதிகாரத்துவ வலைப்பின்னல்களு

www.padippakam.com



டனான உறவில் அரசு என்பது ஒரு மேற்கட்டுமானம்'; என அறிந்து [46] அதிகாரத் தோற்றத்தின் அடிப்படையில் குடும்பம், கல்விமுறை அமைப்பு, உறவுமுறை தோற் றத்தை அப்படியே புரட்டிப்போட்டு விடுகிறார் தலை கீழாக, அதாவது கார்ல் மார்ச்சுக்குப்பொருளாதார, உற் பத்தி. உறவு முறைகள் அடிக்கட்டுமானம், மதம், குடும் பம், அரசு, சட்டம், நெறி, கலை இத்யாதி மேற்கட்டு மானம், பூக்கோவுக்கோ, உடல், கல்வி அமைப்பு, குடும் பம், உறவுமுறை, அறிவு, தொழில்நுட்பம் அடிக்கட்டு மானம்—அரசு மேற்கட்டுமானம். இதன் அடிப்படையில் ''குடும்பம் இப்போதுகூட அரசின் எளிய பிரதிபலிப்பு அல்லது நீட்டித்த அதிகாரம் அல்ல'[47] என தான் தலை கீழாக்கின விஷயத்தைக் குறித்து விளக்குகிறார். இந்த வகையில் தலைகீழாக்கி, திசை திருப்பும் ஃபூக்கோ, 'பெண்கள் விடுதலை இயக்கத்தின் பலம் என்பது', அவர் கள் பால் குறித்த தன்னிலையும் அது குறித்தான உரிமை களையும் சார்ந்தது அல்று,' என்றும், ''பெண்கள் ஓரினப் புணர்ச்சியாளர்களை விட அதிகப் பரந்த அளவில் பொரு ளாதார, அரசியல் மற்றும் இதர வகையான நோக்கங் களை அடையமுடியும்" எனவும் பழைய சரக்கையே பெண்கள் முன் விற்கிறார் விமர்சன ஆய்வு முறைகளில் சிதை வாக்க' (**Deconstruction**) முறையை மேற்கொண்ட **Derrida**, ''பால் எதிர்த் தன்மைகளின் குறியீடுகள் அனைத்தும் மாறி விட்டன, ஆணும் பெண்ணும் இடம் மாறி விட்டார்கள்' இதன் காரணமாக ''பெண் அல்லது பால் வேற்றுமைகள் எதுவும் அப்படியொன்றும் இல்லை. பால் வேற்றுமைகளுள்ளும் அல்லது ஆண் அல்லது பெண் ணுள்ளும் உண்மை எதுவும் அதனிடத்து இல்லை' என சிதைவாக்கம் செய்து, பெண்ணை, உண்மையின் உண்மையற்ற ஒரு பெயரே என ஆக்கி விடுகிறார்; இனி, யாரும் இந்த, பெண், பெண்மை, பெண் பால் உறவு

பெ—6.

படிப்பகம்

www.padippakam.com



குறித்து எதிர்பார்க்கக்கூட கூடாததாக்கி விடுகிறார். இதையடுத்து, பெண் மையவாத விமர்சகர்களுள் ஒருவரான இரிகாரே (Irigaray), பெண்களின் பல்வேறுபட்ட பாலின்ப உறுப்புக்களாக, குறித்துவாரம், கிளோரிஸ், உதடுகள், முலைகள் என பல தரப்பட்டதாகக் கண்டறிவதின் அடிப்படையில் பெண்ணின் பன்முகத் தன்மைக்குத் தொடர்பாய் கட்டமைத்தது, பெண் குறி, குறித்தான வாதங்களாகக் குறுக்கப்படும் அளவிற்கு குறிகொள்வதாகின்றன. இறுதியில் 'பெண்'— 'குறி' சம்பந்தப்பட்ட வளாகக்கப்பட்டு பெண்ணியம், பெண்ணிலை வாதம், பெண் மையவாதம் 'பெண் குறிக்குள்'ளாகவே குறுக்கப்பட்டு விடுவதாகிறது அல்லது, பல்வித பெண்ணின் பால் இன்ப உறுப்புக்களிடமிருந்து கூடத்தொடங்குவதாகிறது. இது போன்ற கொச்சைத்தனங்கள், கீழான மலிவான பெண்ணிலை வாதங்கள் வர்க்கம் நிறம், தலித், விபசாரி, Lesbian மற்றும் பழங்குடி இனம், இந்து, முஸ்லீம், தமிழ்ப்பெண்— இத்யாதி நிலைப்பாடுகளின் அடிப்படையிலும் ஒரு புறம் இருக்க, 'பெண்குறித்தான புனைவுகளை, வரையறைகளை, கருத்தியலை மீறுதலும், தகர்த்தலும்; பெண், தனக்கான அறிவுருவாக்கத்தில் ஈடுபடுவது தன் விடுதலைக்கு அடிப்படையாய் அமையும் என்றும்; 'பாலிலி' நோக்கொன்றை உருவாக்குதல் குறித்தும்; குடும்பச் சிதைவினை இதர ஒடுக்குமுறை நிறுவனங்களைச் சிதைப்பதுடன் இணைக்க வேண்டும் என்றும்; கம்யூன் வாழ்க்கை முறையை முன் வைத்தும், பலவித திசைமாற்றங்கள் பெண்கள் முன்வைக்கப்படுகின்றன, ஒட்டு மொத்தமாய் அதிகாரங்களைத் தகர்த்தெறிதலை இறுதிக் குறிக்கோளாக்கிவிட்டு, இன்றைய அதிகார சமுகத்தில் Prescriptions களாக; மேலும் யோனி மைய உறவு ஒதுக்கப்பட்டு புட்ட உறவு, வாய் உறவு, ஏனைய— சுய— பால் உறவுகளையும் ஓரினப்புணர்ச்சிகளையும் முக்யமாக கருத வேண்டும் எனவும் இந்த Prescriptions— ஆண்

www.padippakam.com



விபச்சாரம் உட்பட— எதிர் கலாச்சார நடவடிக்கை களாக— அரசு கலாச்சாரத்தின் முன்— அதிநிச்சயமாய் வெறும் மீறல்களாக சிறுத்து விடுகின்றன. அரசு, ஆதிக்க கலாச்சாரமே பரந்துபட்டதாக ஆக்கப்படுகிறது.

இது தவிர, பெண்ணின் சிந்தனைகளையும் போராட் டங்களையும், சாதி, மொழி இனம், வர்க்கம், வர்ணம், தலித், இத்யாதி அடிப்படையில் சமூக அரசியல் அதிகாரம் கோரும் அரசியல் ஆதாயம் தேடும் அல்லது அரசு, அதி காரங்களுக்கு ஆதரவான சகல கட்சிகளும் அமைப்புகளும் இயக்கங்களும் மகளிர் அமைப்புக்களை உருவாக்கி பகடைக்காய்களாகப் பயன்படுத்தி வருகின்றனர். தங்கள் அரசியல் அதிகாரத்துக்காக அல்லது அரசியல் மூலமே விமோசனம் என கடைவிற்பவர்கள், அல்லது அதி காரத்தை இறுதிக்கட்டத்திலேயே தகர்த்தெறிதலை அறிவிப்பவர்கள பெண்கள் அரசியல் செயல்பாடுகளில் இருந்து விலகியிருப்பது அவர்களுக்குள்ள ஒரு உரிமையை இழந்து விடுவதாகும் எனவும் அந்த உரிமையை அவர்கள் பெண்— பயன்படுத்த வேண்டும் எனவும் அறிவித்து, அரசு, அதிகார மறுஉருவாக்கத்திற்குப் பெண்களைப் பயன்படுத்திக் கொள்கின்றனர். அரசு கூட, பெண்க ளிடத்து— வாக்குசீட்டுகளை வழங்கி வாக்குரிமைகளைப் பயன்படுத்தக் கோருகிறது. இந்தவிடத்து, **Emily Newell Blair** (*1931*)— வார்த்தைகள் பொருத்தமானவை 'பெண் களின் வாக்குரிமை, அரசில் ஆண்களுடன் பெண்கள் **Copartners** ஆக ஆக்குவதே குறிக்கோள் எனப்படுகிறது. எனக்கு பெண்கள், அரசியலைச் சுத்தப்படுத்தி விடுவார் கள் எனும் கற்பிதங்களை நான் கொண்டிருக்கவில்லை, ஏனெனில் ஆண்களைவிட பெண்கள் மேலானவர்கள் என நான் எப்போதும் கருதவில்லை. மேலும், அரசின் அடிப் படை அம்சங்களும் நடைமுறைகளும் ஆண்களின் மேலாதிக்கத்தைவிட மற்ற அம்சங்களைக் காரணங்க

www.padippakam.com



ளாகக் கொண்டவை என்பதை நான் நன்கு அறிவேன். பெண்கள் கட்சிக் கமிட்டிகளில் குறிப்பிட்ட இடத்தை வகிக்கிறார்கள். அவர்கள் ஆண்களைப் போலவேதான் அந்த இடங்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். பெண்ணியத்திற்கு அவர்கள் பயனில்லை,'' என்பதுடன்... கிளியோபாட்ரா... ரஸியா சுல்தான்... ஜான்சிராணி... இந்திரா காந்தி தாட்சர்... ஆகியவர்களை கவனத்தில் கொண்டு.

1, J.J. Bachofen. 'Mother Right'. exerpts from : Unsung Champions of Women. Edit. By Mary cohart, University of New Mexico Press. 2. Marriage in india Edit. By. B. B. Goswami, J. Sarkar, D. Danda Pub. Anthropo logical Survey of India Calcutta 1988. 3. Pre Historic Art. T. G. E. Powell. Thompson and Hudson. 1966 London. 4. Adventures with the missing Link. Raymond Dart. 1959. Cliff Art on the Wolf Mountains. Gai Shanlin : Recent Discoveries in Chinese Archeology. Foreign Language Press Beijing 1984. 6. Lester Frankwarnd. Pure Sociology. exerpts from. Unsung Champions of Women: Edit. Mary Cohart. 7. Dravidan and Negro African Dr, U. P. Upadyaya. Dr. Mrs .S.P. Upadyaya. pub. by. Samshodhana Prakashawa Udipi. 8. Human Adaptation and Population Growth David S. Kleinman: Allanheld, Osmun & Co Inc. 9. Mathilde and Mathiasvaerting: Dominent sex. exerpts from Unsung Champions of Women : Mary Cohart. 10 Plato The Republic (Tran. A.D. Lindsay) Book. V.J.M. Dent & Sons. London 1980. 11. பரிசுத்த வேதாகமம். ஆதியாகமம். 2.7.25 12 New Correspondences between. Harappah and Near eastern glyptic art. AJK. Parpola. South Asian Archeology. 1981. Edit. Bridget Allchim.

படிப்பகம்

www.padippakam.com



Univcrsity of Cambridge orientel Publication No. 34 13. Dhammapada (The Mother) 240, 308, 330, Arabindo Ashram, Pondichery. 1985. 14. Holy Quran. Surah IV. Women. 15. A Discourse on origin of inequality. 2nd part. J. J. Rousseau: The Social contract and Discourses G.D.H. Cole Dent London. 1983 16. Social Contract-IBID. 17. A Discourse on political economy IBID, 18. Emile BKV. JJ. Rousseau exerpt from Women The Famly and Freedom. VOL I The Debates and Documents Edit. By. Susan Groagbell & Karen M. Offen : Stanford University. California 19. Desecnt of man and Selection in relation to Sex. Charles Darwin. exerpts from. IBID 20. Women, The Family and Freedom. VOL. II 21, IBID 22. Karl Marx. Economic and philosophic Manuscripts of 1844. Progress Publishers: Moscow 1977. 23. Karl Marx and Frederick Engels Manifesto of the Communist party. 24 பி. எங்கெல்ஸ்: குடும்பம் தனிச் சொத்து அரசு ஆகியவற்றின் தோற்றம், முன்னேற்றம் பதிப்பகம், மாஸ்கோ. 25. 27. Principles and organisation of the International Brotherhood. 7. 10 (n). Micheal Bakunin. Selected writings. EDIT By Arthus Lehning Pub Jonathan Cape. London. 1973. 26. P.J. Proudhon 18 58: Women, The Family and Freedom VOL. Doc. 28. Enquiry concerning Political Justice Book VIII; William Godwin Penguin Classics 29. Enfrachisement of Women Harriet Taylor Mill. Virgo 1983 30. The Subjection of women, J. S. Mill, Virgo 1983 31. லெனின் கட்சி உறுப்பினர்களல்லாத உழைக்கும் பெண்களின் நான்காவது மாஸ்கோ நகர மாநாட்டில் 1919. செப் 23. சொற்பொழிவு: சோவியத் ஆட்சியதிகாரம் என்பது என்ன? லெனின் கட்டுரைகளும் சொற்பொழிவுகளும் முன்னேற்ற பதிப்பகம், மாஸ்கோ. 32. Tneodore Roosevelt 1905. Adress before the National Congress of

www.padippakam.com



Mothers: from the Women, the Family and Freedom VOL II Doc 30. 33 Adolf Hitler 1934. நூரெம் பெர்க் சொற்பொழிவு. செப். 8. 1934. Women, the Family and Freedom VOL. II Doc. 105. 34 Prehistory and the Beginings of Civilisation: Jeaquella Hawkes Sir Leonard Woolley: George Allen and Unwin LTD. London 35 The Soviet Family Law of July 8, 1944: Women. The Family and Freedom VOL. II & Doc. 85. 36. The Marriage Law of the People's Republic of China. Adopted on Sep. 10. 1980. Put into erfect from 1981. Jan. 1; New Trends in Chinese marriage and the Family: Published by women of China. 50. Dengshi Kov, Beijing 1987 37. The Birth Dearth: Ben. Wottenberg. Pharos Books Newyork. 38. Major problems in American Women's History. Documents and Essays: Edit By Mary Beth Norton, DC Heath Toronto. 39. குடும்பம் தனிச் சொத்து அரசு ஆகியவற்றின் தோற்றம் பி. எங்கெல்ஸ், முன்னேற்றப் பதிப்பகம். மாஸ்கோ. 40. Quran Surah LXXII. 41. THE Oriental, the ancient, and the Primitive. Systems of Marriage and the Family in the Pre industrial Societies of Eurasia ; Jack Goody : Pub. Cambridge University 1990. 42. Rajneesh OSHO Interview by Lia Paradisco. 3/87. A New vision of Women's Liberation. Pub. Tne Rebel Publishing H use Gmbti. West Germany. Sep. 1987. 43 Michel Foucault, Power / knowledge: Selected Interviews and other writings, 1972-77. EDIT. Colin Gordon. Pantheon Books Newyork. 44, IBID. Criticism and Culture, Chap 5 Robertson Davis and Ronald Sohleifer. Longman 1991. 46. IBID. 47. Major Problems in Ameriean Women's History Documents and Essays. EDIT. Mary Beth Norton.

(ஆய்வு - 3 / அக். டிச. 1992)

படிப்பகம்

www.padippakam.com

# பெண்ணியல் திறனாய்வு

## பஞ்சு

பெண் எழுத்தாளர்களும், பெண் வாசகர்களும் எழுதுதல், வாசித்தல் என்ற வேலையைவிடக் கூடுதலான ஒரு வேலையிலும் இறங்கி உழைக்க வேண்டிய கடுமை யான நெருக்கடியில் இருக்கிறார்கள். தங்கள்மேல் இந்தச் சமூகம் சுமத்தியுள்ள கருத்தாக்கங்களின்மேல் தொடர்ந்து போர் தொடுத்துக் கொண்டிருக்க வேண்டிய கட்டாயம் அவர்களுக்கு இருக்கிறது. ''சில குண நலன்களின் பற்றாக் குறை காரணமாகத்தான் பெண் என்பவள் முழுமையடை யாத ஆண்'' என நம்பினார் தாமஸ் அக்கியுனாஸ். போன்னே என்பார் வடிவத்தை 'ஆண்' என்றும் உள்ளடக்கத்தைப் 'பெண்' எனவும் அடையாளம்கண்டார். ''மேலாண்மை மிக்க ஆண்மகனின் அறிவாற்றல் தனது ஆற்றல் மிக்க வடிவத்தை, வளைந்து கொடுக்கக்கூடிய உள்ளடக்கமெனும் பெண்மையின்மேல் திணிக்கிறது'' என்றும் அவர் கருதினார். மெண்டலின் பண்பு மரபுக் கோட்பாட்டிற்கு முந்தியவர்கள், ''ஆணின் இயக்கம் நிறைந்த விந்துதான், தன்னை அடையாளப்படுத்திக் கொள்ள ஆணின் முத்திரைக்காகக் காத்துக் கிடக்கும் பெண் முட்டையின்மேல் வினைபுரிந்து, பெண் முட்டைக்கு வடிவம் கொடுக்கின்றது'' எனக் கருதினர். பெண்

www.padippakam.com



என்பவள் எந்தவிதத்திலும் ஒரு குழந்தைக்குப் பெற்றோர் என்ற நிலைக்கு உரியவள் அல்லள் என்று கூடக் கருதினர். இவ்வாறு ஆண்களின் அதிகாரத்தனம்மிக்க அறிவாற்றலினால் வடிவமைக்கப்பட்டக் கருத்தாக்கங்களின் வெற்றியானது, தாய்வழிப்பட்ட சமூக அமைப்பை முடிவுக்குக் கொண்டு வந்தது. தந்தைவழிச் சமூகம் நிறுவப்பட்டது. ''இனத்தலைவி'' மறைந்து ''இனத்தலைவன்'' உருவானான்.

பெண்ணியல் திறனாய்வு இந்த ஆணாதிக்கப் பண்பாட்டின் இறுமாப்புமிக்க அமைதியைக் கலைப்பதற்காகவும், பெண் எழுத்தாளர்கள் மேலும், பெண் வாசகர்கள் மேலும் நிலவுகின்ற ஆணாதிக்கச் சூழலை மாற்றி அமைப்பதற்காகவும் பெண்களின் கோபம்மிகு எழுச்சிகளைத் தொகுத்துக் காண்கிறது. மேலும், சில நேரங்களில் பெண்ணியல் திறனாய்வாளர்கள், இன்றுள்ள ஆணாதிக்கம் வழியாகப் பார்க்கின்ற பார்வையை உடைத்துப்புதிய அணுகுமுறைகளைக் கட்டுவதற்காகத் தங்களின் அறிவாற்றலைப் பயன்படுத்த முயலுகின்றனர். இந்த இடத்தில் ''மேரி எல்மான்'' கருத்தைச் சுட்டிக்காட்டலாம்; ''பெண் முட்டை என்பது சார்பற்று,தனித்து இயங்கும் துணிவான ஒன்று எனவும், (அது ஒன்றும் ஆண்களில் சிலர் கருதுவது போல உணர்ச்சியற்றுக் கிடக்கும் அசட்டுத்தன்மை கொண்டது அல்ல) ஆண்களின் விந்து என்பது தனக்கென ஒரு வலிமையற்றதாக, ஒத்து இயங்குகின்ற ஒன்று எனவும் (அது சிலர் கருதுவது போல அப்படி ஒன்றும் பேரெழுச்சி மிக்கது அல்ல) நாம் மதிப்பீடு செய்துகொள்ளவேண்டும்'' என்றும் பெண்ணியல்வாதிகளுக்கு எடுத்துக் கூறுகிறார். வூடி ஆலன் (Woody Allen) என்பவர், ''ஆண்களின் திடீரெனப் பெருக்கெடுக்கின்ற விந்து, செயலூக்கமற்று, அறியாத ஓர் உலகத்திற்குள் பயணம் மேற்கொள்ளக் காத்திருக்கிறது. இல்லாறு ஒரு பெண் விரும்பினால்

படிப்பகம்

www.padippakam.com



மட்டுமே நடந்தேறும். இந்த விதை தூவும் செயல் அப்படி யொன்றும் சார்பு நிலையற்ற வீரதீரமிக்க செயல் அல்ல' என்கிறார்.

**பெண்ணியல் திறனாய்வின் சில பிரச்சனைகள்:**

சில பெண்ணியல் திறனாய்வாளர்கள் இது தொடர்பாக எந்தவிதமான கோட்பாடுகளையும் மேற்கொள்ள விரும்புவதில்லை. இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அவைகளுள் முக்கியமான ஒன்று, இந்தக்கோட்பாடுகள் எல்லாம் கல்வி நிறுவனங்களில் வடிவமைக்கப்படுகின்றன. இந்தக் கல்வி நிறுவனங்கள் எல்லாம் ஆண்களின் ஆதிக்கத்திற்கு உள்ளானவை. எனவே, இக்கோட்பாடுகளின் மூலமாக நொய்மைமிகு கலையாக்க உணர்வுகளை விளக்குவதற்கு முயல்வதைவிட, ஆண்கள் தங்களின் இரக்கமற்ற குணத்தையும், தங்களின் மேலாண்மையைத் திணிக்கும் மூர்க்கம் மிகு ஆர்வத்தையும் நிலைநாட்டவே இக்கோட்பாடுகளைப் பயன்படுத்திக் கொண்டனர். பிராய்டியன் கோட்பாட்டில் குடியேற்றப்பட்டுள்ள ஆணாதிக்க அறிவியலைப் பல பெண்ணியல்வாதிகள் பல தடவை தோலுரித்துக் காட்டி உள்ளனர். எடுத்துக்காட்டாக, பெண்களின் பாலியல், ஆண்களின் பிறப்புறுப்பின் மேலுள்ள பொறாமை உணர்வினால் வடிவமைக்கப்படுகிறது என்று பிராய்டின் கோட்பாட்டைக் கேலி செய்துள்ளனர் எனவே பல பெண்ணியல்வாதிகள், வரையறுக்கப்பட்டு, நிலைப்படுத்தப்பட்டுள்ள கோட்பாடுகளிலிருந்து தப்பி ஓடவே விரும்புகின்றனர். ஆனால் அதே நேரத்தில் ஆண்களால் உருவாக்கப்பட்டு மரபுரீதியாக விளங்குகின்ற இந்த ஆணாதிக்கம் கோட்பாடுகளின் சாயல்கூடப் படாதபடிப் பெண்களுக்கான சொல்லாடலை வளர்த்தெடுக்க முயல்கின்றனர். இந்த நோக்கில், ஆணாதிக்க அதிகாரத்தை உண்மையிலேயே மறுதலிக்கின்ற லெக்கான்,

www.padippakam.com



தெரிதா ஆகியோரின் நெறிப்பட்ட பிற்கால அமைப்பியல் திறனாய்வில் பெரிதும் ஈடுபாடு கொள்கின்றனர். பொதுவாகவே ''இயல்பூக்க உந்துதல்கள் பற்றிய உளவியல் பகுப்பாய்வுக் கோட்பாடுகள்'' பெண்ணியல் திறனாய்வாளர்களுக்கு மிகச் சிறப்பாகப் பயன்படுகின்றன; இக் கோட்பாடுகளினால் பெண்களின் ஆணாதிக்கத்திற்கு எதிரான உணர்வுகளை வெளிப்படுத்தும் உத்தி முறைகளை உருவாக்க முடிந்திருக்கிறது.

சிமோன் தெ பொவோர் (Simon de Beauvoir) தன்னுடைய இரண்டாவது பால் (Seconde Sex-1949) என்ற நூலில், தற்காலப் பெண்ணியம்பற்றிய அடிப்படை வினாக்களை மிகத் தெளிவாக எழுப்பி நிலைநாட்டினார். ஒரு பெண் தன்னைப் பற்றித் தானே சொல்ல முயலும் போது, ''நான் ஒரு பெண்'' என்றுசொல்லியே தொடங்குகிறாள். ஆனால் ஆண்மகன் யாரும் அவ்வாறு செய்வதில்லை. இந்த உண்மை ஒன்றைப் புலப்படுத்துகிறது. அதாவது, ஆண்பால் / பெண்பால் என்ற இரண்டு சொல்லாட்சிகளுக்கிடையில், அடிப்படையிலேயே சமச்சீர் அற்ற தன்மை உள்ளதை அறிய முடிகிறது; ஆண்தான் மானுடத்தன்மை என்ன என்பதை வரையறுக்கிறான்; பெண் அல்ல. இந்தச் சமச்சீர் அற்ற தன்மை, ''பழைய ஏற்பாட்டுக்'' காலத்திலேயே தொடங்கி விடுகிறது. அன்றிலிருந்து இன்று வரை, ஆண்களுக்கிடையில் சிதறிக்கிடக்கும் பெண்களுக்கு, அவர்களுக்கென்று தனிப்பட்ட வரலாறு, அடையாளம் ஏதும் இல்லை; அவர்களுடைய இயற்கையான திண்மையையும் இடித்து விட்டனர்; மேலும் வேறுபல ஒடுக்கப்பட்ட மக்கள் ஒன்று திரளுவதுபோலக் கூட்டாகத் திரளுவதுமில்லை; தங்களது தனிப்பட்ட வாழ்விலும் ஆண்மகனோடு ஏற்றத் தாழ்வான ஓர் உறவுமுறையில் ஆழமாக அடித்து இறக்கப் பட்டுள்ளனர். உண்மையில் அவன் ஒன்றாகவும், அவள்

www.padippakam.com



மற்றொன்றாகவும் விளங்குகின்றனர். சட்டமியற்றும் அரசியல்வாதிகள், மதவாதிகள், தத்துவஞானிகள், எழுத்தாளர்கள், விஞ்ஞானிகள் ஆகிய அனைவரும் பெண்களின் கீழ்ப்பட்ட இரண்டாந்தர வாழ்நிலை என்பது சொர்க்கத்திலேயே பெண்களின் விருப்பத்திற்கு ஏற்ப நிர்ணயிக்கப்படுகிறது. பூவுலக வாழ்வில் அத்தகைய வாழ்நிலை அவர்களுக்கு அனுகூலமாகவே- நல்லதாகவே அமைந்துள்ளது என்ற கருத்தாக்கச் சூழலை உருவாக்கி நிலைப்படுத்தி விட்டதுடன், அறுபடாமல் தொடர்ந்து காப்பாற்றுவதற்கும் தங்களாலான எல்லாவிதமான உத்திகளின் மூலமாகவும் முயன்று வருகின்றனர். இயற்கையிலேயே பெண் என்பவள் ஆணைவிட ஒருபடித் தாழ்வாகப் படைக்கப்பட்டுள்ளாள் என்று உருவாக்கிவிடப்பட்ட நம்பிக்கைதான், அவளுக்கான எதிரான அடக்குமுறைகளை ஆழப்படுத்தி உள்ளது. ஆண், பெண் சமம் என்று பேசுவதெல்லாம் வெறும் உதட்டளவில்தான். உண்மையிலேயே உண்மையான சமவுரிமைக்கான கோரிக்கை எழும்போதெல்லாம் பல்விதமான உத்திகளால் அவைகள் அமுக்கப்படுகின்றன; மறுக்கப்படுகின்றன. ஆனால் ஒரு பெண் நினைத்தால், ஆணின் ''கருணை'' இல்லாமலேயே தன்னுடைய யதார்த்தமான பெண்ணியல் வாழ்வைத் தானே அமைத்துக் கொள்ள முடியும்.

□

ஆண்- பெண் பால் வேறுபாட்டைப் பற்றிப் பேசும் போதெல்லாம் கீழ்க்கண்ட ஐந்து உண்மைகள் அடிப்படையாகக் கொள்ளப்படுகின்றன.

1. உயிரியல் கூறு

2. அனுபவம்

www.padippakam.com



3. மொழி (சொல்லாடல்)

4. நனவிலி மனம்

5. சமூகம் மற்றும் பொருளாதாரச் சூழ்நிலைகள்.

**1. உயிரியல் கூறு:**

இயற்கையான உயிரியல் கூறுகளை அடிப்படையாக வைத்து விவாதிப்பவர்களில் பெரும்பாலோர் ஆண்களே. அவர்கள் இத்தகைய அணுகுமுறை மூலம் 'பெண்' எனும் இயற்கை உயிரைச் சமூகமயப்படுத்தும் போக்கில் அவர்களது உடலமைப்பிற்கு ஏற்ப அவர்களுக்கான இடம்தான் அவர்களுக்குக் கிடைத்திருக்கிறது என வாதிடுகின்றனர். சுருக்கமாக, சமூகத்தில் அவளுக்குக் கிடைத்திருக்கிற 'இடம்' அவளது இயற்கைக்கு ஏற்பக் கிடைத்திருக்கிறது; அது அவள் விதி; என்பதுபோல விவாதம் புரிகின்றனர். ''பெண் என்பவள் வேறொன்றும் இல்லை; ஒரு கருப்பை தான்'' என்ற அவர்களின் கூற்றுமூலம், இந்த விவாதப் போக்கின் சாரத்தை அறிந்து கொள்ளலாம். இவ்வாறு ''அவள் உடல்தான், அவள் விதி'' என்றாகிவிட்டால், இயற்கை ஒழுங்கின் முன்னால் எல்லாவிதமான உயிர்களிடத்தும் இயக்கம் கொண்டிருக்கும் ஆண்- பெண் என்ற பால்வேறுபாட்டின் தன்மையை அறிவதற்கு எடுக்கப்படுகின்ற எல்லா முயற்சிகளுக்கும், எழுப்பப்படுகின்ற எல்லா வினாக்களுக்கும் அர்த்தம் இல்லாமல் போய்விடாதா?

இவ்வாறு ஒருபக்கத்தில் பெண்ணின் கீழ்நிலைப்பட்ட வாழ்நிலைக்கு அவளது இயற்கை உயிரமைப்புதான் காரணம் என்று தாழ்வாக மதிப்பிடுகிற போக்கு நிலவுகிறது என்றால், மற்றொரு பக்கத்தில் சில புரட்சிகரமான பெண்ணியல் வாதிகள், ''பெண்ணின் உடலியல் கூறுகள்

படிப்பகம்

www.padippakam.com



தாழ்வாக மதிப்பிடத்தக்கவை அல்ல; மாறாக, மேல்நிலைக்கான மூல ஊற்றுகள்'' எனக் கொண்டாடுகின்றனர். ஆனால் பெண்களுக்கான தனிச் சிறப்புகளாகச் சிலவற்றைக் காட்ட முடியும்தான் என்றாலும், தனிச்சிறப்பைத் தேடும் இத்தகைய தீவிரமான விவாதங்கள்—பார்வைகள்— எதுவும், ஆணாதிக்கம் தன்னை நிலை நிறுத்திக் கொள்ளக் கடைபிடித்த அதே தவறுகளைச் செய்கிற விபத்துக்களில் சிக்கிக் கொள்ள வேண்டியது வரும்.

## 2. அனுபவம்:

உடலியல் கூறில் உள்ள தனிச்சிறப்பை முன்னிறுத்தும் போக்கினால் ஏற்படும் தவறுகள் போலவே, பெண்களுக்கே உரிய தனிப்பட்ட அனுபவங்களை முன்னிறுத்திப் பேசுவதாலும் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளன. கலையிலும், வாழ்விலும் பெண்ணியல் மதிப்பீடுகளை உயர்த்திப் பிடிப்பதற்காகத் தனிச்சிறப்புக்குரிய பெண்ணின் அனுபவங்களைக் கொண்டாட முயலுகிற பெண்ணியல் வாதிகள், ஆணாதிக்கம் செய்கிற தவறுகளில், செய்கிற விபத்துக்களில் மாட்டிக்கொள்ள நேரும். இவர்கள் கரு உயிர்த்தல், மாதவிடாய், பிள்ளைப்பேறு முதலிய பெண்களுக்கே உரிய வாழ்க்கை அனுபவங்களைத் தீவிரமாகக் கொண்டாடுகின்றனர்; மேலும் பெண்களுக்குரிய புலன் உணர்வையும், உணர்ச்சிப் பெருக்கத்தையும் அனுபவ ரீதியில் தனிச்சிறப்புக்குரியவை என வாதிடுகின்றனர்; அன்றியும் வாழ்க்கை நிகழ்ச்சிகளை ஆண் பார்க்கிற அதே கோணத்தில் பெண் பார்ப்பதில்லை; அதுபோலவே, எது முக்கியமானது? எது முக்கியமற்றது? என்பதிலும் பெண்கள் ஆண்களிடமிருந்து வேறுபட்ட எண்ணங்களையும் உணர்வுகளையும் கொண்டுள்ளனர் என்றெல்லாம் விவாதத்தை முன்வைக்கின்றனர். அனுபவரீதியான இத்தகைய

www.padippakam.com



வேறுபாடுகளை வெளிப்படுத்தும் பெண் எழுத்தாளர்களின் எழுத்துக்களைத் திறனாய்வு செய்யும் திறனாய்வாளர்களைப் பெண் மைய விமர்சர்கள் (Gyno Critics) என அழைக்கின்றனர்.

### 3. சொல்லாடல்:

மூன்றாவது கூறான இந்தச் சொல்லாடல், பெண்ணியல் வாதிகளின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்துள்ளது. டாலே ஸ்பெண்டர் (Dale Spender) தான் எழுதிய ''ஆணால் உருவாக்கப்பட்ட மொழி'' என்றதன் எழுத்தில் தலைப்பே சுட்டிக்காட்டுவதுபோல, ஆணாதிக்கம் மிக்க மொழியினால், பெண் அடிப்படையிலேயே அமுக்கி வைக்கப்படுகிறாள் என விளக்குகிறார். பூக்கோவின் (Foucault) ''உண்மை என்பது சொல்லாடல் யாருடைய கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது என்பதைப் பொருத்தே அமைகிறது'' என்ற வாதத்தை ஒத்துக்கொள்வோமானால், ஆணாதிக்கம் செலுத்துகின்ற இன்றைய சொல்லாடலில் உண்மை என ஆண்களால் வார்த்தெடுக்கப்பட்ட ஒன்றிற்குள்தான் பெண் சிக்கிக்கொள்கிறாள் என்பதை நம்புவதே அறிவுடைமையாகும். இந்தக் கோணத்தில் பார்த்தால், ஆணின் கட்டுப்பாட்டிலுள்ள மொழியோடு பெண் எழுத்தாளர்கள் போட்டிபோட்டு, முயற்சி செய்து, பெண்களுக்கான சொல்லாடலை உருவாக்குவது அடிப்படைத் தேவையாகிறது. ஆனால், இத்தகைய பார்வைக்கு நேர் எதிரான பார்வையைச் சமூக மொழியியல் அறிஞரான ராபின் லாக்கோப் (Rabin Lokaff) கொண்டுள்ளார்; உண்மையிலேயே பெண்களின் மொழி, ஆண்களின் மொழியைவிடத் தாழ்ந்தது என நம்புகிறார்; ஏனென்றால் அது பலவீனமான அமைப்புகளைக் கொண்டிருக்கிறது; நிலையற்ற தன்மையுடையதாக விளங்குகின்றது; மேலும் பயனற்ற சின்னஞ்சிறு இயல்புடையதாகவும், விளையாட்டுத்தன

படிப்பகம்

www.padippakam.com



மான இன்ப நாட்டம் உடையதாகவும், தீவிர அக்கறை அற்றதாகவும், தனிப்பட்ட உணர்ச்சி வெளிப்பாட்டிற்கு அழுத்தம் கொடுப்பதாகவும் அமைந்து கிடக்கிறது என் கிறார். அதே நேரத்தில் ஆண்களின் சொல்லாடல் உறுதி யானது என வாதிடுகிறார். எனவே சமூகத்தில் ஆணுக்கு நிகரான சமநிலையைச் சாதிக்க விழையும் பெண்கள், ஆண்களின் மொழியைத்தான் தமதாக்கிக் கொள்ள வேண்டும் என்கிறார் ராபின் லாக்கோப்பின் இத்தகைய பார்வைகளை, ஆணாதிக்கச் சமூகத்தின் கருத்தியலால் மூளைச்சலவைக்கு உள்ளானவர்களின் பார்வைகளாகப் புரட்சிகரப் பெண்ணியல் வாதிகள் கருதுகின்றனர்.

### 4. நனவிலிமனம் :

லக்கான், கிறிஸ்தெவா ஆகியோரது உளவியல் பகுப் பாய்வுக் கொள்கைகள், நான்காவது கூறாகிய நனவிலி மனத்தின் நடைமுறை பற்றிப் பேசுகின்றன. ஆணாதிக்க உரையாடலின் செல்வாக்கிற்கு உட்பட்ட ''உடலியல் கூறு'' அடிப்படையில் பார்க்கின்ற அணுகுமுறையைச் சில பெண்ணியல் எழுத்தாளர்கள் அறவே உடைத்தெறிந்து விட்டனர்; ஆணாதிக்க மொழி கூறுகின்ற அர்த்தங்களி லிருந்து விடுதலை பெற்ற எந்தவிதமான சொல்லாடலும் பெண்ணியத்திற்குச் சாதகமாகப் பதிவாகும் என்கின்ற னர். அப்பொழுதுதான் பெண்ணின் பாலியல் என்பது புரட்சிகரமானதாகவும், தலைகீழாகப் புரட்டக் கூடிய தாகவும், இன்றைக்கு கற்பிக்கப்பட்டிருப்பதுபோல ஒரே தன்மை, குணம் என்ற 'விலங்கு நிலையில்' இருந்து விடு தலை பெற்ற பலபடித்தான, பன்முகம் கொண்ட ஒன்றாக வும், வெளிப்படையானதாகவும் விளங்கமுடியும் எனக் கருதுகினறனர். மேலும் இந்த அணுகு முறையானது 'பெண்ணின் பாலியல்' என்று வரையறை செய்ய மறுக் கின்றது. அவ்வாறு பெண்ணின் பாலியலுக்கான சில

படிப்பகம்

www.padippakam.com



கோட்பாடுகள் இருக்குமானால், அவைகளும் பெண்களைப் பற்றி ஆண்களின் மொழி வரையறுத்துக் கூறியுள்ள கூற்றுகளுக்கு வெளியேதான் இருக்க முடியும் என்கின்றனர்.

### 5. சமூகம் மற்றும் பொருளாதாரச் சூழ்நிலைகள் :

ஐந்தாவது கூறாகிய சமூகவியல் பார்வையைப் பெண் எழுத்தாளர்களின் எழுத்தைப் பகுத்தாய்வதற்குப் பயன் படுத்தியவர்களுள் வெர்ஜினாவுல்ப் குறிப்பிடத்தக்கவராவார். இவரைத் தொடர்ந்து, மார்க்சீயப் பெண்ணியல் வாதிகள் மாறி வருகின்ற சமூகப் பொருளாதார நிலைமைகளையும், இரு பாலார்க்கும் நடுவே அதிகாரம் செலுத்தும் தன்மையில் ஏற்பட்டு வருகின்ற மாற்றங்களையும் தொடர்புபடுத்தி விளக்குவதற்கு முயற்சி செய்தனர். வேறுசில பெண்ணியல் வாதிகள் போலவே இம்மார்க்சீயப் பெண்ணியல் வாதிகளும் ''சார்பில்லா முழுமையான பெண்மை'', ''உலகப் பொதுமையான பெண்மை'' என்ற கோட்பாடுகளை உதறித் தள்ளினர்.

### காத்மில்லத் & மிகயில் பேரெத் : (Kate Millett & Michele Barrett) அரசியல் பெண்ணியம்

நவீன பெண்ணியம், 'பாலுணர்வு அரசியல் (1970)' என்ற நூல் மூலம் ஒரு முக்கியமான கட்டத்தை அடைந்தது. இந்நூலை எழுதியவர் 'காத்மில்லத்' ஆவார். அவர் ''தந்தையின் ஆட்சி'' என்ற சொல்லாக்கத்தைப் பயன்படுத்தி, பெண் அடிமைப்பட்டதற்கான காரணங்களை விளக்கினார். குடும்பத்திலுள்ள ''தந்தையின் அதிகார அமைப்பு''தான், ஆணுக்குப் பெண்ணைக் கீழ்ப்படிய வைக்கிறது; அல்லது ஆணைவிடத் தாழ்வாகப் பெண்ணை நடத்துகிறது; ஆண்களின் அதிகாரம் ஒரு பெண்ணின் சமூக வாழ்விலும் தனிப்பட்ட வாழ்விலும்

படிப்பகம்

www.padippakam.com



வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ பயன் படுத்தப்படுகிறது. மக்களாட்சி முறை வளர்ந்த இன்றைய நவீன உலகிலும்கூட, நீண்ட நாட்களுக்கு முன்பே "பாலியல் பாவை" என்று அவளுக்குக் கற்பிக்கப்பட்ட அதே குணத்துடன்தான், அந்த மனோபாவத்துடன்தான் அவள் தன்னைச் சுற்றிய வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்படுகிறாள் இவ்வாறு விவாதிக்கும் மில்லத், ஆண் பெண் என்ற பால்பகுப்பிற்கும் (Sex), ஆண்மை, பெண்மை என்ற சமூகப் பகுப்பிற்கும் (Gender) இடையிலுள்ள முக்கியமான வேறுபாட்டை சமூகவியல் துறையிலிருந்து கடன் வாங்கிக் கொள்கிறார். ஆண், பெண் என்ற பால் வேறுபாடு உயிரியல் அடிப்படையில் இயற்கையாகவே வந்துசேர்வது, ஆனால் ஆண்மை பெண்மை (Gender) என்று நாம் பிரித்து அடையாளம் காண்பது, சமூகச் சூழலால், பண்பாட்டுப் பின்னணியால் பெறப்படுவது; எனவே இது உளவியல் கோட்பாட்டாய்விற்கு உள்ளாகக்கூடியது. மார்க்கரெட் மெட் என்ற மானுடவியல் அறிஞர் மேற்கத்திய நாடுகள் அல்லாத பிறநாடுகளில் ஆண்களின் பண்பெனவும், பெண்களின் பண்பெனவும் கற்பிக்கப்பட்டுள்ள பண்புகளில் பெரிய வித்தியாசங்கள் இருப்பதை எடுத்துக்காட்டியுள்ளார். "ஆண்கள் அமைதியை விரும்புகிறவர்கள்; பெண்கள் கலகத்தை விரும்புகிறவர்கள்" என்றெல்லாம் கற்பிக்கப்பட்டிருப்பதாக எடுத்துக் காட்டுகிறார். மில்லத் போன்ற பெண்ணியல்வாதிகள், பண்பாட்டுப் பின்னணி காரணமாக வந்து சேர்ந்த பெண்களின் குணங்களை (கீழ்ப்படிதல் போன்ற குணங்களை) அவர்களின் "இயற்கை குணமாகவே" கருதி எழுதுகின்ற சமூகவியல் அறிஞர்களைக் கடுமையாகச் சாடுகிறார்கள். குடும்பம் பற்றிய கருத்தாக்கத்திலும், ஆண்களைப் போலவே பெண்களும் பெண்களுக்கான இதழ்களில் மேற்



படிப்பகம்

www.padippakam.com



கூறிய பண்பாட்டுப் பின்னணியில் உருவான குணங்களையே தங்களின் குணங்களாகச் சித்திரித்துக் கொள்கின்றனர். இவ்வாறு சித்திரிப்பதானது, ஆணாதிக்க மொழியைத் தொடர்ந்து மறக்காமல் நிலைநாட்டிக் கொள்ள ஏதுவாகிறது என்பதையும் மில்லத் விளக்கிக் காட்டுகிறார். இவருடைய பார்வையின்படி, இச்சமூக அமைப்பில் 'பெண்' என்ற பாலின் நிலை என்ன; அவளின் பங்களிப்பு என்ன—என்பது பற்றி ஏற்கனவே நிலைபெற்றுள்ள நடைமுறையானது, அவளை 'அடக்குமுறை செய்யும் உத்தியோடு' இணைந்ததாக இருக்கிறது. இவ்வாறு நடைமுறையில் சமத்துவம் இல்லாத ஆண்களின் மேலாதிக்கம் நிறைந்த உறவு முறையையும் அதற்குப் பெண்கள் தாங்கள் அறியாமலேயே கீழ்ப்படிந்து போகும் நிலையையும் மில்லத் ''பாலுணர்வு அரசியல்'' (Sexual Politics) என்று அழைக்கிறார்.

நவீன பெண்ணியத்தின் ஆரம்பகால எழுத்தாளர்கள் (மில்லத், ஜெர்மெயின் க்ரீர், மேரி எல்மான்) இலக்கியத்தைப்பற்றி எழுத நேரும்போது, மேற்கூறிய அரசியல் பார்வைக்கு அழுத்தம் கொடுத்து எழுதினார்கள். அதாவது, அந்தப் பெண்ணியல்வாதிகள் பெண்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை எதிர்த்துக் கோப உணர்வை வெளிப்படுத்தினர். மேலும், ஆண்களால் அமுக்கப்பட்டுக் கிடக்கும் பெண், மேலுள்ள அரசியல் தந்திரங்கள் பற்றிய விழிப்புணர்வைப் பெறவேண்டும் என்று வற்புறுத்தினர். இந்த வகையான பெண்ணியல்வாதங்களுக்கும், வேறு சில அரசியல் வடிவங்களுக்கு அடிப்படையாக உள்ளவற்றிற்கும் இடையே உள்ள ஒற்றுமையைக் காண்பது மிகவும் ஆர்வம் தருகிற ஒன்றாகும். பெண்கள் பெரும் அரசியலுக்கு அடிப்படையான சமூகத்தில் அமுக்கப்பட்ட வேறு சில பகுதியினரோடு அடையாளம் காணப்பட்டனர். அஃதாவது கறுப்பினத்தினரோடும், தொழிலாளர்களோடும் ஒப்பிட்டு எண்ணப் பட்டனர். (இந்தியாவில்

படிப்பகம்

www.padippakam.com



தாழ்த்தப்பட்ட மக்களோடு இணைத்துப் பேசப்படுகிறது)
மேலும், சிமோன் தெபொவோர் சுட்டிக் காட்டியுள்ளது
போல, கறுப்பினத்தினரைப் போல் பெண்கள் ஒன்றும்
மக்கள் தொகையில் சிறுபான்மையினர் அல்லர். தொழி
லாளர்களைப் போல வரலாற்றுப் போக்கில் உருவானவர்
களும் அல்லர் என்றும் விளக்கிக் காட்டினர். மேலும்
இவ்வாறு சொல்லப்படுகின்றது. ''எல்லோரையும் விடக்
கொடுமையான அடக்கு முறைக்கு உள்ளானவள், கறுப்
பினத்திலுள்ள தொழிலாளர் வர்க்கத்தைச் சார்ந்த ஒரு
வனின் மனைவியே'' (இந்தியாவில் விவசாயக் கூலியாய்த்
தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த ஒருவனின் மனைவியே
எனலாம்) கறுப்பர், தொழிலாளர், பெண்கள் என்ற இந்த
அடக்குமுறைக்குள்ளான இவர்கள் ஒவ்வொருவரின் விவா
தங்களும் ஒரே மாதிரியான வடிவத்தைக் கொண்டிருக்
கின்றன.

கறுப்பர்களை ஒடுக்கும் இனவாத அரசியல்வாதி,
தொழிலாளர்களை அடக்கி ஆளும் பூர்சுவா, பெண்களை
அடிமைப்படுத்தும் தந்தை ஆதிக்கக் குடும்பம் (இந்தியா
வில் தாழ்த்தப்பட்ட மக்களை ஒடுக்கும் மேல் சாதிக்காரர்
கள்) ஆகிய அனைவரும் தங்கள் ஆதிக்கத்தைத் தங்களுக்
கான கருத்தாக்கங்களின் மூலம் தொடர்ந்து தக்கவைத்துக்
கொள்ள மிகவும் விழிப்புணர்வுடன் முயற்சி செய்து
வருகின்றனர். எனவே ஒடுக்கப்பட்ட ஒவ்வொரு பிரிவி
னரும், இந்த ஆதிக்கச் சக்திகளின் செய்தித் தொடர்பு
நிறுவனங்களும், புனைகதை இலக்கியங்களும் தங்களைப்
பற்றிப் பரப்புகின்ற தங்களுக்கு எதிரான கருத்தாக்கங்
களை எதிர்த்துப் போர் தொடுப்பதன் மூலம் தங்களைக்
காப்பாற்றிக் கொள்ள முயலுகின்றனர்.

ஒவ்வொரு பிரிவினரும் அமுக்கப்பட்டவர்களிடையே
விழிப்புணர்வை ஏற்படுத்தி, அடக்கி ஆள்பவர்களுக்கும்,

படிப்பகம்

www.padippakam.com



அடக்கப்பட்டவர்களுக்கும் இடையே நிலவும் ''அதிகார உறவில்'' புரட்சிகர மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக அரசியல் போராட்டங்களையும் நடத்துகின்றனர். இத்தகைய அரசியல் பார்வையினால், இந்தப் பிரச்னைகள் வெறுமனே ''மேலாதிக்கம்தான் பிரச்னை'' என்பதுபோல ஒற்றைப் பரிமாணம் மட்டுமே பெற்று, மிக எளிய ஒரு பிரச்னைபோலத் தோற்றம் பெற்று விடுகின்றன.

பொதுவாக உலகம் முழுவதுமே வர்க்க வேறுபாடின்றி எல்லா ஆண்களும் பெண்களை அடிக்கின்றனர். ''கோரா கப்லான்'' இதை எடுத்துக் காட்டுகிறார். இந்தப் பொதுக் குணத்தை ஒரு கருத்தியலாக வைத்துக் கொண்டு, ''பெண்கள் என்பவர்கள் ஆண்களின் கொடுமையை விரும்பி அவாவுகின்ற பாலியல் உணர்ச்சி மிக்கவர்களாகவும் பலவீனம் மிகுந்தவர்களாகவும் விளங்குகிறார்கள்'' என்று ஆண்கள் மிகச் சாதாரணமாகப் பெண்களுக்கு குணம் கற்பித்து விடுகின்றனர். பெண்கள்மேல் அடக்குமுறையில் வினைபுரியும் சமூக, பொருளாதார உண்மைகளையும், பண்பாட்டுப் பின்னணியில் உருவாகின்ற சிக்கலான நனவிலி உளவியல் முறைகளையும் கணக்கில் எடுக்காமல் மேற்கண்டவாறு மிக எளிதாகக் கூறிவிடுகின்றனர்.

## எவ்வாறு இது இலக்கியத்தைப் பாதிக்கின்றது ?

முதலில், இலக்கிய மதிப்பீடுகளையும் மரபுகளையும் வடிவமைப்பவர்கள் இன்றைக்கும் ஆண்களே! இவ்வாறு ஆண்களால் வடிவமைக்கப்படும் இலக்கிய வடிவத்தில்தான், பெண்கள் தங்களுடைய உணர்வுகளையும் தங்களுக்கே ஆன பிரச்னைகளையும் வெளிப்படுத்தப் போராடுகின்றனர். எடுத்துக்காட்டாக, எடுத்துரைக்கும் கதை வடிவமான வீரதீரக் கதைகள், காதலுணர்வுக் கதைகள் ஆகிய இரண்டும் ஆண்களின் உணர்விற்கு நோக்கத்திற்கு

படிப்பகம்

www.padippakam.com



ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்த வடிவத்திற்குள்ளே தான் பெண்களும் போய்ச் சிக்க வேண்டியதிருக்கிறது.

இரண்டாவதாக, ஆண் எழுத்தாளர்கள், தங்களுடைய வாசகர்களாக ஆண்களையே முன்னிருத்திக்கொண்டு அவர்களுக்கான கதையை அவர்களுக்காகவே கூறுவது போலத்தான் எடுத்துரைக்கின்றனர். இத்தகைய மனப் பான்மை பெருவாரி மக்கள் பண்பாட்டில் ஆட்சி செலுத் தும் விளம்பரங்களில் வெளிப்படுவதை ஏராளமான எடுத்துக்காட்டுகள் மூலம் விளக்க முடியும். அதுவும் தொலைக்காட்சி விளம்பரத்தில் தெளிவாகவே காண லாம். எத்தகைய உற்பத்திப் பொருளையும் சந்தையில் விற்பதற்குப் பெண்களையே விளம்பரத்திற்குப் பயன் படுத்துவதானது, ஆண்களைப் பார்வையாளராகக் கொண்டே விளம்பரம் உருவாக்கப்படுகிறது என்பதை வெளிப்படையாகக் காட்டும். இத்தகைய விளம்பரங் களைத் தொடர்ந்து பார்க்கும் பெண் பார்வையாளர் களும், பழக்கத்திற்குள்ளாகும் உளவியல் கூறுகளின் செயல்பாட்டினால் தாமும் ஆண் பார்வையாளர்களைப் போலவே இயங்குவதற்கு வாய்ப்பு நேர்கிறது. கலை/ இலக்கியங்கள் எல்லாம் ஆண் பார்வையிலேயே உருவாக் கப்பட்டிருப்பதால், ஏற்கனவே ஒவ்வொரு பெண்ணுக் குள்ளும் ஆண் வாசகன் ஆக்ரமித்து இடம் பிடித்துள்ளான் என்பதால் இத்தகைய ஆணாதிக்கப் போக்கை எளிதாகத் தொடர்ந்து கொண்டு செலுத்த முடிகிறது. இந்தச் சமூகத்தில் ஒரு வாசகி, ஓர் ஆண் வாசகனைப் போலவே வாசிக்கும்படிக் (அவள் அறியாமலேயே) கட்டாயப்படுத் தப்படுகிறாள். ஆண் எழுத்தாளர்களின் புனைகதை களில், வர்ணிக்கப்பட்டிருக்கும் காம வர்ணனைகளை, ஆணாதிக்கத்தின் முன்னால் பெண் அடைகிற அவமான நிகழ்ச்சிகளை எல்லாம் பெண்ணும் விரும்பிச் சுவைத்துப் படித்துச் செல்லும்படி ஆக்கப்படுகிறாள். இத்தகைய

படிப்பகம்

www.padippakam.com



நிலைமை, பெண், தான் எழுத்தாளராக நின்று இயங்கும் போதும், ஆணைப்போலவே பெண்ணை வர்ணிக்கிற வளாக—பெண்ணுலகம் பற்றிய தன் சுய பிரக்ஞையின்றி இயங்குபவளாக—ஆக்கிவிடுகிறது. மொத்தத்தில் பெண்ணையே பெண்ணுக்கு எதிராக அவள் அறியாமலேயே இயங்க வைத்துவிடுகிறது. கருத்துலகத்திலுள்ள மிகச் சிக்கலான பிரச்னையாகும் இது.

மில்லத், சூலாமித் ஃபையர்ஸ்டோன் ஆகிய இருவரும் ''பாலியலின் இயங்கியல்'' (The dialectic of Sex, 1972) என்ற நூலில், ஆணாதிக்கம் என்பது சமூக வரலாற்றில் முதலானது; அடிப்படையானது; என்றும் சமூக, பொருளாதாரத் துறையில் காணப்படும் ஆதிக்க வடிவங்களில் இருந்து தனித்து, சுயமாக இயங்கக்கூடியது எனவும் கருதுகின்றனர். வரலாற்றை நிர்ணயிக்கிற அடிப்படை அலகாக வர்க்க வேறுபாட்டைக்கொள்ளாமல் அந்த இடத்தில் ''**பாலியல் வேறுபாட்டை**'' நிலை நாட்டுவதுதான் ஃபயர்ஸ்டோன் கோட்பாட்டின் நோக்கமாகும். வர்க்கப் போராட்டம் என்ற ஒன்றே, ஆண்/ பெண் என்று உயிரியல் அடிப்படையில் இணைந்த 'குடும்பம்' என்ற ஒரு சிறு அலகின் விளைச்சல்தான் என்கிறார். மிகயீல்பேரெத் என்பார், ''தந்தை அதிகார அமைப்பு'' என்ற ஒரு கூறே உலகம் முழுவதுமுள்ள ஆணாதிக்கம் என்பது, வரலாற்றிற்கு முந்தியகாலம் தொட்டே இயங்கி வருவது என்பதை வெளிப்படுத்தும் என்கிறார். மேலும், பழைய தந்தை அதிகார அமைப்பிற்கும், புதிய முதலாளித்துவத்திற்கும் இடையே உள்ள பொருத்தத்தைக் கவனித்துப் பார்க்காமல் விட்டதன் மூலம், ஆண், பெண் உறவு என்ற மாபெரும் சிக்கலான பிரச்னையை மிகவும் எளிமைப்படுத்திவிட்டனர். இந்த இரண்டிற்கும் இடையே உள்ள உறவில் காணப்படும் பல கூறுகள் தொடர்புஉடையனவாக விளங்குகின்றன, அவை யாவன;

படிப்பகம்

குடும்பத்திற்குள் இயங்கும் பொருளாதார அமைப்பிற்கும் முதலாளித்துவ அமைப்பிற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. இரண்டிலும் இயங்குகிற வேலைப் பிரிவினைமுறை, கல்விமுறை, அதிகார அமைப்புமுறை ஆகியவற்றில் ஒற்றுமைக்கூறுகள் விளங்குகின்றன. அது போலவே ஆண்களையும், பெண்களையும் வேறுபடுத்தி, அடையாளப்படுத்துகிற பண்பாட்டு முறைகளிலும் இரண்டும் ஒத்துப் போகின்றன. உயர் உற்பத்தி முறையிலும், பாலியல் தொடர்பிலும் ஆண்களையும், பெண் களையும் வேறுபடுத்திக் காட்டும்போக்கு இரண்டு அமைப் பிலும் ஒன்றாக விளங்குகின்றன.

மிகயீல் பேரெத் மார்க்சீயப் பெண்ணியல்வாதியாக அறியப்படுகிறார் அவர் ஆண்மை, பெண்மை என்ற பண்பாட்டுப் பின்னணியில் உருவான அடையாளங் களைப் பகுத்து ஆராய்கிறார். முதலில், இவர் வெர்ஜினியாவுல்ப்—னுடைய பருப்பொருள் அடிப்படை யிலான விவாதங்களைப் பாராட்டுகிறார். இலக்கியத்தை உற்பத்திசெய்யும் ஆண், பெண் இருபாலர்க்கும் அமைந் துள்ள பருப்பொருள் தேவை, பின்னணி ஆகியவை வேறு வேறாக அமைந்துள்ளன. இந்த வேறுபாடுகள் அவர்க ளுடைய எழுத்தின் உள்ளடக்கத்தின் மேலேயும், வடிவத் தின் மேலேயும் செல்வாக்குச் செலுத்துகின்றன. இந்தச் செல்வாக்கு அவர்களது எழுத்து வேறுபட்டுத் தோன்ற காரணமாகிறது. எனவே பெண்களுக்கான விடுதலை, வெறுமனே பண்பாட்டுத் தளங்களில் ஏற்படுகின்ற மாற் றங்களால் ஏற்பட்டு விடாது; மாறாக, ஆண்மை, பெண்மை என்று வேறுபடுத்துகின்ற இந்தப் பொருள் சார்ந்த பின்புலங்களை வரலாற்று அடிப்படையில் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இரண்டாவதாக, ஆண்மை, பெண்மை என்ற கருத் தாக்கங்கள் இருபாலரின் எழுத்துக்களையும், வாசிப்பு

www.padippakam.com



களையும் பாதிப்பதோடு, எதுபேதமை என்பதும் இத்தகைய கருத்தாக்கங்களினாலே நிறுவப்படுகின்றது.

மூன்றாவதாகப் பெண்ணியல் திறனாய்வாளர்கள் ''இலக்கியப் பிரதியின்'' இயல்பான குணமான, எதையும் ஓரளவு அதிகமாகவே புனைந்து காட்டுகின்ற குணத்தையும் கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டும்; அப்போதுதான் சகட்டுமேனியாக எல்லா ஆண் எழுத்தாளர்களையும், அவர்களின் பாலியல் தொடர்பான எல்லா வர்ணனைகளையும் சாடுகிற குருட்டுத் தனமான ஒழுக்க நெறிப் பார்வையிலிருந்து தப்பிக்க முடியும். ஒரு இலக்கியப் பிரதிக்கு என்று நிலையான பொருள் எதுவும் கிடையாது; படிக்கின்ற வாசகனின் கருத்து நிலைக்கு ஏற்பவும், காலச்சூழலில் பெண்ணியல்வாதிகள் ஆண்மை, பெண்மை என்ற கருத்தாக்கங்களை வரையறை செய்வதில் தங்களுடைய செல்வாக்கை, ஆதிக்கத்தை நிலைநிறுத்திக்கொள்ள அயராது முயலவேண்டும்; அவ்வாறு முயற்சி செய்து பெண்ணியல் பார்வை அடிப்படையில் இத்தகைய கருத்தாக்கங்களைப் பண்பாட்டுப் பின்னணியோடு அடையாளப்படுத்திக் காட்ட வேண்டும்.

## பெண்களின் எழுத்தும் அவ்வெழுத்தைப் பற்றிய திறனாய்வாளர்களும்

எலைன ஹோவால்டர் தம்முடைய 'அவர்களுக்குச் சொந்தமான இலக்கியம்' (A literature of their own—1977) என்ற நூலில் பெண்களின் அனுபவ அடிப்படையில் இங்கிலாந்து நாட்டின் பெண் நாவலாசிரியர்களை ஆராய்கிறார். பெண்களுக்கென்றே நிலையான—தனிச் சிறப்பான—பாலியலோ அல்லது அவர்களுக்கென்றே கூறத்தக்க தனியான கற்பனைகளோ கிடையாது எனினும் பெண்களின் எழுத்துக்களுக்கும் ஆண்களின் எழுத்துக்

படிப்பகம்

www.padippakam.com



களுக்கும் ஆழமான வேறுபாடுகள் உள்ளன; அப்படி யிருந்தும் பெண் எழுத்தாளர்களாலான ஒரு பெரிய மரபு, ஆண் திறனாய்வாளர்களால் தொடர்ந்து புறக்கணிக்கப் பட்டு வந்திருக்கிறது. இத்தகைய கோணத்தில் இருந்து **ஹோவால்டர்** மதிப்பீடு செய்துள்ளார். (தமிழிலும் இந்த மரபைக் கண்டெடுத்து எழுத வாய்ப்பிருக்கிறது) இங்கிலாந்தில் பெண் எழுத்தாளர்களின் மரபை மூன்று பகுதிகளாகப் பிரித்துக்கொள்கிறார்.

**1. *1840—1880:*** இந்த இடைப்பட்ட காலத்தை முதல் பிரிவாகக் காண்கிறார். இக்கால கட்டத்தில் எலிசபெத் காஸ்கெல், ஜியார்ஜ் எலியட் ஆகியோர் அடங்குவர். இக்காலக் கட்டத்தைச் சார்ந்த பெண் எழுத் தாளர்கள் ஆதிக்கம் செலுத்திய ஆண் எழுத்தாளர்களின் அழகியல் குணத்தை அப்படியே போலச் செய்தனர்; தங்க ளுடையதாக உள்வாங்கிக் கொண்டனர். இக்காலப் பெண் எழுத்தாளர்கள் எழுத்தின் உள்ளடக்கம், மிக நெருக்கமாக பரிச்சயமான தனிப்பட்ட, சமூகம் சார்ந்த வட்டத்தை ஒட்டி அமைந்திருந்தது. இக்காலப் பெண் எழுத்தாளர்கள் 'மிகக்கண்ணியமான எழுத்தாளர்கள்' என்ற பேர் பெற்றுவிளங்கினார்கள். தங்கள் படைப்பிற் கான உரிமை கோருவதற்குக்கூட 'குற்ற உணர்வில்' தவித் தனர். எழுத்தில் எல்லாவற்றையும் எழுதிவிட முடியாது. சில எல்லைகள் உண்டு என்பதை ஏற்றுக்கொண்டனர். வேகமாகவும் உணர்ச்சிகரமாகவும் படைப்புத்தளத்தில் ஈடுபடுவதைத் தவிர்த்தனர்.

2. ***1880—1920:*** இந்த இடைப்பட்ட காலத்தை இரண்டாவது பிரிவாகப் பிரித்துக் காண்கிறார். எலிச பெத் ரோபின்ஸ் போன்றவர்கள் இக்கால கட்ட எழுத் தாளர்கள் ஆவர். இவர்கள் புரட்சிகரமானவர்களாக விளங்கினர். பெண்களுக்காகத் தனிக்கருத்துலகையும் தனி மொழியுரிமையையும் உருவாக்க வேண்டும் என வாதாடினர்.

www.padippakam.com



3. 1920க்குப் பிறகுள்ள காலகட்டத்தை மூன்றாவது பிரிவாகப் பிரித்துக் காண்கிறார். இக்காலகட்டம், முதலிரண்டு காலகட்டங்களில் உருவான குணங்களைத் தனக்குள் உள்வாங்கிக்கொண்டு பெண்களுக்கே உரிய தனியான எழுத்துக்கள், அவர்களுக்கே உரிய சிறப்பான அனுபவங்கள் என்ற கருத்தாக்கங்களை வளர்த்துக் கொண்டது. ஹோவால்டர் கருத்துப்படி, ரேபிக்கா வெஸ்டு, காத்திரையின் மேன்பீல்டு, டோரோத்தி ரிச்சர்ட்சன் ஆகியோர் இக்கால கட்டத்தின் தொடக்க கால நாவலாசிரியர்கள் ஆவர். இதே காலகட்டத்தில் ஜாய்ஸ், பிரௌஸ்ட் ஆகியோர் தனி மனித அக உலக நாவல்களை மிக நீளமாக எழுதினர். இதைப் பின்பற்றி **டோரோத்தி ரிச்சர்ட்சன்** பெண்ணின் அகஉலகைச் சித்தரிக்கும் நாவலை **(Pilgirimage)** எழுதினார். இப்பெண் எழுத்தாளரின் படைப்புப்பற்றிய அணுகுமுறையானது, நவீன பெண்ணியல் கொள்கைகள் உருவாவதை முன்னறிவிப்பதாக விளங்கியது. இவர் பெண்களுக்கு இருக்கவேண்டிய ஒரு வகையான எதிர்மறை ஆற்றலை ஆதரித்துப் பேசினார். ஆண்களின் தன்மையென இவர் கருதுகிற நிலையான, மாறாத ஒன்றாக ஒன்றை வரையறுக்கும், பார்வைகளையும், அப்படியான கருத்துக்களையும் இவர் புறக்கணித்துப் புறம் தள்ளினார். 'பன்முகப் பட்ட ஏற்பு நிலை' என்ற கோட்பாட்டையே ஆதரித்தார். மேலும் பெண் எழுத்தில் விளங்குகின்ற 'வடிவமின்றிக் கொட்டுகின்ற' பிரச்னையைக் காரண காரியத்தோடு விளக்கினார். இவ்வாறு கொட்டுவது பெண்ணின் இயல்பான வெளிப்பாட்டு முறையாகும் என்று கண்டு, அதை ஒரு கோட்பாடு என்று அளவிற்கு வளர்த்தெடுத்தார், மேலும் நீள்வட்ட வடிவமாகவும், துண்டு துண்டாக வாக்கியங்களை வேண்டுமென்றே அமைத்து எழுத முயற்சி செய்தார். ஏனென்றால் பெண்களின் மனமும் அவ்வாறுதான் வடிவமைக்கப் பட்டிருக்கிறது, நெய்யப்பட்டிருக்கிறது என்ற தம்மு

www.padippakam.com



டைய கருத்தை நிறுவ அவ்வாறு எழுத முயன்றார். மேலும் இவ்வாறு எழுதினார்.

''வெர்ஜினியா வுல்ப்புக்குப் பிறகு சமூக அங்கீகாரமற்ற உறவு, ஓரினப் புணர்ச்சி முதலிய பாலியல் வடிவங்கள் பெண் எழுத்தாளர்களின் புனைகதைகளில் புகத் தொடங்கின. [சிறப்பாக (Jean Rys) எழுத்துக்களில்] பிறகு பல்கலைக் கழகத்தில் படித்த பெண்களின் வருகை மூலம் ஒரு புதிய தலைமுறை உருவாயிற்று.

இவர்கள் பெண்களின் அமைதியின்மையை, நிறைவின்மையைத் தங்கள் எழுத்தில் வெளிப்படுத்த வேண்டும் என்ற தேவை இருப்பதைச் சிறிதும் உணர்ந்து எழுதியதாகத் தெரியவில்லை. ஆனாலும் எழுபதுகளின் தொடக்கத்தில் ஒரு பெரிய திருப்பம் ஏற்பட்டது. இக்காலப் பெண் எழுத்தாளர்களின் கோபக் குரல் வெளிப்படையாக வெளிப்பட்டது.''

ரிச்சர்ட்சன் போலவே, பெண் எழுத்தாளர்களின் எழுத்தைப் பற்றி வெர்ஜினியா வுல்ப்-ம் ஆழமான கருத்துக்களை முன்வைத்துள்ளார். நவீனப் பெண்ணியல் திறனாய்வில் ஒரு முக்கியமான முன்னோடியாக விளங்குகிறார். பெண்ணியல்வாதி போல அவர் இயங்கவில்லை என்றாலும் கூட பெண் எழுத்தாளர்கள் எதிர்கொள்ளுகின்ற பிரச்சினைகளின் மேல் தொடர்ந்து கவனம் செலுத்தி வந்தார். பெண்களின் இலக்கிய ஆர்வத்திற்குத் தொடர்ந்து தடையாகவும் பிரச்சினையாகவும் இருந்து வருபவவை அவர்களுடைய சமூகம், மற்றும் பொருளாதார நிலைமைகள் தாம் என்று அவர் நம்பினார். தமக்கு கிடைத்த கல்விகூட, பெண்ணாக இருந்ததால் தான் குறிப்பிட்ட எல்லைக்குள் உட்படுத்தப்பட்டு விட்டது என்றும் அறிந்திருந்தார். (எ. கா: அவருக்கு கிரேக்க மொழி தெரியாது). புளூம்ஸ்பரி-யினுடைய (Bloomsbury)

படிப்பகம்

www.padippakam.com



பாலியல் கருத்துக்களைப் பின்பற்றியதால் ஆண், பெண் இடையிலான பாலியல் போராட்டத்தை அமைதியான முறையில் தீர்த்துக் கொண்டார்.

பெண்ணியல்வாதிகளின் மனநிலையை, பார்வையை உதறித் தள்ளினார். மேலும் ஆணின் சுய இருப்பு உணர்விற்கும் (Male self realisation), பெண்ணின் சுய அழிவுணர்விற்கும் (female self annihilation) இடையிலான ஓர் நடுநிலைப்பாட்டைச் சாதிக்க முடியும் என நம்பினார். தம்முடைய பெண்மை எப்பொழுதும் நனவிலி நிலையிலேயே இருக்க வேண்டுமென விரும்பினார். அப்பொழுது தான் பெண்மையை அல்லது ஆண்மையை எதிர்த்து நிற்க நேர்வதிலிருந்து தப்பிக்க முடியும் என்றார்.

பெண்கள் எழுத்தைப் பற்றி எழுதியதில் வெர்ஜினியா வுல்ப்னுடைய செல்வாக்கு மிகுந்த, ஆர்வம் தருகின்ற கட்டுரை ''பெண்களுக்கான வேலைப்பாடுகள்'' (Professions for women) என்ற கட்டுரையாகும். அதில் தம் சொந்த அனுபவங்களையே பதிவு செய்துள்ளார். முதலில், 19ஆம் நூற்றாண்டு எழுத்தாளர்களைப் போலவே இவரும் ''பெண்களுக்கே உரிய சிறப்பாம்சம்'' (Women hood) என்ற கருத்தாக்கத்தால் பெரிதும் கவரப்பட்டுள்ளார். வீட்டின் தேவதை, ''பெண்'' என்ற கருத்துடைய இவர், பெண்கள் இரக்கமில்லாதவர்களாக, சுய நலமற்றவர்களாக, தூய்மையானவர்களாக விளங்க வேண்டும் என்கிறார். தங்கள் எழுத்தில் தங்களைப் பற்றிய சுய விமர்சனங்களை முன்வைப்பதற்கும் நேரமும் இடமும் ஒதுக்க வேண்டும் என்கிறார்.

இரண்டாவதாக, பெண்கள் தங்கள் உணர்ச்சிப் பெருக்குகளை அப்படியே வெளிப்படுத்தலாகாது என்ற சமூகத் தடை (Taboo), இவர்தம் உடல் சார்ந்த சொந்த அனுபவங்களைச் சொல்லவிடாமல் தடுத்துவிட்டது. இவ்

www.padippakam.com



வாறு பெண்களின் பாலியல் உணர்வுகளையும், நனவிலி மன ஓட்டங்களையும் சொல்லவிடாமல் தடுக்கின்ற சமூகத் தடையை இவர், தமது சொந்த வாழ்விலோ அல்லது படைப்புகளிலோ, என்றுமே மீறியது கிடையாது. எனவே உண்மையிலேயே பெண்களின் 'நனவிலி' உலகம்' பற்றிய நம்பிக்கை இவருக்குக் கிடையாது. ஆனால் பெண்களின் சிந்தனை ஆற்றலில் நம்பிக்கை வைத்திருந்தார். மேலும் பெண்கள் ஆண்களைவிட வேறுபட்ட முறையில் எழுதுவ தற்குக் காரணம் ஆண்களைவிட வேறுபட்ட உளவியல் கூறு உடையவர்கள் என்பதல்ல; மாறாக பெண்களின் சமூக அனுபவம் வேறாக இருப்பதுதான் என்றார். பெண் களின் அனுபவம் பற்றி எழுதுவதற்கு இவர் எடுத்துக் கொண்ட முயற்சிகள் எல்லாம் சுயசிந்தனையுடனும் மிகவும் விழிப்புணர்வுடனும் மேற்கொண்டவையாகும். இவ்வாறு முயற்சி செய்து, ஒரு எல்லைக்குள் உட்பட்ட பெண்களின் வாழ்க்கையை விளக்குவதற்கு அதற்கே உரிய தனிச் சிறப்பான மொழி நெறியைக் கண்டுபிடிப்பதே இவருடைய நோக்கமாக இருந்தது. என்றைக்குப் பெண் கள், சமூகம் மற்றும் பொருளாதார நிலைகளில் ஆண் களுக்குச் சமமான நிலையை அடைகிற சாதனையைப் பெறுகிறார்களோ அன்றைக்கு, பெண்கள் தங்களுக்கான கலை-இலக்கியத் திறமையைச் சுதந்திரமாக வளர்த்துக் கொள்வதை எந்த ஒரு சக்தியாலும் தடுத்து நிறுத்திவிட முடியாது என்று நம்பினார்.

பெண் எழுத்தாளர் பற்றிய திறனாய்வில் குறிப்பிடத் தக்க மற்றொரு நூல், மேரி எல்மான் (Marry Ellmann) எழுதிய பெண்களைப் பற்றிய சிந்தனைகள் (Thinking about women—1968) என்ற நூலாகும். பெண் எழுத் தாளராகிய இவர் நவீன பெண்ணியத்தின் ஆரம்ப கால எழுத்தாளராவார். இவர் லிங்கமய வாதத்தை மிகவும் அறிவு ஆற்றலுடன் தாக்கினார். வால்டர் பேட்டரின்

படிப்பகம்

www.padippakam.com



''கலையின் ஆண் தன்மை'' என்ற அபத்தமான கருத்தைக் கேலி செய்தார். மேலும் இவர் ஹோவால்டர் போல் பெண்கள் எழுத்துக்களைப் பெண்களின் அனுபவங்களோடு மட்டும் அடையாளம் காணுவதை மறுத்தார். அவைகளைச் சில இலக்கிய நடைகளோடு உறவுபடுத்தி ஆராய்ந்தார். பெண் எழுத்தாளர்கள் சிலர் ஆண்களின் ஒரு புள்ளியில் குத்திட்ட நிலையான அணுகுமுறைகளைப் புரட்டிவிடுகின்றனர். சிலர் அதிகமான அதிகாரத்தொனியோடு எழுதுகின்றனர். சிலர் மிகத் தீவிரமான உணர்ச்சிப் பெருக்கோடும் செயல் நோக்கோடும் எழுதுகின்றனர். பாலியல் வர்ணனைகளில் பழமையான மரபுகளைத் தகர்க்கின்றனர். ஆண்களின் மதிப்பீடுகளைத் தலைகீழாக மாற்றுகின்றனர், தடுக்கப் பட்டவைகளின் மேல் அதிக ஆர்வத்துடன் ஈடுபடுகின்றனர். ஏனென்றால் ஆண்களில் அதிகாரத்தை இங்கே தான் தகர்க்க முடியும் என நம்புகின்றனர். இவ்வாறு மேரி எல்மான் பெண் எழுத்தாளர்களின் எழுத்துக்களை அடையாளம் காண்கின்றார்.

## பிரெஞ்சு நாட்டுப் பெண்ணியமும் திறனாய்வுக் கொள்கைகளும்

இந்நாட்டுப் பெண்ணியல் திறனாய்வு பெரிதும் ஆழமாக உளப் பகுப்பாய்வுக் கொள்கையின் செல்வாக்கிற்கு உட்பட்டிருக்கிறது. குறிப்பாக, பிராய்டின் கொள்கைகளின் மேல், லக்கான் நடத்திய மறு ஆய்வுகள் மூலம் பெரும் செல்வாக்கிற்குள்ளாகி உள்ளது. லக்கான் நடத்திய இவ்வாய்வுகள் காரணமாக, பிரெஞ்சுப் பெண்ணியல் திறனாய்வாளர் பலர் பிராய்டின் மேல் கொண்டிருந்த பகையுணர்வை விலக்கிக் கொண்டுள்ளனர். லக்கானுக்கு முன்பு பிராய்டின் கொள்கைகளை (குறிப்பாக அமெரிக்கா

படிப்பகம்

www.padippakam.com



வில்) வெறுமனே மிகவும் குறுகிய அளவில் அதாவது இயற்கையான உயிரியல் கூறு கொண்டவை—என்ற அளவில் அணுகினர்

ஒரு பெண் குழந்தை, ஆண் குழந்தையின் பிறப் புறுப்பைப் பார்த்து தனக்கு அது இல்லை என்பதால், தன்னைப் பெண் என்று அடையாளம் கண்டுகொள்கிறது, இவ்வாறு தனக்கு அந்த உறுப்பு இல்லை என்று எதிர் மறையின் மூலமாகத் தன்னை அடையாளம் கண்டு கொள் வதால், தவிர்க்க முடியாதபடி, ஆணுறுப்பின்மேல் உருவா கும் பொறாமை உணர்வினால் துன்புறுகிறது. பிராய் டின் கொள்கைப்படி, இந்தப் பொறாமைக் குணம் உலகப் பொதுவானது. இந்தக் குணம்தான் பெண்களிடம் உரு வாகும் பிறப்புறுப்பை இழந்துவிடுவோம் என்ற பயச்சிக்க லுக்கு (Castration complex) காரணமாகும்.

இந்தச் சிக்கலின் காரணமாகத்தான் பெண்களே தங் களை ஆண்மை இழந்தவர் Hommes manqnes எனக் கருதுகின்றனர். பிராய்டின் இத்தகைய பார்வைக்கு எர்னஸ்டு ஜோன்ஸ்தான் ''ஆண் பிறப்புறுப்பு மைய வாதம்'' (அ) லிங்கமையவாதம் (phallo centrie) என்ற பெயரைச் சூட்டினார். இந்தச் சொல்லாட்சியைத் ஆணா திக்கத்தைப்பற்றிப் பேசும் போது எல்லா பெண்ணியல் வாதிகளும் பொதுவாகப் பயன்படுத்துகின்றனர்.

ஜூலியட் மிட்செல் (Juliet Mitchell) தம்முடைய உளப்பகுப்பாய்வும் பெண்ணியமும் (psycho analosis and Feminism-1975) என்ற நூலில் பிராய்டிற்கு ஆதரவாகப் பேசுகிறார். பிராய்டினுடைய உளப் பகுப்பாய்வுக் கொள்கைகள் ''தந்தை வழி அதிகார அமைப்பை''ப் பரிந் துரைப்பதல்ல; மாறாக அந்த அமைப்பைப் பகுத்தாய் பவை ஆகும். பிராய்டு சமூக உண்மைகளின் மனவெளிப் பாட்டைத்தான் (mental representation) விளக்குகிறாரே

படிப்பகம்

www.padippakam.com



ஒழிய, அந்தச் சமூக உண்மைகளையே அல்ல என ஜூலியட் நம்புகிறார். ஆனாலும் இவ்வாறு பிராய்டினுடைய லிங்க மையவாதத்திற்கு ஜூலியட் கூறுகிற சமாதானக் கருத்துக்களால் பல பெண்ணியல் திறனாய்வாளர்களைத் திருப்திபடுத்த முடியவில்லை ஏனென்றால் பிராய்டை மறுசீரமைப்புச் செய்யும் இவரது முயற்சி, லக்கானின் முயற்சியோடு ஒத்து இருந்தாலும், லக்கான் சசூரின் மொழியியல் கோட்பாட்டைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வது போலத் தானும் பயன்படுத்திக் கொள்ளத் தவறியதுதான்

கீழ்படிந்து போதல் (Passive), சுய காதல் மேற்கொள்ளுதல்(narcissistic), தன்னைத் துன்புறுத்தும் கொடுமையில் இன்பம் காணும் தன்மை (masochistic), ஆண் பிறப்புறுப்புப் பொறாமை-ஆகிய குணங்களை இயல்பாகவே பெண்கள் கொண்டவர்கள் என்ற அணுகுமுறைக்கு எதிராகப் பெண்ணியல் வாதிகள் தவிர்க்க முடியாதவாறு இயங்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகின்றனர். உண்மையில் இக்குணங்கள் எல்லாம் பெண்களிடையே இயற்கையாகவே ஒன்றும் அமையவில்லை, ஆண்களின் அளவு கோலினால் இத்தகைய குணங்கள் கற்பிக்கப்படுகின்றன என எடுத்துக்காட்டுகின்றனர். மேலும் சில பிரெஞ்சு பெண்ணியல்வாதிகள், பிராய்டின் ஆண் பிறப்புறுப்பு (அ) ''லிங்கம்'' என்ற சொல்லாட்சி குறியீட்டுக் குணம் கொண்டது: நேரடியாக அந்த இயற்கை உறுப்பைக் குறிப்பது அல்ல என வலியுறுத்திப் பேசுகின்றனர். இதற்கு ஏற்ப லக்கானும், செழிப்பைக் குறிக்கக் 'குறியிடாக' வேளாண்மைப் பண்பாட்டில் பயன்படுத்தப்பட்டிருக்கும் இச்சொல்லை அங்கிருந்து எடுத்து, அதே பொருளில் பயன் படுத்துகிறார். மேலும் இதே சொல், ''அதிகாரம்'' என்பதை குறியீடாகச் சுட்டுவதற்கு இறையியலும் மானுடவியலும் பயன்படுத்தப்படுகிறது.

www.padippakam.com



லக்கானின் வரை படம், தெளிவற்று விளங்கும் பாலியலின் இடத்தைத் தெளிவுபடுத்திக் கொள்ளப் பெண்ணியல் வாதிகளுக்குப் பயனுள்ளதாக விளங்கும்.

முதல் குறி இயற்கை வடிவமாகும். அது பொருளுக்கும் சொல்லுக்குமுள்ள இயற்கையான தொடர்பை விளக்குகிறது. இந்தக்குறி, சசூருக்கு முந்திய பழைய மொழியியல் கருத்தாக்கத்தின் சாரமாக அமைந்திருக்கிறது. அதாவது அதன்படி. பொருளுக்கும் சொல்லுக்குமிடையே உள்ள உறவு (அ) ஒருமை இயற்கையானது, உலகப் பொதுமையானது.

இரண்டாவது படம் இந்தப் பழைய ஒருமைக் கருத்தாக்கத்தை அழித்து விடுகிறது. குறிப்பான்களாகிய (signifiers) தலைவிகள்/தலைவர்கள் என்ற இரண்டு சொற்களும், ஒரே மாதிரியான 'கதவுகளோடு' இணைக்கப்பட்டுள்ளன.

(இங்கே இரண்டு குறிப்பான்களுக்கு ஒரே மாதிரியான குறிப்பீடு (signified)—அதாவது ஒரே மாதிரியான கதவு) அமைந்துள்ளது,)

ஒப்புமையுடைய ஒரே மாதிரியான கதவுகள்தாம் வேறுபட்ட பலமொழி அமைப்புகளுக்குள் நுழைய ஆரம்பிக்கின்றன. இவ்வாறு பலமொழி அமைப்புகள் நுழைவதைக் கொண்டு, அவைகள் வேறுவேறு கதவுகள் என நாம் அறிய நேர்கிறது. இந்த அடிப்படையில்தான் ''பெண்'' என்ற சொல்லும் ஒரு 'குறிப்பானாக' விளங்குகிறதே ஒழிய, உயிரியல் அடிப்படையில் அவள் பெண்பாலாக விளங்குகின்றாள் என்பதனால் அல்ல! (அதாவது பெண் என்ற சொல் இடுகுறிப் பெயர்! அவ்வளவுதான்; எந்த

பெ—8

படிப்பகம்

www.padippakam.com



விதமான காரணகாரியத் தொடர்போடு அச்சொல் விளங்கவில்லை என்கிறார்! (பஞ்சு) இந்தப் பெண் என்ற குறிப்பானுக்கும் அது குறிக்கின்ற அந்தக் குறிப்பிட்ட குறிப்பீடாகிய இயற்கை உடலுக்கும் ஒரு சின்னஞ்சிறு காரணகாரியத்தொடர்பு கூட கிடையாது. ஆனாலும்' இந்தப் 'பெண்' என்ற குறிப்பானின் ஏடாகோடமான வடிவத்தை நீக்கிவிட்டால் இவ்வாறு குறியீடு செய்வதற்கு முன்பிருந்த உண்மையான இயற்கையான—'பெண்' வெளிச்சத்திற்கு வந்து விடுவாள் என்பது பொருளல்ல. **இவ்வாறு குறிப்படுத்துகின்ற அமைப்பு முறையிலிருந்து நாம் ஒரு போதும் வெளியே வந்துவிட முடியாது.** லிங்கமைய வாதத்தை (அதாவது ஆணின் பிறப்புறுப்பு என்ற குறிப பான் ஆதிக்கம் செலுத்துகிறது என்ற பார்வையை) எதிர்க்கின்ற ஒரு பெண்ணியல் வாதியும்கூட இந்தக் குறிப் படுத்துகின்ற அமைப்புக்குள்ளிருந்துதான் இயங்கியாக வேண்டும். **ஏனென்றால் பெண் என்ற பொருளைவிட, அவளுக்கென்று அமைந்த குறிப்பான் மிகவும் ஆற்றல் வாய்ந்த தாகும்.**

லக்கானைப் பொறுத்தவரை, லிங்கமையப் பிரச்னை குறிகளின் (sign) அமைப்புமுறையிலிருந்து பிரித்துப் பார்க்க முடியாத ஒன்றாகும். ஆணின் பிறப்புறுப்பு (லிங்கம்) என்ற இந்தக் குறிப்பான் முழுமையான இருப்பு டைய, சக்தி வாய்ந்த ஒன்றாக விளங்குவதாலும் கைப் பற்ற முடியாத இடைவெளியுடன் விளங்குவதாலும் எங்கே உயிர் உறுப்பை இழந்து விடுவோமோ என்ற அச்சம் மிகு மனச்சிக்கலை ஏற்படுத்தி(Castriation complex) ஆண் பெண் இருவரையும் பயமுறுத்துகிறது.

மேலும் மேற்கூறிய இந்த மனச்சிக்கல் ஓர் அமைப் பாகவே ஆகிவிட்டது. எப்படியென்றால் மொழியும் நனவிலி மனமும் எந்த முறையில் ஓர் அமைப்பாகி விட்டதோ அதே முறையில்.

படிப்பகம்

www.padippakam.com



தனிப்பட்ட மனிதனுடைய அகக்கூறுகளான ''இழப்பு உணர்வுகள்'' மொழிக்குள் பதிவாகியதால் பிளவுகள்தோன்றின. இந்த ''இழப்பு உணர்வுகள்'' குறிப்பான்கள், தங்களுடைய முழுப்பொருளையும் வெளிப்படுத்துவதில் தோல்வி காணும்போது தோன்றுகின்றன. ஆணிடமும் பெண்ணிடமும் பல்வேறு முறைகளில் காணப்படும் பாலியலின் முழுமைக் குறைவு, இந்த ''லிங்கம்'' மூலமாக உருவகப் படுத்தப்பட்டுள்ளது மேலும் சமூகப் பொருளாதார உண்மைகள், நனவிலி மனத்திலுள்ள இந்தப் பாலியல் பற்றாக்குறையின் விளைவுகளைக் கூட்டவோ குறைக்கவோ செய்கின்றன என்பதும் உண்மை. எனவே இந்த 'லிங்க உருவகம்' முழுமையாக எங்கும் நிறைந்ததைக் குறிப்பதற்கான ஒரு குறிப்பானாகத்தான் விளங்குகிறதே ஒழிய, உடல் உறுப்புக்களின் ஒன்றைக் குறிக்க அல்ல. இவ்வாறு உயிர் உறுப்பை இழந்து விடுவோமோ என்ற பய உணர்வு உருவாவதற்கு உலகம் முழுவதும் மூல ஊற்றாக விளங்குகின்ற உறுதியான இந்தக் குறிப்பானை (லிங்கத்தை) லக்கான், ''தந்தையின் பெயர்'' (name of the father) என்று அழைக்கின்றார். இவ்வாறு சில நேரங்களில் அழைப்பதன் மூலம், 'லிங்கம்' என்ற இந்தக் குறிப்பான், உண்மையில் இல்லாத ஒன்றாகவும், எந்த விதமான உயிரியல் கூறு அற்ற (non biological) ஒன்றாகவும் இருக்கின்ற ஒருவிதமான போக்கை வலியுறுத்திவிடுகிறார்.

எல்லா மனிதர்களும் தங்களிடையே அமைத்துக் கொள்ளும் விருப்பு / வெறுப்பு ஆகிய மனித உறவுகளை, லிங்கத்தின் இருப்பு (அ) இன்மை என்பதை அடிப்படையாக வைத்தே அமைத்துக் கொள்ளுகின்றார். இதை ஓர் உலகப் பொதுவான அமைப்பாக வலியுறுத்துவதன் மூலம் அமைப்பியல் வாதத்தின் சரியான மாதிரியாக இது விளங்குகிறது.

www.padippakam.com



ஆண்மை, பெண்மை என்று பண்பாட்டுப் பின்னணியில் தலிப்பட்டவர்களுக்கு முக்கியத்துவம் உருவாகின்றபோது, தந்தையின் இடம் தனிச் சிறப்பைப் பெற்றது. பிராய்டினுடைய ஈடிபஸ் சிக்கலை லக்கான் எடுத்துக் கொண்டு மூன்று கட்டமாக விளக்குகிறார்.

1. ஓர் ஆண் குழந்தை தன்னை முழுமையாகத் தன் தாயுடன் இணைத்து அடையாளம் கண்டுகொள்கிறது. மேலும் தன்னை அறியாமலேயே தாயிடம் நிலவுகின்ற பற்றாக்குறை ஒவ்வொன்றையும் நீக்கிப் பூர்த்தி செய்ய அவாவுகிறது: அதனால் தாயின் ஆசையாக விளங்குகின்ற 'லிங்கத்துடன்' தன்னை இணைத்து அடையாளம் கண்டு கொள்கிறது. இவ்வாறு செய்வதன்மூலம், தனக்கென ஒன்றும் இல்லாமல், வெறுமனே தன்னிருப்பை வெளிப் படுத்துகிறது.

2. இவ்வாறு லிங்கத்துடன் இணைத்துக் குழந்தை தன்னை அடையாளம் கண்டு கொள்வதையும், அவ்வாறு அடையாளம் காண்பதைத் தாய் ஒருவாறு ஒத்துக்கொள் வதையும், தந்தை தடுக்கிறார். இதனால் பிறப்புறுப்பை இழந்துவிடுவோமோ என்ற அச்ச உணர்வினால் உருவான 'தந்தையின் விதிகளுக்கு' எதிராக குழந்தை வினை புரியத் தொடங்குகிறது.

3. பிறகு ஒரு கட்டத்தில் குழந்தையாவது தன்னைப் போலவே ''லிங்கமுள்ள'' (உண்மையில் யாருமே இந்த லிங்கத்தைப் பெற்றிருக்கவில்லை) தந்தையுடன் இணைத்துத் தன்னை அடையாளம் கண்டுகொள்கிறது. ஒரு கட்டத்தில், தான் தந்தையின் இடத்தை வகிக்க வேண்டியது வரும் என்ற நிலையிலும், தந்தையிடம் தன் அடையாளங்களைக் காண்கிற உணர்வுகளை உருவாக்கிக்கொள் கிறது. இவ்வாறு தாயுடன் அடையாளம் காணும் தன் மூல ஆசையை அடக்கி ஒடுக்கிவிட்டு, அதற்குப் பதிலாக,

படிப்பகம்

www.padippakam.com



'தந்தை விதிகளை' ஏற்றுக்கொள்கிறது. (பிராய்டு இதை ''நடப்பியல் விதி'' என்கிறார்.)

இவ்வாறு தன்னை அடையாளம் காணும் உணர்வைக் குழந்தையானது, குறியீட்டு ஒழுங்குடைய மொழி உலகிற்குள் நுழைந்த பிறகுதான் அடைகிறது. **இந்த மொழியானது ஒற்றுமைக்கும் வேறுபாட்டிற்கும் இடையிலுள்ள உறவுகளினால் செய்யப்பட்ட** ஒன்றாகும். இது என்றால், பிறகு அது ஏன் என்ற முறையில் திணிக்கப்பட்டத் தந்தையின் விதிகளை ஏற்றுக்கொண்ட பிறகுதான், அடுத்தக் கட்டமாக குழந்தை, மொழி அமைத்துக் கொடுத்த ஆண்மை, பெண்மை என்ற வேறுபாட்டு உலகிற்குள் நுழைவதன் மூலம் தந்தையின் உருவகப்படுத்தும் குணத்தைக் குழந்தை அடையாளம் கண்டுகொள்கிறது. இவ்வாறு குழந்தையானது 'விதி வழங்குபவர்' என்ற பாணியில் தந்தையை ஏற்று நிலைநிறுத்திக்கொள்ளக் காரணம் வெறுமனே மொழி அமைப்பின் விளைவாகத்தானே ஒழிய, பழங்கால மக்கள் நம்பியது போலத் தந்தை என்பவர் தலைமையான படைப்புத் தொழிலைச் சார்ந்தவர் என்பதால் அல்ல. மேலும், தாயும் தந்தையின் செயல்பாட்டை ஏற்றுக் கொள்வதற்குக் காரணம் தன் ஆசையை நாகரிக முறையில் (அதாவது அடங்கி ஒடுங்கிப் போகுமாறு) ஒழுங்குபடுத்துகிற 'ஓர் அமைப்பியல் ரீதியாக' வினை புரிகின்ற இந்த குறிப்பானோடு (லிங்கம்) தன்னையும் இணைத்து அடையாளம் காண்பதுதான். மேற்கண்டவாறு ஆசைகளை அடக்கி ஒழுங்குபடுத்திக்கொள்வதும், பாலியல் வேறுபாட்டின் தேவையை ஏற்றுக்கொள்வதும் தாம், ஒரு குழந்தையைச் சமூகமயப்படுத்துவதில் பெரும் பங்கு வகிக்கின்றன.

''லிங்கம்'', விரிந்த ஒரு பொருளில் குறியீடாகத்தான் பயன்படுத்தப்படுகிறது என்ற அடிப்படையில் (லக்கான் கூறுவதுபோல) மிகவும் கறாராக அணுகினாலும் கூட,

படிப்பகம்

www.padippakam.com



லக்கானுடைய இந்தக் கோட்பாட்டிலும் ஆண் சலுகை மிக்கவனாகவே விளங்குகிறான். இருபாலர்க்கும் சமமான நிலை அமைந்துவிடவில்லை. இவ்வாறு சில பெண்ணியல் வாதிகள் லக்கானின் இந்த விளக்கத்தையும் எதிர்க்கின்றனர். ஜானே கல்லோப் (Jane Gallop) கருத்துப்படி, பாலியல் வேறுபாட்டை விளக்குவதற்கு லக்கானின் பார்வையைப் பயன்படுத்தும் போதும், தவிர்க்க முடியாதபடி, மீண்டும் பெண்ணின் பாலியல், கீழ்ப்படிந்தே கிடக்க நேர்கிறது. லிங்கமானது, முழுமையாக நிறைவு நிலை உடையது அல்ல என்று, எங்கே இதையும் இழந்துவிடுவோமோ என்று ஆண்மகன் மனச்சிக்கலில் உழலும் போது, தான் ஆணாக இல்லையே என்று பெண்ணும் அதே மனச்சிக்கலில் உழலுகிறாள்.

மேலும் ஈடிபஸ் சிக்கலை ஒரு பெண் குழந்தை எவ்வாறு கடந்து செல்லுகிறது என்பது தெளிவாக இல்லை. முதலில் 'தகாத உறவுகள்' எனக் கருதப்படுகின்ற உறவுகளைத் தந்தையின் விதி தடுப்பதற்கு முன்பாகவே, பெண் குழந்தை தான் தாய்மேல் கொண்டிருந்த அன்பை, தந்தைமேல் மாற்றியாக வேண்டும். பெண் குழந்தையைப் பொருத்தவரை, இதுஒரு அதிகப்படியான பிரச்சனையாக இருக்கிறது; இரண்டாவது, ஏற்கனவே பெண் குழந்தை லிங்க இழப்பு உணர்வில் வருந்திக்கொண்டிருக்கிறது. அந்நிலையில் லிங்க இழப்பு உணர்வு என்ற இந்த பய முறுத்தல், ஓர் ஆண் குழந்தை வளர்ச்சியில் என்ன இடம் வகிக்கிறது என்பதைக் கண்டுகொள்ள எளிதாக இருப்பது போல, பெண் குழந்தை மனத்திற்குள் அந்தப் பயமுறுத்தல் எத்தகைய இடத்தை வகிக்கிறது என்பதைக் கண்டுகொள்வது மிகவும் அரிய செயலாக இருக்கிறது. மேலும் "தந்தையின் விதிகளை" ஆண் குழந்தை ஏற்றுக்கொள்ளக் காரணம் இருப்பதுபோல பெண் குழந்தை ஏற்றுக் கொள்ள என்ன காரணம் இருக்கிறது?

படிப்பகம்

www.padippakam.com



லக்கான் பார்வையின்மேல் இத்தகைய விமர்சனங்கள் இருந்தாலும், அவருடைய அணுகுமுறையினால் ஏற்பட்ட நல்ல விளைவாக, பாலியல் வேறுபாட்டிற்கு, உயிரியல் அடிப்படையில் காரணம் பார்க்கின்ற பார்வையைத் துரத்திவிட்டு அந்த இடத்தில், பிராய்டின் உளப்பகுப்பு ஆய்வு அடிப்படையில் மேலும் சிந்தித்து, சமூக அமைப்பைக் (மொழி அமைப்பு மூலமாக) காரணமாகக் காட்டியதைக் கூறலாம்.

மேலும், லக்கானின் இத்தகைய அணுகுமுறை, மொழி மைய வாதத்திற்கு எதிரான ஒரு சொல்லாடலைப் பெண்ணியல் வாதிகள் வளர்ப்பதற்கும் தூண்டுகோலாக அமைந்தது. லக்கான், தான் ஒரு பெண்ணியல்வாதி என்ற மனநிலையோடு இயங்கவில்லை. பெண்ணியல்வாதிகளோடு பிணக்குக்கொள்பவராகவும், கவித்துவக் குணம் மிக்கவராகவும் விளங்கியிருப்பதோடு 'முடிவு மேற்கோள் வகையும்', உண்மைகள்' என்று சிலவற்றை நிறுவுவதையும் தவிர்த்திருக்கிறார். அதனால்தான், ''பெண் என்ன தான் விரும்புகிறாள்?'' என்ற பிராய்டின் விடை கூறப்படாத வினாவை, லக்கான் மீண்டும் எடுத்துக்கொண்டு ஆராயும்போது, பெண் என்பவள், நிலையாக நிற்காத திரவப் பொருளாக இருப்பதால், அந்த வினாவிற்கு எந்த முடிவும் கூறாமல், அதை இன்னும் விடையற்ற வினாவாகவே விட்டு வைத்திட வேண்டியதுதான் என்கிறார்.

''பெண் ஒருபோதும் ஒன்றுபோல் (அ) ஒரே சமமாக (அ) ஒரே மாதிரியாகப் பேசுவதில்லை; உள்ளே பொங்குவதை அப்படியே வெளியே கொட்டிவிடுகிறாள்; ஏமாறுவதும் ஏமாற்றுவதும் அவளிடமே பிறப்பெடுக்கின்றன"— இவ்வாறு பேசப்படுகிறது. இத்தகைய பார்வையினால், மீண்டும் பெண்ணை நிலையற்றவள், எந்தவிதக்கணிப்பிற்குள்ளும் அடங்காதவள், சலனம் மிக்கவள் என்று பேசுகின்ற லிங்க மையவாதத்திற்குள் தள்ளி, அவ்வளை அறவே

படிப்பகம்

www.padippakam.com



ஒதுக்கித் தள்ளப் பார்க்கிற விபத்திற்குள் போய் மாட்டிக் கொள்ள நேர்கிறது.

உண்மையில் ''பெண் வெளிப்படையாக'' இருப்பதில் உள்ள சில அனுகூலமான நல்ல அம்சங்கள்தாம், தந்தை அதிகார அமைப்பில், அவள் இழந்துபோன தன் பழைய வலிமையை மீண்டும் பெறுவதற்குத் தடையாக உள்ளன.

''பெண்ணின் பாலியல்'' என்பது கவிதை உற்பத்தித் தன்மையோடு நேரடியாக ஒத்து இயங்குகிறது. உணர்வுச் சுழியில் இழுத்துச்செல்லுகின்ற இந்தப் படைப்பாக்கக் குணமானது, லிங்கமையச் சொல்லாடலை—மொழியில் ஆணாதிக்கும் நிறுவியுள்ள சொல்லாடலை — உடைத்து வேரோடு தகர்த்தெறிகிறது. இத்தகைய உணர்வுமையக் கோட்பாட்டைப் பெரிதும் வலியுறுத்துபவர்களாக ழலியோகிறிஸ்தெவா, ஹெலன் சிக்ஸீ (He'len Cixous) ஆகிய இருவரும் விளங்குகின்றனர்.

காரண காரியத்திற்கு உட்பட்ட, மூடிய அமைப்பு, காரண காரியத்தைத் தகர்தெறிகின்ற—திறந்தவெளி அமைப்பு ஆகிய இரு ஓரங்களும் இடைப்பட்ட ஒரு தளத்தில்தான் கிறிஸ்தெவாவின் கோட்பாட்டு மையம் அமைந்துள்ளது. மேற்கூறிய இரண்டு அமைப்பிற்கும், நடுவில் கவிதைதான் நிற்கிறது என்பதால், அதுதான் பெண்ணைப் பகுத்தாராய்வதற்கு வசதியான களமாக உள்ளது எனக் கருதுகிறார். மேலும் சில நேரங்களில், கவிதைதான், காரணகாரியத்துக்கு அப்பால் வெளியே இழுத்துச் செல்லுகின்ற ஆசை, பயம் என்கிற இரண்டு அடிப்படை உணர்வுகள் வந்து குவிவதற்குரிய திறந்த களமாகவும் உள்ளது.

அவந்த்-கார்டு இலக்கியத்தில்தான் முதன் முதலில் காரண காரியத்திற்கு அப்பாற்பட்ட தன்மை, ஒழுங்கு

www.padippakam.com



நெறிப்படுத்தப்பட்ட மொழிக்குள் நுழைந்து, இணைக் கப்பட்டுள்ள பேசுபவன் (அ) படைப்பாளி கேட்பவன் (அ) வாசகன் என்ற எழுவாய்களைத் தகர்த்தெறிந்திடு வேன் என்று பயமுறுத்துகிறது.

**பொருள் பிறப்பதற்கு எழுவாய் தேவையில்லை; ஆனால் பொருள் இயங்குகிற களமாக இருக்க எழுவாய் தேவைப்படு கிறது.** எனவே எழுவாயை அடையாளம் காணும் அணுகு முறை, மாற்றத்திற்கும் சிதறலுக்கும் உள்ளாகிறது; மரபான தொடர்ச்சியை இழக்கிறது. இந்த மொழியைப் போலவேதான், ஈடிபஸ் சிக்கலுக்கு முந்திய கட்டத்தில் குழந்தைகளிடம் உருவாகும் 'தூண்டல்கள்' (drives) அமைந்துள்ளன. இவ்வாறு இயல்பாகப் பொங்குகின்ற, சந்தம்மிகு தூண்டல்களை அமுக்கி வைக்க நேரும்போது, குறியியல் பொருட்கள் (Semiotic materials) தோன்று கின்றன. பிறகு அவை குறியீட்டுப் பொருட்களாக (Symbolic) ஆகி, நிலைபெற்றுவிடுகின்றன. ஈடிபஸ் சிக்கலுக்கு முந்திய குழந்தையின் மழலைப் பேச்சு, குறியியல் முறையிலான சொல்லாடல் போலவே மிகப் பொருத்தமாக அமைந்திருக்கிறது. எனவே வளர்ந்த பிறகும், மொழி தனக்குத்தானே இந்தக் குறியியல் முறை யிலான இயக்கக்கூறுகள் சிலவற்றைத், தன்னுள் பிடித்து வைத்துக் கொள்கிறது. இவ்வாறு மொழிக்குள் ஓட நேர்ந்த இந்தக் குறியியல் கூறுகளின் எதிரொலிகளைத் தாம் கவிஞன் ஒன்றாகக் கூட்டி இசைவுபடுத்தி பொருத்த மாக வடிவமைக்கிறான்.

மேற்கூறிய உடலால் வெளிப்படும் உளக்கூறுத் தூண் டல்கள் (pshchosomatic) ஈடிபஸ் சிக்கலுக்கு முந்தியவை களாக இருப்பதால், அவைகளின் தாயின் உடலோடு மிகவும் நெருக்கமான இணைப்புக்கொண்டுள்ளன. சுதந் திரமாக மிதப்பதற்கமைந்து கடலெனச் சொல்லத் தக்க

www.padippakam.com



கருப்பை, ஆழமான புலன் நுகர் ஆற்றலை வழங்கும் தாயின் முலைகள் ஆகியவை ஈடிபஸ் சிக்கலுக்கு முந்திய குழந்தையின் அனுபவங்களில் முதலிடம் வகிக்கின்றன. எனவே மேற்கூறியவாறு இம்முதல் தூண்டல்களோடு இணைந்து உருவாகும் குறியியல், தவிர்க்க முடியாதபடிப் பெண் உடம்போடு மிகவும் நெருக்கமாக இணைந்து கிடக்கிறது; அதே நேரத்தில் குறியீட்டிலோ இக்குறிகளை வெட்டியும் அமுக்கியுமாக அலவகளின் மேல் வினைபுரி கின்ற (இத்தகைய வினைபுரிதலினால்தான் மொழி எனும் சொல்லாடல் பிறக்கிறது) தந்தையின் விதியோடு மிகவும் நெருக்கமாக இணைந்து கிடக்கிறது.

சொல்லாடலுக்கு (அ) மொழிக்கு வழிகாட்டியாகிய நனவிலி மனத்தின் மௌனம்தான் ''பெண்'' என்பவள். 'நான்—நீ—மற்றவை'' (I—thou—other) என்ற உறவாக் கத்தில் பெண் ''மற்றவை'' என்ற இடத்தை வகிக்கிறாள், **இவ்வாறு அவள் கட்டுப்படாத வெளியில் நின்றுகொண்டு** காரண—காரியத்திற்கு உட்பட்டு இயங்கும் சொல் லாடலைச் சிதறடிப்பேன் எனப் பயமுறுத்துகிறாள்.

மற்றொரு பார்வையில் குழந்தையின் ஈடிபஸ் சிக்க லுக்கு முந்திய காலகட்டம், ஆண், பெண் என்ற பாலியல் வேறுபாடற்ற காலமாதலால் மேலே கூறியதுபோல இந்தக் குறியியல் பெண்ணியலோடு மிகவும் நெருக்க மானது என்று கொள்வதும் ஐயப்பாட்டிற்கு இடமில்லாத ஒன்றாகவும் இல்லை. ஒருவர் இப்படிக் கூறலாம். ''கிறிஸ்தெவா பெண்ணாக இருப்பதால், பெண்களின் சார்பாக, அமுக்கப்படாத, தன்னிச்சையாகப் பொங்கி நிறைகின்ற சுதந்திரமான இந்தச் சக்தியைப் பெண்களுக் குரியதாக உரிமை கொண்டாடுகிறார்.''

அவந்த்—கார்டு இலக்கியத்தின் கவிஞர்கள் ஆண், பெண் யாராக இருந்தாலும் தாயின் உடலுக்குள் புகுந்து

படிப்பகம்

www.padippakam.com



கொள்கின்றனர். தந்தையின் அதிகாரத் தலைமையை எதிர்த்து நிற்கின்றனர். எடுத்துக்காட்டாக, மல்லார்மே வாக்கிய விதிகளைத் தலைகீழாகப் புரட்டிப்போடுவதன் மூலம், தந்தையின் விதிகளையும் தலைகீழாக மாற்றுகிறார். மேலும் தாய்மையோடு இணைந்து குறியியல் முறையை (Semiotics) திரும்பவும் பெறுவதன் மூலம், தாயுடன் இணைத்துத் தன்னை அடையாளம் காண்கிறார். கிறிஸ்தெவா, இத்தகையக் கவிதைப் புரட்சியைப் பொதுவாக அரசியல் புரட்சியுடனும், குறிப்பாகப் பெண்ணியல் வாதிகளின் உரிமைப்புரட்சியுடனும் மிகநெருக்கமாக இணைத்துப் பார்க்கிறார். மேலும் பெண்ணியல் வாத இயக்கங்கள், அவந்த்கார்டு இலக்கியச் சொல்லாடலுடன் தொடர்பு கொள்ளும்படியான ஒழுங்கற்ற வடிவத்தை (form of Anarchism) கட்டாயம்கண்டுபிடித்தாகவேண்டும் என்கிறார். லிங்கமையவாதத்தின் ஆதிக்கப் போக்கை அழிப்பதற்குத் தவிர்க்க முடியாதபடி தங்களுக்குத் தேவையான தத்துவமாகவும் அரசியல் நிலைப்பாடாகவும் இந்த ஒழுங்கற்ற வடிவம் என்ற கோட்பாடு விளங்கும் என்கிறார்.

சந்தால் சவாப் (Chantal Chawaf), சவியேர் காதியே (xavier Gauthier) லூயிஇரிகாரே (Luce lrigary) உள்ளிட்ட பல பிரெஞ்சு பெண்ணியல்வாதிகள், பெண்ணின்பாலியல் ஆழ்மான நிலவறை போன்றது; அறிந்து கொள்ளமுடியாத ஒரு கூறு என்றும் வாதிடுகின்றனர். ஹெலன் சிக்ஸி (He 'le'ne Cixous)வின் 'மேடுசாவின் புன்னகை' (The laugh of Medusa) என்ற கட்டுரை, பெண் எழுத்தாளர்களுக்கான கொள்கைச் சாசனமாகக் கொண்டாடப்படுகிறது. அக்கட்டுரை, பெண்கள் தங்கள் எழுத்தில் தங்கள் உடம்பை முழுமையாகப் பெய்து வைக்கும்படி பெண் எழுத்தாளர்களுக்கு அழைப்புவிடுக்கிறது. ஹெலன் சிக்ஸீ பெண்ணின் நனவிலி மனத்தில் நிறைந்தோடுபவற்றை பெருங்களிப்புடன் வெளிப்படுத்துகின்றார்:

www.padippakam.com



''உன்னையே நீ எழுது; உன் உடம்பின் குரல்களுக்குச் செவிசாய்! அப்பொழுதுதான் வகுத்துரைக்க முடியாத உனது நனவிலி மனத்திலுள்ள மூலவளங்கள் எல்லாம் பொங்கிப் புறப்பட்டு வெளிவரும்."

உலகத்திற்கெல்லாம் பொதுவான ''பெண்மனம்'' என ஒன்றும் கிடையாது; மாறாக, பெண்ணின் கற்பனை ஆற்றல் எல்லையற்றது. வகைதொகைக்குள் அடங்காதது; அதனாலேயே அழகானது. உண்மையிலேயே முழுமையாக விடுதலை கண்டுவிட்ட ஒரு பெண் எழுத்தாளர் இங்கே வாழ நேரும்போது, அவர் இவ்வாறு கூறுவார்:

''நான் பொங்கி வழிந்தோடுகிறேன்; என்னுடைய ஆசைகள் புதிய ஆசைகளைக் கண்டுபிடித்திருக்கின்றன. என்னுடைய உடம்பு இதுவரை கேட்கப்படாத பாடல்களை அறிந்து வைத்திருக்கிறது.........

என்னால் உடைத்துத் திறந்துவிடப்பட்ட ஒளி வெள்ளத்தின் ஓட்டத்தை நான் முழுமையாக உணர்கிறேன். இந்த ஒளிவெள்ளம், வெட்கங்கெட்ட அதிர்ஷ்டம் என்ற பேரில் சட்டம் போட்டுச் சந்தையில் விலை போய்க் கொண்டிருக்கும் எந்த ஒரு வடிவத்தை விடவும் அழகான வடிவங்களில் நிறைந்து வெளிப்படுகிறது.''

எனவே தலைகீழாகப் புரட்டுகின்ற சிந்தனைகளை முளைவிட்டு வளர்வதற்கு எழுத்துலகம்தான் சரியான களமாகும். எனவே எழுத்துலகில் இன்னும் லிங்க மைய மரபில் பெண்களுக்குக் கற்பிக்கப்பட்ட குணங்கள் தூக்கி எறியப்படாமல் இருப்பது வெட்கப்படத் தக்கஒன்றாகும். பெண், அவளுக்கே உரிய பொருட்களையும் அவளுக்கே உரிய உறுப்புக்களையும் ஆழமாகப் புதையுண்டு முத்திரையிட்டுக் கிடக்கும் அவளது உடம்பு சார்ந்த மிகப்பெரிய ஆட்சிப் பரப்பையும் மீண்டும் ஆதி வலுவோடு திரும்பப்

படிப்பகம்

www.padippakam.com



பெறவேண்டும். தன்னைத்தானே ''தணிக்கை'' செய்து கொள்வதிலிருந்து கட்டாயம் விடுதலை பெறவேண்டும்; கோபச் சூரியனாகவோ (அ) குளிர் நிலவாகவோ இருப் பதையும் அளவுக்குமீறி தாய்மை உணர்வோடோ (அ) அளவுக்கு மீறி தாய்மையுணர்வின்றியோ இருப்பதையும் குற்றமாக உணர்ந்து குமைவதைத் தூரத் தூக்கி எறிந்து விடவேண்டும். ஹெலன்சிக்ஸி கொள்கையின் அடிப்படை இதுதான். அதாவது பெண்ணியல் வாதிகளின் எழுத்துக் கள், எப்பொழுதும் லிங்கமைய வாதம் அமைந்திருக்கும் அமைப்பை ஒழுங்குபடுத்துகின்ற சொல்லாடலை மேலும் ஒழுங்குபடுத்தி அமையவேண்டும் என்ற கொள்கையை ஓரங்கட்டி ஒழித்துக்கட்ட முயல்வதுதான்.

வெர்ஜினியா வுல்ப் அழுத்தமாக வலியுறுத்தும் ஆண், பெண் இருபாலர்க்கும் நடுநிலையான பாலியல் ஒன்றை இவர் கடுமையாக எதிர்க்கிறார். ஆனால் அதற்குப் பதிலாக ''வேறான இருபால் பாலியல்'' (the other bisexua lity) என ஒன்றை ஆதரித்துப் பேசுகிறார். இது இரு பாலர்க்கு இடையே உள்ள வேறுபாடுகளைப் பொருட் படுத்தாமல் தள்ளிவிட முயல்வதை எதிர்க்கிறது. ஆனால் இருபாலர்களையும் கலக்கிவிட்டு, முக்கியத் தளம் நோக்கி நகரும்படித் தூண்டுகிறது. சிக்ஸி(cixous) இவ்வாறு எழுதுகிறார்: ''ஒரு பெண்ணின் உடம்பு, தன்னுடைய ஆயிரக்கணக்கான உணர்ச்சி வெப்பத்தை மூல நெருப் பாகக் கொண்டு, பலப்பல மொழிகளை ஒலி அதிர்வு களாய் உருவாக்கிவிடக் கூடிய தனிச் சிறப்புமிக்க தாய் மொழி என்னும் மூலமொழியை உருவாக்கும்''.

இவர் பேரின்பம் (பரவசம்)— (Jouissance) பற்றியும் குறிப்பிடுகிறார். பர்த், கிறிஸ்தெவா ஆகியோர் எழுத்தில் பேரின்பம் (Jousisance) என்ற இந்தச்சொல், காமசுகத்தின் உச்சஉயர்வு நிலையையும் (orgasm), பலதரப்பட்ட அர்த்தக் குறியீடு நிறைந்த சொல்லாடலையும் இணைத்துக் குறிக் கிற ஒன்றாகப் பயன்படுத்தப்படுகிறது. ஒரு மூலப் பிரதி

படிப்பகம்

www.padippakam.com



யிலிருந்து பிறக்கும் பேரின்பம் எல்லாவிதமான அடக்கு முறைகளையும் அறவே ஒழித்துவிடுகிறது ஒரு கட்டத்தில் நெருக்கடியான— இக்கட்டான— நிலையை அடைகிறது; அதாவது அர்த்தங்களின் சரிவையே எதிர்கொள்கிறது. எனவே பெண் எழுத்தாளர்களின் முக்கியமான கடமை, லிங்க மைய வாதத்தால் விளைந்த சொல்லாடல்களை மறுத்து மீறிச் செல்வதே ஆகும்! ஆணாதிக்கம் நிறைந்த சொல்லாடல்களுக்குள்ளேயே எப்போதும் இயங்கிக் கொண்டிருக்கும் நிலையில், தனக்குள்ளே இருப்பதைப் பிடிப்பதற்குத் தனக்கே உரிய ஒரு மொழியைக் (சொல்லாடல்) கண்டுபிடித்துக்கொள்வது. பெண்ணின் கட்டாயத் தேவையாகிறது.

சிக்ஸினுடைய அணுகுமுறை, இருக்கின்ற ஒன்றை விளக்கிக் கொண்டிருப்பதைவிட, பெரும்பாலும் சாத்தியப்பட வாய்ப்புள்ள ஒரு மொழியை உருவாக்குவது பற்றிக் கற்பனை பண்ணிப் பார்ப்பது சிறந்தது என்ற பார்வையுடையதாகும். இத்தகைய அணுகுமுறை ஆபத்தானதாகும். மௌனம் மட்டுமே ஆட்சி செலுத்துகின்ற, கருப்பைக் குழந்தையின் குழப்பமான ஒலி மட்டுமே குறுக்கிடுகின்ற இருண்மையான நனவிலி உலகிற்குள் மீண்டும் பெண்களைச் செலுத்துகின்ற ஆபத்தில் போய் முடியும்! இத்தகைய ஆபத்து இருப்பதை கிறிஸ்தெவா நன்றாகவே புரிந்துகொண்டுள்ளார். இவர் பெண் எழுத்தாளர்களை, தந்தை, தாய் ஆகிய இருவர்க்கும் நடுவில் வைத்துக் காண்கிறார். ஒருபக்கத்தில் பெண் எழுத்தாளர்கள், எழுத்தாவர் என்ற நிலையில் தவிர்க்க முடியாதபடி, ஆணாதிக்கச் சூழலோடு சேர்ந்து, ஒரு ரகசியப் புரிதலுடன் செயல் புரிகின்றனர். பெண்ணுக்குச் சலுகை நிறைந்த தந்தை-மகன் உறவு என்ற அடிப்படையில் செயலாற்றுகின்றனர். இத்தகைய செயல்முறை உத்திமூலம், இப்பெண் எழுத்தாளர்கள், அறிவியல், தத்துவம், பேராசிரியர் தொழில் முதலிய பிறதுறைகளிலும் தலைமை தாங்கிச் செலுத்தும்

www.padippakam.com



மனப்பக்குவத்தை வளர்த்துள்ளனர். மற்றொரு பக்கத்தில், ''ஆணாதிக்கம் நிலவுகின்ற ஒவ்வொன்றிலிருந்தும் தப்பித்து அகதிகள் போலப் புகலிடம்தேடி ஓடுகின்றோம்; அவ்வாறு ஓடி நீருக்குள்ளே வாழ்கின்ற உடம்பாய் மௌனமாக நிற்குமாறு தள்ளப்படுகிறோம்; இதனால் மனித வரலாற்றில் எங்களைப் பதிவு செய்துகொள்ளும் உரிமையை இழந்து நிற்கிறோம்'' — என்றும் பெண் எழுத்தாளர்கள் பேசு பேசுகின்றனர்.

சமீப காலமாகப் பெரிதும் பேசப்படும் பெண்ணியம், பெண்ணியல் வாத இலக்கியக் கொள்கைகள் ஆகியன பற்றிய வேறுபட்ட அணுகு முறைகளும், செல்வாக்குகளும் இதுவரை ஓரளவு சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. பெண்ணியல் வாதிகள், ஆண்களின் கோட்பாடுகளை மேற்கொள்ளாமல், தங்களுக்கான கோட்பாடுகளை உருவாக்கி வளர்த்துக்கொள்வது கடினம் என்பது நிரூபணமாகியுள்ளது. ஆனால். போதுமான அளவிற்குப் பெண்ணியக் கோட்பாடுகள் பெண்களின் அனுபவங்களிலிருந்தோ அல்லது அவர்களின் நனவிலி மனத்திலிருந்தோ உருவாக முடியும். எனவே பெண்கள் தங்களுக்கான மொழியைத் தாங்களே உற்பத்தி செய்தாக வேண்டும்; இவ்வாறு உருவாக்கப்படும் மொழியும் கருத்தாக்கங்களும் ஆண்களின் பார்வையில் பகுத்தறிவிற்குட்பட்டதாகத் தோன்றாமல் போகலாம் என்றாலும் பெண்கள் தங்களுக்கான கருத்தாக்கங்களை உருவாக்கியே ஆகவேண்டும் எனப் பல பெண்கள் வாதம் புரிந்துள்ளனர்.

பெண்ணியத்தின் பேரறிஞராகக் கருதப்படும் ஹெலன்- சிக்ஸீ (He 'le n Cixous), பர்த், லக்கான் ஆகியோரின் கொள்கைகளை ஆராய்ந்து குறிப்பிடத்தக்க கருத்தாக்கங்களை உருவாக்கியுள்ளார். பெண்களுக்கான கொள்கைகளை உருவாக்குவதில் எவ்வளவுதான் கஷ்டங்கள் இருந்தாலும், பெண்கள் தங்களுக்கான சொந்த மதிப்பீடுகளை ஆணித்தரமாக நிறுவுவதற்கும், தங்களின்

www.padippakam.com



சொந்த மன உலகைத் தேடிக் கண்டடைவதற்கும், அவைகளை வெளிப்படுத்துவதற்கும் அவைகளுக்கேற்ற புதிய வடிவங்களை உருவாக்கி வளர்த்தெடுப்பதற்கும் அவர்களுக்கு உரிமை இருக்கிறது. பழைய இலக்கியக் கொள்கைகள், கட்டாயம் மறு மதிப்பீடுகளுக்கு உள்ளாக்கப்பட வேண்டும்; புதிதாக வடிவமைக்கப்பட வேண்டும். ஆண், பெண் இருவர்க்குமிடையே உள்ள அதிகார உறவு நிலைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களுக்கு ஏற்ப அவைகள் அமையவேண்டும். எல்லா துறையிலும் கோட்பாட்டு விவாதங்களில் ஆண்மை, பெண்மை என்ற வேறுபாட்டு உணர்வுகள் முக்கியத்துவம் பெற்றுவிட்டன. டெரிஈகிள்டன் (Terry Eagleton) பெண்களின் இயக்கம், அரசியல் நடவடிக்கைகளையும் பண்பாட்டு நடவடிக்கைகளையும் ஒன்றிணைத்துச் செல்கின்ற சாதனையில் குறிப்பிடத்தக்க வெற்றியை அடைந்துள்ளதாகக் குறிப்பிடுகிறார். எல்லாவிதமான திறனாய்வுக் கோட்பாடுகளும் அரசியல் பண்புள்ளவைதாம்; எந்தப் பொருளில் என்றால், இக்கோட்பாடுகள் எப்போதும் ''சொல்லாடல்களை''க் குறிப்பிட்ட நோக்கிற்கு ஏற்பக் கட்டுப்படுத்த முயல்கின்றன. இத்தகையச் சூழலில், பெண்ணியல் வாதிகள், ஆண்களிடமிருந்து (தங்களுக்குரிய பங்காக) அதிகாரத்தை வலுக்கட்டாயமாகத் திருகிப் பறிப்பதற்கு முழுவதும் சுய உணர்வோடு முயலுகின்றனர். இம்முயற்சியில் தங்களுக்குச் சாதகமாக எங்கிருந்து வந்தாலும், அக்கோட்பாடுகளைத் தங்களுக்குரிய உத்திகளாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர். இதன் காரணமாக, கோட்பாட்டு உலகில், இப்பெண்ணியம் மிக நுட்பமான உயிர்த்துடிப்புள்ள ஒன்றாக விளங்குகிறது. இவ்வாறு அதிகாரத்திற்கான போராட்டம் முழு ஆற்றலுடன் தொடர்கிறது.

(Raman Selden, 'A Reader's Guide to Contemporary literay theory, Britain The Harvest press Ltd, 1985. என்ற நூலிலுள்ள ''Feminist Criticism—ப. 128'' என்ற கட்டுரையின் தமிழ்மொழியாக்கம்.) (நிகழ் 24+25—1993)

www.padippakam.com

# பெண்ணியமும் மார்க்சியமும்

*ராஜ் கௌதமன்*

### ஃபெமினிஸ்டுகளுக்கு மார்க்சியம் தேவையா ?

(பெண்களின் பிரச்னைகளை ஆய்வதற்கும் அவர்களைப் போராட்ட பாதையில் அணி வகுக்க வைக்கவும் தேவை அதிகமாகியுள்ளது. சமீப காலம் வரை மார்க்சீய அணியினர் சோசலிசம் வந்துவிட்டால் போதும் பெண்கள் பிரச்னை தீர்ந்துவிடும் என்றார்கள். ஆனால் இப்போது பெண்களின் விடுதலை ஆண்களின் விடுதலையால் மட்டும் வந்து விடுவதல்ல என்ற குரல் கேட்கிறது.

மார்க்ஸ், எங்கல்ஸின் பெண் விடுதலை பற்றிய கருத்துக்களை மீண்டும் ஆய்வு செய்யவேண்டிய நிர்ப்பந்தம் உருவாகியுள்ளது. இந்த ஆய்வில் ஸ்ட்ரக்சுரலிஸ்டுகளின் மார்ச்சீய விளக்கம் மிகவும் உதவுகிறது. பெண் குடும்பத்துள் நடத்தும் வேலையை உற்பத்திப்பற்றிய கருத்துடன் இணைக்கும் புதுமுறை உருவாகியுள்ளது. இன்று அரசு என்பது தன்னை கருத்துருவ நிலையில், கட்டியாக்கிக் கொள்வது பற்றிய அறிவு நமக்குக் கிடைக்கிறது. ஒருவனின், கருத்துருவ வளர்ச்சிக்குக் குடும்பத்தின் செயல்

பெ—9

படிப்பகம்

www.padippakam.com



பாடும் முக்யமாகிறது. இனி வரும் புரட்சி, பெண்கள், குடும்பம், பற்றிய தெளிவான பார்வையுடன் அமையும். இவ்வகையில் 'ஸங்கர்ஷ்' என்ற தனி பிரசுரத்திலிருந்து இக்கட்டுரையைத் தமிழில் தருகிறோம்.)

—இ. வெ. வ.

கடந்த மூன்றாண்டுகளாக சோஷலிஸ்டு ஃபெமினிசம் பற்றிப் பேச்சு அடிபடுகிறது. இதுதான் மிகவும் ஃபெமினிஸ்டுகளிடையே மிகவும் தீவிர நிலைப் பாடாக இன்று கருதப்படுகிறது.

சோஷலிஸ்டு ஃபெமினிசம் என்றால் என்ன? சோஷலிசத்தை நம்பும் பெண்கள், ஏகாதிபத்தியம்தான் இன்றைய முக்கிய முரண்பாடு என்று கருதுவோர் மற்றும் வர்க்கப் போராட்டங்களில் பெண்களைப் பங்குபெற வைக்க முயலும் பெண் அமைப்புக்களைச் சார்ந்தோர் போன்ற எல்லோரும் சோஷலிஸ்டு ஃபெமினிஸ்டுகள் என்று தங்களை அழைக்கிறார்கள். ஆண்வழித் தலைமையை எதிர்ப்போர், மற்றும் ஆண்வழித் தலைமையும் வர்க்கமும் ஒரு வகையில் ஒன்றுதான் என்றும் கருதுகிறவர்கள் இந்த வகையினுள் அடங்குவார்கள். இவர்கள் எல்லாரும் தங்கள் நிலையைப் புரிந்து கொள்ளவும், அதிலிருந்து தங்களுக்கு விடுதலை பெறவும் மார்க்சியம் உதவ முடியும் என்று ஏகமனதாக நம்புகிறார்கள். இதை, இவர்களிடையே உள்ள ஒரு பொது அம்சம் எனலாம். இவ்வகையில் ஃபெமினிசமும், மார்க்சியமும் இணைகின்றன.

இந்த ஃபெமினிஸ்டுகள் சிலவேளை, தனி மனித பிரச்னைகளை மட்டும் முன் வைத்து உழைக்கும் வர்க்கத்தைப் பிரிக்கிறார்கள் என்று குற்றம் சாட்டப்படுகிறார்கள். இந்தக் குற்றச்சாட்டை இடதுசாரி அணிகளைச்

www.padippakam.com



சார்ந்த ஆண்களும் பெண்களும் முன் வைக்கிறார்கள். அரசியல் போராட்டத்தில், பூர்ஷ்வாக்களின் தனிப்பட்ட பிரச்னைகளை முன் வைத்து விடுகிறார்கள் என்றும் இவர்கள் குற்றம் சாட்டப்படுகிறார்கள்.

ஃபெமினிஸ்டுகள் இன்று மார்க்சியத்தை நோக்கி வருவதன் மூலம் அவர்களும் நிஜமான அரசியலிலும், கோட்பாட்டிலும் ஈடுபாடு கொண்டதாய் ஆகி விடுகிறது. வீட்டு வேலைகளின் மூலம் பெண்கள் உபரிமதிப்பைத் தருகிறார்கள் என்பதாலும், அல்லது உழைப்புச் சக்தியை மறு உற்பத்தி செய்ய உதவுவதாலும் இவர்கள் தங்களை அமைப்பாக்கிப் போராடும் தேவையுண்டு என மார்க்சியம் விளக்குகிறது. இன்னும் சிலர் உழைக்கும் பெண்களை ஒருங்கு இணைக்க மார்க்சியம் உதவும் என்கிறார்கள்.

இவ்வகை விளக்கங்கள் எல்லாமே பெண்கள் தாங்களாகப் புரட்சி ஆற்றல் உள்ளவர்கள் அல்லர் என்றும் அவர்களுடையே செயல்பாடுகள்கூட வர்க்கப் போராட்டத்துடன் இணைகையில் மட்டும்தான் அர்த்தமுள்ளது ஆகும் என்றும் மறைமுகமாகப் பறைசாற்றுகின்றன. ஆண் வழி முக்கியத்துவம் என்பதுகூட, பொருளாதாரச் சீர்திருத்தம் வந்து விட்டாலோ, தனிச்சொத்து போய் விட்டாலோ மறைந்துவிடாது என்ற உண்மையை இவர்கள் ஏற்கவில்லை. ஆண் வழி மரபுகள் சமூக உறவுகளை நிர்ணயிக்கின்றன என்பதுதான் உண்மை. சுருங்கச் சொன்னால் ஃபெமினிசம், மார்க்சியத்துள் புதுக்கேள்விகளை இம்முறையில் கேட்கிறது. இச்சூழலில், ஃபெமினிசம் எழுப்பும் பிரச்னைகளைச் சரியாய் மார்க்சிய முறையியலுக்குள் வைத்துத் தீர்க்க முடியுமா என்பதே கேள்வி.

மூலமார்க்சியத்தின் (மிகச் சுருங்கிய, எந்திர வகைப்பட்ட மார்க்சியம் என்ற அர்த்தத்தில்) பிரச்னைகள் :

www.padippakam.com



பெண்கள் ஒடுக்கு முறை பற்றி ஏங்கல்ஸ் எழுதிய வற்றைக் கவனித்துப் பார்த்தால், மூல மார்க்சிய கோட் பாட்டிலுள்ள பலவீனங்களைக் காணமுடியும். ‘குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்’ என்ற நூலில் ஏங்கல்ஸ் முன் வைத்துள்ள விஷயங்களிலிருந்து அடிப்படையான ஏழு வினாக்களைத் தொடுக்கலாம். ஒரு மார்க்சிய அணுகுமுறையின் பொதுத் தன்மையை, இவை, சுட்டிக் காட்டும். மேற்சொன்ன நூலுடன். ஆண்வழித் தலைமை என்பது குறித்த ஓர் ஆய்வினை அருகே வைத்துக் காணும் போதுதான் ஏங்கல்சினுடைய சொந்தக் கோட் பாட்டை முழுமையாக அறியமுடியும். பொருள் உற்பத்தி முறைகளில் ஏற்படும் வரலாற்று மாற்றங்களை மட்டுமே சார்ந்து, பெண்களின் விசேஷமான சரித்திரத்தை ஏங்கல்ஸ் விட்டு விடுகிறார்.

**இனி அந்த ஏழு கேள்விகளை காணலாம்**

1. எவ்வித ஆய்வுமின்றியே, வேலைப் பாகுபாட்டில் ஆண்—பெண் பால்பாகுபாட்டை அப்படியே ஏற்றுக் கொள்கிறார் ஏங்கல்ஸ்.

வேலை (அ) உழைப்பு, எப்போதுமே பால் அடிப் படையில் பிரிக்கப்பட்டு வந்திருப்பதாகவும், பெண்கள் எப்போதுமே வீட்டு வேலை செய்து வந்திருப்பதாகவும் கற்பித்துக்கொள்கிறார். இதற்கான காரணத்தை விளக்க வில்லை. உலக முழுவதிலும் பெண்களுக்கான வேலை என குழந்தை வளர்ப்பு ஒன்றுதான் உண்டு என்று சமீபத்திய மானிடவியல் ஆய்வு சொல்கிறது. வெவ்வேறு சமூகங் களின் வேலைப் பிரிவில் உள்ள ஆண் பெண் பால்பாகு பாட்டை ஆழ்ந்து கற்றால் ஒரு உண்மை தெளிவாகும். ஆண்களைவிட, பெண்கள் செய்யும் வேலை, மதிப்புக் குறைந்ததாகக் கருதப்படுகிறது. இந்த உண்மையை பழம்

படிப்பகம்

www.padippakam.com



மார்க்சியம் விளக்கவில்லை. மேலும், குழந்தை வளர்ப்பு வேலையைப் பெண்கள் மீது மட்டும் சுமத்தி விடுவதால், ஆண், பெண், குழந்தை அனைவருக்கும் ஏற்படக்கூடிய பின் விளைவுகளைப் பற்றி ஏங்கல்ஸ் எண்ணிப் பார்க்க வில்லை.

2. ஆதி சமூகங்களில் கணங்களே (gens. பெண்வழி ரத்த உறவு பூண்ட குழுக்களைக் கணங்கள் என்பார் ஏங்கல்ஸ்) சொத்துடைமை கொண்டிருந்தன. இவை, பெண்வழித் தலைமை பூண்டிருந்தன என்கிறார் ஏங்கல்ஸ்.

ஆனால், பிற்பாடு இக்கணங்களின் குடும்பங்களுக்கு, ஆண்கள் 'தலைவர்களாக' இருந்ததால் கால்நடைகள் இவர்களின் தனியுடைமையாயிற்று என்றும் ஏங்கல்ஸ் கூறுகிறார். விவசாயமும், கால்நடை வளர்ப்பும் ஒரே சமயத்தில் உருவாகிய விபரத்தை சமீபத்திய மானிடவியல் சொல்லுகிறது. எனவே, கால்நடைகளில் ஆண்களின் தனிச் சொத்துடைமை உண்டான விஷயம், தாய் உரிமையை (அப்படி ஒன்று இருக்குமானால்) அகற்றிவிடும் அளவுக்குத் தீவிர மாற்றத்தைச் செய்யக் கூடியதாக இருந்திருக்க முடியாது. பெண்வழித் தலைமைச் சமூகம் ஒன்று இருந்தது என்றும், சொத்து உறவுகளில் ஏற்பட்ட மாற்றங்கள் முதலிடம் வகித்தன என்றும் கற்பித்துக் கொள்வதில் சிக்கல்கள் உண்டு. மேலே சொல்லியது இதற்கொரு ஸ்தூலமான உதாரணம். ஆண்கள் என்ற ரீதியிலன்றி, தனிச் சொத்துடைமை பூண்ட ஆண்கள் என்ற ரீதியில், இவர்களால் வீழ்த்தப்படுவதற்கு ஒருபெண் வழித் தலைமை தேவைப்படுகிறது, ஏங்கல்சுக்கு. அதாவது, பொருள் உற்பத்தி முறை மாற்றங்கள் மீதும், இவற்றின் விளைவான சொத்து உறவுகள் மீதும் வரலாறு சார்ந்துள்ளது; பால் உறவுகள் (sexual relations) மீது சார்ந்

www.padippakam.com



திருக்கவில்லை. ஏங்கல்சைப் பொருத்தவரை, குடும்பம், மேற்கட்டுமானத்தின் பகுதி, அடிக்கட்டு மானத்தின் பகுதியல்ல. (உழைப்புச் சக்தியாகிய மனிதரின்) 'மறு உற்பத்தி முறை'யின் மையமான இடத்தை ஏங்கல்ஸ் புரிந்திருந்தாலும், இதனை அறிந்து கொள்ளத் தேவைப்படும் பால் அரசியலை (sexual politics) ஆராயத் தவறியுள்ளார்.

3 கால்நடைகளும், அடிமைகளும் செல்வத்தின் தெளிவான அடையாளங்களாக இருந்திருக்கும் பட்சத்தில், குடும்பத்தின் தலைமையாகக் கற்பிக்கப்பட்ட ஆண் அவற்றை எப்படி உடைமை கொண்டான்?

பெண்களுக்கு ஏனிந்த உடைமைகள் இல்லை? அத்தனை சுலபத்தில் எப்படி இவை ஆண்களுக்கு உடைமைகளாயின? இக்கேள்விகளுக்குச் சம்பிரதாயங்கள் (custom) பதில்தர முடியாது. இதற்கு இரண்டு சாத்தியங்களைப் பதிலாகக் கூறலாம். ஒன்று பெண்வழித் தலைமை என்ற ஒன்று ஒருபோதும் வரலாற்றில் இல்லை என்பது. (அவ்வாறானால், பொருள் உற்பத்தி மாற்றங்கள், சொத்து உறவுகள் அடிப்படைகளில் மட்டுமே வைத்துப் பெண்கள் ஒடுக்கு முறையை விளக்க முடியாது) அல்லது பெண்வழித் தலைமையின் வீழ்ச்சி ஒரு அரசியல், பொருளாதாரப் புரட்சியாக இருந்தது என்பது. இப்புரட்சியில், ஆண்கள், ஆண்கள் என்ற ரீதியில், பெண்களின் மேலிடத்தை (அல்லது ஒருக்கால் சமமான இடத்தை) தாழ்த்தினர் அல்லது அழித்தனர். இதற்குப் பல சரித்திர பூர்வமான சாத்தியங்கள் இருக்கலாம். (உதாரணமாக மறு உற்பத்தியில் மனித மறு உற்பத்தியில்—தங்கள் பங்கினை ஆண்கள் கண்டுபிடித்தது, அல்லது மனிதமறு உற்பத்தி மீது தங்களுடைய கட்டுப்பாட்டை நிலை நாட்டியது.

www.padippakam.com



4 சொத்து வாரிசு உரிமை ஒரு முக்கியமான பிரச்னை யாக ஏன் இருக்க வேண்டும்?

இதுபற்றி ஏங்கல்ஸ் விளக்கும்போது, இறந்த காலத்தில் நிகழ் காலத்தை ஏற்றிப் பார்க்கிறார். கண சமூகத்தில் இப்படி சொத்து வாரிசு உரிமை தேவைப்படும் அளவிற்கு, குழந்தைகளுக்கு ஏதேனும் அபாயம் இருந்ததா? (குழந்தைகளைப் பிரஷ்டம் செய்வது, பராமரிக்காது விடுவது போன்ற அபாயங்கள்) அல்லது, ஒரு பெண்வழித் தலைமைச் சமூகத்தில், தனி நபர் வாரிசு உரிமை அல்லது உரிமையின்மை போன்றவை அர்த்தமுள்ள கருத்தாக்கம் தானா? ஒருதார மணமுறைக்கு முன்னர், குழந்தையின் தாய் மட்டுமே நிச்சயிக்கத் தக்கவள் ஆதலால் இனவிருத்தி (அ) கணங்கள் ஆகியவற்றில் இருந்து ஆண்கள் அப்பாற் பட்டிருப்பதாக உணர்ந்திருக்க முடியும் என்கிறார் ஏங்கல்ஸ், இதன் காரணமாக ஆண்கள் அதிகாரத்தைப் பெறவும், அப்பாற்பட்டுள்ள தம் நிலையை மாற்றவும், குழந்தைகளைச் சாதனமாகப் பயன்படுத்தியிருக்கலாம். குழந்தைகளுக்குப் பாதுகாப்பான உத்திரவாதம், சொத்து வாரிசு உரிமை வழங்குதல் மூலமாக தந்தைவழித் தலைமை உறுதி செய்யப்படுகிறது. (இப்படி குழந்தைகளுக்கும், பெண்களுக்கும் ஆக்கிரமிப்பாளராகிய ஆடவர்களே பாது காப்பு உத்திரவாதம் தருகிற விஷயம் பழைய வழக்கங் களில் ஒன்றுதான் என ஃபெமினிஸ்டுகள் சுட்டிக் காட்டு கின்றனர்) மேலும் பெரும்பான்மைக் கலாச்சாரங்களில் மகன்களே சொத்துக்கு வாரிசு; மகள்கள் இல்லை, ஆகவே சொத்து வாரிசு உரிமை எனப்படுவது, அதிகாரத்தையும் சொத்தையும் ஆண் தன் கட்டுப்பாட்டுக்குள்ளேயே வைத்துக் கொள்வதாகவே பொருள்படும், இதனை ஒட்டி, பெண்களும், அவர்களுடைய உற்பத்தியும் (குழந்தைகள்) சொத்தாகப் பாவிக்கப்பட்டிருப்பதையும். சொத்து வாரிசு

படிப்பகம்

www.padippakam.com



உரிமை என்ற நிலைமை சுட்டிக்காட்டுகிறது. உண்மையிலே, பெண்கள் சொத்தின் முதல் வடிவம் என்றும், பல்வேறு குழுக்களிலுள்ள ஆண்களுக்குள் உறவைப் பலப்படுத்த பெண்கள் பரிமாறப்பட்டனர் என்றும் லெவிஸ்ட்ராஸ் குறிப்பிடுகிறார். இத்தகையதொரு முறை தோற்றுவிக்கப்பட்டு, அதன் ஆரம்பக்கட்டத்திலாவது பலாத்காரத்தின் மூலமாக வழக்கப்படுத்தியிருக்கலாம்.

5 ஆண்கள், தங்களுடைய சொந்தக் குழந்தைகளே வாரிசுதாரராக வர விரும்பினர்; இதுதான், இதற்கு முன்பிருந்த மரபான தாய்வழி வாரிசு உரிமை முறையை அகற்றுதற்கான ஒரு காரணம் என ஏங்கல்ஸ் கருதுகிறார்.

அப்படியானால், அந்த ஆணின் சகோதரி புத்திரர்கள் வாரிசுகளாவதில் தவறென்ன இருக்கிறது? நிலைமை அப்படியில்லை. குழந்தைகளையும் பெண்களையும் விசேஷமான சொத்தாகப் பார்த்த ஒரு ஆண்வழித் தலைமை முறை ஏற்கனவே இருந்திருக்க வேண்டும்.

இவ்விடத்தில்தான் ஆண்வழித்தலைமை வகுத்த மேலிடம் பற்றிய உண்மை நிலையும், கருத்தாக்கமும் முக்கியமாகின்றன. ஏங்கல்ஸ் கருதுகிறபடி, ஆரம்பகட்ட வேலைப்பிரிவின் விளைவாக (பெண்-வீட்டுவேலை, ஆண்-வெளிவேலை) ஆண்கள் பெற்றுக் கொண்ட அதிகாரத்தையும், மேலிடத்தையும் தக்க வைத்துக் கொள்ளவே விரும்புவார்கள். குழந்தையைச் சுமந்து பெறுவது ஆபத்தானது. சக்தியை உறிஞ்சிவிடுவது என்பதால், குழந்தை பிறப்பை மட்டுப்படுத்துவது பெண்களின் இயற்கையான நாட்டமாக இருக்கும் ஆனால் பரிவர்த்தனை அல்லது வேலைச்சக்தி வழியே சொத்தினை விருத்தி செய்து அதிகாரத்தை வளர்த்துக் கொள்ளும் ஆணின் நலனுக்கு வாரிசுகள் பெருக வேண்டியது அவசியம். எனவே குழந்தைப் பிறப்பைப் பெண்கள் மட்டுப்படுத்தும் செயல், ஆணின்

www.padippakam.com



நலனுக்கு எதிராய் அமைகிறது. பெண்ணின் இத்தகைய செயலால் அவள் மீது ஆண் கொள்ளும் கூட்டுப்பாடு குறைந்துபோகும். ஏனெனில், குழந்தை பெறுவதை வரையறுத்துக்கொண்டால் பெண், தன்னுடைய சக்தியை பிற காரியங்களில் பயன்படுத்த வழி திறக்கும். மேலும், வீட்டிலே, பெண்கள் குழந்தைகளைப் பராமரிக்கச் செய்யும் சேவைகள் ஆண்களுக்குமானதாக விரிகின்றன. இத்தகு சேவைகளை யாராவது வேண்டாம் என்பார்களா? எனவே, இனவிருத்தியின் மீது தமது கட்டுப்பாட்டை வைத்திருப்பதில் ஆண்களுக்கான சொந்த நலன் அடங்கியிருக்கிறது. இச்சந்தர்ப்பத்தில், வேலைப்பிரிவில்: பால் பாகுபாடானது ஒடுக்கும் கருவியாகிறது.

6 ஒரு எளிய சட்டத்தால், தாய்உரிமை அகற்றப்பட முடியும் என ஏங்கல்ஸ் கருதுகிறார்.

மணமுறையால், தங்கள் துரத்தஉறவுக்கணங்களிலிருந்து வேறுகணங்களுக்கு மாற்றப்படுவதால் பெண்கள் கலவரமடைந்திருக்க மாட்டார்களா? இதனால் தங்களுடைய முக்யமான அதிகாரம் பறி போகிறதை, ஒரு சட்டத்தால் மட்டுமே ஒப்புக்கொண்டிருப்பார்களா? இனிவரும் காலத்தில் தந்தையின் வழியில் தான் வாரிசு கருதப்படும் என்ற இந்த 'எளிய சட்டத்தை' எப்படி, யார் கொண்டு வருவது? சட்டம் மட்டும் போதாது. வேறுவித அதிகாரம் இங்கு தேவை, பெண்மீது பிரயோகித்த பலாத்காரத்தால் தான் இது முடிந்ததாகத் தெரிகிறது.

7 இறுதியாகத், சொத்து வாரிசு உரிமையில் நிகழ்ந்த மாற்றம் ஏன் ஆணுக்கு முழுமையான தலைமையைத் தந்தது?

இப்படிக் கேட்கிற ஏங்கல்சின் எண்ணத்தில். தற்காலத்தில் தனிச் சொத்துடைமை பெறுகிற மைய இடமே,

www.padippakam.com



'புராதன' காலத்தைப் பார்க்கும்போது இருந்திருக்கிற தாகத் தெரிகிறது. மேலும். சொத்துடைமை பூண்ட குடும்பங்கள், கட்டாயமாக ஆண் ஆதிக்கக் குடும்பங்க ளாக மாறிச் செல்லும் என்று நினைக்கக் காரணம் எதுவு மில்லை? அதிகாரத்தைக் கொண்டவர்களும், அதனைப் பிரயோகிப்பவர்களும், ஆண்கள் மட்டுமின்றி சொத்து அடிப்படையில் அமைந்த ஒரு ஆளும் வர்க்கம் ஆகவும் இருக்கிற ஒரு சமூக அமைப்பை நாம் முன்வைத்தால்தான் ஆண் ஆதிக்கமும், தனிச் சொத்துடைமையும் விளக்கப் பட முடியும். தங்கள் கோட்டைக்குள் எல்லா ஆண்களும் ராஜாக்கள்தான்—ராஜாவின் கோட்டைக்குள் அந்த ஆண்கள் யார் என்ன என்பது வேறு விஷயம்.

சுருங்கக் கூறினால், சொத்துடைமை, வாரிசு உரிமை என்ற இவற்றில் ஏங்கல்ஸ் மையங்கொண்டிருக்கிறார். ஆனால் அவரது இந்த நிலைபாடு, அதிகாரத்துக்கான போராட்டத்தையும், பாலியல் இயக்கவியலையும் (dialectics of sex) அடித்தளமாகக் கொண்டிருக்கவும் வேண்டும். தாய் உரிமை வீழ்ச்சியை விளக்குவதற்கு, பொருள் உற் பத்தி முறை மாற்றங்கள் மட்டுமே போதுமானதாக இல்லை. பெண்வழித்தலைமை முன்னர் இருந்ததா என் பதே சந்தேகத்துக்குரியது. ஆனால் அப்படி ஒரு கருத்து. (உற்பத்திமுறை (மனித) மறு உற்பத்திமுறை பற்றி வேறொரு தளத்தில் ஏங்கல்ஸ் கூறிய கூற்றின்) விளைவிலி ருந்து தவிர்த்துக் கொள்ள அவருக்குத் தேவைப்பட்டது. பெண்கள் என்ற இனஉடைமை, ஆண்கள் என்ற தனி உடைமையால் அகற்றப்படுகிறது. இப்படிப் பார்க்கிற ஏங்கல்ஸ், சொத்து உறவுகளையே ஆய்வுக்கு எடுத்திருப் பதை அறியலாம் ஆண்களுக்கும், பெண்களுக்கும் உள்ள (பால்வகை) உறவுகளை ஆயவில்லை. மனித மறு உற்பத்தி முறை (reproduction) பற்றிய ஒரு முழுமையான ஆய்வை ஏங்கல்ஸ் செய்யவில்லை, உண்மையைச் சொன்னால்,

படிப்பகம்

www.padippakam.com



பொருள் உற்பத்தி முறையும், மனிதமறு உற்பத்தி முறையும், எப்போதுமே ஒன்றுக் கொன்று இசைவுடனிருக்க அவசியமில்லை. ஏற்படுகிறமுரண்பாடுகளைப் பலாத்காரத்தால் அகற்றமுடியும். ஆண்வழித்தலைமை தொடர்த்து அமுலிலிருப்பதாலும், குடும்பத்துக்குள் புதிய ஒழுங்கு அமைக்கப்படுவதாலும், மேறசொல்லிய இரு முறைகளுக்குள் எழுகிற முரண்பாடுகள் அகலவழியுண்டு.

இப்படி ஒரு சாத்தியத்தினை, ''குடும்பத்தின் இயற்கையான வேலைப்பிரிவு'' பற்றிப் பேசுகையில் மார்க்ஸ் அங்கீகரிக்கிறார். ''இயற்கையான'' (Natural) என்பதை அவர் மிக விசேஷமான அர்த்தத்தில் கையாள்கிறார். ''நாகரிகம் அடையாத'' என்ற பொருளில் ''சமூக'' (social) என்பதற்கு எதிர்ப்பதமாக அர்த்தம் தருவதாக, 'இயற்கையான'' என்ற பதத்தைக் கையாளுகிறார். எனவே. குடும்பத்திலுள்ள ''இயற்கையான'' வேலைப்பிரிவு என்று மார்க்ஸ் சொல்ல வருவது குழந்தைகளைச் சுமந்து பெறும் பெண்களின் இயல்பைச் சுட்டுவதாக இருக்கவேண்டும். பெண்கள் குழந்தைகளைச் சுமப்பதால், அவர்களை வளர்ப்பதும் பெண்களுக்குச் ''சௌகர்யமானது'' (ஏங்கல்ஸ்) குடும்பத்திற்குள்ளே உழைப்பும், அதன் உற்பத்திகளும் சமமற்ற விதத்தில் பகிர்ந்து காணப்படுகின்றது. இந்த சமத்துவமின்மைக்கு காரணம், பெண்மீதும், குழந்தைகள் மீதும் ஆண் கொண்டுள்ள அதிகாரம், இவர்களுடைய உழைப்பையும் மனித மறு உற்பத்திச் சக்தியையும் தன்னிஷ்டப்படி அவனால் பயன் படுத்த முடியும் என்று மார்க்ஸ் தெளிவாகச் சொல்லியுள்ளார்.

பிறருடைய உழைப்பைக் கட்டுப்படுத்தும் சக்திதான் சொத்து ['ஜெர்மன் ஐடியாலாஜி'] இத்தகு சக்தியை எப்படி ஏன் பெற்றார்கள் ஆண்கள்? இதனை மார்க்ஸ்

படிப்பகம்

www.padippakam.com



விளக்கவில்லை. பின்னும், பின் சொத்து வடிவங்களுக் கான "மையக்கரு", ஆதிசமூகங்களின் குடும்பத்தில் பொதிந்துள்ள அடிமைத்தனம் என்கிறார் மார்க்ஸ். பெண்களை அடிமைப்படுத்திய இந்த ஆரம்ப சக்தியை எவ்வாறு ஆண்கள் பெற்றனர் என்ற கேள்விக்கு இன்ன மும் விடை தரப்படவில்லை. ஆண்களின் இந்த ஆரம்ப சக்தி, பின்னர் விரிவான சொத்துக்களாகிய சக்தியை வழங்கியிருக்கிறது. இந்த "ஆண் வழித்தலைமையின் மேலிடம், ஆண்களின் பொருளாதாரச் சக்திக்குஅஸ்திவார மிட்டுள்ளது. பெண்கள், குழந்தைகள்,என்ற சொத்துக்கு உடைமை கொண்ட ஆரம்பக்கட்டம் நிகழ்ந்தபின், பரிசு தருதல், மனைவி பரிமாற்றம் போன்ற காரியங்களால் பிற ஆண்களை ஆண்கள் தமக்குக் கீழ்ப்படுத்த முடிந்தது. எனவே, குடும்பத்தில் ஆண் பெற்றுள்ள மேலிடத்தை அகற்றுவது என்பது, உபரிமதிப்பை அபகரித்துக் கொள் ளும் உரிமையை முதலாளியிடமிருந்து அகற்றுவதற்கு ஒப்பானதாகும்.

இப்படி ஒரு ஒப்பீட்டை மார்க்ஸ் செய்கிறதாகத் தெரி கிறது. அவர் கூறுகிறார்: "மனிதனின் (பெண்ணின்) சொந்தச் செயல் (குழந்தைசுமப்பது, ஆணுக்காக உழைப் பது) அவனுக்கு (அவளுக்கு) எதிரான ஒரு அந்நியமான சக்தியாகி விடுகிறதை வேலைப் பிரிவு எடுத்துக்காட்டு கிறது. இயற்கை நிலையிலுள்ள சமூகத்தில் அம்மனிதன் (பெண்) உள்ளவரை இது நிகழ்கிறது. அதாவது, குறிப் பிட்ட நலன்களுக்கும், பொதுவான நலன்களுக்கும் இடையே ஒரு விரிசல் உள்ளவரை, தன் விருப்பத்தால் இல்லாமல் இயற்கையாக பிரிவுற்று (naturlly divided) இருக்கிறவரை அச்செயல் நிகழ்கின்றது (சொந்தமான செயல் அந்நியமான சக்தியாகிறது). உழைப்பானது பிரி வுற்றதும், ஒவ்வொரு நபரும் தனிப்பட்ட (குறிப்பிட்ட), தன்மீது திணிக்கப்பட்ட ஒரு செயல்பாட்டுத் தளத்தை

படிப்பகம்

www.padippakam.com



ஏற்று விடுகிறான் (விடுகிறாள்). இதிலிருந்து அவன் (அவள்) தப்ப முடியாது'' (German Ideology)

இதனை, ஃபெமினிஸ்டுகளின் மொழியில் பெயர்த்துச் சொன்னால், ஆண்வழித்தலைமை, தனிநபர் அபகரிப்பின் ஒரு வடிவம்; இது சமூகப் பொதுமை வடிவம் (communal) ஒன்று உருவாகும் சாத்தியத்தைத் தடுக்கிறது. பெண்கள், குழந்தைகள் பேரில் ஆண் பூண்ட தனியுடைமை, தனித்து ஒதுங்கிக் கிடக்கும் குடும்பங்களில் சமூக எதிர்ப்பு வடிவம் உருவாக வழிசெய்கிறது. எனினும், இவ்விதச் சொத்தைப் பேணித் தொடர்வதில் ஆண் ஆர்வங் கொண்டிருக்கிறான்; இந்தச் சமத்துவமின்மையால் அவன் நேரடிப் பலன் பெறு கிறான். மேலும், பெண்கள் ''சமூக'' வேலைப் பிரிவுக்கு மாறாக, ஒரு ''இயற்கையான'' வேலைப்பிரிவுக்கு உட்பட்டிருக்கும் வரை, அடிமைப்பட்டே இருப்பார்கள். இதிலிருந்து அவர்கள் தப்ப முடியாது.

ஆனாலும், இந்த வேலைப்பிரிவு ஆண், பெண் இருபாலார்க்கும், வெவ்வேறு விளைவுகளை உண்டாக்குவதை மார்க்ஸ் எடுத்துக் காட்டவில்லை. ஆண்கள் வீட்டுக்கு வெளியே போகிறார்கள்; பெண்கள் குடும்பத்துக்குள்ளே, வீட்டுக்குள்ளே புதைந்துள்ளார்கள். வேலைப் பிரிவின் பால்பாகுபாட்டு அடிப்படை தனிப்பட்ட விஷயம், பொதுவிஷயம் என்ற பிளவை உண்டாக்குகிறது. அதாவது பெண்பால் தனிப்பட்ட விஷயத்தையும். ஆண்பால் பொது விஷயத்தையும் கவனித்துக் கொள்வதாக ஆக்கி விடுகிற பிளவு இது. பெண்களை அசக்தர்களாக, சுரண்டப்படுபவர்களாக ஆக்குகிறது. வரலாற்று ரீதியில், ஆண்களோ அல்லது பெண்களோ தங்களுக்கான செயல்பாட்டுத் தளங்களிலிருந்து தப்ப முடியாது எனினும், ஆண்களின் தளம் முக்கியத்துவம் பெற்று விரிவடைந்திருக்க பெண்களின் தளம் முக்யத்துவம் இழந்து போயிருக்கிறது. அபகரித்தலின் மூலம், முதலாவது சொத்தினை

www.padippakam.com



அடைந்தது முதல், ஆண்கள் தங்களுடைய உடைமைகளையும் அதிகாரத்தையும் பெருக்கிக் கொள்ளச் சுதந்தரர்களாக இருக்கின்றனர். பெண்கள் அடிமைகளாகவே இருக்கின்றனர்.

மேலும், குடும்பம் பற்றி மார்க்ஸ் ஒரு தெளிவற்ற கருத்தையே கொண்டிருக்கிறார். ''வரலாற்று வளர்ச்சியின் துவக்கத்திலேயே வருகிற மூன்றாவது நிலை குடும்பம். இதில், ஆண்கள், தங்கள் சொந்த வாழ்வுகளைத் திரும்ப ஆக்குகின்றனர்: பிற ஆண்களை உண்டு பண்ண முனைகிறார்கள். இனவிருத்தி செய்யத் துவங்குகின்றனர். கணவனுக்கும், மனைவிக்கும் இடையிலும், பெற்றோர்களுக்கும் குழந்தைகளுக்கும் இடையிலும் உறவுகளைப் படைக்கின்றனர். இதுதான்குடும்பம்''என்கிறார் மார்க்ஸ். இவர் குறிப்பிடுகிற இரண்டு செயல்பாட்டு வடிவங்களும் (1, பொருள் வாழ்க்கை உற்பத்தியும் 2. இது பூர்த்தியானதும் ஏற்படுகிற புதிய தேவைகளின் படைப்பும்) மனித வரலாற்றை உருவாக்குகின்றன. இதிலிருந்து, மனித மறு உற்பத்திமுறை, பொருள் உற்பத்தி முறை போலவே சம முக்கியத்துவம் வாய்ந்ததென யூகிக்கலாம். மேலும், சமூகம் மிகவும் வளர்ந்துவிடும் போது, குடும்பம் என்பது ஒரு ''கீழ்ப்பட்ட'' (subordinate) உறவாக ஆகிவிடுவதாக மார்க்ஸ் கருதுகிறார். வரலாற்றின் வளர்ச்சியில் உதித்த மூன்று கூறுகளில் ஒன்றாக 'குடும்பம்' இருந்தது என்றாலும், அதனால் சுதந்திரமாகத் தொடர முடியாது. இதனினும் மையமான, சுயத்துவமான ஒரு அம்சத்துக்கு உட்படுகிறது குடும்பம்; சார்ந்து நிற்கிறது என்று பொருள்கொள்ள வழி இருக்கிறது. ஆனால் இப்படிக் குடும்பம் கீழ்ப்படுவது எவ்வாறு என மார்க்ஸ் சொல்லவில்லை. மார்க்சிய ஆய்வின் பின்னடைவுக்கு, குடும்பம் பற்றிய ஆய்வு ஒரு உதாரணம்.

www.padippakam.com



இறுதியாக, பெண்களைப் பெண்களாகப் பார்க்கிற
எவ்விதக் குறிப்பும் மார்க்சிய ஆய்வில் இல்லை. ஆண்
களின் வளர்ச்சி வரலாற்றிலிருந்து, பெண்களின் வளர்ச்சி
வரலாறு எவ்வாறு வேறுபட்டுச் சென்றிருக்கும் என்பது
குறித்தும் மார்க்சியம் குறிப்பிடவில்லை. பெண்களின்
ஒடுக்கு முறையினை, உற்பத்தி (பொருள்) முறை மாற்றங்
களின் ஒரு வரலாற்றால் மட்டுமே விளக்க முனையும் எந்த
ஆய்விலும் அபாயம் இருக்கிறது. ஆண்வழித்தலைமையை
ஆய்வுக்குட்படுத்தா விட்டால், பெண்கள், வரலாற்றின்
தனித்த ஜீவிகள் என்றில்லாமல் மறைந்து போகின்றனர்.

இந்த ஆய்விலிருந்தே சோஷலிஸ்டு ஃபெமினிஸ்டு
கோட்பாடு துவங்க வேண்டும். மனித மறுஉற்பத்தி முறை
யின் வரலாற்றை இனம் காண வேண்டும். இது கொள்ளு
கிற சமூகக் கூட்டுறவினால் தோன்றக்கூடிய மாறும் வடி
வங்களைக் காணவேண்டும். மனித மறு உற்பத்தி முறைக்
கும், பொருள் உற்பத்தி முறைக்குமுள்ள உறவினைக்
கண்டு பிடிக்கவேண்டும். இத்தகைய வரலாற்றில் பெண்
களின் ஆண்களின் வித்தியாசமான அனுபவங்களைக்
கவனத்தில் கொள்ள வேண்டும். பால் (sex) மற்றும்,
வர்க்கம் (class) ஆகியவற்றின் இயக்கவியல்கள் இரண்டை
யும் கவனத்தில், கொள்ள வேண்டும்).

இப்படி ஒரு ஆய்வை மேற்கொள்ள வேண்டு
மானால், மிகவும் சுருங்கியநிர்ணய வாதத்தைப் தாண்டிப்
போக வேண்டும். மனிதமறு உற்பத்தி முறை பற்றிய
ஆய்வுக்கு, உளவியல், பாலியல் அரசியல் (sexual political)
பரிமாணங்களில் கவனம்வேண்டும், இத்தகையபரிமாணங்
களை, மார்க்சின் எழுத்துக்கள் தொடவே இல்லை.

ஆண்வழித் தலைமைக் கருத்துருவமும், ஃபெமினிஸ்டு
கோட்பாடும்:

www.padippakam.com



''தனது சொந்த நலனுக்காகவே, முழு சமூகத்தையும் பூர்ஷ்வாவின் மேலாதிக்கம் தழுவிக் கொள்ளுகிறது. ஓரளவு இதில் வெற்றியும் பெற்றுள்ளது.'' எனக்கூறிய ஜியார்ஜ் லூகாக்ஸ், இதற்கான முழுமையானதொரு பொருளாதார, அரசியல், சமூகக்கோட்பாட்டை உருவாக்க பூர்ஷ்வா நெருக்கப்பட்டது என்றார்.

இக்கூற்று, பூர்ஷ்வாவுக்கு மட்டுமின்றி, ஆண்களுக்கும் பொருந்தும். எந்த ஒரு ஆளும் கூட்டமும், நடப்பிலிருக்கும் உறவுகளிலிருந்து பலருக்கும் பொதுவாகச் செல்லுபடியாகிற விதிகளை உண்டாக்கி, அதன் மூலம் தனது மேலாதிக்கத்தைக் காத்துக் கொள்கிறது. எனினும், இதனைச் செய்வதற்கு முன்பாக, ஆளும் கூட்டம், எதார்த்த நிலை குறித்ததொரு தெளிவான புரிதலை வளர்த்துக் கொள்ளவேண்டும். அப்போதுதான், அந்த எதார்த்தத்தைக் கட்டுப்படுத்தி, திரிக்க முடியும். இப்படி, யாருக்கும் வளைந்து கொடுக்காத பொதுமனுஷனாக ஆளும் கூட்டம் தன்னைக் கூறிக்கொள்கிறது. ஆனால், தனது நலனுக்குத் தோதான உறவுகளின் அம்சங்களை மட்டுமே மேம்படுத்துகிறது உதாரணமாக, பூர்ஷ்வா பொருளாதாரவாதிகள், சந்தைவிதிகளைப்பற்றி அக்கறை கொள்ளலாம்; ஆனால் மார்க்சியம் முன்வைத்த மதிப்புகுறித்த உழைப்புக் கோட்பாட்டையோ, உபரி மதிப்புக் கோட்பாட்டையோ பற்றி அக்கறை கொள்ள முடியாது. எவ்வித ஆளும் கூட்டமும் தனது சுயநலனுக்காக, எதார்த்தத்தின் அடியாழத்து முரண்பாடுகளை ஒதுக்கவே செய்யும். வெளித் தோற்றத்துக்கு அடியில், முரண்பாடுகள் உள்ளன. இவைதான் எழுச்சிக்கான, விடுதலைக்கான சாத்தியங்களைப் பேசுகின்றன. இதனை உணர்ந்து, பாட்டாளி வர்க்க உணர்வுபெற்று எழுதுகிற போது. அவ்வுணர்வை பூர்ஷ்வா உணர்வின் மட்டத்துக்குச் சமமாக வைத்துப் பார்க்கின்றனர் கொச்சை மார்க்சி

படிப்பகம்

www.padippakam.com



யர்கள். (பூர்ஷ்வாவின் உணர்வு, அதன் நலனைச் சார்ந்தது) தங்களது சொந்தத் தளத்திலிருந்து போரிடுகிற பூர்ஷ்வாக்கள், பாட்டாளிவர்க்கத்தை விட, பொருளாதார, கருத்துருவ ரீதியில் தாம் மேம்பட்டுள்ளதாகவே நிறுவும். (இதனால், பூர்ஷ்வாவுக்கு இணையாக, பாட்டாளி உணர்வை கொண்டுவர நினைப்பது, பூர்ஷ்வா நலனுக்குரிய பிரச்னைகளுக்குப் பாட்டாளி தீர்வுகாண நினைப்பதாக ஆகிறது) இந்த அபாயம்பற்றி லூகாக்ஸ் எச்சரித்தது ஃபெமினிஸ்டுகளுக்கும் பொருந்தும்.

ஆண்களின் மேலிடத்தையும், அதிகாரத்தையும் கேள்விக்குள்ளாக்குகிற பெண்களின் அனுபவங்களையும், ஆழ்ந்த பார்வைகளையும் ஆண்கள் தங்களுடைய மேலாதிக்கத்தைத் தொடர்ந்து பேணுவதற்காக, மறுக்கவோ, மருட்டவோ முயற்சிப்பார்கள். தங்களுக்குவிசேஷசுயநலன் ஒன்றும் கிடையாதென்றும், சமுகத்தின் பொது நலனுக்காகவே தாங்கள் பேசுவதாகவும் கூறிக்கொள்வார்கள். ஆண்கள் இது, தங்களுடைய மேலாதிக்கத்தைப் பேணும் முயற்சிதான். நாம் நமது சொந்த அனுபவத்தின் படிப்பினைகளை மறுத்தால், அல்லது, ஆண்களின் கருத்துவகைகளுடன் நமது அனுபவத்தைப் பொருத்திப் பார்க்க முயன்றால், அந்த அனுபவத்தின் அர்த்தத்தையும், விடுதலைக்கான நமது போராட்டத்தையும் இழந்து விடுவோம். (ஏனெனில், ஆண்களை அவர்களது சொந்தக் களத்தில் வைத்துத் தோற்கடிக்க முடியாது). இதற்கு அர்த்தம். ''பெண்களைப்போல இருப்பதை'' நாம் நிறுத்தவேண்டும். நமது செயல்களுக்கு, ஆண்களின் அங்கீகரிப்பைத் தேடுவதை நிறுத்தவேண்டும். குறிப்பாக, அவர்களைவிட நாம் கூடுதலான சோஷலிஸ்டுகள் என நிரூபிப்பதை நாம் நிறுத்தவேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com



ஆண்கள், உண்மைக்கு ஏகபோக உரிமை கொண்டவர்களல்ல. சரியாகச் சொன்னால், முழுமையைக் காணாதவாறு அவர்களை அவர்களுடைய சுயநலன் தடுக்கிறது. நமது அனுபவத்தை நாம் மறுத்தால், அரசியல் ரீதியில் சரியானவை என ஆண்கள் சொல்லிய கருத்து வகைகளுக்குள் நமது அனுபவங்களைப் பொருத்திக்காண முடிவு செய்தால், நம்மீது தொடுக்கப்படும் ஒடுக்குமுறையை அறிந்து, அதனை அகற்றிவிட நம்மால் முடியாமற் போகும்.

சுருக்கமாகச் சொன்னால், இயக்கவியல் குறைந்த பார்வை கொண்ட பழமையான மார்க்சியர்கள், பெண்களுக்கான நிலைபாட்டை ஒருபோதும் மேற்கொண்டதில்லை. ''பெண்கள் பிரச்னையை'' போதிய அளவு கவனிக்கவில்லை. இதற்குக் காரணம் வரலாற்றில் மனித மறு உற்பத்தியை முக்கியமான ஒரு நிகழ்வாகக் கருதவில்லை. நிர்ணய வாத முறையியலைக் கொண்டு உற்பத்தியைக் குறுகிய அர்த்தத்தில் காண முயன்ற அந்தப் போக்கு, பெண்களையும் பாலியல் இயக்கவியலையும் ஒதுக்கிவிட்டது. ஏனெனில், அவர்கள் பார்வைப்படி பெண்களின் உழைப்பு பெரிதும் சந்தைக்கு 'வெளியில்' தான் நிகழ்கிறது. மேலும் நிர்ணயவாதமானது பொருட்கள் மீதே கவனம் கொள்ளுகிறது. உறவுகள் மீதல்ல. ஆண் வழித்தலைமை என்பது ஒரு சமூக உறவாகும்.

பெரும்பாலான சோஷலிஸ்டு கோட்பாட்டாளர்கள் ஆண்கள் என்ற உண்மையை ஒதுக்க முடியாது. ஆண் வழித் தலைமையின் இருப்பினை அங்கீகரிப்பது இவர்கள் நலனுக்கு உற்றதாக இல்லை. ஏங்கல்சின் நூல் இத்தகு பழைமையான மார்க்சியர்களின் நூலுக்கு நல்ல எடுத்துக் காட்டு. இவரது நூலின் (''குடும்பம்... ஆகியவற்றின் தோற்றம்'') ஆரம்ப அத்தியாயத்துக்குப் பிறகு வரும்

www.padippakam.com



பகுதி முழுவதும், உற்பத்தி மாற்றங்களின் இயல்பைப் பற்றிய ஒரு ஆய்வாகவே அமைந்துள்ளது. மனித மறு உற்பத்தியும் குடும்பமும் மறைந்து விடுகின்றன.

வரலாற்று ரீதியாகப் பார்த்தால், பெண்களின் கோரிக்கைகளை ''புரட்சிக்கு அப்புறமாக''ப் பார்த்துக் கொள்ளலாம் என ஒத்தி போட்டுள்ளனர் சோஷலிஸ்டுகள். அல்லது இம்மாதிரி கோரிக்கைகளை, தனிப்பட்ட விஷயங்கள் உழைக்கும் வர்க்கத்தைப் பிளப்பவை. சோஷலிஸ்டு புரட்சிக்கு மையமானதாக இல்லை, சமூகத்திற்கு மையமானதாக இல்லை என்று விளக்கியுள்ளனர். மீண்டும் நான் முன்வைக்கும் கேள்வி: எது நடுநாயகமானது? எது நடுநாயகமானதில்லை என்பதை யார் விளக்குவது? எந்த அடிப்படையில்? உழைக்கும் வர்க்கக் கோரிக்கைகளைத் தனிப்பட்டவை, பொதுவானவை என மார்க்ஸ் விளக்கியுள்ளார். இதுவே இவ்வர்க்கத்தைப் புரட்சிகரமானதாக விளக்குகிறது. உற்பத்தியின் சமூக உறவுகளை மாற்றியமைப்பதாக உழைக்கும் வர்க்கத்தின் கோரிக்கைகள் சொல்லுகின்றன. பெண்களாகிய நாம் மனித மறுஉற்பத்தி பற்றிய பிரச்னைகளைப் பேச வேண்டும். ஏனெனின் பொருள் உற்பத்தியைப் போலவே இந்த மனித மறு உற்பத்தியில் நமது உழைப்புச் சுரண்டப்படுகிறது.

பெண்களின் ஒடுக்குமுறை பற்றி நாங்கள் அறிந்து கொள்ள மார்க்சியம் தீவிரமான மீள்பார்வைக்குள்ளாவது அவசியம். குறிப்பாக, சமூக உறவுகள் பற்றிய ஒரு கோட்பாட்டை உருவாக்க வேண்டும். வரலாற்றை, சமூக உறவுகளின் வளர்ச்சியாக ஆய்வு செய்யவேண்டும். சமூக உறவுகளின் ஒரு அம்சத்தை அறிந்து கொள்ள மார்க்சியம் நமக்கு உதவமுடியும். உற்பத்தித் தளத்தில், சுரண்டுபவர்களுக்கும், சுரண்டப்படுபவர்களுக்குமுள்ள உறவுஇது. (இந்த உறவுகளை அறிவதற்கு மார்க்ஸ், உபரிமதிப்பு,

படிப்பகம்

www.padippakam.com



பண்டங்களின் fetishism, வர்க்கம் போன்ற கருத்து வகைகளை உருவாக்கினார்). மேலும் மார்க்ஸ் (ஹெகல்) சமூக ஆய்வுமுறைகளில் வளமான, நெகிழ்ச்சித் தன்மை கொண்ட முறைகளில் ஒன்றான இயக்கவியலை உருவாக்கினார். ஆனால், இவற்றுக்கு இணையான முக்யத்துவம் வாய்ந்த சமூக உறவுகளின் பிற அம்சங்கள் உண்டு. இவற்றில் ஒன்று மனித மறு உற்பத்தி உறவைச் சுற்றியமைந்த உறவுகள் ஆகும். சகல வரலாறும், பருண்மையான மனித ஜீவிகளில் வேர் கொண்டிருப்பதாக மார்க்ஸ் வலியுறுத்தினாலும், இந்த மற்ற வித சமூக உறவுகள் (மனித மறு உற்பத்தி உறவுகள்) பற்றி ஒன்றும் சொல்லவில்லை. மனித மறு உற்பத்தித் தளத்தை அறிந்து கொள்ளப் போதிய கருத்து வகைகளை இனிதான் உருவாக்க வேண்டும். பொருள் உற்பத்தியும், மனித மறு உற்பத்தியும் வெவ்வேறானாலும் பரஸ்பர உறவுள்ளவை அதற்காக, ஒன்றை அறிந்து கொள்ள உருவாக்கியுள்ள கருத்து வகைகளைக் கொண்டு நேரடியாக மற்றதை அறிய முன்வருவது பிழை.

இந்தப் புதிய கருத்து வகைகளை உருவாக்குவதற்கு மார்க்சிய கோட்பாட்டிற்கு அப்பாலும் நாம் செல்வது அவசியம். உளவியலாய்வு, அமைப்பியல்வாதம், நிகழ்ச்சியுணர்வு வாதம் (Phenomenology) போன்ற துறைகள் சமூக நபர்களின் மறு உற்பத்தியை அறிந்து கொள்ள பெரிதும் துணைபுரிவனவாகும். ஆனாலும், இவை ஒரு வரலாற்றுப் பரிமாணத்தைக் கொண்டிருக்கவில்லை. ஒரு நபராக இருப்பதற்கு, பால் (Sex) எவ்வாறு ஒரு மையக் கூறாக அமைகிறது என்பதை விளக்கியுள்ளார் ஃப்ராய்டு. ஆண்வழித்தலைமையின் கீழ் ஒரு வெறும் நபராக நாம் இருப்பதில்லை. ஆண் நபராகவோ, பெண் நபராகவோ இருக்கிறோம். பலவிதத்தில் நாம் யாராக இருக்கிறோம் என்பதை நமது பால் பேதம்தான் சுட்டுகிறது. இப்படிப்

படிப்பகம்

www.padippakam.com



பட்ட பால் அடிப்படையிலான அடையாளம், மிக ஆழ மான விளைவுகளைக் கொண்டதாகும். ப்ஃராய்டு முன் வைத்த நனவிலிமனம் பற்றிய கோட்பாடும், பாலின் பங்கும், ஒடிசஸ் காம்ளெக்சும் (Oedipus Complex) தந்தை யின் மேலாதிக்கத்தின் விளைவுகளை நனவிலி மன தளத் தில் வெளிப்படுத்துகின்றன. இவை மனித மறு உற்பத்தி யில் சமூக உறவுகள் பற்றிய ஆய்வுக்கான ஆரம்பத்தைச் சுட்டிக் காட்டுகின்றன. அமைப்பியல் வாதமும், நிகழ்ச்சி யுணர்வு வாதமும், பழையமையான மார்க்சியத்தின் சுருங் கிய நிர்ணயவாதத்துள் வீழ்ந்து விடாதவாறு, சமூக உறவு களை ஆய்வதற்கான அற்புதமான கருவிகள்.

பொருள் உற்பத்தியையும், மனித மறு உற்பத்தியை யும் கீழ்வருமாறு கருத்தாக்கமாக புரிந்து கொள்ளலாம். மனித வாழ்க்கையின், வரலாற்றின் இரு பிராந்தியங்கள் இவை. இவை இரண்டுக்குள்ளே நிலவும் சமூக உறவு களாலும் நபர்களுக்கும் அவர்களின் உயிரியலுக்கும் உள்ள உறவுகளாலும் நபர்களுக்கும் இயற்கை உலகிற்கும் உள்ள உறவுகளாலும் மனித மறு உற்பத்தியும், பொருள் உற் பத்தியும் அமைவுறுகின்றன. வரலாற்று பூர்வமாக, 'இவ் விரு பிராந்தியங்களும் குடும்பத்தின் ஊடாக ஒன்றுடன் ஒன்று உறவாகியுள்ளன. இக்காரணத்தால் குடும்ப அமைப்பு, இவ்விரு பிராந்தியங்களைப் பற்றியும் தகவல் களை வெளியிடுகின்றது. இவ்விரு பிராந்தியங்களையும் ஒருவிதமான ஒத்திசைவுக்குக் கொண்டுவர மனிதர்கள் புரியும் முயற்சிகளை வெளிபடுத்துகின்றன. குடும்பம் பற் றிய ஆய்வு, இவ்விருவகைப் உற்பத்திகளின் கோரிக்கை களுக்கு இடையிலான முரண்பாடுகளை வெளிப்படுத்தவும் முடியும். பொருள் உற்பத்தியின் இயல்பும், மனித மறு உற்பத்தியின் இயல்பும் வேற்றுமைப்படப்பட குடும்பமா னது சுயமானதாக, ஒப்புமையில்லாத ஒன்றாக இருப்பதற் கான சாத்தியம் அதிகரிக்கிறது. (மார்க்ஸ் காட்டிய பயன் மதிப்புக்கும், செலவாணி மதிப்புக்குமுள்ள வேறுபாடு

www.padippakam.com



போல; ஃப்ராய்டு காட்டிய இன்பக் கொள்கைக்கும் எதார்த்தக் கொள்கைக்குமுள்ள பூசல் போல). இதற்காக, நாம் பயன்படுத்தும் கருத்துவகைகள் இந்த வேறுபாடுகளை நியாயப்படுத்த வேண்டும், ஆழ்த்தி மறைத்து விடக்கூடாது.

ஃபெமினிஸ்டுகளாகிய நாம் ஃபெமினிச பிரச்னைகளுக்கு மார்க்சியம் விடையிறுக்கிறதாக அனுமானிக்கக் கூடாது. ஆண்களைப் போன்றதல்ல நமது வரலாறு, மனித மறு உற்பத்திமுறை பற்றி நாம் முழுமையாக அறிந்தாலொழிய, மார்க்சுக்கும் ஃப்ராய்டுக்கும் இடையில் உள்ள இடைவெளியை நிரப்ப முடியாது. மேற்சொன்ன அமைப்பியல் வாதம், உளவியல் ஆய்வு, நிகழ்ச்சியுணர்வு வாதம் ஆகியவற்றின் துணையுடன் நமது அனுபவங்களை ஆராய்ந்தால், மனித மறு உற்பத்தி பற்றிப் புரிந்து கொள்ளலாம். அதே வேளை, மேற்சொன்ன இரு பிராந்தியங்களுக்குமிடையேயுள்ள பரஸ்பர உறவையும், இவை இரண்டாலுமே நாம் உருவாக்கப்படுவதையும் நாம் ஒதுக்கிவிடக் கூடாது. இந்தப் பரஸ்பர உறவு பற்றிய பிரக்ஞையை நமது ஆய்விலிருந்து நாம் ஒதுக்கக் கூடாது. எப்படி, ஏன் ஆண்கள் பெண்கள்மீது அதிகாரத்தைச் செலுத்தினர் என்பதையும் சரித்திரப் பூர்வமாக எப்படி இந்த அதிகார உறவு வெவ்வேறு வடிவம் பெற்றது என்பதையும் நாம் புரிந்து கொள்ளவேண்டும், இத்தகைய உறவினால் ஏற்பட்ட விளைவுகள் நம்மை நபர்களாக அமைப்பதற்கு அடிப்படையாகியதை அறிய வேண்டும். அதிகார உறவுகள் எப்படி உற்பத்தி உறவுகளுடன் பரஸ்பர வினை புரிகின்றன, பாதிக்கின்றன என்பதை நாம் கற்றுணர வேண்டும். இறுதியாக இதனை மாற்றுவதற்கான சக்திவாய்ந்த ஊற்றுக்களை கண்டறிய வேண்டும்.

மார்க்சியம் மட்டுமே நமது பிரச்னைகளுக்கு விடை தர முடியாது. ஆனால், பெண்கள் என்ற நிலையில் நமது

படிப்பகம்

www.padippakam.com



அனுபவங்கள்மீது நமது சுயமான பார்வைகளை விஸ்தரித் தால், வரலாறு என்பது மனிதத் தேவைகளிலும் சமூக உறவுகளிலும் வேர்கொண்டுள்ளது என்ற உணர்வுடன் (மார்க்சை இயக்கிய உண்மை) நாம் கடமையாற்றலாம்,

மார்க்சியத்துடன் முரண்பட்டு, மார்க்சியத்தையும், உளவியலாய்வையும் தாண்டிய ஒரு மேம்பட்ட சமூக கோட்பாட்டை நாம் படைப்போம். மார்க்ஸ். ஃபிராய்டு மற்றும் பிறர்பயன்படுத்திய கருத்தாக்கங்கள் நமக்கு நெறிமுறைகள் மட்டும்தான். இவற்றை மேலும் ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு கோட்பாட்டுக்குள் ஒரு புதிய வடிவில் பேணிக் கொள்ளலாம். தற்போதைக்கு இத் தகையதொரு கோட்பாட்டிற்கான அவசியத்தின், சாத்தி யப்பாட்டின் மங்கலான தோற்றங்களே நம்மிடம் உண்டு. ஃபெமினிச பிரச்னைகளுக்கு விடை காண முயலும் முயற்சியின் வழியே இதற்கான சாத்தியப்பாடு இலேசா கத் தெரிகிறது.

இக்கட்டுரை ஜேன் பிளாக்ஸ் கட்டுரையின் மொழி பெயர்ப்பு SANGHARSH—ல் வெளிவந்தது.

(இலக்கிய வெளிவட்டம்—22 ஆகஸ்டு 1985)

www.padippakam.com

# பெண்மை(ய) எழுத்துகளும் பெண்ணுடலை எழுதுதலும்

*'எதிர்வு' சிவக்குமார்*

It is impossible to define feminine practice of writing, and this is an impossibility that will remain, for this practice will never be theorized enclosed, enooded–which doesn't mean that it doesn't exist.

—Helene cixous 'The Laugh of the Medusa'

எலைன் ஷோவால்ட்டர் (Elaine Showalter) பெண்ணிய விமர்சனத்தில் இரண்டு முறைகள் உள்ளதைச் சுட்டிக் காட்டுகின்றார். பெண்ணிய வாசிப்பு (அ) பெண்ணிய விமர்சனம் (Feminist reading or Faminist critique) என்பது முதல் முறை. இம்முறை பெண்ணிய விமர்சகர்களை வாசகர்களாகக் (Feminist as reader) கொள்கின்றது இலக்கியங்களில் பெண்களின் பிம்பங்களையும், ஸ்டீரியோ வகைகளையும் ஆய்தல்; விமர்சனத்தில் பெண்கள் பற்றிய விடுபடல்கள், தவறான பிரதிநிதித்துவங்கள், இவற்றைச் சுட்டல்; குறியியல் ஒழுங்கமைவுகளில் பெண்ணைக் கொண்டு (Woman as sign) குறிப்பீட்டாக்கங்களை ஆராய்தல்;—இவை இம்முறையின் அணுகுமுறைகள், செயல்பாடுகள்.

படிப்பகம்

www.padippakam.com



இரண்டாம் முறை பெண்களை எழுத்தாளர்களாகக் (Women as writers) கவனத்தில் கொள்கின்றது. வரலாறு, அடிக்கருத்துகள், வகைமைகள், அமைப்புகள் முதலானவை பெண்களின் எழுத்துகளில் எப்படி உள்ளன என ஆய்தலும் பெண் படைப்பாக்கத்தில் உளஇயங்கியல் (Psychodynamics) பற்றிப் பேசுதலும் இம்முறை அணுகல்கள். இம்முறையை ஷோவால்ட்டர் பெண்மை(ய) விமர்சனம் (Gynocritics) என்கிறார். பெண்ணிய விமர்சனம் (Feminism) போலன்றி பெண்மை(ய) விமர்சனம் (Feminity) பல்வித கோட்பாடுகளைத் தருகின்றது. பெண்களின் எழுத்துக்களை முதன்மை மூலங்களாக ஆய்வுக்கு எடுத்தல் புதிய கருத்து வரைவுகளைத் தருகின்றது. இந்நிலையில் எழூம் கேள்வி; பெண்களின் எழுத்துகளில் உள்ள வித்தியாசம் என்ன?

இரண்டாவது 'முறை'க்கு 'உடலை எழுதுதல்' (e'criture feminine) என்ற கோட்பாட்டைப் பிரெஞ்சு பெண்ணியவாதிகள் முன்வைக்கின்றனர். ஜூலியா கிறிஸ்தெவா (Julia Kristeva) ஹெலன் சிக்ஸீ (He'le ne cixous) லூயிஸ் இரிகாரே (Luce Irigaray) மோனிக் விட்டிக் (Monique Wittig) - இந்நால்வரையும் ஒரு சேரப் பார்க்கலாம். மேற்குலகக் கலாச்சாரத்தை அடிப்படையில் ஒடுக்கப்பட்டதாக, அக் கலாச்சாரச் சொல்லாடல்களை லிங்க சொல் மைய (Phallogocentric) சொல்லாடல்களாகக் கொண்டு பகுத்தாய்தல் இந்நால்வரின் பொதுத்தளம். தெரிதா, லக்கான் ஆகியோரின் பிற்கால அமைப்பியல் கருத்துகளில் பலவற்றை ஏற்றலும் சிலவற்றைத் தாண்டிப் போதலும் இவர்களுக்குள் உள்ள பொதுவான விஷயம்.

—'நான்தான் பிரபஞ்சத்தின் முழுமையான, சுய கட்டுப்பாடுடைய மையம்' என ஆண் சொல்லுதல் (வெள்ளையன், ஐரோப்பியன், ஆளும்வர்க்கம்).

www.padippakam.com



—மீதி இருக்கும் உலகம் (மற்றவை 'Others' என நான் கூறும் உலகம்) என்னோடு தொடர்பு கொள்வதால் தான் (ஆண், தந்தை, லிங்கமுடையவன்) அர்த்தம் பெறு கின்றன.

போன்ற ஆண்மையச் சொல்லாடல்களைக் கட்ட மைப்புச் சிதைவாக்கம் செய்கின்றனர் இவர்கள்.

ஆண்மையச் சொல்லாடல்களின் (Androcentric) மையத்துக்கான முறையீடு மதம், தத்துவம் ஆகியவற்றால் மட்டும் உறுதி செய்யப்படுவதில்லை. மொழியாலும் உறுதி செய்யப்படுகின்றது. குறியீட்டுச் சொல்லாடல் (பல்வேறு சூழல்களில் மொழி) என்பது உலகைச் செய்ப் படுபொருளாக மாற்ற; மொழியைத் தனது சொற் களுக்குக் குறைக்க; எல்லாவற்றுக்காகவும் எல்லோருக் காகவும் (பெண்கள் உட்பட) தானே பேச; பிறிதொரு வழியாக ஆண்களுக்கு இருக்கிறது, எனில் இப்படியான கலாச்சாரத்தின் நிறுவனங்களும் குறியீட்டுச் செயல்பாடு களும் (பேச்சு, எழுத்து, பிம்பங்கள், புராணங்கள், சடங்குகள்) எப்படி பெண்களால் எதிர்க்கப்படும்? இக் கேள்விக்கான பதிலைத் தேடுவதிலும், சொல்வதிலும் இந்நால்வரும் அவரவர் தளத்தில் வேறுபடுகின்றனர்.

'பெண்ணுடலை எழுதுதல்' என்ற கருத்து வரைவை மையமாகக் கொண்டுள்ள பிரான்சின் புரட்சிகர பெண் ணியக் குழுவின் பிரதிநிதி போல ஹெலன்சிக்ஸீ இருக் கின்றார். பெண்ணுடலையும் பெண்வித்தியாசங்களையும் மொழியில், பிரதியில் ஏற்றிக்காட்டுதல் தான் பெண்ணு டலை எழுதுதல் என்கிறார் இவர். இவ்விதச் சிந்தனை சமூகவியல் கூறுகளைக் காட்டிலும் உளவியல் கூறு களுக்கும் பயன்பாட்டைக் காட்டிலும் கோட்பாட்டுக்கும் அதிக அழுத்தம் தருகின்றது.

படிப்பகம்

www.padippakam.com



'பெண்ணியம்' என்ற பேனரை பூர்ஷ்வாவின் சம உரிமை கோரும்—நடப்புக் கால ஆணாதிக்கச் சமூகத்தில் அதிகார உரிமையைப் பெண்கள் கோருதல்—ஒரு நிபந்தனைதான் என்கிறார் இவர். இவரின் செயல்பாடுகள் ஆணாதிக்கச் சமுதாயத்துக்கு எதிரான போராட்டங்களாகவே இருக்கின்றன. பிரான்சில் 1976—82 காலகட்டத்தில் இவரின் எழுத்துகள் "அரசியல் மற்றும் உளப்பகுப்பாய்வியல் என்ற குழுவை உருவாக்கின. அகில உலக பெண்கள் தினத்தில் 'பெண்ணியம் ஒழிக' (Down With Feminism) என்ற பேனரோடு இக்குழு ஊர்வலம் நடத்தியது.

எங்கே இருக்கிறாள் அவள்? என்ற கட்டுரையில் ஆணாதிக்கச் சமூகத்தில் 'இருமை எண்ணம்' (Dinary Thought) என்பதைப் பகுத்தாய்கிறார். செய்வினை, செயப்பாட்டுத் தன்மை, சூரியன், சந்திரன், கலாச்சாரம், இயற்கை, பகல், இரவு, தந்தை, தாய், மூளை, உணர்வு, அறிவுச்சார்பு, உள்ளச்சார்பு, சொல், உணர்வு... முதலான இரட்டை எதிர்மறைகள் ஆண், பெண் என்ற எதிர்மறையை உள் இழையாகக் கொண்டு ஆணாதிக்கச் சமூக மதிப்பு ஒழுங்கமைவுக்கு ஏற்பக் கூட்டமைக்கப்பட்டுள்ளன. படிமுறை வரிசையாக ஒவ்வொரு எதிர்மறையும் ஆய்வு செய்யப்படக் கூடியதுதான். எப்போதுமே பெண்பக்க வரிசை எதிர் நிலை, ஆற்றல் இன்மை போன்றதாக இருக்கும். இந்த எதிர்மைகளில் ஒரு சொல் அர்த்தத்தைப் பெற வேண்டுமானால் அது மற்ற சொல்லை அழித்தே ஆகவேண்டும். ஒரு 'இணை' தொடர்பில்லாததாக இருக்கவே முடியாது. அது ஒரு பொதுப்போர்க்களமாக உருவாகின்றது. முடிவில் வெற்றி செய்வினையோடு தொடர்புப்படுத்தப்படுகின்றது. ஆணே எப்போதும் வெற்றி பெறுபவன். பெண் செயப்பாட்டுத் தன்மை உடையவளாக இருக்கலாம். இல்லையெனில் அவள் இருக்கவே முடியாது. இரட்டை முறை எண்ணம் எது

www.padippakam.com



வொன்றிற்கும் எதிராகப் பன்முக, பல்தன்மை வேறு பாட்டை ஹெலன் சிக்ஸி முன் வைக்கின்றார்.

தெரிதாவின் எழுத்து பற்றிய கோட்பாடான வேறு பாடு, தள்ளிப்போடல் எனபதோடு தொடர்புடையது. பெண்மை பிரதிகள் (Feminine Texts) வித்தியாசத்தில் உருவாவதாகவும் லிங்க சொல் தர்க்கத்தின் ஆளுமையைத் தகர்ப்பதாகவும் இரட்டை எதிர்மறையின் முடிவைச் சிதைத்து திறப்புடையதாக்குவதாகவும் இருக்கவேண்டும் என்கிறார். இந்த இடத்தில் பெண்மை(ய) எழுத்து என்றவுடன் அது பெண்மை; ஆண்மை என்ற இரட்டை எதிர்மறைக்குள் செயல்படஆரம்பித்துவிடுகின்றது. அதை தவிர்க்க சிக்ஸு பெண்மை எழுத்து என்பதை 'பெண்மை என்று சொல்லப்படும் எழுத்து' என்றும் ''ஒரு ஆண், பெண் உற்பத்தி செய்த எழுத்தில் ஆழ்ந்துள்ள பால்மைய பெண்மையை வாசிக்கலாம்'' என்றும் (Writing said be feminine' 'decipherable Libidinal femininity which can be read in writing produced by a male or a female') சொல் கிறார், இங்கு எழுத்தாளர்களின் பாலினம் முக்கியமல்ல. எவ்வித எழுத்து என்பதுதான் முக்கியம். படைப்பாளியின் பாலினத்தையும் அவள்/ன் உருவாக்கும்எழுத்தின் பாலினத் தையும் குழப்பிக்கொள்ளக் கூடாது. ஜாய்ஸ், ஜெனே, கொலத், துய்ரா போன்ற ஆண் எழுத்தாளர்கள் பெண் மை(ய) எழுத்துகளை (எதிர்லிங்கமைய பிரதிகளை) உரு வாக்கியதாகக் கூறுகின்றார். (கிறிஸ்தெவாவுக்கும் இக் கருத்து உண்டு).

பெண்களின் நினைவிலி மனம் (unconscious Mind) ஆண்களினது போலன்றி முற்றிலும் வேறுபட்ட விதமாக இருக்கின்றது. அவர்களின் உள-பாலியல் (Paycho-Sexua-lity) தனித்தன்மைதான் அவர்களுக்கு ஆண்மைசார் கருத் துருவங்களைத் தூக்கியெறியவும் புதிய பெண் சொல்லா

www.padippakam.com



டல்களை உருவாக்கவும் ஆற்றல் தரும். தமது எழுத்துக்களில் அவர் கூறுகின்றார்: பெண்ணின் நினைவிலி மனம் பேசுகின்ற இடத்தில் நான் இருக்கிறேன் (I am there where it / Id Female Unconscious speaks) ஆண்பாலியலின் சட்டங்களின் கீழ் பெண்களின் துயரங்களை ஆராய்ந்த பின் விடுவிக்கப்பட்ட—இட் பெண் சொல்லாடல்கள் (Id Liberated) எப்படி இருக்க வேண்டும் என்றும் விளக்குகின்றார்.

பொருட்களைப் பெண் கவனத்தோடு பார்க்கும் விசேஷம்: ஆளுமை வழியில் இன்றி Nurture ஆக அவற்றைப் புலனுணர்த்தலும் பிரதிநிதித்துவம் செய்தலும்... என்பதற்காகப் பிரேசில் எழுத்தாளரான கிளாரிஸ் லிஸ்பெக்டர் என்பவரைப் புகழ்கிறார். இந்த எழுத்தாளரின் விசேஷ கவனமும் இலக்கிய முறைகளும் சமூகக் கலாச்சார மூலத்தில் இருந்து உருவாகவில்லை. மாறாக பால் ஆற்றல் மையத்தில் (Libido) எழுந்துள்ளது.

பெண்ணின் பால் ஆற்றல் வழிப்பொருளியல் (Libidinal Economy) ஒரு ஆணால் அடையாளம் காணப்படமுடியாதது; அல்லது ஆண்மைசார் பொருளியலோடு ஒப்பிட முடியாதது. ஆண்குறியைச் சுற்றி இன்பம் தருவதாக ஆண்மைசார் பாலியல் இருக்கிறது. பகுதிகளின் வல்லாண்மையின் கீழ் மையமாக்கப்பட்ட உடல் கொண்டு வரப்படுகின்றது. இதே விதமான பிரதேசமாக்கலை தனது பாலியலில் பெண் செய்யமுடியாது. அப்படிச் செய்வது தலை, பிறப்புறுப்பு என்ற இணையாகவும் எல்லைகளுக்குள் சிக்குவதாகவும் இருக்கும். பெண்ணின் பால் ஆற்றல் பிரபஞ்சமானது. அவளின் நினைவிலி மனம் உலகமயமானதாக இருப்பதைப் போல.

''நிறைய உடல்கள்; எனவே நிறைய எழுத்துகள்'' (More bodies hence more writings) என்பது இவரின்

www.padippakam.com



கோஷம். இப்படியான முடிவுகளுக்கு வர ஹெலன்-சிக்ஸு குரல்; தாயின் குரல்; ஈரினப்பாலியல் (Bisexuality) பரிசும், ஒழுங்கும் போன்ற கருத்தாக்கங்களை முன்வைக்கின்றார். இவ்வித கருத்தாக்கங்கள் தெரிதா, லக்கான் போன்ற கருத்தாக்கங்களில் இருந்து விலகி நிற்கின்றன.

லுயிஸ் இரிகாரே 1974-இல் தனது பி. எச்.டி., ஆய்வேட்டைச் சமர்ப்பித்து நூலாக வெளியிட்டபின் வின்சென்ஸ் நகரில் உள்ள E'cole freudienne என்பதில் இருந்து வெளியேற்றப்பட்டார். பிராய்டுக்கு லிங்க மையச் சார்பு இருந்தது என அவர்களுக்கு தனதுத் ஆய்வேட்டில் (Speculum of the other women) சொன்னதுதான் காரணம். பெண்கள் ஆண்-மைய கருத்து வரைவுகளால் அமைக்கப்பட்ட ஒரு உலகில் சிக்கியிருப்பதால் தங்களைத் தாங்களே அறியவோ பிரதிநிதித்துவப்படுத்தவோ அவர் வழியேதும் இருந்திருக்கவில்லை என்கிறார். பெண்ணின் சுய-பிரக்ஞை (Self-concious) யின் தொடக்கத்துக்குப் பெண்களின் உடல்கள் பற்றிய உண்மைகளையும் பெண்களின் பாலியல் இன்பங்களையும் இவர் முன் வைக்கின்றார். ஏனெனில் இவை ஆண் சொல்லாடல்களில் இல்லாமல் இருந்தன அல்லது தவறாகப் பிரதிநிதித்துவம் செய்யப்பட்டு இருந்தன.

பிராய்டு மேற்குலகத் தத்துவ மரபின் பெண் வெறுப்பு விதிகளுக்கு ஆட்பட்டே தமது சொல்லாடல்களை உருவாக்கி இருப்பதாகச் சொன்னதுவும் பெண் அனுபூதி வாதத்தை (Female mysticism) முன் வைத்ததும் இவரின் முக்கியப் பங்களிப்பாகும். பாலின வேறுபாடு பற்றிய பிராய்டின் கோட்பாடு 'பார்வை'யோடும் கண்ணோடும் சம்பந்தப்பட்டது. பிராய்டுக்கு முக்கியமான பாலின வேறுபாடு வெளிப்படையாக ஆணுக்குத் தெரியும் பிறப்புறுப்பான லிங்கம். பெண்ணுக்கு அப்படி இல்லாதது

படிப்பகம்

www.padippakam.com



என்பதே. இது வெறும் பார்வையால் விளைந்தது. இந்தப் பார்வை பெண்ணின் வேறுபாட்டை இன்மை (அ) விடு படல் என்று சொல்லும் ஆணின் நெறயால் பார்க்கப்படு படுகின்றது. நமது கலாச்சாரத்தில் பிரதிநிதித்துவத்துக்கு வெளியில் நிற்கிறாள் பெண். குறிகளுக்கிடையில் உணரப் படும் அர்த்தங்களுக்கிடையில், கோடுகளுக்கிடையில் மறைக்கப்பட்டு உள்ளதைத் தேடிப்பிடிப்பதாக பெண்மை இருந்து வருகின்றது.

பெண் ஆண் தன்னிலையின் ஊடுருவு பார்வைக்குத் தேவைப்படும் எதிர்நிலையாக இருக்கிறாள். பெண்ணின் வழி ஆண் தன்னைத் தானே பிரதிபலிப்பவனாக இருக்கி றான். பெண் ஆணின் பிரதிபலிப்பாகவும் இருக்கிறாள். லிங்க நீக்கம் செய்யப்பட்டவளாக (castarted) பெண் தன்னை உணர்தல். பெண்ணின் லிங்க விருப்பு (Penis -envy), சிறிய ஆண் குறியாகக் கிளிடோரியைச் சொல்லு தல் ஆகிய பிராய்டின் கோட்பாடுகள் ஆணின் பார்வை யால் உருவானவை என்கிறார் இரிகாரே.

சிமோன் தெ. பொவார் கூறுவதைப் போல் பெண் 'மற்றவை' (other) யாக மட்டும் இல்லை. குறிப்பாக 'ஆணின் மற்றவை' யாக (அவனின் எதிர்நிலை அல்லது கண்ணாடி பிம்பம்) உள்ளாள். இந்தச் சிந்தனையால் தான் ஆணாதிக்கச் சமூகச் சொல்லாடல்கள் பெண்ணின் பிரதிநிதித்துவத்துக்கு (representation) வெளியில் நிறுத்து கின்றன; அவள் ஒரு இன்மை, எதிர்நிலை, இருண்ட கண்டம். குறை ஆண், ஆணாதிக்க பிரதிபலிப்பு தர்க்கத்தில் ஆட்பட்ட பெண், ஒன்று மௌன மாக இருக்கவேண்டும், அல்லது குறை ஆணாகத் தன்னை உணர்ந்து அந்தப் பிரதிபலிப்பு பிரதிநிதித்துவத் துக்குத் தக வினைபுரிய வேண்டும். இரண்டாவது சொன்னது போலச்செய்தல் (mimetic) என்பதுதான் ஹிஸ்

www.padippakam.com



டீரியா. ஆண்மைசார் முறையில் அவள் தனது சொந்த பாலியலை ஹிஸ்டீரியா போலச் செய்து காட்டுகிறாள். அவளின் இந்த ஹிஸ்டீரியா நாடகச்செயல் ஆணாதிக்க சொல்லாடல்களில் இருந்து தன்னை விடுவித்துக் கொள் ளும் ஒரு முயற்சியே.

தன்னிலை (Subject) பற்றிய கோட்பாடுகளும் ஆண் மையின் இடத்தையே பேசுகின்றன. பெண்களுக்குத் தன்னிலையாக்கம் (Subjectivity) மறுக்கப்படுகின்றது இந்த வெளித்தள்ளல்தான் தன்னிலையின் ஆண்களின்) நிலையான பொருளாகப் பெண்களை உருவாக்குகின்றது. அனுபூதி நிலை (Mysticism) என்பது தன்னிலைப் பருவம் (Subjecthood) இல்லாமல் ஆதல், தன்னிலை/செயப்படு பொருள் பிரிவினை மறைதல் ஆகும். அப்படி ஒரு நிலை சித்திக்கப்படுவது பெண்களுக்கு ஆணாதிக்கச் சொல்லா டல்களால் மறுக்கப்படாத அழுத்தப்படாத ஒரு பிடிப் பாக இருக்கும்.

மெட்டாபிஸிக்ஸின் ஆளுகையின் கீழ்தான் நாம் இன்னமும் வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம். நிகழ் கால மெட்டாபிஸிக்ஸின் சாயம் இன்றி புதிய கருத்து வரைவுகளை உருவாக்கமுடியாது என்ற தெரிதாவின் கூற்றை ஏற்கும் இரிகாரே கட்டமைப்புச் சிதைவாக்கத் தைக் ('Deconstruction) கோட்பாடு என்று சொல்லாமல் 'நடவடிக்கை' (Activity) என்கிறார். பெண்மை பற்றிய ஒரு பொதுக்கோட்பாடு உருவாக்கம் ஒரு மெட்டாபிஸிக்ஸ ஆகவே முடியும். 'பெண்' பற்றிய விளக்கம் சாராம்ச வாதமாகி விடும் ஆபத்தையும் இரிகாரே உணர்ந்தே இருக் கின்றார்.

ஆணாதிக்கத் தர்க்கத்தைச் சிதைக்கும் ஒரு வழிதான் ஆணின் சொல்லாடல்களைப் போலச் செய்தல் Mimicry-of Male Discourse), பெண்களின் பேரின்பம், (Jouissance)

படிப்பகம்

www.padippakam.com



என்பதை ஆணின் தர்க்கம் யோசித்ததுகூட கிடையாது. ஆணின் இன்பம் என்பது ஒருமுகப்பட்டதாகவும் இது லிங்கத்தோடு தொடர்புபடுத்தப்பட்டும் வருகின்றது. ஆனால் பெண்களின் பாலினம் (Sex) என்பது ஒன்று அல்ல. அவளின் பாலின உறுப்புகள் பல்வேறுபட்ட கூறு களால் (உதடுகள், பெண்குறித்துவாரம், கிளிடோரிஸ், முலைகள், செர்விக்ஸ் யுபிரஸ்) சேர்க்கப்பட்டிருப்பதால் அவளின் பேரின்பம் பல்வகைப்பட்ட து: ஒருமுகப்படுத்த முடியாதது, முடிவற்றது. எனவே பெண்கள் 'பார்வை (Vision)'க்கு முக்கியத்துவம் தராமல் தொடுதலுக்கு (touch) தருகின்றனர். பெண் பரந்துபட்ட பாலியல் எழுச்சியை அனுபவிக்கிறாள். உதாரணம்: பெண்குறியின் இரண்டு உதடுகளில் இருந்து; பால்மைய ஆற்றல்களின் பெருக்கங்கள்.

தனிப்பட்ட பெண்மொழி (Leparler) Femme, Womanspeak, (பெண்பேச்சு) பற்றியும் இரிகாரே பேசியுள் ளார். பெண்கள் தங்களுக்குள் கூடிப் பேசும்போது பெண் மொழி இயல்பாக உருவாகின்றது. ஆணின் வருகையால் அது உடனே மறைந்து விடுகின்றது. பெண்கள்-மட்டும் குழுவே (Women-Only Group) விடுதலைக்கான வழி என்ற கருத்தை ஏற்கும் இரிகாரே இப்படியான குழுக்கள் நிகழ்கால வரிசைமுறையை மாற்றுவது மட்டுமே குறிக் கோளாகக் கொள்ளக்கூடாது என்கிறார். இப்படிச் செய் வது வரலாறு மீண்டும் பழையபடி திரும்பி எழுதப்படுவ தாக லிங்க ஆற்றலுக்குதிரும்பப் போவதாகவும் அமைந்து விடும். பெண்பேச்சைப் **பற்றி** ஏதும் சொல்லமுடியாது. உதாரணம் காட்டமுடியாது. ஏனெனில் அதனைப் பேசு கின்றார்கள். பேசிய பேச்சாக (Meta-Spoken) அதைத் திருப்பிச் சொல்லமுடியாது என்கின்றார். பெண்ணின் பாலியல் பன்முகப்பட்டதாக இருப்பதின் விளைவாக



படிப்பகம்

www.padippakam.com



உருவாகும் பெண்ணின் மொழிகூட பழக்கமான ஆணாதிக்கத் தர்க்கத்தின் விதிகளுக்குள்ளேயே பல்முகமாக, சுய இன்ப எழுச்சியாக பரந்துபட்டதாக. வரையறுக்க முடியாததாக இருக்கும்.

பிரான்சில் மிகவும் புகழ் வாய்ந்த (Tel Quel) என்ற குறியியல்+மார்க்கிய இதழின் தோற்றுவிப்பாளர்களில் ஒருவர் ஜூலியா கிறிஸ்தெவா. உளப்பகுப்பாய்வியல் அறிஞர் அவந்த்-கார்ட் (Avant-Garde) எழுத்தாளர்கள், மொழி, தத்துவம் பற்றி எழுதியுள்ளவர்.

கிறிஸ்தெவா இதுவரையான 'மொழியியல்' பற்றிய வரையறைகளைத் தலைகீழாக்குகின்றார். மொழி, என்பது ஒரு Monolithic ஒழுங்கமைவு இல்லை. மாறாகச் சிக்கலான குறிப்பீட்டாக்கத் தொடர் செயல். மொழி ஒருமுகப்பட்டதல்ல. பன்முகமானது (Heterogenous), அது பேசும் தன்னிலைகளில், தன்னிலைகளுக்கிடையில் அமையும் குறிப்பீட்டாக்கத் தொடர் செயல். அதாவது குறிப்பட்ட ஒரு சொல்லாடல், பொதுமையான மொழிக் கிடங்கு அன்று. இந்தவிதச் சிந்தனை வோலோஷினோவ் (Voloshinov) சிந்தனையுடன் இணைத்துப் பார்க்கப்பட வேண்டியது. கிறிஸ்தெவாவும் வோலோஷினோவும் மொழியியல், அணியியல், இலக்கியவியல் (Linguistics, Rhetoric, Poetics) ஆகியவற்றின் எல்லைகளைத் தகர்த்து ஒரு புதிய புலத்தைக் கட்டமைக்கின்றனர். அப்புதிய புலம்தான் குறியியல் (Semiotics) அல்லது பிரதிக்கோட்பாடு (Texual Theory).

ஆங்கிலோ அமெரிக்க பெண்ணிய மொழியியலின் நான்கு ஆய்வுப் பரப்புகள்: (1) மொழிப்பயன்பாட்டில் பேச்சில் சொல் அல்லா தொடர்பியலில் பாலின ஒற்றுமை வேற்றுமைகளைக் கண்டறிதல் (2) மொழியில் பாலாதிக்கம் (3) மொழி அமைப்புக்கும் மொழி பயன்பாட்டிற்கும்

படிப்பகம்

www.padippakam.com



உள்ள உறவுகள். (4). மாற்றத்துக்கான முயற்சிகள். முதல் ஆய்வுப் பரப்பின் அணுகுமுறை சூழ்நிலையில் இருந்து பிரதியின் பகுதியைப் பிரித்தெடுத்துப் பார்ப்பது. இதனைக் கிறிஸ்தெவாவின் 'அர்த்தம் என்பது சூழ்நிலைப் பட்டது' என்ற கருத்து மறுக்கின்றது. முழு பிரதியையும் ஒரு ஆய்வுப் பொருளாகக் கொண்டு அதன் கருத்துருவம், அரசியல், உளப் பகுப்பாய்வு ஆகியவற்றை சமூகம், மனம் மற்ற பிரதிகள் ஆகியவற்றோடு தொடர்புபடுத்தி ஆராய லாம் என்கிறார்.

வர்க்கம் என்பது குறி-சமூகக் குழுவோடு (Sign-comm unity) ஒத்திருப்பதில்லை. குறி-சமூகக் குழு எனச் சொல் வது கருத்துருவத் தொடர்பியலுக்காக ஒரேவிதக் குறி களின் கணத்தைப் பயன்படுத்துபவர்களின் முழுமைத் தொகுதி ஆகும். பல்வேறுபட்ட மாறுபட்ட வர்க்கங்கள் ஒரே மொழியையே பயன்படுத்துகின்றன. அதனால் வேறுபட்ட அழுத்தங்கள் ஒவ்வொரு கருத்துருவக் குறியி லும் வெட்டிக் கொள்கின்றன. குறி வர்க்கப் போராட் டத்துக்கான களமாக உருவாகின்றது. எனில் மொழியை ஆண்தான் உருவாக்கினான் (டேல்ஸ்பென்டெரின் Man Made Language நூல்) எனச்சொல்வது பொருந்தாது போகின்றது. குறியின் அர்த்தம் திறக்கப்படுகின்றது- பல்லர்த்தங்களைப் பெறுகின்றது. ஆளுகின்ற அதிகாரக் குழு 'பெண்'ணை வரையறுக்க மறுக்கிறார். பெண் என்பதால் நான் உணர்வது எதுவெனில் பிரதி நிதித்துவம் செய்யப்பட முடியாதது; பேசாதது; பெய ரிடல் மற்றும் கருத்துருவங்களின் வெளியில நிற்பது... என்கிறார். இந்த இடத்தில் மொழியியலைத் தலை கீழாக் கியதுபோல் பெண்ணியத்தையும் தலைகீழாக்குகிறார். பெண்கள் விளிம்புநிலை உயிர்கள போல் (Women As Marginality) என்னும் லிங்கமையச் சொல்லாடல்களுக்கு எதிராக விளிம்புநிலையின் பகுதியாக எதிர் நிலை மற்றும்

படிப்பகம்

www.padippakam.com



மறுப்பை பெண்ணில் நிறுத்துவது கிறிஸ்தெவாவின் செயல்பாடாக இருக்கின்றது. Ecriture Feminine அலலது Parler Fomme என்பதிலும் உள்ளுறையாகப் பெண்மை, பெண் உள்ளதால் இவற்றைப் புறக்கணிக்க முற்படு கின்றார்.

பெண்மை (Femininity) பற்றியோ அல்லது குறைந்த பட்சம் பெண் தன்மை ((Femaleness) பற்றியோ கிறிஸ் தெவா கோட்பாட்டை உருவாக்கவில்லை. அவரின் கோட்பாடு என்பது விளிம்புநிலை, தலைகீழ் மாற்றம் மற்றும் ஒத்துப்போகாதவர்கள் (Marginality, subversion, and dissdence) ஆகியவற்றைப் பற்றியதுதான். ஆணாதிக் கத்தால் பெண்கள் விளிம்பு நிலையாக வரையறுக்கப்படும் போது அவர்களின் போராட்டம் மையப்படுத்தப்பட்ட அதிகார அமைப்புக்கு எதிராக அதே வழியைத்தான் கோட்பாடாக்க வேண்டும்.

குறியியல் Chora ஒடிபஸ் – முன் என்பதால் அது தாயோடு தொடர்புடையது. குறியீடு தந்தையின் சட்டத் தால் ஆளப்படுவது. குழந்தையான சிறுமிக்கு ஒரு வாய்ப்பைத் தேர்ந்தெடுக்க வேண்டியிருக்கிறது: அவளு டைய தாயோடு அடையாளம் கொள்வதா? அல்லது குறியீட்டுத் தளத்தில் தந்தையோடு அடையாளம் கொள் வதா? முதல் வாய்ப்பில் ஒடிபஸ் - முன் நிலைகள் (வாய் & குத எழுச்சிகள்) வலியூட்டப்படுகின்றன. மாறாக இரண்டாம வாய்ப்பில் குறியீட்டு ஆளுமையைச் சிறுமி பெற்று ஒடிபஸ்—முன் நிலைகளை அமுக்குகிறாள், அழிக்கிறாள் முதல் வாய்ப்பை ஏற்றல் என்பது குறியீட்டு வரிசைக்கு விளிம்பு நிலையில் அவளை நிறுத்தும். இப்படிச் சொல்வதால் பெண்மையை ஒடிபஸ்—முன் எனச் சுருக்கி வரையறுத்துவிடவும் முடியாது. இது ஒரு சிறுவனுக்கும் உள்ள வாய்ப்புகள். எனவே 'பெண்மை' பெண்களோடு மட்டும் அன்றி ஆண்களோடு சம்பந்தப்பட்டது என.

www.padippakam.com



சொல்கின்றார் கிறிஸ்தெவா. சுருக்கிச் சொல்வதால் 'பெண்மை' என்பதை 'ஆணாதிக்கக் குறியீட்டு வரிசையால் விளிம்பு நிலைக்கு தள்ளப்படுவது எனலாம். இதுகூட சார்பு நிலை வரையறைதான். எல்லாப் பெண்களையும் 'பெண்மை' யாகவும் எல்லா ஆண்களையும் 'ஆண்மை' யாகவும் எடுத்துக் கொள்ளுதல் ஆணாதிக்க அதிகாரத்துக்கு ''எல்லாப் பெண்களும் (பெண்மை அல்ல) குறியீட்டு வரிசைக்கும் சமூகத்துக்கும் விளிம்பு நிலை'' என வரையறுக்க உதவிவிடும்.

சிக்ஸூ இரிகாரே இருவரின் வரையறைகள் பெண் என்பவள் அல் - உயிர் **(non-Being)** என்பதாக முடிய கிறிஸ்தெவாவின் வரையறை (அப்படி அவர் சொல்லவில்லை) இறுக்கநிலை (**Position**) யாக இருக்கிறது. புரட்சிகர தன்னிலை என்பது (பெண்மை அல்லது ஆண்மை எதுவாயினும்) குறியியல் பேரின்பத்தைக் கொண்டு குறியீட்டு வரிசையைத் தொந்தரவு செய்யத் தொடங்குவதுதான். இவ்வித புரட்சிகர நடவடிக்கை மல்லார்மே போன்ற கவிஞர்களிடமும் நவீன எழுத்தாளர்களிடமும் (ஜாய்ஸ்) இருக்கிறது என்கிறார். இந்த எழுத்தாளர்கள் தங்களின் தாய்மார்களுடனான குழந்தைப் பருவக் காதலை விட்டொழிப்பதற்குப் பதிலாக அப்படியான பேரின்பங்களை **Sub - conscious** நிலையில் மீண்டும் அனுபவிக்கின்றார்கள். மரபார்ந்த மொழியின் விதிகளுக்கும் சீர்மைக்கும் எதிராகப் பிரதிகளைக் கட்டமைத்து அவ்வின்பங்களை விளையாட விடுகின்றனர்.

ஒரு புதிய சொல்லாடலை உருவாக்குவதற்குப் பதிலாகப் பெண்கள் நிலைநிற்கும் சொல்லாடல்களைக் கேள்விக்கு உள்ளாக்க வேண்டும்.

'செயலாற்ற ஒரு பாத்திரம் வேண்டுமெனில்... எதிர்மறை செயல்பாட்டை மட்டும் கருதிக் கொள்வதுதான்,'

www.padippakam.com



சமூகத்தின் இருப்பு நிலையில் உள்ள எண்ணிக்கைக்குட்பட்ட, வரையறுக்கப்பட்ட, அமைப்பாக்கப்பட்ட, அர்த்தங்களை பிடித்து வைத்துள்ள, எல்லாவற்றையும் ஒதுக்க வேண்டும். இப்படியான ஒரு அணுகுமுறை பெண்களை சமூக சங்கேதங்களை (Social code) சிதைக்கும் செயலைத் தூண்டும். புரட்சிகர இயக்கங்களோடு சேரத் தூண்டும்.''

தாங்கள் யார் என்பதைக் கண்டுபிடிக்கவும், வெளிக்காட்டவும் ஆண்மைசார் வரலாறு தங்களை அடுக்கிவைத்திருப்பதை வெளியில் கொண்டுவரவும் பெண்கள் முயன்றால் அவர்கள் தங்கள் பாலியலில் இருந்து தொடங்க வேண்டும். அவர்களின் பாலியல் அவர்களின் உடல்களோடு, ஆண்களில் இருந்து வேறுபட்ட பால் மையங்கள், பிறப்புறுப்புகள் ஆகியவற்றில் தொடங்குகின்றது. இது இரிகாரே மற்றும் சிக்ஸுவின் நிலை. இவ்விதச் சிந்தனை அமெரிக்காவில் புரட்சிகரப் பெண் நிலைவாதிகளிடமும் உண்டு. கிறிஸ்தெவா ஆண்களையும் Feminity யில் சேர்ப்பதில் வேறுபாட்டுடன் நிற்கின்றார்.

Questions feministes என்ற இதழ் இதுவரை நாம் பார்த்த மூவரின் கோட்பாடுகளைக் கேள்விக்குள்ளாக்கிக் கொண்டிருக்கிறது. சுயஅறிவின் மூலமாக உடல் (body as source of self-knowledge) இருக்க முடியுமா? சமூக அனுபவத்துக்கு முன்பாக அல்லது மாறாக பெண்பாலியல் இருக்க முடியுமா? பெண்கள் தங்கள் உடல்களைத் தூயதாக முதன்மையானதாக அனுபவிக்கமுடியுமா? முடியாது என்பதுதான் விடை. பாலியல் என்பது பெண்களுக்குள், ஆண்களுக்குள் இருக்கும் பிறப்போடு வந்த தன்மை அல்ல. கரு குடும்பத்தோடு ஒரு தனி நபர்க்குள்ள உறவு மற்றும் தந்தை-தாய் ஜோடியால் பரிமாறப்படும் குறியீட்டு ஒழுங்கமைவுகள் ஆகியவற்றின் வழிதான் பாலயல் கட்டமைக்கப்படுகின்றது. எனவே சுத்த சுயம்பாக 'பாலியல்' இருக்காது எனும்போது அதை மையப்படுத்துவதில்சிக்கல் வருகின்றது.

படிப்பகம்

www.padippakam.com



பாலியல் அடையாளம் தனித்தோ ஒரு சாதாரண உடலியல்சூழலிலோ வருவதில்லை. குழந்தை ஆணாகவோ பெண்ணாகவோ உருவாதல் என்பது அவளின் குடும்பத்தில் உள்ள ஆண், பெண் உடனான எதிர்வினை, அவளின் அனுபவத்திற்கேற்ப (குறிப்பாக பெற்றோரில் யாரொருவருடனான நேரடி இணைப்பு இழப்பாகிறதோ அவ்வனுபவம்) அவள் கட்டமைக்கும் ஆண், பெண் பிம்பங்களின் எதிர்வினையையும் பொறுத்து அமைகின்றது. குழந்தையின் ஆசைகள், குழந்தையில் இருந்து வளர்ந்த வயது வந்த நிலையில் ஆசைகள் என்பன குழந்தையின் உடல் சார் பாலின்ப உணர்வுகளால், மட்டுமே விளைவதில்லை; இந்த உணர்வுகள், பாலினப்பட்ட ஒரு உலகில் பெற்ற தொடக்க கால அனுபவங்களின்வழி சேரும் தனது உடல் சார் அர்த்தங்களால் வாசித்தறியப்படுகின்றன. குழந்தையின் சுய-புலனுணர்வு ஒழுங்கமைவுகளில் பின்னர் என்ன நேரிடுகின்றது என்பதைப் பேசாமல் உளப்பகுப்பாய்வில் இருந்து உந்துதல் மற்றும் பால்மையம் ஆகிய கருத்து வரைவுகளை மட்டும் எடுப்பது என்பது ஆழமான நிலையை— லிங்கமைய சமூகம் அதிகாரத்தைத் திணிக்கும் நிலை— விட்டுவிடுவதாக இருக்கின்றது.

இன்னமும் நிறைய கேள்விகளையும் விமர்சனங்களையும் இவர்கள் மீது 'Questions feministes' என்ற இதழ் வைக்கின்றது. 1970இல் இருந்து இவ்விதழில் எழுதிவரும் மோனிக் விட்டிக் தனது நாவல்கள், தனியுரைகள், வரலாறுகள் ஆகியவற்றைப் பெண்கள்— அடையாளங்கள் கொண்ட பெண்கள் இடையேயான சமூக உறவுகளைப் பற்றிச் சொல்வதாக எழுதியுள்ளார். பெண்(மை)ய கருத்தாக்கங்களை மறுக்கின்றார்.

ஒரு சந்தேகத்தோடு கட்டுரையை முடிப்போம். மூவரின் கருத்தாக்கங்களும் **''பெண்களுக்குள்ளேயே இருக்கின்ற வேறுபாடுகளை''**க் கணக்கில் எடுத்துக் கொள்ள

படிப்பகம்

www.padippakam.com



வில்லை. இனக்குழு, தேசியம், இனம், வர்க்கம் ஆகிய வேறுபாடுகளுக்குள் பெண்களும் வேறுபட்டே நிற்கின்றார்கள். கிளிடோறிஸ் மற்றும் பெண்குறி உதடுகளை சடங்காக வெட்டி எறிந்துவிடும் ஒரு ஆப்பிரிக்கப் பழங்குடிப் பெண்கள் எங்கிருந்து பாலியலைத் தொடங்குவது? இவர்கள் பாலியல் பரந்துபட்டதா? ஏனெனில் இரண்டு உதடுகள் இல்லையே? இந்தியா போன்ற இறுக்கமான மூன்றாம் உலக நாடுகளில் பெண்கள் தங்கள் 'குறி'யின் ரகசியத்தையே அறியாதவர்கள் ஆயிற்றே? தமிழ்ப் பெண்களுக்குள் ''கிளிடோரிஸ்'' எதுவென்று தெரியுமா? எனில் இவர்கள் எங்கிருந்து தொடங்குவது?

லிங்கமையச் சொல்லாடல்களை எதிர்த்தல், புதிய பெண் பிரக்ஞையை, பிரதி நிதித்துவத்தை உருவாக்கல் என்ற இவர்களின் இரு கருத்தாக்கங்கள் எல்லா பெண்களும் கையெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் என்பதில் ஐயமில்லை.

(மேலும்—13, 14, 1992)

படிப்பகம்

www.padippakam.com

# பாலியல் அரசியல் பற்றிய கோட்பாடு

*அருணா*

கேட் மில்லட் எழுதிய **Sexual Politics** என்ற நூல் 1969 இல் வெளிவந்து பரவலாகப் புகழ்ந்து பேசப்பட்டது. இதற்குக் காரணம் இந்நூல் கல்வியாளர் × பிறர் என்ற இடைவெளியை நிரப்பும் பாலமாக இருந்ததுதான். உலகில் அதிகம் விற்கப்பட்ட பிஎச் டி. ஆய்வேடாக அநேகமா இதுதான் இடம் பெறும். இந்நூல் (அ) பாலியல் அரசியல் (ஆ) வரலாற்றுப் பின்புலம் (இ) இலக்கியப் பிரதிபலிப்பு என்ற மூன்று பகுதிகளாக அமைந்துள்ளது. முதல்பகுதி பாலினங்களின் இடையேயான அதிகார உறவுகளின் இயல்பைக் கூறுவதாகவும், இரண்டாம் பகுதி 19,20 ஆம் நூற்றாண்டுகளில் பெண்ணியப் போராட்டங்களையும் அப்போராட்டங்களை எதிர்த்தவர்களையும் பற்றி வரலாற்றுப் பூர்வமாகக் கூறுவதாகவும் மூன்றாம் பகுதி டி. எச். லாரன்ஸ், ஹென்றிமில்லர், நார்மன் மெய்லர், ழீன்ஜெனெ ஆகியோரின் படைப்புகளில் பாலியல் அதிகார - அரசியல் எப்படி விவரிக்கப்பட்டுள்ளது எனக்காட்டுவதாகவும் உள்ளது. அமெரிக்க ஆங்கில மரபில் இந்நூல் 'தாய்' ஸ்தானத்தைப் பெற்றிருக்

படிப்பகம்

www.padippakam.com



கிறது. அமெரிக்கப் புதுத்திறனாய்வு மேலோங்கி இருந்த காலத்தில் (அதாவது 'பிரதி, யின் அர்த்தத்தைப் பிரதிக்குள் மட்டுமே பார்த்த காலத்தில்) மில்லட் இலக்கியத்தைச் சரியாகப் புரிந்துகொள்ள அதன் சமூகக் கலாச்சாரச் சூழ்நிலைகளும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் என்றார். மேலும் வாசகன் / விமர்சகன் என்ற படிமுறை நிலையில் (செயல்பாட்டுத்தனம் / செய்வினைத்தனம்) பிம்பத்தை மில்லட் உடைத்தெறிகிற விதமாக இலக்கிய ஆய்வை மேற்கொண்டார். சிமோன் தெ. பொவாரின் 'The second sex' என்ற நூல் மில்லட்டை பாதித்திருப்பினும் அந்நூலைப் பற்றிக் குறிப்பிடவே இல்லை. இரண்டு இடங்களைத் தவிர, பிராய்டை மில்லெட் ஒதுக்கிவிடுகிறார். ஆனால் பிற பெண்ணியவாதிகள் லக்கானின் பிராய்ட் மீதான மறுவாசிப்பை ஏற்கின்றனர். இனி கட்டுரையின் சுருக்கம்[1].

கீழ்வரும் விவரிப்பு 'ஆணாதிக்கம் பற்றிய ஒரு கோட்பாட்டினைநோக்கியகுறிப்புகள்' எனச்சொல்லும்விதத்தில் ''பாலினம்[2] என்பது ஒரு அந்தஸ்து பற்றியஅரசியல் மறைபிரயோகம்'' என்கிறது. பாலியல்உறவு ஒழுங்கமைவு மாக்ஸ்வீபெர் (Max Weber) சொல்வதுபோல் ஆளுமை (dominance) மற்றும் துணைநிலை (Subordinance) என்பதற்கிடையிலான உறவாகவே இருக்கிறது. நமது சமூக வரிசையில் ஆண்கள் பெண்களை ஆளுதல் என்பது பிறப்புரிமையாக இருப்பதைக் கவனிக்கத் தவறி விடுகின்றனர்; ஒத்துக்கொள்ளத் தயங்குகின்றனர். இந்த ஒழுங்கமைவின் மூலம் ஒரு அறிவார்ந்த உள்ளூக காலனியாக்கம் (Internal Colonization) பெறப்படுகின்றது. இதற்குக் காரணம் நமது சமூகம் எல்லா வரலாற்று நாகரிகச் சமூகங்கள் போலவே தந்தையுரிமைச் (ஆணாதிக்கச்) சமூகமாக இருப்பதுதான்.[3] அதிகாரப் பிரிவுகள்—இராணுவம், தொழிற்சாலை, தொழில்நுட்பம், பல்கலைக்கழகங்கள்,

படிப்பகம்

www.padippakam.com



அறிவியல், அரசியல், நீதி—எல்லாம் (கூடவே உடல் ரீதியான அடக்குமுறையை மேற்கொள்ளும் போலீஸ் துறையும்) முற்றும் ஆண்கள் கைகளில் இருப்பதே இந்த உண்மையை நிரூபிக்கப் போதுமானதாகும். ஆணாதிக்கச் சமூகத்தில் இரண்டுவிதமாக அதிகாரம் செயல்படுகிறது. ஆண் பெண்ணை அதிகாரம் செய்யலாம்; மூத்த ஆண் இளைய ஆணை அதிகாரம் செய்லாம். ஜனநாயகத்தில் பெண்கள் சில பதவி வகிப்பது ஒரு அடையாள பிரதிநிதித்துவம்தான். ஆணாதிக்கம் வரலாற்றின் போக்கில் பல்வித வடிவங்களில் மாறி மாறி வந்துள்ளது.

## 1. கருத்துருவம் (Ideology)

அதிகாரத்தின் மூலம் அரசாங்கம், ஒப்பந்தத்தின் வழியோ அல்லது வன்முறையின் வழியோ உருவாகின்றது. கருத்துருவம் என்பது ஒப்பந்தம் என்பதில் பிறக்கிறது. மனோநிலை (Temparament) பாத்திரம், (Roll) அந்தஸ்து (Status) என்ற மூன்றின் வழி பாலியல் அரசியல் இரண்டு பால்களின் சமூகவயமாக்கலில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. அந்தஸ்து ஆணுக்கு மேலிடத்தையும் பெண்ணுக்குக் கீழான இடத்தையும் தருகிறது. ஆண்மை / பெண்மை Masculine / Feminine) என்ற பால்பகுப்பில் உருவாக்கும் ஸ்டீரியோடைப் பாத்திர ஆளுமைகளை மனோநிலையின்படி உருவாக்கிக்கொள்ள வேண்டியிருக்கின்றது. இது மேலாதிக்கம் செய்யும் குழுவினரின் தேவை, மதிப்புகளுக்கேற்ப உருவாக்கப்படுகின்றது. இதன்படி ஆண் : அறிவு போர் ஆற்றல், சக்தி, திறமை, போன்ற பண்புள்ளவர்களாகவும் பெண் : அமைதி, அறியாமை, கற்பு போன்ற பண்புடையவளாகவும் உருவாக்கப்படுகின்றார்கள். இது இரண்டாவது கூறான பாத்திரம்மூலம் மேலும் வலுப்படுத்தப்படுகின்றது. நடத்தை, உடல் அசைவு பாவனை முதலானவற்றை பால்சார்பாகப் பிரிக்கின்றது.[4] மேலும்

www.padippakam.com



பெண் குழந்தைகள் சமயலை மேற்கொள்பவர்களாகவும் ஆண் குழந்தைகள் மனித சாதனை புரிபவர்களாகவும் பகுக்கப்படுகின்றனர். பெண்ணுக்கு ஒதுக்கப்படும் குறிப் பிட்ட பாத்திரம் அவளை உடலியல் அனுபவரீதியில் சிறைவைப்பதாகவே இருக்கிறது. அந்தஸ்தை அரசியல் கூறாகவும் பாத்திரத்தைச் சமூகக் கூறாகவும் மனோ நிலையை உளவியல் கூறாகவும் பார்க்கலாம்.

## 2. உயிரியல் (Biological)

ஆணாதிக்க மதம், பொதுமக்கள் அணுகுமுறை, சில வேளை அறிவியல் எல்லாம் பால்களுக்கிடையிலான வேறு பாட்டை உயிரியல் ரீதியானதாக பார்க்கின்றன. எனவே நடத்தையை உருவாக்கும் கலாச்சாரம் இயற்கையோடு இணைந்து போகிறது எனவும் சொல்கிறார்கள். முன் பிரிவில் சொன்ன மூன்று கூறுகளில் எதுவுமே மனித இயற்கையின் பாற்பட்டதல்ல. உடல் வலிமை என்பது அரசியல் உறவுகளின் ஒரு பண்பு அன்று. நாகரீகம் உடல் வலிமைக்குப் பதிலாக எப்போதும் பிற முறைகளை (தொழில்நுட்பம், ஆயுதம், அறிவு) பதிலீடு செய்து கொண்டே இருக்கும். இப்போது கூட பழங்காலம் போன்றே உடல்ரீதியான வேலைகளைக் கீழ்நிலை வர்க் கமே மேற்கொள்வதைப் பார்க்கலாம்.

தந்தையுரிமைச் சமூகத்துக்கு முன் வேறு வகைச்சமூகம் இருந்திருக்க வேண்டும்.[5] புதிய அமைப்புகள் அல்லதுபுதிய அறிவோடு ஒரு மாற்றத்துக்கு சமூகம் உட்பட்டபோது ஆணின் உடல் வலிமை முன்னுரிமை பெற்றிருக்கிறது. தொடக்கத்தில் பெண்ணின் குழந்தை பெறும் செயலைப் பார்த்து அதனை பூமியின் விளைதிறனோடு ஒப்பிட்ட னர். பிறகு போகப் போக இந்த அணுகுமுறை ஆணின் 'லிங்கத்'தை (Phallus) மையமாகக் கொண்டது என பெண்ணின் செயற்பாடு, பங்கு அமுக்கப்பட்டது. ஆணா

www.padippakam.com



திக்க மதம் ஆண் கடவுளர்களை கட்டமைத்தது. ஆணாதிக்கச் சமூகத் தோற்றம் குறித்து தெளிவாக சொல்ல முடியாத நிலைதான் இருக்கிறது. ஆனால் இரண்டு பால் குழுவுக் கிடையே உள்ள உளச்சமூகப் பிரிவினை பெளதீக அறிவியல்களின் பார்வையில் குறிப்பிடத்தகுந்ததோ, தெளிவானதோ நடுநிலையானதோ இல்லை. இப்பிரிவினை உயிரியல் அடிப்படையில் அன்றி கலாச்சார அடிப்படையிலேயே உள்ளன. மனோநிலை ரீதியான பால்பகுப்பில் ஆளுமை ஆணுக்குள் பரம்பரையாக இருக்கிறது எனச் சொன்னது வெற்றிபெறவில்லை. உயிர்-உறுப்பு வேறுபாட்டுக்கு அப்பாலான குறிப்பிடத்தகுந்த பாரம்பரிய வேறுபாடுகள் ஏதும் பால்பகுப்பில் இல்லை, மூளை—உணர்வு வேறுபாடுகள் இருப்பதாக உயிர்க்கூறியல் (Genetics) அடித்துச் சொல்லவில்லை. நவீன ஆய்வுகள் பாத்திர ஆளுமை அமைப்பு பால்பகுப்பிற்கேற்ப கட்டப்படுவதைச் சுட்டுகின்றன.

ஸ்டோலெர் மற்றும் பிற அறிஞர்கள் கூறுகின்ற 'கரு பால் அடையாளம்' (Care Gender identity) ஒரு குழந்தைக்கு 18ஆம் மாதத்திலேயே உருவாகின்றது. ஸ்டோலெர் பாலினம் என்பதற்கும் பால் என்பதற்கும் இடையே உள்ள வேறுபாட்டைச் சொல்கிறார்.

அகராதிகள் "பாலினம்" என்பதின் முதன்மை புதை அர்த்தம் உயிரியல் சார்பானது எனச் சொல்கின்றன. (எ-டு) பாலியல் உறவுகள் (அ) ஆண்பால் என்ற, தொடர்கள் இதனோடு ஒத்து 'பாலினம்' என்ற சொல் ஆண்பால், பெண்பால் பிரிப்பையும் ஒரு ஆணையும் ஒரு பெண்ணையும் நிர்ணயிக்கும் உடலியல் பகுதிகளையும் குறிக்கிறது. பாலியல் என்ற சொல் உடலமைப்பியல் மற்றும் உடலியங்கியல் சார்ந்த புதை அர்த்தங்களைப் பெற்றிருக்கிறது. நடத்தை, உணர்ச்சிகள், எண்ணங்கள், கற்பனைகள்

www.padippakam.com



முதலான எண்ணற்ற பகுதிகள் பாலினங்களைச் சார்ந்தே இருக்கின்றன. எனினும் இவை உயிரியல் புதை அர்த்தங்களைப் பெற்றிருக்கவில்லை. ஏனெனில் இவற்றில் சில உளவியல் நிகழ்வைச் சார்ந்து இருப்பதால், பால் (Gender) என்ற சொல் இங்கு பயன்படுத்தப்படுகின்றது. ஆண்பால், பெண்பால், என ஒருவன் பேசலாம். கூடவே ஆண்மை, பெண்மை பற்றியும் ஆனால் இது உடலமைப்பியல் (அ) இயங்கியல் பற்றிய அறிவைக் கோரவில்லை.

எனவே பாலினம் மற்றும் பால் என்பன ஒரே அர்த்தம் தருவதாகப் பயன்படுத்தப்பட்டாலும் இந்த இரண்டு பகுதிகளிலும் நேருக்கு நேரான ஒற்றை உறவை கொண்டிருக்கவில்லை. மாறாக ஒவ்வொன்றும் சுதந்திரமான வழிகளில் செல்கின்றன.[6]

கலிபோர்னியா பால் அடையாள மையத்தில் நடைபெற்ற 'ஆய்வுகள் உடலால் ஆணாகவும் நடத்தையால் பெண்ணாகவும் இருக்கும் ஒருவனை அறுவைச் சிகிச்சை மூலம் பிறப்புறுப்பை மாற்றி பெண்ணாக்கி விடலாம் என்கின்றன. பால் அடையாளம் (நான் பையன், நான் பெண்) தான் எந்த மனித உயிரும் பெறும முதன்மை & முதல் அடையாளம்.

ஸ்டோலெர் பிறகு கூறுகிறார்: பாலினம் உயிரியல் ரீதியானது, பால் உளவியல் ரீதியானது; எனவே கலாச்சாரத்தால் கட்டமைக்கப்படுகிறது. பாலினப் பகுப்பின் படி ஆண் × பெண். பால் பகுப்பின்படி ஆண்மை × பெண்மை.

புறஉறுப்புகள் மட்டுமே ஆண் தன்மையைத் தந்து விடுவதல்ல என்கிறார் ஸ்டோலெர், ஒரு மனிதக் கரு தொடக்கத்தில் பௌதீக ரீதியில் பெண்ணாக இருந்து ஒரு

www.padippakam.com



குறிப்பிட்ட பாவனை பகுதியில் Y குரோமொசோம்களால் நடத்தப்பெறும் ஆன்ரோஜன் செயல்பாடே ஆண்களை உருவாக்குகின்றன என இப்போது நம்பப்படுகிறது:

ஜான்மணி சொல்கிறார் 'சொந்த மொழியை கற்ப தில்தான் பால் முதலில் நிர்ணயிக்கப்படுகிறது'. ஜெரோம் காகின் 'பேச்சுக்கு முற்பட்ட வயதில் குழந்தைகள் தங்க ளோடு ஊடாடும் சொல்லாடல்களால்தான் (இது குட்டியா? காளையா?; அவ ரொம்ப அழகு இல்ல) பால் அடையாளத்தை உணர்கிறார்கள்', என்கிறார்.

ஒவ்வொரு சமூகக் குழுவும் வரையறுக்கப்பட்ட இணையான ஆளுமை மற்றும் செயல்பரப்பைக் கொண் டிருக்கிறார்கள் என்ற உண்மையைக் காட்டிலும் ஒவ்வொரு குழுவின் நடத்தையும் அதிகாரப் பிரிவின் அந்தஸ்தைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற உண்மைதான் அரசியல் ரீதியாக முக்கியத்துவம் பெறுகின்றது தலைமை இல்லாது ஆளுகின்ற கருத்துருவம்தான் ஆணாதிக்கம். ஆணாதிக்க ஒழுங்கமைவைத் தவிர வேறு எந்த ஒழுங்க மைவும் தனதுதன்னிலைகளை இப்படி முழுமையாகக் கண் காணித்து அதிகாரம் செலுத்துவதில்லை

## III சமூகம் (Sociological)

ஆணாதிக்கத்தின் முதன்மை நிறுவனம் குடும்பம். ஆணாதிக்க முழுமையின் ஒரு ஆணாதிக்க அலகு தனி நபர் களையும் சமூகத்தையும் இணைக்கும் பாலமாகக் குடும்பம் கண்காணிப்பையும் நிர்ணயத்தையும் செலுத்துகிறது. அரசியல் மற்றும் பிற அதிகாரங்கள் போதாதபோதில், பெரிய சமூகத்தின் ஒரு ஏஜெண்ட்டாக குடும்பம் தனது உறுப்பினர்களை விட்டுக் கொடுத்து வாழ மட்டும் சொல்லித்தராமல் ஆணாதிக்க அரசின் அரசாங்கத்தில் ஒரு அலகாக குடும்பத் தலைவர்கள் வழி குடிமக்களை

படிப்பகம்

www.padippakam.com



ஆட்சி செய்கிறது. ஆணாதிக்கச் சமூகங்களில் கூட சட்ட ரீதியான அங்கீகாரம் இருந்தும் பெண்கள் குடும்பம் வழி தான் ஆளப்படுகிறார்கள். அவர்களுக்கு அரசோடு நேரடித் தொடர்பேதும் இருப்பதில்லை. குடும்பம், சமூகம், அரசு மூன்றுமே ஆணாதிக்க நிறுவனங்கள் உளத் தொடர்புடையவை. இவற்றிற்கு மதங்களின் துணையும் சேர்கின்றது. மதச்சார்பற்ற அரசாங்கங்கள்கூட மக்கள் தொகைக் கணக்கெடுப்பில், பாஸ்போர்ட்டில், வரிச் சீட்டில் குடும்பத் தலைவர் என்று ஆணையே குறிக்கிறது.

மரபார்ந்த ஆணாதிக்கம் ஒரு தந்தைக்கு குடும்பத்தில் உள்ள மனைவி,/மனைவிகள் குழந்தைகள் முதலானவர்கள் மீதான முழு சொத்துரிமையும் தருகின்றது. வாரிசு தந்தை வழிதான் நிர்ணயிக்கப்படுகின்றது.[7]

ஆணாதிக்கத்தில் குடும்பத்தின் முதன்மைப் பங்களிப்பு இளையர்களை சமூகவயமாக்குதல்—அதாவது ஆணா திக்கக் கருத்துருவங்கள் சொல்லும் அணுகுமுறைகளை (மனோநிலை, பாத்திரம், அந்தஸ்து) ஏற்க வைப்பது தான்.

மாலினோவ்ஸ்கி விளக்குகின்ற (**'The Principal of legitimacy'**) என்பது 'சமூக வயமான தந்தை என்ற பாத்தி ரத்தை ஏற்காமல் எந்த ஒரு மனிதனும் ஒரு குழந்தையை இவ்வுலகில் உற்பத்தி செய்யக்கூடாது' இது மறுஉற்பத்தி **(reproduction)** சம்பந்தமானது.

சமூகவயமாக்கல் + மறுஉற்பத்தி என்ற குடும்பத்தில் இரண்டு மையச் செயற்பாடுகளுக்கும் உயிரியல் ரீதியான காரணம் ஏதும் இல்லை. எந்தப் புரட்சிகரமான சமூக மாற்றமும் ஆணாதிக்கத்தைக் கேள்விக்குள்ளாக்காமல் நிகழவே முடியாது.

படிப்பகம்

www.padippakam.com



## IV வர்க்கம் (Class)

வர்க்கப் பிரிவினைக்குள் சாதிப்பிரிவினை போன்று இருக்கும் பெண்பிரிவு ஆணாதிக்க அமைப்பில் குழப்பத்தைத் தரும். அந்தஸ்தை வர்க்கத்தின் பொருளாதார, சமூக, கல்விச் சாதனைகளால் அளவிடும் ஒரு சமூகத்தில் சில பெண்கள் சில ஆண்களைவிட உயர்ந்தவர்களாக இருப்பது சாத்தியம்தான். ஒரு கறுப்பு இன டாக்டர் வக்கீல் வெள்ளை இன சர்வரைவிட அந்தஸ்தில் உயர்ந்தவனாக இருந்தாலும் இனஉணர்வு மாறுவதில்லை. வெள்ளை இனத்தவன் வாழ்முறையில் உயர்நிலையில் இருப்பதால் கறுப்பு இன உறுப்பினரை உயர்வு ரீதியாக அமுக்குகிறான்

இதேபோல்தான் பெண் நிலையிலும்.

ஒரு முரண் : கீழ்நிலை சமூக அடுக்கில் பாலின வலிமை காரணமாக ஆண் பெண்ணை அதிகம் ஆள்கிறான்- பொருளாதார உற்பத்தியில் பெண்ணும்கூட பங்கெடுத்த போதிலும், மத்தியதர மேல்நிலை வர்க்கத்தில் ஆண் வெகுவாக ஆதிக்கம் செலுத்துவதில்லை.

ஆணாதிக்க வர்க்கப் பிரிவினையின் விளைவு ஒரு பெண் இன்னொரு பெண்ணுக்கு எதிர்நிலையில் இருப்பது தான்;

வேலைக்குப் போகும் பெண் × வீட்டில் இருக்கும் பெண். வர்க்க அமைப்பில் பெண்கள் 'முதலீட்டை'விடக் குறைந்த நிலையில்தான் உள்ளனர். ஆட்சியாளர்களைச் சார்ந்து வாழும் எந்தக் குழுவிலும் பெண்கள் 'உபரி'யால் உயிர்வாழும் சுதந்திரமற்ற வர்க்கமாக இருக்கின்றனர். இமயத்துக்கு அப்பாலான விளிம்பு நிலைவாழ்வில் இவர்



படிப்பகம்

www.padippakam.com



கள் மரபுவாதிகளாகவும் தம்மைப் புரக்கும் ஆண்களின் வாழ்வில் தம்மை அடையாளம் காண்பவர்களாகவும் இருக்கின்றனர்.

## V பொருளாதாரமும் கல்வியும் (Economics & Education)

ஆணாதிக்க அரசாங்கத்தின் சக்திவாய்ந்த கிளைகளில் ஒன்று பெண்கள் என்ற தன்னிலைகள் மீதான பொருளாதாரப் பிடிப்பாகும் மரபார்ந்த ஆணாதிக்கச் சமூகத்தில், பெண்கள் ஜீவிகளே அல்லர் (non-persons; சட்ட உரிமை அற்றவள்; பொருளாதாரத்தில் பங்கு இல்லாதவள்; பெண்களின் உழைப்பு ஆணாதிக்கச் சமூகத்தில் இருக்கிறது: ஆனால் பொருள் வருவாய்தான் கிடையாது. நவீன ஆணாதக்கச் சமுதாயத்தில் பெண்கள் சில குறிப்பிட்டப் பொருளாதார உரிமைகள் பெற்றிருந்தாலும் 'பெண்களின் வேலை' உரியஊதியத்தைப் பெறுவதில்லை

நவீன முதலாளித்துவ நாடுகளில் பெண்கள் 'ரிசர்வ் உழைப்புச் சக்தி' யாகச் செயல்படுகிறார்கள். போரின் போதும் உபயோகப்படுத்திக் கொள்ளப்படுகிறார்கள். அமைதியின் போது விட்டுவிடப்படுகிறார்கள். பெண்களின் பொருளாதாரச் சுதந்திரம் அநீதியானது என்ற கருத்தால் எல்லா ஏஜென்ஸிகளும் (மதம், உளவியல், விளம்பரம்...) மத்தியதர வர்க்க பெண்கள் வேலைக்குப் போவதை [குறிப்பாக தாய்மார்கள் ]எதிர்க்கின்றனர். மேலும் பெண்கள் உற்பத்தியிலோ, தொழில்நுட்பத்திலோ, நேரடிப் பங்கேற்பதில்லை.[8] இவர்களின் வீட்டு உபயோகச்சாமான்கள் தயாரிப்பிற்கு மார்கெட் மதிப்பு இல்லை என்பதால் இவை 'முதலாளித்துவத்துக்கு முன்' என்ற நிலையிலே நிற்கின்றன.[9]

வளர்ந்த நாடுகளில் கல்வியும் பொருளாதாரமும் நெருங்கிய உறவுடன் இருக்கின்றன. பெண்களுக்கான

www.padippakam.com



உயர்கல்வியின் போது நிலையும் நடையும் மறுமலர்ச்சிக் கால மனிதநேயத்தோடு நெருங்கியதாக உள்ளன. மரபார்ந்த ஆணாதிக்கச் சமுதாயத்தில் உயர்கல்வி பெண்களுக்கு மறுக்கப்பட்டது. நவீன ஆணாதிக்கச் சமுதாயத்தில் பெண்களுக்கு எல்லா கல்வியிலும் வாய்ப்பிருந்தாலும் கல்வியின் வகை மற்றும் தரத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் வேறுபாடுகள் உள்ளன.

ஆண்மை, பெண்மை பற்றிய சமூக வயமாக்கலில் கல்வி நிறுவனங்கள் பாலினங்களுக்கிடையிலான குணவிளக்கங்களை வலியுறுத்துகின்றன. சில குறிப்பிட்ட சமூக அறிவியல்களும், மானிடக் கல்வியும் பெண்மைசார்ந்த கல்வியாகவும், அறிவியல் தொழில் நுட்பம், வர்த்தகம், பொறியியல் ஆகியவை ஆண்மை சார்ந்ததாகவும் முன் வைக்கப்படுகின்றன. ஆண்மை சார் கல்விதான் வேலை வாய்ப்பை நிர்ணயிக்கின்றது. இந்தப் புலன்களின் கட்டுப்பாடு என்பது அரசியல் அதிகாரத்தின் ஒரு செயற்பாடாகவும் இருக்கிறது.

## VI சக்தி (Force)

ஆணாதிக்கச் சமுதாயத்தில் கொடூரம்பற்றிய சிந்தனைகள் பாலியலோடு தொடர்பு படுத்துகின்றன. பாலியலோ தீயசக்தியோடும் அதிகாரத்தோடும் சமப்படுத்தப் படுகிறது. உளப்பகுப்பாய்வில் கூறப்படுகின்ற பாலியல் கற்பனைகளாலும் ஆபாச இலக்கியத்தாலும் (Pornography) இது வலுப்படுத்தப்படுகின்றது. ஆணோடு சேடிஸத்தையும் பெணணோடு விக்டிமைசேஷனையும் சட்டம் இணைக்கின்றது. ஆணாதிக்கச் சமுதாயத்தில் பெண்கள் மீதான வன்முறை பற்றிய உணர்வுப் பிரதிபலிப்பு இரண்டுங்கெட்டான் நிலையிலேயே உள்ளது. ஒருவன் மனைவியை அடிக்கிறான் என்ற குற்றச்சாட்டு நகைப்புக்குள்ளாகின்றது.

www.padippakam.com



எதிரிமீதான வெறுப்பு பல விதங்களில் வெளிப்படுத்தப்படுகின்றது. அதிலொன்று சிரிப்பு. பெண் வெறுப்பு இலக்கியம் (Misogyny)- ஆண்மையின் வெறுப்புக்கான முதன்மை ஊர்தி - ஒரே சமயத்தில் பொறாமை உணர்வின் வெளிப்பாடாகவும் நகைச்சுவை இலக்கிய வகையாகவும் செயலாற்றுகின்றது. ஆணாதிக்கச் சமுதாயத்தின் எல்லாக் கலை வடிவங்களிலும் இதுவே வெளிப்படையான பிரச்சார வகை. இதன் நோக்கம் பாலினப் பிரிப்பின் அந்தஸ்த்தை வலுப்படுத்துவதுதான் மேற்கு உலகின் பழமை, மத்திய , மறுமலர்ச்சிக்கால இலக்கியங்கள் பெண் வெறுப்புக் கூறுகளைப் பெற்றே இருக்கின்றன. மரபார்ந்த மத்தியக்கால மரபுப்படியான உயர்வகைக்காதல் (Courtly Love] மேற்குக் கலாச்சாரத்தைக் கொஞ்சம் மாற்றவே செய்தது. எனினும் பழைய பார்வையும் தாக்குதல்களும் பெண்கள் பற்றிய புதிய கருத்தாக்கங்களிலும் உடன் உணர்ந்தே காணப்பட்டன. உயர்வகைக் காதல் கற்பனைவாதக் காதலாக [Romantic Love) மாறிய போது பெண் வெறுப்பு இலக்கிய வளர்ச்சி பாஷனாக இருக்கவில்லை. 18-ஆம் நூற்றாண்டில் இது அங்கதமாகத் [Satire] தெரிந்தது. 19-ம் நூற்றாண்டில் ஆங்கிலத்தில் இவ்வகை வடிவங்கள் மறைந்தன. 20-ஆம் நூற்றாண்டின் நடவடிக்கையிலும் இலக்கியத்திலும் இதன் மறுபிறப்பு ஆணாதிக்கச் சமுதாயத்தின் மறுஉருவாக்கம் மீதான கோபத்தின் வெளிப்பாடாக இருக்கிறது.

தணிக்கைமுறையின் தளர்ச்சியில் தொடங்கி ஆண்மையின் வெறுப்பு குறிப்பாக பாலியல், சூழ்நிலைகளில் வெளிப்படையாகத் தெரிகின்றது. ஆண்மையின், வெறுப்பு பற்றிய வளர்ச்சியைக் காட்டிலும் பாலியல் சூழ்நிலைகளில் வெறுப்பின் வெளிப்படையான விவரிப்பை கவனிக்கவேண்டும். ஆபாச இலக்கியத்திற்கு அப்பால் தடைசெய்யப்பட்ட விவரிப்பாக இருப்பவற்றை சொல்

படிப்பகம்

www.padippakam.com



வதற்கான சுதந்திரமாக இது அமைகிறது. உடலுறவு பற்றிய இடக்கரடக்கல் மற்றும் கருத்தியல் ரீதியான விவரிப்பையும் கற்பனைக் கவிஞர்களின் [கீட்ஸ்ஸின் Eve of St. Agens] விக்டோரிப்பன் நாவலாசிரியர்களின் [எ-டு, ஹார்டி] விவரிப்பையும் மில்லர்/வில்லியம் பர்ரோஸ் ஆகியவர்களின் விவரிப்பையும் ஒப்பிட்டால் நடப்புக்கால இலக்கியம் ஆபாச இலக்கியத்தின் அப்பட்டமான விவரிப் புத்தாத்தை ஏற்பதையும் சமூகக்கலகத்துக்கான தன்மை யைப் பெறுவதையும் அவதானிக்கலாம். ஆணாதிக்க சமுதாய வரலாறு பலவகைப்பட்ட கொடூரங்களையும் மனித சித்ரவதைகளையும் காட்டுகின்றது. இந்தியாவில் 'சதி', சீனாவில் கால்களைச் சுருக்குவதற்காகத் தைத்தல், இஸ்லாமில் முகத்தை மறைக்கும் துணி, தனிமைபடுத்தல், வீட்டில் தனியறை, பர்தா, கிளிடோரிஸை வெட்டுதல், விற்றல், அடிமை செய்தல், குழந்தைத் திருமணம், வைப் பாட்டியாக்குதல். விபச்சாரம் என்ற நிகழ்வுகள் 'பாலினங் களில் போர்' என்று இடக்கரடக்கலாகக் கூறப்படும் ஆண் அதிகாரத்தின் ஆளுமை, நாடுகளுக்கிடையிலான சண்டை சூத்திரங்களோடு ஒருவகையில் ஒத்திருக்கிறது. எந்தக் கொடுங்கோன்மையும் 'எதிரி என்பவன் கீழ்நிலை உயிர் [அ] மனிதத்தனமே இல்லாதவன்' என்ற தளத்தில் நியாய மாக்கப்படுகின்றது. ஆணாதிக்கச் சமுதாய மனோபாவம் பெண்கள் பற்றிய விவரிப்புகளைக் கலந்து மேற்சொன்ன போர் மனோபாவத்தை உருவாக்குகின்றது. இந்த மர பார்ந்த நம்பிக்கைகள் இன்னும் நம் பிரக்ஞையைப் பாதித்து இவற்றை நம்ப வைக்கின்றன.

## VII மானுடவியல் : புராணமும் மதமும்

பெண்கள் மீதான குற்றப்பத்திரிக்கை பற்றிய அரசி யல் ரீதியான தன்மைகளை மானுடவியல், மதம், இலக் கியப்புராணம் ஆகியவற்றின் சான்றுகள் சொல்லுகின்

www.padippakam.com



றன. ஒரு மானுடவியலார் (H.R Hays) கூறுகிறார். ''பெண்களின் உடல் ரீதியான வித்தியாசங்கள் அவளைப் பிரித்து வைக்கின்றன. அவள் கீழ்நிலையானவள் (inferior) மனித நிறுவனங்கள் எல்லாம் ஆழமான தொன்மை அச்ச உணர்வுகளால் வளர்ந்தவை. பகுத்தறிவற்ற உளவியல் செயல்பாடுகளால் உருவாக்கப்பட்டவை. பெண்கள் பற்றிய சமூக நடவடிக்கைகள் ஆணால் வெளிப்படுத்தப் படும் அடிப்படை டென்ஷனால் எழுகின்றன. ஆணாதிக் கத்தின் கீழ் பெண்கள் தம்மை விவரிக்கும் குறியீடுகளை வளர்த்துக் கொள்ள முடிவதில்லை. தொன்மை மற்றும் நாகரீக உலகுகள் எல்லாம் ஆண்கள் உலகுகள், பெண் கள் பற்றிய கலாச்சாரக் கருத்துகள் எல்லாம் ஆணால் வடிவமைக்கப் பட்டவை. நாம் அறிந்த பெண்பற்றிய பிம்பம் என்பது கூட ஆணால் உருவாக்கப்பட்டு அவர்கள் தேவைக்கேற்ப சீர்செய்யப்பட்டதுதான். இத்தேவைகள் பெண்களின் 'மற்றவை' (othernes) பற்றிய அச்சத்தால் தோன்றியதுதான்.

பெண்களின் பாலியல் செயற்பாடுகள் தூய்மையற் றவை என்ற உணர்வு உலகம் முழுவதும் இருக்கின்றன. மாதவிடாய் நிகழ்ச்சி நீண்டகாலமாக மூட நம்பிக்கைச் சார்ந்ததாக இருந்தது. இந்நிகழ்ச்சி பற்றிய உள—சமூக விளைவு 'பெண் ஈகோ' மீது பலத்த பாதிப்பை ஏற்படுத் துகின்றது மாதவிடாய் தடைபற்றி நிறைய மானுடவியல் இலக்கியங்கள் கூறுகின்றன. நடப்புக்கால ஆங்கிலக் கொச்சை மொழியில் மாதவிடாய் 'சாபம்' (Curse) என வழங்கப்படுகின்றது.

தொல்மை மக்கள் பெண்களின் பிறப்புக்குறியை ஒரு காயம் என்றனர். ஒரு பறவை/பாம்பால் அவள் நுகரப் பட்டாள்; எனவேதான் காயம் என்றும் ஏற்கனவே பட்ட காயத்தில் இருந்து இப்போது ரத்தம் வருவதாகவும் நம்பி னர். பெண்குறிக்கான நடப்புக்கால கொச்சைமொழி 'gash' பிராய்டின் கருத்துப்படி பெண்குறி என்பது ஒரு

படிப்பகம்

www.padippakam.com



காயடிக்கப்பட்ட (castrated) நிலை ஆண்குறி ஆணின் மேல்நிலை அந்தஸ்தின் அறிகுறியாக கருதப்படுகிறது.

கிட்டத்தட்ட எல்லா ஆணாதிக்கச் சமூகத்திலும் சடங்குப்பொருட்களைப், உணவுகளைப் பெண்கள் தொடக்கூடாது என்ற தடை இருக்கிறது. பழங்கால கல்வி அறிவற்ற சமூகங்களில் ஆண்களோடு பெண்கள் சம நிகராக உணவு உட்கொள்ள அனுமதிக்கப்படுவதில்லை. அசுத்தமாகிவிடும் என்ற பயம்தான் இந்நடவடிக்கைகளுக்குக் காரணம். எல்லா ஆணாதிக்கச் சமுதாயத்திலும் அதிகாரம் செய்யும் ஆணே முதலிலும் திருப்திகரமாகவும் சாப்பிடுகின்றான். இருபாலரும் சேர்ந்து சாப்பிட்டாலும் ஆணுக்குப் பெண்ணே பரிமாறுகிறாள்.

கற்பையும் கற்புச்சிதைவையும் எல்லா ஆணாதிக்கச் சமூகச் சடங்குகளிலும் தடைகளிலும் புகுத்தியிருக்கின்றனர். இச்சமூகப் புராணங்கள் பெண்களின் வருகைக்கு முன் பொற்காலம் இருந்ததாகச் சொல்கின்றன.

விளையாட்டுகளிலும் இன்னும் சில நடவடிக்கைகளும் ஆண்களின் தனித்தன்மைக்குத் துணையாக இருக்கின்றன. வேட்டையாடல், அரசியல், மதம், வர்த்தகம் ஆகியன ஒரு பங்கை வகித்தாலும் விளையாட்டும் போர் புரிதலும் மட்டும்தான் (chief cement of men,s house comadery) ஆண்களின் வீட்டுக் கலாச்சாரம் பற்றிய உளப் பகுப்பாய்வு சொல் 'லிங்க நிலை' (Phallus) ஹங்கேரிய உளப்பகுப்பாய்வு மானுடவல்லுநர் (Geza Roheim) கல்வியறிவில்லாத பழங்குடியினரிடம் உள்ள ஆண்களின் வீட்டு அமைப்பின் தன்மை ஆணாதிக்கம் சார்ந்து இருப்பதை வலியுறுத்துகிறார். ''பொருளுருவான லிங்கத்தைப் பொருளாகக் கொண்ட ஒரு சடங்கில் ஆண்களின் குழு இணைக்கின்றது. அவர்கள் சமூகத்தில் இருந்து பெண்களை நீக்கு

படிப்பகம்

www.padippakam.com



கிறது'' ஆண்களின் வீடுபற்றிய கலாச்சாரம் வலிதலிதம் (sadism), அதிகாரச் சார்பு, ஓரினப்புணர்ச்சி, தன்னுடல் சார்இதம் போன்றவற்றைக் கொண்டு இருக்கிறது. ஆண் குறி என்ற ஆயுதம் பிற ஆயுதங்களோடு எப்போதும் சமமாகப் பேசப்படுகின்றது.

சிறைக்கைதிகளைக் காயடிக்கும் செயல் கலாச்சார ரீதியான உடலியல் குழப்பத்தையும் ஆயுதம் என்ற அந்தஸ்தையும் விமர்சிப்பதாக உள்ளது. போர் நடவடிக்கைகளில் ஆண்மைசார் வீரம் என்பதே மையம்.

இவ்விதச் சிந்தனைகள் நமது கலாச்சாரத்தில்—மேற்குலக இலக்கியத்தில் பாட்ரோகிளஸ் (Patrocles ஆக்கில்லஸ் (Achilles) தொடங்கி இருக்கிறது.

குறிப்பிடத்தக்கப் பாலியல் நடவடிக்கைகள் ஆண்களின் வீட்டில் இருந்தாலும் அது ஓரினச்சேர்க்கைதான். ஆனால் ஓரினச்சேர்க்கைக்கு எதிரான விலக்கு (taboo) உலகளாவிய நிலையில் தூண்டலைவி. வலிமை மிக்கதாக இருக்கிறது. அதனால் பால் ஆற்றல் (libido) தன்முறையாக மாறும் நிலையும் ஏற்படுகின்றது.

பாலியலுக்கும் வன்முறைக்குமான தொடர்பு என்பதே ஒரு மனத்தின் ஒரு குறிப்பிட்ட இராணுவச்சார்பு பழக்கம்தான். மேலதிக ஆண்சார்புடன் போர் வீரச்சாதி வெளிப்படையான ஓரினச் சேர்க்கை என்பதைவிடவும் ஓரினச்சேர்க்கையை ஆரம்பிக்கிறது எனலாம்.

ஓரினச் சேர்க்கை என்பது அன்பு மீதான நேர்மறை அணுகுமுறை எனத் தெளிவாக இல்லாதிருக்கிறது இது 12-ஆம் நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்டாலும் இன்னமும் புதுமையானதாக இருக்கிறது பெருப்பான்மை ஆணாதிக்கச் சமூகத்தில் இணையத்தேர்வதில் அன்பு

www.padippakam.com



ஒதுக்கப்படுகிறது. நவீன ஆணாதிக்கச் சமூகம் இவ்வொதுக்கலை வர்க்கம், இனம், மதம் ஆகிய கூறுகளைக் காட்டிச் செய்கிறது. மத்தியக்கால எண்ணம்: 'பாலியல் எனில் அன்பாக இருப்பது குற்றம், அன்பு எனில் பாலியல் குற்றம்''.

தொன்மைக்கால சமூகத்தில் பெண்வெறுப்பு, விலக்கு (அ) மேனா (mana) என்ற பெயர்களில் நடைமுறையில் இருந்தது. பின்னர் புராணங்களாக வளர்ந்தன. வரலாறு உடைய கலாச்சாரங்களில் இவை நீதிகளாகவும், இலக்கியங்களாகவும் நவீனகாலத்தில் அறிவியல் விளக்கங்களாகவும் மாறின.

புராணம் என்பது பிரச்சாரம்தான். எனவே அது தனது வாதங்களுக்கு ஆதாரமாக நீதியியல் (அ) தோற்றம் பற்றிய கோட்பாடுகளைக் கொண்டிருக்கிறது. மேற்குலகக் கலாச்சாரத்தின் இரண்டு முதன்மை புராணங்கள் ;

(i) பன்டோராவின் பெட்டி (Pandora Box)

(ii) வீழ்ச்சி பற்றிய பைபிள் கதை (Biblical Stoıy of the fall)

இரண்டிலும் பெண்மைசார் தீயசக்திகள் பற்றிய விலக்குகள் இறுதியில் இலக்கிய நிலவழி ஆதிக்கம் செலுத்தும் நீதிகளாக நிலைநாட்டப்படுகின்றன.

## VIII உளவியல்

இதுவரை கூறப்பட்ட ஆணாதிக்கச் சமூகக் கூறுகள் ஒவ்வொன்றும் இரண்டு பாலினங்களின் உளவியல் மீதும் பாதிப்பு ஏற்படுத்துகின்றன. இவற்றின் மொத்த (முதல்) விளைவு என்பது ஆணாதிக்கச் சமூகத்தின் கருத்துருவத்தை உள்முகமாக ஏற்கச்செய்வதுதான். அந்தஸ்து,

www.padippakam.com



மனோநிலை மற்றும் பாத்திரம் எல்லாம் மதிப்பு ஒழுங்கமைவுகள். இவை ஒவ்வொரு பாலினத்துக்கும் முடிவற்ற உளவியல் பிரிவுகள். இவற்றைச் செயல்படுத்துவதில் திருமணமும் குடும்பமும் அவற்றின் தகுதி மற்றும் வேலைப் பிரிவினையால் ஒரு பெரிய பங்கை ஏற்கின்றன. பெண்ணைச் சரகாக்கும் நடவடிக்கையில் அவள் ஒரு ஜீவியாக அன்றி, பாலியல் பொருளாகவே மாற்றப்படுகிறாள். பெரும்பான்மை ஆணாதிக்கச் சமூகத்தில் மொழியும் கலாச்சார மரபும் மனித நிலையை ஆண்களுக்கு மட்டுமே தருகின்றன. இந்தோ-ஐரோப்பிய மொழிகளில் 'ஆண்' 'மனிதம்' என்ற சொற்கள் இருபாலினங்களுக்கும் சமமாகவே பயன்படுத்தக் கூடியதாக இருந்தாலும் நடப்புப் பயன்பாடு ஆண்களுக்குச் சாதகமாகவும் பெண்களைப் பேசுபொருளாகவும் மட்டுமே கொள்கின்றது.[10] கறுப்பு இனத்தாரையும் பெண்களைப் பற்றிய குணவிளக்கங்கள் (traits) ஒன்றே போல்தான் இருக்கின்றன. பிற விளிம்பு நிலை குழுக்கள் (Marginal groups) போன்றே பெண்களும் இருக்கிறார்கள். ஆணாதிக்கச் சமூகத்தில் மிகப்பெரிய உளவியல் ஆயுதம் எதுவெனில் அதன் உலகளாவிய தன்மையும் நீண்டநாள் இருப்பும் தான்

ஒரு அதிகார ஒழுங்கமைவு முற்றும் ஆளுமையில் இருக்கும் போது தன்னைப்பற்றி அது உரக்கப் பேசிக் கொள்ளும் தேவை ஏற்படுவதில்லை. அதனின் செயல்பாடுகள் வெளிக்காட்டப்படும்போது, கேள்விக்குள்ளாக்கப்படும் போது விவாதத்தில் பேசுபொருளாக அது ஆவதோடு மாறவும் வேண்டியிருக்கிறது.

### அடிக்குறிப்புகள்

1. இக்கட்டுரை Elaine showalter தொகுத்த womens Liberation and Literature'' என்ற நூலில் Harcourt Brace Jovanovich, Newyork 1971) இருந்து எடுக்கப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com



கருத்துச் சிதைவோ இடைவெளியோ இன்றி, சுருக்க மாகக் கட்டுரை தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

2. இக்கட்டுரையில் "Sex" என்ற சொல் "பாலினம்" என்றும் "Gender" என்ற சொல் 'பால் என்றும் குறிக்கப் படுகின்றது.

3. Patriarchy என்பது இக்கட்டுரையில் ஆணாதிக்கச் சமூகம் என்றே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது தந்தை வழிச்சமூகம், ஆணாதிக்கச் சமூகம் இரண்டிற்கும் நுண் ணிய வேறுபாடுகள் உள்ளன

4. பூமி அதிர நடக்கக் கூடாது; முந்தானை விலகக் கூடாது; நிலம் பார்த்து நடக்க வேண்டும் என, பெண் களுக்குத் தமிழ்ச் சமூகம் விதிக்கும் பாத்திரச் செயல் பாட்டை ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

5. தாயுரிமைச் சமூகங்கள் வரலாற்றின் தொடக்கத் தில் இருந்தன என்பதை வில்ஹெமரைஷ் (Wilhelm Reich) தமது பல நூல்களில் வலியுறுத்தி உள்ளார்.

6. Robert J. Stoller, Sex and Gender New york, Science House 1968)

7. இதைத் தொடர்ந்து கேட்மில்லட் சர்ஹென்றி மெய்னெ, ஜான் மெக்லெனான் போன்றோரின் "**ஆணா திக்கக் குடும்பம்**" பற்றிய வரையறைகளைச் சொல்கிறார்.

8. டைப்பிஸ்ட்டாக பெண்கள் இருக்கலாம். தட்டச் சுப் பொறி உற்பத்தியில் பெண்கள் பங்கேற்பதில்லை.

9. கூடைபின்னல், ஊறுகாய் போடல், முறுக்கு சுடல் போன்ற உற்பத்திகளில் குடும்பப் பெண்கள் ஈடுபட்டா லும் இவை 'சரக்கு' களாக மார்க்கெட்டில் இடம் பெறு வதில்லை. உள்ளூர்ப்பண்டமாகவே இருந்து விடுகின்றது.

10. ஜப்பான் மொழியில் ஆண் Otoko பெண் Onna human being ningen மூன்றாவதை ஒன்றால் சொல்லவே முடியாது.

(மேலும்—12, 1991)

படிப்பகம்

www.padippakam.com

# "பெண்மை, கதையாடல், உளப்பகுப்பாய்வு"

சி. ஜெயராஜ்

[இந்த மொழிபெயர்ப்புக்கட்டுரை பெண்ணிய இலக்கிய விமரிசனம் இன்று மேற்கில் நடைபெறும் முறையை விளக்குகிறது. ஓரளவு அதிர்ச்சித் தரத்தக்கச் செய்திகள் உள்ளன. தமிழ் பெண்ணிய இலக்கியவிமரிசனம் எவ்வாறு உருவாக வேண்டும் என்பதை இக்கட்டுரை மூலம் உணரலாம். அதற்காகவே இக்கட்டுரை இங்கு வெளியிடப்படுகிறது—ஆசிரியர்]

உளவியல் பகுப்பாய்வில் வெளிப்பாடு பற்றி சில துவக்கக் குறிப்புகளைச் சொன்ன பிறகு. நாவலின் தொடக்ககால வரலாற்றில் பெண்களின் நிலைபற்றி சில சொல்கிறேன். பிறகு உளவியல் கோட்பாடு பற்றிச் சொல்கிறேன். இறுதியாக "ஊத்ரிங் ஹைட்ஸ்"[1] என்ற நாவலைச் சான்றாதாரமாகக் கொண்டு என்னுடைய கருத்துக்களை விளக்குகிறேன்.

நம் எல்லோருக்கும் தெரிந்திருப்பது போலவே, உளப்பகுப்பாய்வு என்பது பேசுவதன் மூலம் நோயைக் குணப்படுத்துகிற ஒரு முறையாகும். உளப்பகுப்பாய்வாளர்

படிப்பகம்

www.padippakam.com



ஆணாகவோ பெண்ணாகவோ இருக்கலாம். நோயாளியும் ஆணாகவோ பெண்ணாகவோ இருக்கலாம். பொதுவாக, நாம் கேள்விப்படுவது போன்று மொழியே ஆண் குறி மையப்படுத்தப்பட்ட ஒன்றாகும். இந்நிலையில் உளப்பகுபாய்வின்போது என்ன நிகழ்கிறது? மொழி ஆண்குறி மையப்படுத்தப்பட்ட நிலையில் ஒரு பெண் நோயாளி அவள் பேசும்போது என்ன செய்கிறார்? ஒரு பெண் உளப்பகுப்பாய்வாளர் நோயாளியைக் கவனிக்கவும் திரும்பப் பேச வைக்கிறபோதும் என்ன செய்கிறார்? இலக்கிய நூலில் இத்தகைய ஆய்வுகள் எல்லாம் மேற்கொள்ளப்படுகின்றபோது, மேற்கண்ட இன்றியமையாத கேள்விகளெல்லாம் பொருத்தமானவையாகும்.

நோயாளியுடன் பேசுவதன் மூலம் உளப்பகுப்பாய்வாளர்கள் ஒருநிலையில் நோயாளியின் சரித்திரங் (நிகழ்ச்சிகளை) களைக் கவனிக்கவும் திருப்பிச் சொல்லவும் செய்கிறார்கள். நோயாளி அவனுடைய அவளுடைய சொந்த வாழ்க்கையின் சரித்திரத்தோடு வருகிறார். உளப்பகுப்பாய்வாளர் தன்னுடைய சொந்த அனுபவங்களுடன் பேசுகிறவரின் அனுபவங்களையும் கவனிக்கிற போது (உரையாடலில்) சில ஊடுருவல்களும் பிறழ்வுகளும் ஏற்பட்டு, பக்தின் என்ற ரஷ்ய இலக்கிய அறிஞர் கூறுகின்ற "குழப்பமான திருவிழா மனநிலை[2]க்கு உள்ளாகிறார். மீண்டும் பேசவைத்து, மனநோயின் தொடக்க நிலைக்குச் செல்கிறார். அதன் மூலம் ஒரு புதிய சரித்திரத்தை உருவாக்குகிறார். ஆனால் அச்சரித்திரம் அவ்வாறு இல்லை. எனவே மீண்டும் மீண்டும் உளப்பகுப்பாய்வு தொடர்கிறது. உளப்பகுப்பாய்வாளர் நோயாளியைக் கவனிக்கிற அதே நேரத்தில் தன்னைப் பற்றிய பகுப்பாய்வையும் செய்கிறார். நோயாளியிடம் கேட்பது பற்றி, நான் ஏன் கேட்கிறேன் என்று தன்னையே கேட்டுக் கொள்கிறார். உளப்பகுப்பாய்வாளரின் சொந்த அனுபவங்களில் சில அவ்வெளிப்பாட்டில் தொடர்பற்ற நிலையில் ஊடுருவி

www.padippakam.com



வெளிப்படுகிறது. உளப்பகுப்பாய்வாளர் புதிய கோணத்திலிருந்து கேள்வி கேட்கத் தொடங்குகிறார். ஒரு சரித்திரத்தைச் சிதைத்து புதிய ஒன்றாக எழுதுவதைத் தவிர நம்மால் வேறு என்ன செய்ய முடியும். நமக்குப் பல சரித்திரங்கள் இருந்தாலும், ஒரு நேரத்தில் ஒரு சரித்திரத்தில் தான் வாழ முடியும்

இந்நாவலின் மிகச்சிறந்த வடிவமான இலக்கிய வெளிப்பாடு பற்றி மிகவும் கருக்கமாகப் பார்க்கலாம். தோராயமாகச் சொன்னால், பதினேழாம் நூற்றாண்டில் உள்ள பெண்களின் சுயசரிதங்கள் எழுந்த பின்னணியில் இந்த நாவல் எழுகிறது. பல புகழ் பெற்ற ஆண் நாவலாசிரியர்கள் இருந்தாலும், 'பெரும்பான்மையான தொடக்கக்கால நாவல்கள் அதிகமாகப் பெண் நாவலாசிரியர்களாலேயே எழுதப்பட்டன. இக்கால அமைப்பியல் திறனாய்வாளர்களால் அழைக்கப்படுகிற ''இயங்கும் நான்'' ('Subject in process'') என்பதைத்தான் இந்த எழுத்தாளர்களெல்லாம் நிறுவ முயன்றார்கள். குழப்பமான எந்த பூர்ஷ்வா சமூகத்தில் தங்களைப் பெண்ணாக உருவமைத்துக் கொள்ள நினைத்தார்களோ, அந்தக் குழப்பமான நிலையில் ஒரு சரித்திரத்தை உருவாக்க முயன்றார்கள். பெண்ணுருவாக்க நிலையை விளக்கத்தான் அவர்கள் நாவல்கள் எழுதினார்கள். நாங்கள் பெண்கள், எங்களுடைய வாழ்க்கை எப்படி இருக்கவேண்டும்? நாங்கள் யார்? என்பன போன்ற கேள்விகளெல்லாம் எழுப்பப்படுகின்றன. இல்லற இயல்பு, தனிமனித உறவுகள் தனிமனித நெருக்கங்கள் போன்றவற்றைப் பற்றி விவாதிக்கப்படுகின்றன. மேம்பட்ட ஒரு சமூகக்குழுவில், பூர்ஷ்வா சமூகத்தில், அதுவும் முதலாளித்துவத்தின் கீழ் ஒரு பெண்ணின் வாழ்க்கை எவ்வாறு இருந்தது என்பது பற்றியும் விவாதிக்கப்படுகிறது. இந்நாவல் பெண்ணைப் பற்றிய ஒரு படைப்பாகும். அல்லது முதலாளித்துவத்தில் பெண்

www.padippakam.com



ணுருவாக்கத்தைப் பற்றி ஒரு பெண்ணால் எழுதப்பட்ட தாகும்.

எந்தவொரு சமூகமும் தன்னுடைய சமூக அமைப்பில் மாற்றம் அடைகிறபோது, அச்சமூகத்தின் பொருளாதார அடித்தளங்களும், கலை பற்றிய உண்மைகளும் மீட்புரு வாக்கம் செய்யப்பட்டு மாற்றம் அடைகின்றன. இந் நிலையில் புதிய சமூகச் சூழ்நிலைக்கு இயைபான கருத்துக் கள் தங்களைத் தாங்களே உருவாக்கிக்கொண்டு மாற்றம் அடைகிறபோது புதிய இலக்கிய வடிவங்களும் தோன்று கின்றன. முதலாளித்துவ பூர்ஷ்வா சமூகத்தின் கீழ் பெண் கள் தங்களை உருவாக்கிக் கொள்ளத் தொடங்கியதற்கு இந் நாவலே சிறந்த எடுத்துக் காட்டாகும். அவர்கள் பெண்கள் என்று தங்களைத் தாங்களே உருவாக்கிக்கொள் கிறார்கள். ஆனால் அந்த நாவல் பூர்ஷ்வா வடிவமாகவே தான் எஞ்சுகிறது. மேலும் சில தொழிலாளர்வர்க்க நாவல்களும் உண்டு. ஆனால் அந்த நாவல் வடிவமானது பூர்ஷ்வா பெண்களால் வடிவமைக்கப்பட்டதாகும். அதாவது சமகால ஆங்கிலோ சாக்ஸன் பெண்ணியத் திறனாய்வாளர்கள், இந்தப் பெண் நாவலாசிரியர்களின் மறக்கப்பட்ட நாவல்களுக்குப்[8] புத்துயிர் அளிக்கிறார்கள். இவர்கள் ஒரு வகையில் பூர்ஷ்வா வர்க்கத்தின் முழுமை யான மரபியலாளர்களாகத்தான் இருக்கிறார்கள். இதில் ஒன்றும் தவறில்லை. இது ஓர் இன்றியமையாத மனதைத் தொடும் கலை மரபாகும். பெண்கள் தங்களுக்கேயுரிய இல்லற இயல்பு பற்றிய கதைகளையும், வீட்டிற்குள் ளேயே தனிமைப்படுத்தப்பட்ட கதைகளையும் ஏன் எழுது கிறார்கள் என்பது பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டி யிருக்கிறது. இவற்றையெல்லாம் அவர்களுக்குக் கிடைத்த சாத்திய மற்றும் அசாத்தியமான சூழ்நிலைகளிலிருந்து பார்க்க வேண்டியிருக்கிறது.

www.padippakam.com



இந்த மரபு, ஜூலியா கிறிஸ்தவா போன்ற திறனாய்வாளர்களால் 'ஹிஸ்டீரியாக்களின் சொல்லாடல்'' என்று தாக்கப்படுகிறது. இந்த நாவலும் ஹிஸ்டீரியாக்களின் சொல்லாடலாகத்தான் இருக்கக்கூடும் என்று கருதுகிறேன். இந்தப் பெண் நாவலாசிரியரும் ஹிஸ்டீரியாவாகத்தான் இருக்கக வேண்டும். முதலாளித்துவ ஆண்வழிச் சமூகத்தின் கீழ் ஒரே சமயத்தில் உடன்படல், மறுத்தல் என்கிற பெண்களின் பாலியல் அமைப்புதான் ஹிஸ்டீரியாவாகும். ஆண்வழிச் சொல்லாடலுக்குள், பெண்ணாக இருப்பதற்கும் பெண்மையை மறுப்பதற்கும் என்கிற இரு நிலைகலளை ஒரே சமயத்தில் மேற்கொள்ள முயலும் ஒரு பெண் என்ன செய்ய முடியும். ஒரு பெண்ணின் எழுத்தில் இப்படியொரு பெண்குரல் இருக்கும் என்று நம்ப மறுக்கிறேன். ஆனால் அந்த நாவலில் முழுமையாக இதுதான் இருக்கிறது. பெண்ணின் அனுபவங்களைப் பற்றிப் பேசுகிற பெண்ணின் ஆண் தன்மையுடைய மொழியாக (ஆண்குறி மையப்படுத்தப்பட்ட உலகில் ஒருவர் ஆண் தன்மையுடன் தான் பேசவேண்டியிருக்கிறது) ஹிஸ்டீரியாவின் குரலைக் காணலாம். இவரோ ஒரு பெண் நாவலாசிரியர். ஒரு புறம் பெண்ணுலகின் மறுப்பு, இன்னொரு புறம் ஆணாதிக்கச் சமூக அமைப்பிற்குள்ளேயே பெண்களின் உலகம் பற்றிய அமைப்பு என்ற இரு நிலைகளையும் காணலாம்.

ஒருபுறம் பெண்ணியத்தை மறுக்கிறார். இன்னொரு புறம் பெண்ணிய வலையில் சிக்கிக் கொள்கிறார். மேலும் ஹிஸ்டீரியாவின் சொல்லாடலான நாவலைப் பற்றிப் பேசவேண்டிய இந்தப் பெண் எழுத்தாளரின் பின்னணியில் உளவியல் பகுப்பாய்வுக் கோட்பாடுகள் பற்றி கொஞ்சம் சொல்கிறேன். இதன் பிறகு முன்பு சொன்னவற்றைப் பற்றி, இதை எப்படித் தகர்ப்பது என்பது பற்றி தொடர்கிறேன்.

www.padippakam.com



ஃப்ராய்டு கூறும் ''காயடிப்புச் சிக்கல்'' என்ற கருத்தை இக்கால ஆய்வாளர்கள் எடுத்துக் கொள்கிறார்கள். இந்தக் காயடிப்புச்சிக்கல் என்பது ஆணா பெண்ணா என்ற பிரிவினை அறிந்து கொள்வதற்கு முன்பு உள்ள குழப்பமான மனநிலையில் நடப்பதாகும். இக்கட்டத்தைத் திருவிழா மனநிலை எனலாம். இந்த மனநிலையிலிருந்து குழப்பமற்ற மன நிலை உருவாகிறது. அதாவது ஆண் வேறு பெண் வேறு என்று பாகுபடுத்திப் புரிந்து கொள்ளும் மனநிலையாகும். ஆண் வேறு பெண் வேறு என்ற புரிவே ஆண்குறியை மையப்படுத்திய எண்ணத்திலிருந்துதான் உருவாகிறது. இந்த எண்ணம் ஆணாதிக்கத்தை மையப்படுத்தியது. இங்கு பெண்மை என்பது ஆண்மைக்கு எதிரான ஒன்றாக நிர்ணயம் கொள்கிறது. அதாவது எது தாயிடம் இல்லையோ அது ஆண்மை என குழந்தை அறிகிறது. இதுதான் மொழி பிறக்கின்ற நிலையாகும். குழந்தை தாயிடம் இல்லாததை மொழி என்னும் பதவியால் இட்டு நிரப்புகிறது. தாய்க்கு மாற்றானது மொழி எனும் போது இந்த மொழி தந்தையாகிறது, ஆண்குறி மையமாக மொழி விளக்கப்படுகிறது.

ஆண் பெண் பிரிவினையை லெக்கான் என்ற உளவியலாளர் குறியீட்டுக் குணம் கொண்ட பிரிவினை என்கிறார். இந்தக் குறியீடு என்ற பாலியல் வேறுபாட்டை மனதிற்குள் கொண்டு வரும் சாதனமாக விளங்குகிறது.

இதுவரை பார்த்தவையெல்லாம் தற்காலத்தில் காணப்படுகின்ற பெண்ணிய இலக்கியத்திறனாய்வின் இரு போக்குகளோடு தொடர்புடையனவாகும். பக்தின் கூறிய திருவிழா மனநிலை (ஆண்பெண் வேறுபாடற்ற குழப்ப மான மனநிலை) கருத்துக்கள் கூட பெண்ணியத்துக்கு ஆதரவான கருத்துகள் என்று இந்தக் கருத்தரங்கில் படிக்கப்பட்ட ஒரு கருத்துரையில் பரிந்துரைக்கப்பட்டது.

பெ—13

படிப்பகம்

www.padippakam.com



ஆனால் நான் அவ்வாறு நினைக்கவில்லை. உள்ளுணர் வால் இயங்குவது, சமயப்பற்றுடையது, ஆன்மீகச் சார் பானது, விளையாட்டுத்தனமானது என்பன போன்ற கருத்துகள் பெண்ணியத்துக்கு ஆதரவாக இந்தக் கருத் தரங்கில் முன்வைக்கப்பட்டன. ஆனால் இவை ஆண் வழிச் சமூகத்தால் உருவாக்கப்பட்டன என்று கருது கிறேன். ஏனென்றால் ஆண் பெண் என்ற பிரிவை இந்தக் குழப்பமான மனநிலை என்கிற திருவிழா மனநிலை தகர்க்கவில்லை. மாறாக, இப்பிரிவை இது வலியுறுத் தவே செய்கிறது.

என் பார்வை கிறிஸ்தவாவுடன் இணைந்த பிரஞ்சு ஆய்வுக்குழுவின் திறனாய்வு முறையை எதிர்க்கிறது. இப் போது கிறிஸ்தவாவின் குழுவினர் ஏன் அரசியலுக்கு வெளியில் நின்று இயங்குகிறார்கள் என்று விளங்குகிறது. நல்ல கருத்துகளை யெல்லாம் தரும் கிறிஸ்தவாவும் அவருடைய குழுவினரும் ஆண்களைப் பற்றிய எழுத்துக் களையும் பாசிச சார்பான எழுத்துக்களையும் ஏன் தேர்ந்து ஆய்கிறார்கள் என்று ஒருவர் கேட்கமுடியும்: அவர்கள், ஒரு நிலையைத் தகர்த்தல் மட்டுமே போது மென்று கருதுகிறார்கள். இது ஆணாதிக்கத் தன்மை யுடையதாகவே எனக்குத் தோன்றுகிறது. இதுதான் என் பிரச்சனையும் கூட.

ஊத்ரிங் ஹைட்ஸைப் பற்றி இங்கு சிலவற்றைக் குறிப் பிடுகிறேன். சிலகருத்துக்களைத் தெரிந்து கொள்வதற்கு அவை நமக்குப்பயன்படும். இந்நாவலை உளவியல் பகுப் பாய்வின் அடிப்படையில் படிக்க பரிந்துரைக்க மாட் டேன். இங்கு நான் நிறுவ முயலும் சில கருத்துக்களைத் தெளிவுபடுத்துவதற்காகவே இந்த நாவலைப் பயன்படுத் திக் கொள்ள விரும்புகிறேன்.

ஆண்வழிச் சமூக அமைப்பின் திருவிழா மனநிலை விசாரணையாக, எமிலிபிராண்டே இந்த நாவலை எழுத

www.padippakam.com



வில்லை ஆண்குறி மையப்படுத்தப்பட்டது என்று விளக்கப்பட்டது. மொழியின் நிபந்தனைக்குட்பட்டுத்தான் எழுதுகிறார். ஆனாலும் மறைமுகமாக ஆண்வழிச் சமூக அமைப்புப் பற்றிய வினாக்களையும் தொடுக்கிறார். சில வினாக்களை இங்கு சுட்டிக் காட்டுகிறேன். இவைதான் அந்த நாவலின் வழியாகவும் கேட்கப்படுகின்றன என்று நினைக்கிறேன். முதலாவதாக, கதையைச் சொல்வது யார்? எமிலி எழுதிய அந்த நாவலின் எழுத்துப் பிரதி, அவளுடைய சகோதரியாகிய சார்லோட் என்பவரால் திருடப்பட்டு ஒரு வெளியீட்டாளரிடம் கொடுக்கப்பட்டது. இவ்வாறு அந்த நாவல் 'எல்லீஸ் பெல்' என்ற ஆண் புனை பெயரால் வெளிடப்பட்டது. நாவலின் ஆசிரியரோ ஒரு பெண், இரகசியமாக ஒரு நாவல் எழுதுகிறார். ஆனால் அந்த நாவலோ ஒரு ஆணின் பெயரால் வெளியிடப்படுகிறது இந்நிலையில் எல்லோருக்கும் தெரியப்பட்டு கொஞ்சம் புகழும் பெறுகிறார். லாக்வூட் என்ற ஆண்பாத்திரமும், பணிப்பெண்ணாகிய நெல்லி டீன் என்ற பெண் பாத்திரமும் நாவலில் கதை சொல்பவர்களாக வருகிறார்கள் இக்கதையைச் சொல்கிற இந்த இருவர் மூலமாகவே முழு நாவலும் கட்டமைக்கப் பட்டிருக்கிறது. லாக்வூட் ஒரு உணர்ச்சிமிக்க காதலன் போன்றவன் நகரத்திலிருந்து வந்த ஆடம்பரமான கனவான் எல்லாவற்றையும் எவ்வாறு நேசிப்பானோ அதைப் போன்று அவன் நேசிப்பதாக நினைத்துக் கொள்கிறான். இவ்வாறு உள்ளுக்குள் குரூரமான ஆனால் வெளியே பொன்மனம் படைத்தவனாக, ஒரு வித ஏகாந்தமான சூழலில் சித்தரிக்கப்படுகிறான். குறிப்பாக இவையெல்லாம் இசபெல்லா என்ற பாத்திரத்தின் மூலமாக விமர்சிக்கப்படுகின்றன. இவன் ஹீத்கிளிப்பை அவனின் குரூரங்களுக்குப் பின்னால், கருமையான நேர்மையான, வீரஉணர்ச்சிமிக்க கோதிக் பாணி கதாநாயகன் என்று நினைக்கிறாள்.

கேதரின், ஹீத்கிளிஃப் ஆகியோரின் கதை இருபாலார் பற்றிய கதை. ஒரு ஹிஸ்டீரியா பிடித்தவளின் கதை.

www.padippakam.com



கேத்ரின் தந்தை லிவர்பூல் என்ற இடத்திற்குச் சென்று வரும்போது சாட்டை ஒன்று வாங்கி வருவதாக வாக்களிக்கிறார். ஆனால் அதற்குப் பதிலாகத் தந்தை இல்லாத ஒரு நாடோடிக் குழந்தையை அழைத்து வருகிறார். அக்குழந்தைக்குச் சிறுவயதிலேயே இறந்து போன கேதரினின் சகோதரனின் பெயரான ஹீத்கிளிஃப் என்று பெயரிடப் படுகிறது. கேதரின் தந்தையின் பாக்கெட்டில் உடைந்து போன சாட்டையைப் பார்க்கிறாள். அதற்குப் பதிலாக ஹீத்கிளிஃப் என்ற சகோதரனையும்/காதலனையும் பெறுகிறாள்.

கேதரின் விரும்பிய தன் வாழ்க்கையின் எல்லாமுமாக ஹீத்கிளிஃப் இருக்கிறான். அவன் உண்மையிலேயே, மரபு ரீதியான பெண்களின் விருப்பப்படி எட்கர் லின்டன் என்பவனைத் தேர்ந்தெடுத்து திருமணம் செய்து கொள்கிறாள். ஆனால் முழுமையாக அவனுடன் இணைந்து வாழ முடியவில்லை ஒரு துணைவன் என்ற தோற்றத்தில் மட்டுமே அவனுடன் வாழ்கிறாள் அவர்கள் உடலுறவு கொள்ளவில்லை என்று சொல்லவில்லை. அவர்களுக்கு ஒரு குழந்தை இருக்கிறது- ஒருவகையில் முக்கியமில்லாத அந்தக் குழந்தைதான் கேதரின் சாவுக்கும் காரணமாக இருக்கிறது. கேதரின் ஒருமித்து சங்கமித்துவிட வேண்டும் என்று நினைப்பது ஹீத்கிளிஃபுடன்தான். சகோதரனுடன் உடலுறவு கொள்ளக்கூடாது என்ற மனவிலக்கைத் தகர்த்து, ‘‘நான்தான் ஹீத்கிளிஃப் என்னைவிட நான் அவனாகவே வாழ்கிறேன்’’ என்கிறாள். கேதரினைப் போலத்தான் ஹீத்கிளிஃபும் சொல்கிறான். அவன் அவளாகவும் அவள் அவனாகவும் அடிக்கடி நினைத்துக் கொள்கிறார்கள். இது இரு வேறு பாலார் என்னும் மன நிலையைத் தகர்க்கிற மனோநிலையாகும் ‘சங்கமம்’ என்ற இத்தகைய ஒருமை, சாவில் மட்டுமே சாத்தியமாகும். கேதரின் இறக்கிறாள். அவளது நினைவு

படிப்பகம்

www.padippakam.com



அவனை இருப்பது ஆண்டுகளாக வாட்டுகிறது. இன்னொரு பாத்திரமான லாக்வூட்டுடன்தான் இந்நாவல் தொடங்குகிறது. ஹீத்கிளிஃப்பின் கனவைச் சொல்லி நாவலைத் தொடங்குகிறான். தன் சொந்தக் கனவைப் பெறவேண்டுமென்பதற்காக, முழு நாவலிலும் ஹீத்கிளிஃப் காத்திருக்கிறான். அது அவனைக் கேதரினுடன் கொண்டு சேர்க்கும் என்று நம்புகிறான். அவனும் இறந்து அவளுடன் இணைகிறான். இந்த நாவலில் கேதரின் என்ற பெண் பாத்திரம், ஒன்று எட்கரை மணந்து ஹிஸ்ட்ரிக் பெண்ணாக வாழ்வது அல்லது இறந்து ஹீத்கிளிஃபுடன் ஒன்றாவது என்ற நிலையில் படைக்கப்பட்டிருக்கிறது.

(நான்) இந்நாவல் பெண்கள் தங்களை உருவாக்கிக் கொள்வதுபற்றிக் கூறுகிறது என்று கருதுகிறேன். பெண் நாவலாசிரியை ஆண்வழிச் சமூக விதிமுறைகளை எதிர்த்து, தன்னை ஒரு நாவலாசிரியராக நிலைநாட்ட வேண்டியுள்ளது. இங்கு இவள் பைத்தியமாகவோ, ஹிஸ்டீரியாகவோ மாறுவது தவிர்க்க இயலாததாகிறது. மில்ஸ் மற்றும் போர்ன் நாவல்களைப்போன்று, சாதாரணமாகவே ஊத்ரிங்ஹைட்ஸைப் போல் விமர்சனாரீதியாகவோதான் எழுதமுடியும். நான் இந்த நாவல், கொந்தளிப்பான ஒரு சமூகத்திலிருந்து உருவாகிறது என்று கருதுகிறேன். மனம் ஆணாகவோ பெண்ணாகவோ உருவமையும் கட்டம் இதுதான். இவ்வகையில்தான் 'என் கண்ணோட்டத்தில் இலக்கியத்திறனாய்வு, 'நான்' இன் இயங்கு போக்கைக் கண்டு பிடிப்பதற்கே முன்னுரிமை அளிக்கிறது. 'நான்.' எதைநோக்கிச் செல்கிறது என்றும் இங்கே கேட்க விரும்புகிறேன். பூர்ஷ்வா முதலாளித்துவத்தில் நாம் ஆணாகவோ பெண்ணாகவோ முழுமையாக இருக்க முடியாது. முதலாளித்துவத்தைச் சிதைப்பதன் மூலம், நாம் ஆணாகவோ பெண்ணாகவோ நம்மை

படிப்பகம்

www.padippakam.com



உருவமைத்துக் கொள்ள முடியும். இப்போது கேட்கி றேன், சமூக மாற்றத்தில் 'நான்' இன் இயங்குபோக்கு எதை நோக்கிச் செல்லவேண்டும்?

**குறிப்பு :**

1. வுதரிங்ஹைட்ஸ் (WUTHERING HEIGHTS) 1874-ல் எமிலிஃப்ரண்டே என்ற அம்மையாரால் எழுதப்பட்ட உலகப் புகழ்பெற்ற நாவல் பெண்களை முதன்மைப் படுத்தி எழுதப்பட்டது.

2. மைக்கேல் பக்தின் என்ற ரஷ்ய இலக்கிய ஆய்வாளர் Anarchic Carnival என்ற குழப்பமான திருவிழா மன நிலை என்னும் கருத்தாக்கத்தை நாவல்களை ஆய்வு செய்கையில் விளக்குகிறார்.

3. பெண்ணிய இலக்கியத்திறனாய்வு கவனம் பெற்ற பின், அதுவரையாரும் கவனிக்காத, 17ஆம் நூற்றாண் டில் பெண்ணை முதன்மைப்படுத்திப் பெண்களால் எழுதப் பட்ட பல நாவல்கள் வெளிச்சத்துக்கு வந்துள்ளன இந்தக் கட்டுரை ஆசிரியர் இவற்றையே கவனத்துக்குக் கொண்டு வருகிறார்.

4. கட்டுரையாசிரியர் கலந்து கொண்ட, கருத்தரங்கம் ஒன்றில், ஜூலியா கிறிஸ்தவாவின் கருத்துகள் முன்வைக் கப்பட்டன. அவையே இங்கு சுட்டிக்காட்டப்படுகின் றன.

இக்கட்டுரை மிட்செல் (Mitcell) என்பவரின் Feminity Narrative and Psychoanalysis என்ற கட்டுரையின் தழுவல் மொழி பெயர்ப்பாகும்.

(மேலும் 10, 1991)

□ □ □

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

தேவதத்தா
விநோத்
ராஜ்கெளதமன்
பஞ்சு
சிவகுமார்
ஜெயராஜ்
நிறப்பிரிகை.

KAAVYA, BANGALORE 38

படிப்பகம்